MSS 15

147

20. சீவ ரட்சாமிர்தம்

Vol: II

(உபிரோம்பும் உரைவிளக்கம்)

படியெடுத்தவர்:

த மணை

147

இஃது,

திரு. கோ. பச்சையப்ப முதலியாரவர்கள் கல்விச் சாலையில்
தமிழ்த் தலைமைப்புலமை நடத்திய
வித்துவான் :- காஞ்சீபுரம்
சபாபதி முதலியார் இயற்றியது.
இறப்புலிப் பாயிரம்.
நேரிசை ஆசிரியப்பா.

147

கங்கையுந் திங்களுங் கடுக்கையு மரவும்
தங்கிய வார்ச்சடைத் தயாபர னெம்மிறை
உலகத் துயிரெலா முருவிதி விலக்கிகள்
நலத்துட னோர்ந்து நடைபிற ழாங்வகை
அருள்செயும் வேத மனைவநான் கிடனை
மருவுப வேதமு மயக்கற வுணர்ந்தோன்.
சிவத்தை யுணருந் திறத்து வழாது
தவத்தின் மேம்படு தகைசா லந்தணன்
சீகண்ட னென்னுந் திருத்தகு நாம
மேகொண்ட மாமுனி யெறிவரிதும் பெரியோன்
யாதொரு பிணியு மின்றெனி லுயிர்கள்
மாதவ மியற்றி வாழ்தரு மென்னுக்
தன்னுளத் தெண்ணித் தருபெ ருகாதல்
மன்னுமவ் வுயிர்கள் வருநோய் தோய் முதல்
பழுதற வுணர்வதே பயனெக் கொண்டு
தழுவிய வுபவே தத்தனி லென்றும்
ஆயுர் வேத மாவது கண்ணில்
ஏயும் ~~வேத~~ ஓராதி சிதாண மியல் அறப்
பெருகுஷோ ஆதி பேத முடனே

மருவிடுமே	யுடலில்	வார்சார	ரோகமே
பிணிப்புறு	மிரத்த	பித்த	ரோகம்
தணிப்ப	ரிதாய	தாக	ரோகம்
அஸ்மரி	ரோகம்	ஆநாக	ரோகம்
விஸ்போ	ரோகை	மிரார்வாத	ரோகம்
மகிமாந்	குறவரு	மகாவாத	ரோகம்
அகிதா	வரோக	மருத்திடு	இனிமுவண்
மாதவி	கர்ண	ரோகம்	விரண
பேதமே	விஷாதி	கீடாதி	பேதமென்
றிவ்வகை	ரோகை	மியம்பு	முறைமை
ஒவ்வொரு	படல	மாவுற	வகுத்து
சிவர	சுவாமிர்த	மெனப்பெயர்	செப்பி
மேவு	மொருநூல்	விரித்தன	னதுதான்
கலகுறுஞ்	குடத்தி	லிட்ட	தீபக்கென
நிலவி	யிருக்கு	மில்லமையை	நாடு
காருக	பத்திய	மாதியாக்	கழுறுங்
நீருறு	முத்தி	செம்மையி	னிம்பி
அத்தன	டேசற்	காரா	தனபல
நித்திநமு	மியற்று	மியமும்	பூண்டுள
அந்தணர்	வாமு	மணிகிளர்	தில்லயுள்
முந்து வே	ளாண்கில	முயன்றமா	தவக்கால்
வந்து	மன்ற	மருவு	கோவிலில்
சிந்தம்	பொலிவுறச்	சார்தல	வசிசை
தங்கியிற்	பதித்த	முத்தைய	ஞானியார்.

மகனென	வந்த	வரோதய	நீலன்
முருகவேள்	பதமலர்	முன்னிற்	றுதிக்கும்.
திருகிலா	வன்பன்	சிவாசார	ருல்லியன்
செந்தமிழ்க்	கவிஞன்	தேரையர்	முதலா
வந்த	சித்த	மகாபுரு	டருக்குள்
ஒருவ	னெனத்தகு	மெய்ப்பிலாப்	புலமையன்
கருமிடற்	றண்ணல்	கழலடி	மறவான்
முக்கண்	கொண்டு நோய்	முகுது	முணர்ந்து
தக்க	வடதம்	தந்து நோய்	தணிக்கும்.
கடவுள	னுபாசனை	முதலாக்	கழறும்
அடைவுள	யாவு	மமைந்த	வறிஞன்
கூறு	பதார்த்த	குணமிங்	குமணி
வீறுட	னச்சில்	விரவப்	பதித்தோன்
வையக	மாந்தர்	வைத்திய	நூற்கள்
செய்யுளா	யிருத்தலிற்	சேர்பிணி	வகையும்
அப்பிணி	தீர்த்தற்	கமைத்த	மருந்தும்
தப்பற	வுணருங்	தகைசி	யின்றிப்
பாகட	மௌனவெனும்	பாடல்	கூறும்.
யேய்களப்	பெரிய	பிடக	ரெண்ணக்
கருதி	யாக்கவர்	கைமருக்	தருந்திப்
பெருகுரும்	பிணியாற்	பேதுற	லெக்கி
உள்ளத்	திரக்க	முறகனி	கொண்டு

~~கன்னமி~~	~~வண்பாற்~~	~~காதன்~~	~~மிதுரச்~~
~~சார்தரு~~	~~சாகிர~~	~~மென்ன~~	~~விசைக்கும்~~
~~ஏர்தரு.~~ ~~சாத்~~			
கன்னமி	வண்பாற்	காதன்	மிதுரச்
சார்தரு	திகைச்சா	சார	கெண்டொடும்
ஏர்தரு	சாகிர	மென்ன	விரைக்கும்
சாத்திரங்	தன்னைத்	தமிழ்வாக்	கியமா
கோத்திர	மி தென	கிலவ	வியற்றி -
நுண்ணிய	மிகூர்க்குறி	நாவுரை	யுடனே
உண்ணமார்	றைல	வருக்கச்	அருக்கமும்
அச்சிற்	புதிப்பா	னமைந்தா	வன்னல்
பொச்சமில்	சிவணடி	யாரைப்	போற்றும்
ஆயுள்	வேத	பாஸ்கர	னு மென
டாயிரும்	புவி யோர்	மதிக்க	நின்ற
சுப்பிர	மணிய	பண்டிதச்	அருணமால்
இப்படி	தன்னி	லியங்கிங்	சிற்சிலர்.
கோர்தரு	ரோக	தொன	நுண்ணிதின்
ஓர்தர	லின்றி	யுரைத்திடு	மருந்துகள்
பேதியா	மலியின்	பெருகீ பா	றையின்த்
தொக்கமட்	கட்டியா	ழுடைப்பான்	நெடுங்கல்
ஒக்கு	மென்றனு	வாவுங்	கேதார்
மாத்திரை	முதலா	மருந்துகள்	கொடுக்கச்
சாத்திரங்	தன்னைத்	தாமியாய்	யாக்கி

மருத்துவ	ரெனப்பெயர்	மருவித்	திரியுநர்
கருத்துத்	தெளிந்து	கவிப்புறும்	வண்ணம்
முந்தைநூற்	பெயரே	முறைமையி	னமைத்துப்
வந்த	படல	வரிசையுங்	கண்டு
செந்தமிழ்	வாக்கிய	மாகத்	திரட்டிக்
தந்திட	வதனைச்	அன்னோர்	புகழ்தர
வேதியர்	குலத்து	மேழக்கும்	வல்லத்
தாதி	நாத	ரருளா	லுதித்தோன்
திசிவிரிஞ்	சையினுங்	திருவல்	லத்தும்
மருவிய	அன்ன	சக்திரம்	வகித்தங்
கந்தனர்	முதலோர்க்	காறுஅவை	யுண்டி
சந்தத	முட்டித்	தகைபொரு	ளளிப்பதே
பெருவாழ்	வென்னப்	பெட்டினும்	வள்ளல்
இருவா வாயுள்	வேத்	முனர்	ந்தோன்
கிளிதன்	குவயூர்வா	திராம	ஜெகசேஷப்
புனிதப்	பொருள	புண்ணிய	னுயரிய
குன்றி	விட்ட	குலவிளக்	காமெனப்
புலனுறப்	பதித்துப்	புகழ்மால்	—
இலகுறு	திசையெலா	மினிதனாங்	தனனே.

மேதகு அரசினரால் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்

கழகத் தமிழ்த் தலைமைப் புலமை நடத்தும் இயற்றமிழா

சிரியராகிய திருத்தணிகை

விசாகப் பெருமாளையர் இயற்றியது

<u>எண்சீர் விருத்தம்</u>

தேங்கு புகழ்ச் சிதம்பரச்சுப் பிரமணியப் பண்டிதவேள்
செய்தளித்த சிவரகசிய மிருதமெனுஞ் சீர்நூல்
ஓங்கு கிரி காலத்தி னிகழ் செய்கை யனைத்தையுமே
புணர்த்துதலாற் றெய்வமென்கோ வொன்றின்யொன் றுங்கருதுந்
தீங்கு நெறி விலக்குதலாற் குருவென்கோ கோயினத்தின்
திறம்பலவுந் தெரித்தலினூற் றந்தையென்கோ வன்பிணிச்சார்
நீங்கு படருந் உதவுதலாற் றாயென்கோ மருத்துவர்த
னேத்திரமென் கோவுணர்த்தி னனைக்குங்கான் மன்னே.

--- | ---

இதுவும், வித்துவான் — காஞ்சிபுரம்.

சபாபதி முதலியார் இயற்றியது:

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒண்ணொளி மாமணி மாலவன் வார்குழலாள் மதுகயிட வரைமுதலி னோர்
வருத்திட வருந்திமங் கரகிரி கலக்கமான் மறுகியே யோலமிட்டாங்
குண்டுவளை கொளவேண்டி வருமும்பர் மனமகிழ் யோடவெவ் விடமுனல்கி
ஆதமுது தந்தவப் பாலாழி பேலவிலா துற்றதூ ராதி யான
மிண்டுபுரி யவுணரைக் காய்ந்தசெவ் வேற்குகன் மேவுறும் பண்ணையுறழ்
விளங்கிய இலம்புரி வலம்புரி யினங்கவே யொர்சிறைப் பரவாழ்க் கையுட்
கொண்டுமகிழ் கின்றசுப் பிரமணிய பண்டிதக் கிறைவிற்பா லாழி யாதும்
கோலமே மிகுவிவ ரக்ஷாமிர் தம்புலகு கொளவினிது தந்த தன்றே.

வித்துவான் - காஞ்சிபுரம்
சபாபதி முதலியார் மாணக்கரில் ஒருவராகிய
புரசை - அட்டாவதானம்
சபாபதி முதலியார் இயற்றியது.
நிலமண்டில ஆசிரியப்பா.

பூமிசைப் புத்தேள் புனைந்த உலகுயிர்
காமுறு மகத்துவ கரிசற நுகர்திறன்
யாக்கையை யாப்புடைத் தாப்பெற்ற வர்க்கலா
தூக்கறி தெனகனி புன்மைமெய்ச் சுருதியாற்
குரவனை லனுபவக் கொட்பினிற் றேற்றுபு
விரவுரு மறையின் வியங்கின் போன்மெனும்
உபவே தங்கனி னொன்றெய் சிற்றுண
தபுதலி லாயுள்வே தந்தனிவ் விரித்து
நுவல்பல நோய்வகை நோய்முத லவற்றின்
றவவலன் கடந்தத் தகும்பரி காரம்
இவையெலாம் கைத்தலத் திருத்திய முத்தென
நவையறத் தெருட்டி நனிகடற் புவிக்கட்

தேவ	ரக்ஷாமிர்த	மதனிலுக்	கீரிய
ஜீவ	ரக்ஷாமிர்த	மெனும்பெயர்	செறிந்து
வளப்படும்	வேதா	கமப்பொரு	ளனைத்துஞ்
கிளப்படுந்	தன்னுளாஞ்	செழும	றைந்துளோன்
தவக்கரு	ஞாலக்	தன்னிகர்	பேரருட்
சிவத்தின	யுரிஞர்	கேர்ச்சிப்	பெட்டகம்
சீகண்ட	மாதவத்	திருமுனி	யளித்தநூல்
ஆகண்ட	லன்பதிக்	கண்மிய	நவசித்தி
நாமமிர்ப்	புவியுளோர்	நனுகுறத்	செய்மைத்
தாமெனுந்	தகைமையே	யதனையதா	யாரியர்
தன்னின்	விருத்தலா	லன்ன	முதுமொழி
வல்லுநர்	இல்லோர்	வல்லார்	பல்லோர்
ஆதலி	லெவரும்	அந்நூற்	பெரும்பயன்
மேதக்	கூட்டுறூஉ	வியந்தனர்	கிடைபெற
விதிவிலக்	கறியும்	வியன்பயிர்	வினவுறூஉம்
பதிகர்	திருக்குறள்	பகரு	மருத்தியல்
தொகைமை	யிதன்முன்	கொழுமம்	வியலுரை
வகையே	யிவ்வென	வாக்க	கிரியெனோர்
செந்தமின்	மருத்துநூல்	தெளிபுல	வோரென
மற்றுறையோ	ருந்தா	மகிழ்தல்	சிறப்ப
செழுமிரித்	தன்மையர்	ரெனத்தேர்	விரகலார்க்
குறுபல	வைவன் கொலோ	வொன்னல	ரின்குறி
அனவதி	அதின் மற்	றிடன்முத	லிந்தும்
கினிதனமிர்	தெண்ணுவோ	ரெனிதில்	வென்றுடுவ
தொல்லுமிக்	கருவி	யுரைதரு	சார்பெண்
றெவ்வகை	யோரு	மிசைத்தனர்	நயப்ப
நாவலர்	நம்பி	நவில்தொண்	டத்தொகை
மேவுமுன்	மொழிதிரு	வாகுர்	ஞிடங்கள்

தில்லிவா	பூந்தண	ரெணவெதிக்	தோழுதேன்.
ஒருல்கபி	னருளி	புயர்பரம்	பரையாம்
வாய்மைமயோர்	குருவொடு	மன்னுங்	தில்லை.
மேய	திகம்பர	மிகுந்தல	வரிசை
பக்தியிற்	பதித்த	முத்தைய	னாரியார்
என்னும்	பயோததி	யீன்ற	கற்பகம்.
தன்னுணர்	வகைத்துங்	தருமப்	பைங்கொடி
பாக	மருத்த	பவாத்	திருவரை
வாகுறத்	தந்த	வடிவேற்	கராம்புய
அரசுன	கிரியின்	அடிவா	ரத்தின்
விரதங்	குலவ	விளங்குமேன்	மையோன்
ங்கிமா	மரபென	நாடுங்	தாமரை
சதுரற	மணஞ்செயத்	தந்தார்	ஜீவம்
மெய்யதி	ஞர்களொடு	மெல்லிதழ்	பொதுகிய
செய்ய	மலர்க்குத்	திருத்தகுங்	கண்ணளி
சேரையர்	முதலாச்	செப்ப	வரும்பெரி
யோரை	யமுற்துளோ	ருறுபொருள்	யாவைப்
பெரும் பொருண்	முகுதுமப்	பெற்றியோர்	சொற்ற
அரும்பெற	நூல்கனி	உயங்	திரிபற
நோக்கிய	வனுபவ	நுண்மை	யெஸ்ரங்கொண்
டுக்கி	யவரவ	ருவப்ப	அணர்த்துவோங்
ஆர்த்த	புகழ்க்கதி	ராயுள்	வேத
பாற்கரன்	நிவநெறிப்	பன்மாண்	கேள்வித்
தொண்டர்	கினிய	அப்பிர	மணிய
பண்டிதக்	குரிசில்	பைந்தமிழ்	மொழியில்
வாக்கிய	அருவின்	வழங்குறக்	கண்டு
பாக்கியப்	பயனிது	பதித்திட	வென்றுநும்
இறைவன்	வேலூர்	வாகிராம	கேளப்

ஆபாரைத்த ஞாற்றணைப் புனித னுதவியா
பெருதா வெருத்தி லிசைவுறப் பதித்துப்
பருதா காமைப் பண்ணி டெங்கணுந்
தன்னிசை யுண்டனத் தருமியர் வேதியன்
இன்னிசை யும்பதித் தினிதளித் தனனே.

இஃது

திருவண்ணாமலை வீரபத்திர ஐயர்

இயற்றியது.

எண்சீர் விருத்தம்.

சீர்கொண்ட பாற்கடலைக் கடைந்தமிர்த மளித்தே
தேவர்க்குப் பகிர்ந் தியவச் சிதரனே போல
ஏர்கொண்ட தன்னறிவாம் பொன்மலையை நிறுத்தி
யிதந்தருநல் லாயுண்மறை யெனுங்கடலைக் கடைந்தே
பேர்கொண்ட ஜீவரக்ஷா மிர்தமதனி யகிலப்
பிணியகலத்தும் பரக்கோடப் பெரும்புகழ் கைக்கொண்டான்
பார்கொண்ட சிதம்பரச் சுப்பிரமணிய னெனுமேலோர்
பண்டிதற்கென் கைம்மாறு பரிந்தியற்று முலகே.

திரு. பச்சையப்ப முதலியாரவர்கள் கல்விச் சாலையில் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்தும் வித்துவான் அப்பிராயப் பிள்ளை இயற்றியது.

பன்னிரு சீர்க்கழி நெடிலடியாசிரியச் சந்த விருத்தம்.

அம்புலி கொன்றை காந்தை மணிசடை யண்ணறனடி மலரை
அநவரதம் நினைந்தைய இனியரக மகிழ் புத்திரனில்
வம்புவி மாக்கைலாயத் திருநகரதில் வருமிணை நிதியென்
றானவரு சிதம்பரை சுப்பிரமணிய நலருமைப் பண்புதவேள்
இம்பர் சுகித்திட வாயுறு வேதமெனுங் கடலின்னுட் கொண்
டியலமை சிவரகசியாமிர்தமுதவுறு மிது கனி யென்னுரைரா
வெம்புபு பெருமுனி திருமுனியாகியே வெற்றிபெறுயிர்க்கிலகியே
மெய்யருந்தவனையினையெனு மிதென் வேதியர் மொழிவதைவரே.

இஃது.

இங்கூலாசிரியர் மாணிக்கரிலொரு வராகிய
ஆ-செ. வெங்கிடாசல முதலியார்.
பாடியது:
கட்டளைக் கலித்துறை:

தேவர் பொன்னிட்டிறு நாகர்தம் நாட்டிலுங் கொள்ள மிர்தம்
ஆவறவைத் தருண்மா லோகங்காதல மோங்க நல்லோர்
யாவரும் வாழ்த்து சுப்பிரமணியக் கோவென்ன வந்து
சிவரகசியாமிர் தமிழ்ந் நாட்டு வைத்தனன் சீர் பெறவே.

இதுவும்!

அம்மாணாக்கரி லொருவராகிய சு.வை. அண்ணுசாமி முதலியர்
பாடியது.

அறுசீர் விருத்தம்:

பொன்னிருஞ் சிதம்பரச் சுப்பிரமணிய தேசிகப் புலவோரியாண்டு
மன்னின சிவரகசியாமிருதஞ் செய்தானென்றே மகிழ்வாரியாமோ
அந்நாளில் வடமொழியிற் செய்தசீ கண்ட முனியன் றென்கி
இந்நாளிற் றென் மொழியிலுஞ் செய்தானைத் துணிவாயியம்
புவோமே.

சுப்பிரமணியர் ஞானம்.

முகவுரை

சச்சிதானந்த சொரூபராகிய சகலபுவன கர்த்தாவானவர் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஆன்ம கோடிகளிடத்து வைத்த பெருங் கருணையால் அருளிச் செய்த — உபவேதம் நான்கினுக்குள் ஒன்றாகிய - ஏது - லிங்கம் . சிகிச்சை என்னும் முப்பொருள்களையும் விவரிக்கின்ற . ஆயுர் வேதத்தைப் பார்வதி தேவியாருக்கு அநுக்கிரகஞ் செய்தருளினார். அந்தப் பார்வதி தேவியார் நந்தி தேவருக்கு அருளிச் செய்ய அவர், தேவருக்கும் முனிவர்கட்கு சித்தப் புருடர்கட்கும் உபதேசித்தருளினார்.

இதற்கு மேற்கோள் தேரையர் காப்பியம்.

அகரவக்கரமென வகைத்துமாய் நிறைந்த வமலன் வகுத்த வலிவ
பேதத்து, ஈ.ஃ நினைத்தவிரவுயர் தினைப் பகுதியுளதிது
மார்க்கட்கேயாயுள் வேதத்தை யறைந்தனன் ஃதே தரும்பிணிக்
குழாத்தாலமைந்த வாகேசையரென்ற கங்காளிநாயகே — — —
அவ்வழி தோன்று மதியாயத்தை யந்தரி நந்திக்களிடத்
திடவர் தேனண்டர் பண்டிதனுக் கருளினன்' என்னும்
சூத்திரங்களாலும் சிந்தாமணி என்றும் வடமொழி நூலாலு
முணர்க. —

அவ்வாறு உபதேசம் பெற்றவர்களையும் அவரவர் குமார சீடவருக்கங்களையும் அவர்களால் வடமொழி தென் மொழி இரண்டிலுஞ் செய்யப்பட்ட நூல்களையும் தனித் தனியே விவரித்துச் சொல்லப்புகின் மிகவும் பெருகும். ஆதலால் — — இந்நூலின் பொருட்டு வேண்டியவைகளை மாத்திரம் சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றேம்.

வடமொழி மருத்துவ ஆசிரியராவர்:

தன்வந்திரி பகவான் — அசுவனி தேவர், — இந்திரன், அகத்தியர், புலத்தியர், சனகர், அக்னிவேசர், பேளர், சௌமியர், மாண்டுகர்ணர், பராசர், ஆரிதர், — ஆத்திரேயர், கௌதமர், காசிபர், கார்க்கியர், பாரத்துவாசர், சுசுருதர், மனு, சுவாயம்புவமனு, யாக்கியவற்கர், விசுவாமித்திரர், அத்திரி, காத்தியாயனவர், வசிட்டர், வியாசர், பார்க்கவர், கண்ணுவர், போதாயனர், தக்ஷர், சங்கர், கபிலர், ஆபஸ்தம்பர், — போஜர், கரநாதர், சுகர் வாமதேவர், சாதாதபர், ஆங்கிரசர் - சம்வர்த்தர், விஷ்ணு, கோநலர், சுமந்து, ஆரியர், அருணர், தக்ஷப்பிரசாபதி, — நாராயணர், அரிசந்திரர் - பத்திரவர்மர், சௌனகர், யோகநந்தர், நவநாதர், ஆதிநாதர், வியாக்கிரபாதர், சரகர், ஸ்ரீகண்டர், பாகடாசாரியர் சாரபாணி — முதலியவர்களாம்.

தென்மொழி மருத்துவ ஆசிரியராவர்.

அகத்தியர், — புலத்தியர், திருமூலர், தருமசௌமியர், தேரையர், காலங்கிநாதர், போகர், கொங்கணர், சட்டைமுனிவர், இராமதேவர், மச்சமுனிவர், கமலமுனிவர், ரோமரிஷி, கருவூரார், கோரக்கர், இடைக்காடர், அந்தரானந்தர், பாம்பாட்டிச் சித்தர் — அகப்பேய்ச் சித்தர், ஏற்றச் சித்தர் - முதலியவர்களாம்.

இவ்விருவகை ஆசிரியர்களில் வடமொழி, தென்மொழி இரண்டிலும் நூல் செய்தவர்: அகத்தியர், தருமசௌமியர், - தேரையர், ஆகிய இவர்களாம்.

~~செய்தார்~~:- மேற் கூறிய வர்களாலியற்றப் பட்ட வடமொழி நூல்களாவன.

ஆயுர் வேதம், உமா கல்யாணம், நந்தியம், ஆயுர் வேத தோப தேசம், அசுவன் சம்மிதை, ஜந்திரம், வைத்திய சூடாமணி வைத்திய சிந்தாமணி, வைத்திய சாரம், வைத்தியாமிர்தம், வைத்திய சாரசங்கிரகம், வைத்திய ரசாயனம், வைத்திய முத்தாவலி, ஞான யோகரத்தினாவலி யோகரத்தினாவலி, ஞான முத்தாவலி, திரவிய ரத்தினாவலி, ஆரோக்கிய சிந்தாமணி, திரிலோக்கிய, சிந்தாமணி அர சிந்தாமணி, ஆத்திரஸ்தானம், சங்கல் பஸ்தானம், உத்தரஸ்தானம், சங்கியா ஞானம், ஆடகாங்க ஞானம், சரகம், சீவரட்சாமிர்தம், குமார தந்திரம், சொஸ்தாரிஷ்டம், யோகானந்தம், சகியானந்தம், காசியபம், சித்திசாரம், மதன காம ரத்தினாகரம், ரத்தினப் பிரதீபிகை, யோகரத்தின சமுச்சயம், ரசரத்தின சமுச்சயம், ரசரத்தின சங்கிரகம், ரசகண்டு, ரசரத்தினாகரம், ரசகௌமதி, ரசசார சங்கிரகம், ரசார்ணவம், ரசவைசேஷிகம், ரசப்பிரதீபிகை, - ரசமூலிகம் ரச சூத்திரம், ரச பைஷசகல்பம், ரசப் பிரதிவிடம். விஷப் பிரதிவிடம், கல்ப பேஷசம் - கல்பூஷணம், அக்கிர சங்கிரகணியம் நித்திய நாதீயம் கோவிந்த பட்டீயம், பாகடாசாரீயம் நவபாஷாண சித்திகை, சித்த நாகார்ச்சுனம், குமாரப், சல்லிய தந்திரம், கொட்டியம், சாரீரம், திரவிய நிச்சய சார சங்கிரகம் - சிகிச்சா சார சங்கிரகம் - கந்த வாகம், ~~அனங்கம்~~ அனங்கரங்கம், அஷ்ட கர்மாதிகாரம் - ~~மாதிகாரம்~~ ஞானபாஸ்கரம், ரோக (பிணி) நாடகம், கால ஞானம், அபிதான ரத்தின மாலை - மந்திரவம் - சதசுலோகி, பப்ப தேவியம், சதசுலோகி, விசாரதம், பாகட ஆத்திரம், மதனிதி யோகம், தீர்க்க ஜீவந்தி; சதசுலோகி விசாரதம்,

பாலாடசூத்திரம், மதனதியோகம், தீர்க்க ஜீவநீதி, கல்பகத் தரு, சோதனைத்திகெண்டு, ஆரிதமுனி, அகராதி நிகண்டு சட்ரசநிகண்டு - தன்வந்திரி நிகண்டு, சாரசங்கிரக நிகண்டு பிரசினுத்திரம் புனப்பிரதின்னம், பத்தியா பத்தியம், நாடிச் சக்கரம், நாடி தந்திராந்திரம் சாமுத்திரிகம், அங்காதிபாதம், ஆபசாஸ்திரம், உற்பலபரிமளம், சிவதத்துவரத்னாகரம் - பசவராஜியம், தேவபாகம் - சித்த பாகம், பீமபாகம், நளபாகம், விருக்ஷாயுர் வேதம், விஷகல்பசார சங்கிரகம், நாகேந்திரமணி தருப்பணம், கருடகல்பம், பிராணிமித்ர தாரம், ரதிரகசிய பரீக்ஷை, கொக்கோக சாஸ்திர சிகிச்சை, மேரி கர்ண விசிரார் தசரகம், அசுகம் — மந்திர சாஸ்திரம், யந்திர சாஸ்திரம், தசரகம், அசுகம் — மந்திர சாஸ்திரம், யந்திர சாஸ்திரம் ... வாசிதம், அஷ்டாங்க இருதய தந்திரம் - பர இதசங்கிரை - சாருசரியம், விருக்ஷபீசம், கஜசாஸ்திரம், அசுவசாஸ்திரம், கோசிக்சை, மேஷசிகிச்சை முதலியவைகளாம்.

தென்மொழி நூல்களாவன.

அகத்தியர் பெருந்திரட்டு, ஆயுர்வேத பாஷியம், பிரிநூல் பூவகைக் காண்டம், வைத்திய சிந்தாமணி, மணி நாலாயிரம், காவியம், சிவஞானம், சத்திஞானம், சண்முக ஞானம், வைத்தியக் கண்ணடி, வைத்திய ரத்னாகரம், வைத்திய ஆயிரத்தைந்நூறு, வைத்திய அறுநூறு, கரும விபாகம், கரிசல், சிந்தூர மூந்நூறு, பஸ்ம முறை இருநூறு, தண்டகம், பக்ஷிணி, நாடிநூல், திருமூலர் திருமந்திரம், சௌமிய சாகரம், ஆயுத வருக்க நூல், தேரையர் காப்பியம், சிகாமணி வெண்பா அஷ்டசார நிகண்டு, சேகரப்பா, தரு, நாடகம், யமக அந்தாதி, மகா இணைபாடம், சிகாவண்ணம், நாண்மாலை, யமகவெண்பா, ஏதுகைப்பா,

பெருங்களிசல், மருந்துப் பாரதம், திணக்கிர மாலங்காரம், நீர்
நிறக்குறி, நெய்க்குறி, தைலவருக்கச் சுருக்கம், பிரதான
குணபூலத்தரு, வைத்தியப் பள்ளுநாடகம், சிகிச்சைக்
கிரமம், நோய் மருந்தவை, காலாங்கிநாதர் பெருந்
திரட்டு, குறுந்திரட்டு, போகர் ஏழாயிரக் காண்டம்,
கல்பண நூறு, உபரச நிகண்டு, சிகிச்சை வெண்பா,
கொங்கணர் கிரிகாண்டம், சட்டைமுனிவர் கிரி-
-காண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு.
ராமதேவர் பெருநூல், மச்சமுனிவர் எண்ணூறு.
திராவக எண்ணூறு, கமலமுனிவர் வைத்திய முந்நூறு,
ரோமரிஷி ஐந்நூற்றின் சூத்திரம், கருவூரார் திரட்டு
சந்தநாடகம், கோரக்கர் வைத்தியாங்கம், கல்ப
நிதானம், அந்தரானந்தர் வைத்தியத் திரட்டு, இடைக்
காடர் சாஸ்திரம், அகப்பேய்ச் சித்தர் வகார சூத்திரம்,
பாம்பாட்டி சித்தர் கருக்கோணம், சித்திராங்கேடம், ஏற்றச்
சித்தர் ஆருடாரச் சூத்திரம், பரிபாஷை நிகண்டு,
ஆகிய நூல்களாம்". -

இவைகளைக் குறித்துத் தொகை நூல்களில் அகத்தியர் செய்தருளிய வாதசாஸ்திரம் ஒரு லட்சம், வைத்திய சாஸ்திரம் இரண்டு இலட்சம், மற்றைய சித்தப் புருடர்கள் வைத்தியத்துடன் பல விடயங்களையும் சேர்த்துச் சொல்லிய சாத்திரம் ஒரு லட்சம், ஆக தமிழ் சாத்திரங்கள் 8 இலட்சங்களாக இருந்தவைகளைச் சில பெரியோர்கள் 4. இலட்சம் கிரந்தங்களாகச் சுருக்கி அவைகளை மரிக்கின், காவரம், மிருகம், வைத்தியாங்கம் முதலிய பன்முறை - என்றும், நாற்பாலுக்கும், 4 பிரிவாக வகுத்திருக்கின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

—

மேற்கூறிய தமிழ்ச் சாத்திரங்களன்றிச் சமஸ்கிருத சாத்திரங்களில் நான்கு பிரிவிற்கும் விவரம்:-

சரீர நிதானம்:- சாமுத்திரிகம் (தேகபேதம்) உடம்புவேறுபாடு அஷ்ட பரிட்சை — நாடிலட்சணம், தோடபேதம், சீவ — ஜந்துக்களின் பேதம், அரிஷ்டாரிஷ்டம் முதலியவைகளைக் குறித்து, (20,000) வாதாதி பிணி, தொந்த பிணி, சத்ரியோ பிணி - கிரக பிணி, விரண பிணி கிருத்திரம விட பிணி, தாவர விட பிணி, சர்ப்ப விட பிணி, கீட விட பிணி, முதலியவைகளைக் குறித்து (30,000) இவற்றின் சிகிச்சை களைக் குறித்து (60000) சில வருக்கம், நீர் வருக்கம், மர(விருக்ஷ)வருக்கம், செடி வருக்கம், கொடி வருக்கம், புல் நெற்பயிர் முதலிய ~~நெற் பயிர்களுக்கு~~ வருக்கங்களுக்கு உண்டாகின்ற பிணிகளைக் குறித்து - (30000) இவற்றின் வைத்தியாங்கம் → சிகிச்சைகளைக் குறித்து (50000) பாகசாலை, பாசனம், கலுவம், முதலிய ஆனக் கருவி கைபாகம், செய்பாகம், தீட்சை பாகம், சுகுருட தாதுலக்ஷணம், தீட்சா விதி, பூஜாவிதி, மந்திரம், யந்திரம், அட்டகருமம், அஞ்சனம், மறைப்பு, குரு, ஜாலம், கல்பம், காயசித்தி, யோகம், ஞானம், வாதம், இன்னிசை, முதலியவைகளைக் குறித்து (1,20,000) ஆக 4லக்ஷம் - கிரந்தமாம்).

இவற்றுள் மனிதர்களின் பிணி நிதானங்களைக் கூறிய (30,000) கிரந்தங்களை மாத்திரம் எடுத்துச் சுருக்கிப் பதினாயிரம் கிரந்தமாகச் சரக முனிவர் தமது பெயரால் 'சரகம்' என்னும் ஒரு சாத்திரம் செய்தருளினார். அதுவோ, மிகவும் விரிவாக இருப்பதை நோக்கி நிதிகண்ட மகாமுனிவர் அதைச் சுருக்கி ஏழாயிரம் சுலோகபூர்வமாக ஒரு நூல் செய்து அதற்கு நிவரட்சாமிர்தம் எனப்பெயரிட்டருளினார்.

ஆனால், வட மொழிப் பயிற்சியிற் சிறந்தவர்களன்றி, மற்றை யோர்க்குப் பயன்படாதிருப்பதுபற்றி இத் தமிழ் நாட்டிலே யாவரும் உணரும் பொருட்டுச் சில சாத்திரிகளுதவியைக் கொண்டு அந்த வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வசனகாவியமாக்கி, அதிற் சொல்லப்படும் பிணிகளின் பெயர்களுக்குச் சத்தார்த்தங்களும் அருகி வழக்க மொழிகளையும் கலந்து சந்தியும் பிரித்து அகத்தியர் முதலிய சித்தப் புருடர்கள் தமிழ்ச் செய்யுளாகச் செய்திருக்கிற பிணி நிதானங்களில் சில விசேடமான வைகளையும் வசமாக்கி அவசியகம் சேர்க்கத்தக்க இடங்களில் மதாந்தரம் எனப் பெயரிட்டுச் சேர்த்து அந்தந்த பிணிவருக்கங்களின் முடிவில் அவைகளுக்கு ஏற்ற சில சிகிச்சைகளையும் எடுத்துக் கூறி முதனூலார் வகுத்த முறைப்படி தோடாதிபேத படல முதல் கீடாதிபேத படலம் ஈறாகப் பதினைந்து படலங்களும் பெயரும் அமைத்து அடியேன் இயற்றும்படி அருவசிவதயாபர மூர்த்தியாய்ச் சமஸ்த தேவர்களும் நவகோடி சித்தப் புருடர்களும் சதாகாலமும் வணங்கத் தக்கவராய் பிறவிப் பிணி முதலிய பிணிகளையெல்லாம் நீக்கு கின்ற மகா-பண்டிதராகிய பழனிமலைக் கடவுள் கிருபை செய்தருளினார்.

இவ்வாறியற்றிய இந்த ஜீவரட்சாமிர்தம் என்கின்ற சகல நோய் நிதான சாத்திரத்தின் முதலில் வைத்திருக்கின்ற தோடாதிபேத படலமானது சகல சாத்திரங்களையும் அறிவிப்பதற்கு அட்சராப்பியாசம் ஆதிகாரணமாயிருப்பது போல் சாரீரம் - பிணி நிதானம் - சிகிச்சை என்னும் மூன்று சாத்திரங்களின் உண்மைகளையும் இன்னும் சில சாத்திரங்களின் கருத்துப் பொருட்களையும் அறிப்பதற்கு ஆதிகாரணமா யிருக்கிறது.

எவ்வாறென்றால், வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும்
மூன்று தோடங்களையும், அவற்றின் சொரூபம், ஸ்தானம்,
சுபாவம், தொழில், பேதம் இவைகளையும், தேகம்,
காலம், அக்கினிபாகம் இவைகளின் விகற்பங்களையும்,
சப்த தாதுக்கள்,
மலம், மூத்திரம் இவற்றின் விருத்தி
க்ஷணங்களையும், சாடராக்கினி, பலம், எண் குறி, பிணி
ஆரம்பம், சிகிச்சை துணிபு, இவைகளையும் தனித்தனியே
விவரித்துக் கூறுதலால் என்றறிக.

௮, வது படலத்தில், வாதசுரபிணி ஆதியாய்
மகாந்தர திரிகால சுர பிணி அந்தமாயுள்ள சுரபிணி
வேறுபாடுகளெல்லாம் அடங்கியிருக்கின்றன. இந்தச்
சுர பிணிகள், மற்றைய பிணிகளுக்கெல்லாம் பிறப்
பிடமும் தலைமையும் பொதுவுமாயிருக்கும் தன்மை
பற்றியே சமஸ்த பிணிகளுக்கும் முதன்மையாகிய
வைத்திருப்பதுந்தவிர இவற்றின் ஆயுர் நிர்மாணங்
களை குறித்துச் - சுரநூல் - நாண்மாஸ ஒனசில
சாத்திரங்கள் பிறந்திருக்கின்றன. இதில் அடங்கிய
சுர பிணித் தொகை மகாந்தரம் உட்பட (38)
இவற்றில் இணைந்த பிணி (451)

3 வது படலத்தில், ரத்த பித்த பிணி ஆதியாய்
சாத்தியா சாத்திய மார்பு பிணி அந்தமாயுள்ள
பிணி. (58) இவற்றில் இணைந்த பிணி (460).

4. வது படலத்தில் தாக பிணி முதல்
விஸ்படம்பா சீரண பிணி ஈறுயுள்ள பிணி.
(47) இவற்றில் இணைந்த பிணி (133).

5வது. படலத்தில் மூத்திரகாதி பிணி முதல் வலி இன்மைத் பிணி ஈறாயுள்ள பிணி (134) இவற்றில் சிசாத்த பிணி (158).

6.வது. படலத்தில் ஆநாக பிணி முதல் ஒட்டு பிணி ஈறாயுள்ள பிணி (130) இவற்றில் சிசாத்த பிணி (114).

7. வது. படலத்தில் வாஸ்போட பிணி முதல் சாமானிய இங்கிமி பிணி ஈறாயுள்ள பிணி (48) சிசாத்த பிணி (102)

8. வது படலத்தில் வாதநாடி பேத முதல் பேய் வாத பிணி ஈறாயுள்ள பிணி. (89) இவற்றில் சிசாத்த பிணி (65)

9. வது படலத்தில் மகோதர பேத முதல் சாத்திய சாத்திய விடபாக பிணி ஈறாயுள்ள (544) இவற்றில் சிசாத்த பிணி (138).

10. வது படலத்தில் அதிசூல பிணி முதல் அசாத்திய பூத சிகுநைம் ஈறாயுள்ள பிணி (163) இவற்றில் சிசாத்த பிணி (162).

11 வது படலத்தில் உன் மாத முதல் கடை விழியில் (11) வது சிரிவாகிய கண்ணெண்ணெய் ஈறாயுள்ள பிணி (205) இவற்றில் சிசாத்த பிணி (104).

12 வது படலத்தில் கர்ண பிணி முதல் அசாத்திய கபால பிணி ஈறாயுள்ள பிணி (105) இவற்றில் சிசாத்த பிணி (60)

13. வது படலத்தில் விரண பெருபிணி முதல் சந்நிபாத யோனி பிணி ஆ.குயுள்ள பிணி (329) இவற்றில் கொடுத்த பிணி (48).

14. வது படலத்தில், பிட பெரு முதல் ஆருட ரோகாணம் ஆ.குயுள்ள பிணி (388) இவற்றில் கொடுத்த பிணி (140).

15. வது படலத்தில் நீ பாதி பெருகம், முதல் வலிவிட பெரு பிணி ஆ.குயுள்ள பிணி (63) இவற்றில் கொடுத்த பிணி (58).

இவற்றுள் முதற்படலம் ஆகிய மற்றைய 14 படலங்களில் அடங்கிய 4,448 பிணிகளும் 3 அதிகாரங்களைப் பற்றி: பிறக்கின்றன.

அதன் விவரம் :- சுரபிணி முதல் சூட்டு வலிபிணி ஈ.ரிசிய (3,123) அதோங்கத்தைப் பற்றிப் பிறக்கின்ற கபால பிணிகளைப் - கண் நோய் முதல் சாத்திய கபால பிணி ஈ.ரு (299) ஊர்த்துவாங்கத்தைப் பற்றிப் பிறக்கின்ற பிணிகளாம்.

வரண பெரு பிணி முதல் தந்துராணு பிணி ஈ.ஙக (1026) உபாங்கங்களைப் பற்றிப் பிறக்கின்ற பிணிகளாம்.

இவ்வகைப் பிணிகள் வராமல் இந்த உயிரோடும் அமிர்தம் (ஸ்ரீவர்த்யாமிர்தம்) என்கிற சாஸ்திரத்தின் உடைய முக்கிய பயன் யாதென்னில், அறம், பொருள், இன்பம், வீடு எனும் உண்டாகின்ற பேரின்பத்தை சீவன் அடைவதற்கு செய்ய வேண்டியதெனக் கிற உடம்பை ஒப்புதற்கு தென்பதாம்.

இந்தப் பிணி ரோகாணம் அவ்வாறு இடம்பும் என்னில், பிணிகள் வருவதற்கு முன்னம் இதில் சொற்றம் தப்பிதும்

கொள்ளும் உபாயந் தெரியும்படி பிணி பூர்வரூபங்களை முதலியவற்றினை கூறுவதும். அவைகள் வந்த பின்பு அவற்றிற்குச் சிகிச்சை வேண்டும். வேண்டுவதில்லையென்னுந் துணிவைத் தருவதுந்தவிர - ஒரு அரசனனவன் 32 வகை ஆயுதங் களையுடைய நால் வகைச் சேனை சமுத்திரங்களைக் கொண்டு காலமறிந்து பகைவர்களை வென்று உயிர்களைக் காப்பது போல் - 32 வகைச் சிகிச்சைகள் என்கிற ஆயுதங் களையுடைய ஔஷதி என்கிற நாலு வகைச் சேனைகளைக் கொண்டு காலமறிந்து வியாதிகளென்கிற பகைவர்களை வென்று உடம்பைக் காப்பாற்றுகின்றதென்றுணர்க. அப்படியிருக்க இந்நூலுக்கு ஜீவரக்ஷாமிர்தம் எனப்பெயர் கூறிய தென்னையெனில் பிணியானது சடமாகிய உடம்பைப் பற்றியதாயிருந்தாலும், அந்த உடம்புடன் சேர்ந்து தேகி எனப் பெயர் பெற்று அபின்னமாயிருந்து பிணியினில் உண்டாகின்ற துன்பத்தையும் பிணி நீங்கிய போது உண்டாகின்ற இன்பத்தையும் அனுபவிப்பது ஜீவனே யாதலால் ஜீவரக்ஷாமிர்தம் என முதனூலாசிரியரே பெயர் கூறினர்.

உதாரணம்:- அறம் பொருள் இன்பம் வீடென நான்கும் உருவத்தாலாய பயன் என்றும் உணர்வாவ தெல்லாம் உடம்பின் பயனே என்றும் - உடம் பாரழி யினுயிராரழிவர் திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார் என்றும் - அனந்தக் சாத்திரங்கள் முறையிடுகின்றன வென்றுணர்க!

இன்னும் இந் நூலால் யாவரும் வியப்புடன் அடையத் தக்க பெரும் பயன் ஒன்றுளது அஃதாவது தேவ உபாசனை சித்த சுத்தி சீவ காருண்ணியம் நல் லொழுக்கம் முதலிய சத்குணங்களையுடையவராகி

கைபார்த்தற் குரிய தொடுநாடி, லகுநாடி, குருநாடி, தசநாடிஸ்தானம் அட்ட பரிசை முதலிய பற்பல சாத்திரங்களில் மிகுந்த பழக்க முள்ளவராயும், தேகம், தேசம், காலம், ஜாடராக்கினி, உண்டி; பலம் வயது நித்திரை முதலிய பேதங்கள் ஆராய்ந்து, விதிப்படி பிணியின் காரணங்களைப் பற்றி வாதாதி நாடிகளின் தன்னிலை பிறநிலை தொந்தம் பிறழல் முதலியவைகளை நேர்காண் கொண்டறிந்து, அறிவைச் செலுத்தி ஒவ்வொரு பிணிகளையும் அருமையாக நிதானஞ் செய்கின்ற பரம்பரை வைத்தியர்களைப் பார்க்கிலும் இந்த திவரட்சாமிர்த மானது சூரியன் உதயமாகி சகல காட்சிப் பொருள்களையும் யதார்த்தப் படத் தெரிவிப்பது போல் தன்னை விரும்பிய பெயர்கட் கெல்லாம் எவ்வளவு பிணி நிதானஞ் செய்ய வேண்டு மோ, அவ்வளவு பிணி நிதானங்களையும் அவ்வ வற்றின் குரிய சிகிச்சைகளையும் மிக எளிதாகத் தெரிவிக்கும் என்பது தான்.

ஆதலால் இதனை ஆதியோடந்தமாக ஆராய்ச்சி செய்யும் புத்திமான்களியாவரும் தங்கள் தங்கள் ஆன்மாவுக்குத் துணையாயிருக்குமென்று இதய சம்மதமாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள்.

இந்தச் சாத்திரத்தில் சொல்லிய பிணிகளையெல்லா நிவர்த்தி செய்யத்தக்க தேவ சிகிச்சை (1) இராட்சச சிகிச்சை, (1) மானிட சிகிச்சை (30) ஆகிய முப்பத் திரண்டு வகை சிகிச்சைக்குள் அடங்கிய பலவித மருந்துகளையும் விரிவாக கூறுகின்ற சிகிச்சா சாரசங்கிரகம் என்றும் சாத்திரம் இனித்தனியே பதிப்பிக்கப்படும்.

மேற்கூறிய பிணிகளுக்குரிய சிகிச்சைகள் - அந்தந்த பிணிகளின் முடிவில் தனித் தனியே காண்பித்திருந்தால் மிகுந்த பயனாயிருக்குமேயென்னில் மேற்படி சாத்திரத்தில், இவ்வொரு பிணிகளுக் குறித்து சொல்லியிருக்கிற மருந்துகள் விரிவாயிருப்பதனால் அவைகளை எடுத்தெழுதப்புகின் இச்சாத்திரமும் பெரியதாகும் என்பது பற்றி அதனைத் தனியே பதிப்பிக்க நியமிக்கப்பட்டது.

ஆகையால், இந்தச் சாத்திரத்தையும் இனியுடனே பதிக்கப் படுகின்ற அந்தச் சாத்திரத்தையும் அறிவாளிகள் முறையாக வாசித்துத் தங்கள் புத்தியில் இருத்திக் கொண்டு முறைப்படி சிகிச்சை செய்யில், இம்மை மறுமைக்குரிய பயன்களை இனிதிலடைந்து வாழ்வார்கள்.

அணிந்துரை

உடம்பினை முன்னம் மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டே
னுடம்புளே யுத்தமன் கோயிற்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

— திருமந்திரம்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து

— திருக்குறள்.

பரதநாடு.

கடவுளால் படைக்கப்பட்ட இப்பூவுலகத்திற்கோர் அணியாய் விளங்குவது நம் நாடாம் பரதநாடு.

இந் நாட்டின் பெயரையும் புகழையும் முற்றிலும் எடுத்துரைப்பது ஆயிர நாவுடையோனன்றி, மானிடப் பிறவியின் ஆற்றலுக் கடங்காததாகும். அப் பெருமை தானும் பண்டைக் காலத்தே தன் சிறந்து விளங்கியது. நமது முன்னோர் இகத்திற்குரிய சகல சாதகங்களையும் அடைந்து, அதன் பின் அவைகளில் இச்சை கொண்டழியாமல், இக சுகங்களை அடக்கி யாண்டு மனத்தைப் பர சாதகங்களிற் செலுத்தி, இக பரத்துவ நிலைகளிற் கை தேர்ந்தவர்களாய், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருடார்த்தங்களையும் அடையும்படி எண்ணரிய வேதங்களையும் சாத்திரங்களையும் என்றென்றைக்கும் உலகம் உய்யுமாறு உதவித் தாமரை நீர் போல் ஒட்டியும் ஒட்டாமலும் உலகத்தில் வாழ்ந்து வந்த நாளில், ஏனைய உலகம் உதித்ததோ இலதோ என்னுமாறு மாக்கள் ஆங்காங்குப் பற் பல தொகுதிகளாய்த் தோன்றி உண்ணும் உடுக்கும் ஏதென்று உணராது புன்மை வாய்ந்திருந்தனர் என்பது சரித்திர சித்தாந்தம். ஆயினும் இப் பெருமையைக் கண்டு பரதநாட்டில் உதித்த நாம் இக் காலத்து அடையும் பெருமைதான் என்னே? பல்லாயிரம் வருடங்கட்கு முன்னரே பல்லாற்றானும் பெருமை மிகுந்த இப்புனித நாட்டில் உதித்தும், அப்பெரும் பேற்றைக் கொண்டு மேன் மேலும்

இங்கு வாழும் ஆற்றல் இழந்து படிப்படியாய் நாளடைவில் அற்பமாய்ப் பெருமை இன்றிச் சீரழிந்து செல்வமும் இழந்து, இக் காலத்து எவரினும் இழிந்தோர் யாரே? என்று உலக முழுதும் இகழ்ந்துரைக்கும் படி இப்பொழுதும் நாமே. ஆதலின் பண்டைக் காலத்துப் பெருமையை எண்ணி அக மகிழ்வதும் இக் காலத்துச் சிறுமையை உன்னி உளமழிவதும் பயனற்ற பாடாகும். இரண்டையும் நீத்து, இனி மேம்படும் வழிகளைத் தேடுக் கைக் கொள்வதே சான்றோர் அறிவாகும். அவ்வாறாயின் புராதன பெருமையால் நமக்காவது ஒன்றும் இல்லை என்று கூறலாமோ? அதுவும் உண்மையாகாது. நம் பெரியோர் பெருமைகள் எண்ணி எண்ணி அதனால் மேன்மேலும் ஊக்கங்கொண்டு நாமும் நமது காலத்தில் நம்நாடு அப்பெருமையை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உழைக்க வேண்டும். அவ்வுழைப்பு சிறப்பிக்க வேண்டுமாயின் தற்போது நம்பால் உள்ள குறைகளைத் தெரிதல் வேண்டும். குறைகளைத் தெரிந்த பின்னரே களைதல் கூடும். அங்ஙனம் களைந்த பின்னரே நலம்பெற ஓங்க வேண்டும். சிறக்க!

<u>தமிழ் மக்கள்</u>: இத்தகைய சிறப்பு வாய்ந்த பாரத பூமியானது பரத வருடமென்றும் பரத கண்டமென்றும் பெயர் பூண்டு, தேவர் உலகம் பூவுலகில் இருந்த-தென்ன யாவரும் கொண்டாடும் காலத்திற்கு நீண்ட காலம் முன்னரே, நற்றமிழ் நாடு கல்வி

கேள்விகளிலும், நாகரிகத்திலும், மதக் கொள்கைகளிலுஞ் சீர் பெற்றுச் செழித்தோங்கியிருந்த தென்பதும் சரித்திர சித்தாந்தமே.

ஆரியர்கள் பரத நாட்டிற்கு வடமேற்கில் மத்திய ஆசியா பூமியினின்றும் பல பிரிவுகளாகப் பிரிந்து வருவதற்கு முன், திராவிடர்களே ஒரு காலத்தில் அந் நாட்டின் பெரும்பாகத்திலும் பரவி, ஏனைய புராதன குடிகளை அடக்கி ஆண்டு, தலைசிறந்து இருந்தன ரென்று சரித்திர வல்லார் இயம்புகின்றனர். அத்திராவிடரே தமிழ் மக்களாவர். பிறகு ஆரியர்கள் வந்து குடியேறின காலத்தில் தமிழ் மக்கள் தென்னாட்டிற் சுருங்கினர். அதற்குப் பின் இவ் வகுப்பினரும் ஒருவரோடொருவர் கலந்து அவரவர் நாகரிகத்தையும் கல்வியறிவையும் மற்றவர்க்குதவி, இருவரும் மேம்பாடடைந்து நீண்ட காலம் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் தம்மிடமுள்ள சாத்திரங்களையும் இலக்கிய இலக்கணங் களையும் ஆய்ந்தெடுத்துக் கொண்டனர். அதன் பயனைப் பிற்காலத்தில் ஆரியர் நாகரிகமும், மதக் கோட்பாடுகளும், அவர் தம் கல்வி ஆராய்ச்சியும் பெற்றுத் தமிழ் மக்கள் தம்முடைய இலக்கிய இலக்கணங்களிலும், சமயக் கொள்கைகளிலும், யோக ஞான வைத்தியம் முதலிய பரிபாடைகளிலும் வட மொழிச் சொற்களை ஆளத் தொடங் கினர். காலவகையினால் யாவர்க்கும் பழையன கழிதலும் புதியன புகுதலுமாகிய திரிபுகள் வருவல வென்றபடி, இவ்வாறு மாறுதல்கள் அடைந்த போதிலும், ஒருவருக் கொருவர் கொள்வன கொடுப்பன நேர்ந்த போதிலும், தமிழ் மக்கள் தம் பெருமை குன்றாமலும், தனி மரபு,

அழியாமலும் உபநதிகளைக் கொண்டு பெருகியொழுகும்
ஜீவ நதிகளைப் போல் வளர்ந்து வந்தனர். அதற்குப் பின்னரும்
அனேக ஆண்டுகள் சென்று இப்பரத பூமியையும்
அதில் அடங்கிய தமிழ் நாட்டையும் துருக்கியரும்
அவர் பின் இப்போது நம்மை ஆண்டு அளிக்கும் ஆங்கிலரும்
கைக் கொண்ட நீண்ட காலத்திலும் தமிழ் மக்கள்
தம்மியல்பு மாறாது வளர்ந்து வருவது யாவரும் கண்
கூடாக் காணும் காட்சியே யாம்.

<u>தமிழின் மகிமை</u>:- தமிழ் மக்களின் பெருமையும் சிறுமையும்
இவ்வாறு இருக்க, நம்மைச் சீராட்டித் தாலாட்டி ஊட்டி
வளர்க்கும் தமிழ் என்னும் நமது இனிய தாய் நமது
நாடு படும் பாட்டையே படுவது இயல்பன்றோ?
நம் மொழியில் இன்று புராதனமாய்க் கிடைத்துள்ள
தொல்காப்பியம் முதலாய பல நூற்களும், சரித்திர
சாத்திர எல்லைக்குள் அகப்படாது புறமே இருந்து,
இன்னும் ஆராய்ச்சி அளவாகவே நிற்கலாயின.
அன்னமிக்க நூற்களில் முதல் நூல் எனப் படும்
தொல்காப்பியமே இலக்கணமும் இலக்கியமுமாம்
என்று, அவ்விலக்கணநூல் தானும் மொழியின் இலக்கணமே
யன்றித் தமிழ் மக்களின் இலக்கணமுமாய் அமைந்து.
எவ்வகையிலுஞ் சிறப்பு வாய்ந்து இருக்கின்றது. எம்மொழி
யிலும் முதல் நூல் துலங்கி நிற்றிருப்பது மன்றி நடையொழுக்கிலும்
பொருளடக்கத்திலும் சிறந்திருப்பது அசாத்திய
மாதலாலும் யாதானுமொரு மொழி அத்தகைய சிறப்படை
வதற்கு முன் பல நூற்றாண்டுகளாலும் வளர்ந்து வந்திருக்க
வேண்டுமாதலாலும். தமிழ் மொழியின் வரையறையை
எங்ஙனம் கணிக்கக் கூடும்?

இனிமை என்னும் பொருள் தரும் பெயர் பூண்ட தமிழ் மொழி யானது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்னும் இலக்கணங்களில் பூர்த்தியான முதிர்ச்சி அடைந்து இருப்பது தமிழ் ஒன்றேயன்றி வேறு எந்த மொழியிலும் இல்லை என்று உறுதியாய்ச் சொல்லக் கூடியதான அகப்பொருள் இலக்கண இலக்கியங்களையும் பெற்றிருக்கின்றது. இவைகளேயன்றி இதிகாச புராண ஆகம நூற்களும் எண்ணிறந்தவை இயன்றுள்ளன. அன்றியும் மக்கள் பால் கொண்ட பெருங் கருணையால் சிவ-பெருமானார் பார்வதியம்மையாருக்கு அருளிச் செய்து, உப வேதங்களில் ஒன்றாக நிற்கும் ஆயுள் வேதத்தை வழிவழியே நந்தி தேவரிடம் தாமுணர்ந்தபடி மகா சித்தர் பெருமக்களாகிய அகத்தியர், திருமூலர், போகர், கொங்கணர், தேரையர் முதலியோர் இத் தெய்வத் தமிழ் மொழியில் இயற்றிய அரும் பெருஞ் சாத்திரங்கள் பலவற்றுள்ளும் காலகதியடைந்தன போக எஞ்சி நிற்கும் நூற்கள் எண்ணிறந்தவை. அவற்றின் அருமை பெருமைகளை உள்ளபடி உரைக்கப் புகின் பெருகுமாதலின் இப் பெரியோர்களால் நமக்குக் கிடைத்துள்ள நூற்களில் புதைந்து கிடக்கும் தனிச் சிறப்புகளில் சில வற்றினையேனும் கண்டு இன்புறல் வேண்டும்.

'ஏது' என்னும் பகுதியின் பாற்பட்ட வாத பித்த ஐயங்களின் குணங்களைத் தெளிவதற்கு நாடிப் பரிட்சையை அறிவித்தும் நுட்பமும் பொருந்திய பிரத்தியேக சாத்திரமாகச் செய்து இருக்கின்றனர். லிங்க வகையிலும் மூத்திரப் பரிட்சையை அதிநுட்பமாகப் பரிசீலனை செய்து சர்வ ரோக நிதானங்களையும் இவ்வொன்றினின்றே கணிக்குமாறு ஆற்றலுஞ் சிறப்பும்

...யிந்த "நீர் நிறக்குறி நெய்க்குறி" என்னும் சாத்திரத்தை
...தொற்றபடி தந்துதவி இருக்கின்றனர். இன்றும் சிகிச்சாக்
கிரமத்தில் அரும் பொருள்களாய் கிடைத்துள்ளவைகளில் நீர்,
திராவகம், செயநீர், சரக்கு வைப்பு, இரத்தின வைப்பு,
உருக்கிணம், களங்கு, உபரச சத்து, குளிகை, சாரணை
...ணிகள், குருச்அண்ணம், இவைகளினின்றும் பெறப்படும்.
...ஸ்ம செந்தூர அன்னங்கள், கற்பவகைகள், இன்னோரன்னவை பலவுள.
...ஏது" முதலிய மூன்றும் நீர்களாக, நோய் அணுகாவண்ணமாய்க்
...காப்பு என்பதையும் 4 வது பிரிவாக ஒருங்குறத்திரட்டி
அமைத்துள்ளனர். திருமூலர், தேரையர், முதலிய பெரியோர்,
கற்று வல்லோரல்லது ஏனையோர் தெரிந்துரைச் சாத்திய
...மில்லாத அருந்தமிழ்ப் பாக்களில் தமது நூற்களை இயற்றி
இருக்கின்றனர். அகத்தியர் முதலிய வேறு சில பெரியோர்
தமிழ் மணமறியாத புலவறிவாளர்களும் எளிதில் பகுத்துத்
தெரிந்து கொள்ளுமாறு, இலக்கிய விலக்கண வரையறைகளையுந்
தம் பெருங் கருணையால் கடந்து தமிழ் உலகம் உய்யுமாறு,
மருவச் சொற்களையன்ன மொழிகளை உபயோகித்து, மனத்தில்
சில பெரும்பகுத் தம் நூற்களை எளிய பாக்களாகத் தொகுத்துப்
பேருதவி புரிந்திருக்கின்றனர். இவர் தம் பெருமை தான் என்னே?
இவ்வுண்மையும் பெருமையும் உணராத சிறியோர், சிலர்
தமிழ் மருத்துவ முறைகளை இழித்துரைக்க எண்ணி,
இலக்கண இலக்கிய குறைகளை எடுத்துக்காட்டி
இகழ்பவராவர். இச்சிறியோர்கட்கு விடையளிப்பது
வேண்டாமை ஆயினும் அவர்களுரைப்பதையும் சிறிது
ஆராய்வோம்.

நாவலர் இயற்றும் பாக்களின் சிறப்பானது சொல், யாப்பு, அணி, என்னும் இவ்வகைகளிற் பொலிவுற்றிருப்பதேயன்றி அவைகளை வாகனமாகக் கொண்டு செல்லும் பொருளின் பெருமையே சாலப் பெரிதெனச் சான்றோர் மதிப்பர். சொற்சுவை, பொருட்சுவை, இவ்விரண்டினுள் முதலது செவிக்கு இன்பந்தந்து ஆக்கியோன் கவித்திறனைப் புலப்படுத்தும். பொருட்சுவையானது அவனது அறிவின் பெருமையையும் அதனால் உலகம் அடையும் நன்மையையும் பற்றி நிற்கும். எளிதென்றிகழப் படுகின்ற அந்நூற்களின் பொருட்சுவையை உற்று நோக்குமிடத்து அவைகளின் பெருமையும், அப்பெரியாரின் மகிமையும் இத் தன்மைத்தென உணரலாம். இவ்வுண்மையை முற்றும் அறிந்த தமிழ் வைத்திய சிகாமணிகள் அப்பெரியாரை வணங்கி வாழ்த்துதல் இயல்பே யன்றோ? நிற்க சொற்செறிவே பெரி தென்று எண்ணிற் தமிழ் வைத்தியத்தை இகழ்ந்து பேசும் பன்மக்கள் தேரையர் இயற்றிய மோன யமகம், கரிசல், மருத்துப் பாரதம் முதலிய நூற்களின் பெயர்களையும் கேட்டிலர் போலும்.

<u>வைத்திய சாஸ்திரம்</u>:- இனி, நமக்குக் கிடைத்துள்ள வைத்திய சாத்திரங்கள் உலகம் வியக்கத் தக்க பெருமையையும் நுட்பத்தையும் விரிவையும் கொண்டுள்ளன. நம் நாட்டு அரும் பெருஞ் சாத்திரங்கள் ஏனைய நாட்டுச் சாத்திரங்களைப் போல் தத்துவங்களை பொருட்போக்கையே கொண்டொழுகி லேவாது, யாவும் பரமார்த்தங்களுக்குச் சாதகங்களாய் முன்னின்று பின்னரே மானிடரின் இகபரங்கட்கு உபயோகமாகின்றன. இவ்வழியில் ஏனைய சாத்திரங்களைக் காட்டிலும் வைத்திய சாத்திரமானது முதன்மையைப் பெற்றிருக்கின்றது.

ஆயுள் வேதமானது உடல்நல திடகாத்திரத்தையும், அழகையும் கொடுத்து நீண்ட ஆயுளைத் தருவதற்காக ஏற்பட்ட சாத்திரமென்று யாவரும் அறிவார்கள். இவையே சகல வைத்திய சாத்திரங்கட்கும் பொதுவான நோக்கங்களாகும். நம் நாட்டிலோ ஆயுள் வேதமானது முக்கியமாய் யோகிகளும் முனிவர்களும் சித்தர்களும் யோக வழிகளில் நின்று, மனோவாக்குக் காயங்களிற் பரம்பொருளின் பயப்பட்டு, நீண்ட காலம், காலனைப் புறங்கண்டு, நிட்டையில் இருந்திருப்பதற்குச் சாதகமாகக் கற்பங்கள் முதலிய பல உபாயங்களைப் பெரிதும் போற்றுகின்றது.

கற்பமாரிக் கொருமை விந்து மென்று மூலிகை
நச்சுவார்க்கு மென்ன அண்ணலானது — சதுகோடி
பொற் பிரகாசத்தை யுடலென்ன வாலிபம்
மிக்க வாய்ப்பது பெருமை யென்ன கூறுதல்
புத்தி வார்த்தைகளி வைகளென்றுணர் வாறெனி — லறிவளார்
கற்ப ராத்தும அறதியுண்மையானது
நுட்ப மாத்திர மறிவ ரெண்ணிலாயுள்
சித்த மாக்குறி கொள்வழி சொன்னிய ராகுவர் — நிசமாமே.

— தேரையர்.

இன்றும் அப்பெரியோர் பெரும் நோக்கங்கட்கு அனுகூலமாக ஆயுள் வேத நூற்களில் ஒரு பான்மையே தேவருணும் அதனை எண்ண மானிடரின் நோய்களைப் போக்கிச் சுகவாழ்க்கையைத் தருவதற்குச் சாதகமாக விருக்கின்றது.

பற்ப மாத்திரை தைல வெண்ணெய் லேகிய
வர்க்க நேத்திர குளிகை வெண்ணெய் — சூரணி
பற்று வேர்ப்பன அழகை கண்ணிலானமை — குழிநீரம்
நற்பராக்கிர வகுத்த மின்னும் மேலுள . தேரையர்.

பொற்கரிய இப் பெரும் பேற்றை அப் பெரியோர் நூலில் வந்த நாம் எண்ணிறந்த காலமாய் நமதெனக் கொண்டு கையாடுகின்றமைற்று இங்கும் இயலானது நாம் செய்த தீவினையின் பயனே என்றுரைக்கற் பாலதாகும்.

தற்கால சுதேச வைத்தியநிலை: இங்ஙனம் நமக்குக் கிடைத்துள்ள அரிய சாத்திரங்களைப் புறக்கணித்து நிற்கும் நாம் எவ்வாறு பிணி நீக்கஞ் செய்து நலம் புரிதல் கூடும். வைத்தியப் பெருந் தொழிலுக்கு ஆதாரமாக உள்ள சாதனங்கள் மூன்று. அவை. 1. சாத்திர ஆராய்ச்சி, 2. அநுபவம், 3. கைபாகம் முதலியனவைகளாகும். முதலிரண்டும் பிணி நிதானத்திற்கு வேண்டியவை. பின்னது சிகிச்சைக்குரியவை. இம் மூன்றிலும் முக்கியமான சாஸ்திர ஆராய்ச்சியானது மிகவும் குன்றியிருக்கின்றது. அதற்குக் காரணம் சாத்திரங்கள் வெளிவராமையேயாம். இச் சாத்திரங்கள் ஆங்காங்கு அவற்றின் மனமறியாதவர் கையிற் சிக்கிச் செல்லுக்கு இரையாய் அழிந்து வருகின்றன. அவைகளைத் திரட்டி ஒழுங்கு படுத்தி விளக்கமாக உரை எழுதி வெளியிடுவதே நம் நாட்டு வைத்திய சாத்திரப் பற்று கொண்டவர்களின் கடமையாம்.

வெளிவந்துள்ளனவாகிய சில நூற்கள் பெரும்பாலும் ஆராய்ச்சிக் குறைவினாலும், பலவேறு காரணங்களினாலும் தம் பெருமை குன்றி எண்ணிலாப் பிழைகளுடன் உலவி வந்து இன்னல் புரிகின்றன. இப் பெருங் குறை நீங்குங் காலமும் வருமோ? இக் காலத்து நமது வைத்திய முறைகள்

நம் பெருமைகளைக் காட்டாமல் இருக்கவில்லை. கல்வியறிவிலும் ஆராய்ச்சியிலும் சிறந்ததெனப் பெரிதும் புகழ்ந்து பேசப்படும் மேனாட்டு வைத்திய முறைகளுக்குக் கட்டாத பல பிணிகளை நம் நாட்டு வைத்திய சிகாமணிகள் எளிதில் உணர்ந்து சிகிச்சை செய்து வருகின்றனர். இத்திறமைக்குக் காரணம் அவர்கள் பரம்பரையில் தம் பெரியோர்களிடம் கற்றுக் கேட்டுப் பழகி வந்த அநுபவமேயாகும். இதனுடன் நூல் ஆராய்ச்சியும் கூடுமாயின் பொன் மலர் நாற்றமுடைத் தெனக் கூறலா மன்றோ?

<u>நாட்டுப்பற்று</u>: இனியேனும் இப் பெருங்குறையை நீக்க ல்லவர் நமக்குச் சொந்தமாகக் கிடைத்துள்ள வைத்திய சாத்திரங்களை நிலை நாட்ட வேண்டும். இதுவே நாட்டுப்பற்றாளர் களின் முதற் கடமையாகுமென்று திட்டமாகக் கூறலாம். ஏனெனில் ஒவ்வொரு தேசத்தவரும் வெவ்வேறு நடையுடை பாவனையுடையவர்களாய் உணவுகளிலும் வழக்க ஒழுக்கங்களிலும் மாறு படுகின்றனர். அவைகளைக் கொண்டே இவர் இந்நாட்டினர் அவர் அந்நாட்டினர் என்று உலகம் வரையறை ஏற்படுத்து கின்றது.

நோய்கள் உணவாதிகளாலும் வழக்க ஒழுக்கத் தவறுகளினாலுமே பிறக்கின்றன. ஆதலின் அவற்றின் தோற்றமும் சிகிச்சையும் ஒவ்வொரு நாட்டிற்கும் வேறு படுகின்றன. ஆதலின் அந்தந்த நாட்டிற்குரிய வைத்திய சாத்திரத்தை அந்நாட்டினர் பெரிதும் பாராட்டுவார்கள். அது போலவே நம் நாட்டிலும் இருக்க வேண்டுமாயின் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் ஏட்டுப் பிரதிகளைத் தேர்ந்து திரட்டுதல் வேண்டும். திரட்டியபின் அவைகளை அறிவுடையோரைக் கொண்டு

ஒத்துப் பார்த்துச் அந்த பாடமாக்கித் தெளிவுரை எழு
அச்சிட வேண்டும். அவ்வண்ணம் வெளியிட்ட பின்னர் வைத்தி
மாணவர்களைத் தேடி அவர்களுக்குப் பொருளுதவி செய்
தாவது அந்நூற்களை ஐயம் திரிபறக் கற்றுணரச் செய்
வேண்டும். அதன்பின் அவர்கள் தத்தமக்கியன்ற தனி
ஆராய்ச்சிகளைச் செய்து. மேன் மேலும் வைத்தியம்
விருத்தியடையச் செய்ய வேண்டும். அதுவேயன்றி
நம் நாட்டவரும் அவ் வைத்திய முறையைக் கைக்கொள்
நன்மையுறும்படி ஆங்காங்கு சுதேச வைத்திய சாலைகளை
அமைக்க வேண்டும். இப் பெருங் காரியங்களெல்லாம்
பெரும் பொருளாளிகளும் துரைத்தனத்தாரும் சிரத்தையுடன்
மேற்கொண்டாலன்றிப் பயன் படுவது சாத்தியமன்று.
இவ்விடத்தேயே நாட்டுப் பற்றுக் கோர் அடிப்படை
யாகவும் அறிகுறியாகவும் கொள்ளல் வேண்டும்.

வெளிநாட்டு மருத்துவம்!

(பரதேச வைத்தியம்) நாட்டுப்பற்றாளர்களின் செய்கை அதுவாக
வைத்திய பண்டிதர்களும் மாணவர்களும் நம் நாட்டு மருத்து
வளர்ச்சியின் பொருட்டுச் செய்யும் பேருதவி யொன்றுண்டு
முக்கண் காட்டினும் குற்றங் குற்றமே! என்று கூறிய
நக்கீரருக்கு இணங்க இவர்கள் தமது கல்வியின் பெரு
யில் ஈடுபட்டுத் திடம்படப் பேசினும். அறிவு ஒருவன்
பாற்பட்டதன்று என்பதை உன்னிப் பிற வைத்திய
முறைகளில் காணப்படும். புதிய ஆராய்ச்சி வகைகளைக்
காணும், தெளிந்து அவற்றுள் நமக்கு வேண்டியனவாயும்
நம்மிடமில்லாதனவாயும் இருக்கும் விடயங்களைத் தமதாக்கி
கொள்ளல் வேண்டும்

தாய் உள்ளன மாத்திரமே சிறப்புடையன வென்றும்,
ரீ பால் நாம் அறியற்பாலன ஏதும் இலதென்றும்
கொள்ளும் கொள்கையானது யாவருக்கும் பொருந்தாததாகும்.
கூட்டு வைத்திய முறைகள் இந்நாட்டில் இக் காலத்தில்
ஜி இருப்பதும் ஒரு பாக்கியமாக வெண்ணி,
அதனின்றும் நாம் கொள்வனவற்றைக் கொள்ளுதல்
வேண்டும். ஆயினும் அவ்வாறு செய்வதிலும் ஒரு பெரிய
அபாயம் உண்டு. அஃதாவது பிறர் நமது வைத்திய
ர்களில் ஆரம்பிக்கக் குறைவில் அவற்றிலுள்ள,
ல்லா விடயங்களையும் பரதேச முறைகளின் வாயிலாக
வெளிக்கப் புகுந்து அல்லல் படுவதேயாம். இதனினும்
நாம் நம் வைத்திய சாத்திரங்களுக்கு இழைக்கக் கூடிய
பெருந் தீங்கு வேறொன்றில்லை. இனம், மொழி, சாத்திரம்.
இவைகளின் கலப்புகள் காலக் கிரமத்தில் அநேக நூற்றாண்டு
ளில் படிப்படியாய் ஏற்படக் கூடியவையே யன்றி
ருவன் செயலினால் ஒரு நிமிடத்தில் உண்டாகுந்
தன்மையவன்று. இத்தகைய கலப்புகட்கிடங்கள்
எப்பொழுதும் பகைமையே பாராட்டுவார்கள் என்று
ரித்திர சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. நெருங்கிய
சேர்க்கை பலத்தால் அவ்விரோதத்தையுங் கடந்து
அவர்களும் அறியாது காலப் போக்கில், கலப்பு
ஏற்படுகின்றது. நமது நாடானது இத்தகைய கலப்புக்கு
ளிதில் இடங்கொடுப்பதில்லை.

(திவரட்சாமிர்தம்)
(உயிர் ஓம்பும் அமிர்தம்) :- இனி திவரட்சாமிர்தம் என்னும்
பெயர் பூண்ட இந்நூலானது குற்றம் தோட பேதமின்றி.

நிதானங்களையும், அவைகளின் சிகிச்சை வழிகளையும் காட்டிய சாத்திரமாகும். இது நமது வைத்திய பண்டித சிகாமணிகளுக்குப் பேருதவியாய்ச் சுமார் 60 வருட காலமாக வெளிவந்து உபயோகப் படுகின்றது.

இதில் அடியேன் செய்த ஆராய்ச்சியிற் பல அரிய விடயங்கள் வெளிவந்தன. அவற்றுள் முக்கியமாக முதல் நூலிருந்து படல வகுப்புக் கிரமங்களையும், அவ்வப் படலங்களின் பிணிகளையும் எடுத்துக் கொண்டு, அவைகளுடன், சித்தப் புருடர்களின் சாத்திரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, பேதப்படும் பல விடயங்களையும். தொகுத்து "என்பதும் உள" என்றும், சிறிய பேதங்களையுள்ளவைகளை 'அந்தர்த' பிணியின் கீழ் "அன்றியும்" என்றும், பெரும் 'பகுதிகளாய், வேறுபடும். பிணி வகைகள் மாதாந்திரம் என்னும் தலைப்புடன் தனியாகவே எடுத்து எழுதியும் இச் சாத்திரம் ஒன்றினிடமாகவே வடமொழி தென்மொழி இவ் விரண்டினுங் காணும் பிணி நிதானங்கள் முற்றிலும், ஒருங்கே எளிதில் யாவரும் அறிந்து தெளிக்கும் வகைக்கு நூலாசிரியர் விளங்கக் காட்டியிருக்கின்றனர். "அன்றியும்" என்பதைப் பின் பற்றி வரும் சிறு பேதங்கள் பகுப்பவர்க்குச் சித்தர் மாதாந்திரம் என விளங்குமாதலின் அவைகட்கு மதாந்தரம் என்னும் தனித் தலைப்புக் கொடுக்கவில்லை. அவைகளை எடுத்து, மதாந்தரம் என வருவனவற்றைச் சித்தப் புருடர்களின் மத வேறுபாடுகளென அவர்களுடைய சாத்திரங்களைக் கொண்டு தெளிந்து "சித்தர் மதாந்தரம்" என எழுதியுள்ளேன். இஃதன்றியும் .

1) 125 வது பக்கம் 5வது அஸ்மரி பிணி படலத்தின் கீழ் மூத்திரக் கிரிச்சிர ரோக பத்திலட்சணம் புதிதாய் எழுதியிருக்கிறது.

2) 145. வது பக்கம் மேற்படி படலத்தின் கீழ் மேக பிணிகள் நிதானம் காட்டப்பட்டது.

3) 452. வது பக்கம் 9வது. மகாவாத பிணி படலத்தின் கீழ்ச் சித்தர் மதாந்தரத் தலைப்பின் அடியில் அழல் பித்தம், மார்க்கப் பித்தம் என இரண்டும் சேர்ந்துள்ளன.

4) 399. வது. பக்கம் 13 வது. விரண பேத படலத்தில் சித்தர் மதாந்தரத் தலைப்பின் கீழ் பகந்தர பிணி எனப்படும் பவுத்திர பிணி 8ம். சேர்க்கப்பட்டன.

5) 461. வது பக்கம் நாடி பேத படலத்தில் காட்டு மசகத்தின் அடியில் மற்றைய மசகங்களின் பெயர்களைச் சித்தர் மதாந்தரப்படி எழுதி இருக்கின்றது. அவைகள் காரணப் பெயராய் அந்தந்த மசகத்தின் செயல்களைக் குறிக்கின்றன.

6) மேற்படி படலத்தின் முடிவில் கீழ் தனியாகச் சித்தர் மதாந்தரத் தலைப்பின் அடியில் உள் மாந்தை பிணி குடற்கரி பிணி, நாவெட்டிக் காய்ச்சல் இவைகள் ஏடுகளில் சோதித்து எடுத்து எழுதப்பட்டன.

பிணி நிதான மகிமையும் படல அமைப்பும்:

ஆயுர் வேதத்தில் கூறப்பட்டுள்ள பிணி யறிதலான முறையின் மகிமை பெரிதும் பாராட்டற்பாலது. இவ்வுடம்மை வினையின் செய்கால் நிலமாக வைத்து, பிணி தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் தொடக்க முதல் இறுதிவரை அனைத்துப் பிணிகளையும் உட்படுத்திக் கூறும் இயல்பானது ஒரு மரத்தின்

வளர்ச்சிக்கு விதை முதலாகவும் கனி ஈறாகவும் இடையே அதன் உடல், அதனின்றும் பிறக்கும் பெருங்கிளைகள், சிறுகிளைகள், அதிற் றோன்றும் காய் கனிகள் அக்கினிகளில் அடங்கும் வித்துக்கள் ஆக. இவையனைத்தும் பூமிக்கு மேலாகவும், இவற்றின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் ஆதாரமாகவும் காரணமாகவும் பூமியின் கீழ் வளர்ந்து செல்வன வேர்களாகவும். இத்தகைய பாகுபாடு படுத்தி இருக்கின்றது. இவ் உவமையின் பெருமையை இதனடியில் தேரையர் திருவாக்கால் காண்க.

நோயினுற் பத்திவகை நோய்கள் வினைவிரையாம்
நோய்கள் வினைவயலாம் மெய் நோய்கள் வளர்பயிராய்
நோயுறவு பாகுகி நோய்கள் வெகுமேலாம்
(தேரையர்)

இந்தப் பிணிகள் மனிதவுடம்பில் கருப்பம், முயற்சி, கருமம் என்னும் மூவகைகளால் பிறக்கின்றன. வினைக் கூறிய பின்னர், அவை தாமும் ஏது, இலிங்கம், என்னும் இருவகையால் அறியப்பட வேண்டுமெனத் தெளிவாகக் கூறப்படுகின்றது.

இவ்விரண்டினும் ஏது என்பதே சிறப்பாக ஆயுர்வேத மருத்துவர்களுக்குப் பிணி அறிதலினும் சிகிச்சையினுங் கூட மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. இவ்வகையைப் பின்பற்றி ஏற்படும். பிணியறிதலானது. பிணிநாடும் மருத்துவனுடைய கல்வி ஆராய்ச்சி பட்டறிவுக் கிணை விளைவேயன்றி பிழை போவது அரிது. இதுவே ஆயுர் வேதத்தின் சிறப்பாகும். ஏது என்பது (சில தோட பேதங்களைக் குறிக்கின்றது. பிணி உடம்பில் தோன்றுவதற்கு

முன்னர் திரி தோட முக்குற்ற வேறுபாடுகள் எனப்படும்.
வாத பித்த ஐயங்கள் எக்குற்றமும் அடையாமல்.
தத்தமக்கியைய சரியான நிலையில் நின்று உடம்பை
தாங்கி வருகின்றன. முற்கூறிய மூன்று காரணங்களால்
வாத முதலிய மூன்றும் குற்ற ~~உடம்பில்~~ (தோட)
மடைந்து தம் இயல்பு நிலை மாறி, ஒன்றை ஒன்று
தாக்கி உடம்பில் பிணியைப் பரவச் செய்து,
4448 என்று கணிக்கப்படும். பிணிகளைப்
பிறப்பிக்கின்றன. விளக்கமாவது, திரிதோட
பேதத்தால் பிறக்கும் பிணிகள் உள்ளும் புறம்புமாய்
பற்பல பிணிகளாய் வெளிப்படு பிரத்தியேக
நாமங்கள் பெறுவது. இவற்றிற்கு ஆதிகாரணமா
யிருப்பது. திரிதோட பேதமாகையிலே அப்
பேதத்தை ஏதுவென்றும், அப்பேதத்தால் வெளிப்படும்.
நோயை லிங்கமென்றும், வகுத்துக் கூறப்பட்டது.
முதல் முதலில் ஏது எனப்படும் திரிதோட
பேதங்களை நாடி வகையிலே அறிந்து ஆயுள்
வேத வைத்தியன் பிணிகளை நிதானிப்பான்.

பழனி தண்டாயுதபாணி சுவாமி துணை.

பிணிகளின் பெயர் அகராதி.

பிணிகளின் பெயர்கள்

அ.

அகத்தியர் மகாந்தர மலட்டு பிணி ரோகம்.
அகமரித்த கருப்ப லட்சணம்.
அகிருக்கிரம விடம்
அக்கினி கீடம்.
அக்கினிச் சிலேத்துமம்.
அக்கினி பதச் சிலந்தி.
அக்கினி மந்தசுரம் (மகா)
அக்கினி முகச் சிலந்தி
அக்கினி ரோகன்னி ரோகம்.
அக்கினி விஷபாக பிணி (மகா)
அங்க சலன வாதம்.
அசகா மசூரிகை பிணி (மகா)
அசஜீர்ப்பவ விக்கல்,
அஜகர்ணிகா பிணி
அசாத்திய அதிசார பிணி
அசாத்திய உதர பிணி
அசாத்திய எலி விட லட்சணம்
அசாத்திய எலி விட சிகிச்சை
அசாத்திய கண்ட மாலை.
அசாத்திய கபால பிணி
அசாத்திய கருப்ப லட்சணம்
அசாத்திய காச பிணி
அசாத்திய குஷ்ட பிணி
அசாத்திய குன்மப் பிணி.

அசாத்திய இளைந்தும பிணி
அசாத்திய அவலட்சணம்
அசாத்திய அவலட்சணம்
அசாத்திய அவாசப் பிணி
அசாத்திய ஓக்காளைப் பிணி.
அசாத்திய கந்தரோக நிதானம்.
அசாத்திய காகரோகம்.
அசாத்திய பாண்டு ரோகம்.
அசாத்திய பித்தப் பிணி
அசாத்திய பிலிகப் பிணி
அசாத்திய பூத நிதானம்
அசாத்திய மசூரிகை (மகா)
அசாத்திய மகாத்திய பிணி
அசாத்திய மூலப்பிணி
அசாத்திய இரத்த பித்தப் பிணி
அசாத்திய வாதப் பிணி.
அசாத்திய வாந்திப் பிணி
அசாத்திய விசர்ப்பிப் பிணி.
அசாத்திய வித்திரதிக் கட்டி
அசாத்திய விரண நிதானம்.
அசாத்திய விடக்குறி நிதானம் (மகா).
அசாத்திய வெண்குட்டம் (மகா).
அசாத்தியாதி சாரம்.
அசாத்தியா சாத்திய பவுத்திரம் (மகா).
அதிக வலி.
அசிர்க்கர பிணி பேதகம்.
அசிர்க்கர பிணி லட்சணம்
அசீரண பிணி பேதகம்.
அசீரண பிணி மகார்ந்தரம்
அசர பூதம்
அசுவ வாதம் மகாந்தரம்.

அஞ்சன நாமிகா வர்த்ம பிணி.
அடவி A. (மதா)
அண்ட பிணி பேத மதாந்தரம்.
அதாதி மந்த பிணி
அதிசரண யோனி பிணி
அதிசார திலேஷ்ம மதாந்தரம்.
அதிசார பிணி மதாந்தரம்.
அதிசார பிணி பூர்வரூபம்.
அதிசார பிணி பேதம்.
அதிஜிக் வா பிணி.
அதி அஷ்க பிணி
அதி கந்த பிணி
அதி காபக வாதம்.
அதிதும் மந்பிரச பிணி.
அதிதால பிணி
அதி மாமிச பிணி.
அதிமாமிசார்ம நேத்திர பிணி
அதிர்ஷ்பு பூதனை கிரகம் (மதா)
அதுஷ்ட விரண பேதம்.
அணைப்பு பிணி (மதா)
அதோகத தோடம்
அதோ முகக் கட்டு
அதோமு கரத்த பித்த பிணி.
அதோ முக வாதம்
அநாயாசக வாதம்.
அநித்திரைச் சுரம் (மதா).
அநுசிரம்ச வாதம்.
அந்தக சந்நி பாத சுர மதாந்தரம்
அந்தர வாயு கிரகணி (மதா)
அந்தர விட்டை (மதா).

அந்தராயாம வாதம்
அந்தர் மலக் கிருமி
அந்தர் முகி யோனி பிணி.
அந்த்ரோவஷ்ட பிணி.
அந்நிய தோ வாத பிணி
அந்நிய வோடாலி காகிரகம் (மகா)
அந்நியேத்துக சுர லட்சணம்
அந்நியேத்துக வாதம்
அபதந்திரக வாதம்.
அபதானக வாதம்.
அபத்திய தோட சுரம் (மகா).
அபரி சகுட்ட பிணி (மகா).
அபஸ்மார பிணி பூர்வரூபம்
அபஸ்மார பிணி சாமானியம்.
அபஸ்மார பிணி பேதம்.
அபாகி மசூரிகை பிணி மதாந்தரம்.
அபான வாயு.
அபான வாயுவின் குணலட்சணம்.
அபானஸ்தான வித்ரதிக் கட்டி
அபிகாதசுரம்.
அபிகாத சோபை
அபிகாத வாதம்.
அபிசார சுரம்.
அபிநியாச சந்பாத சுரம்.
அபிநியாச சந்நிபாத சுரம் (மகா).
அபிநியாச வாதம்.
அபிஷங்க சுரம்.
அபிஷங்க நேத்திர பிணி
அப்பிச பிணி
அப்பிய மேகம் (மதாந்தரம்)

அமர சண்ட வலி (மகாக்கரம்)

அமர பில்லம் நேத்திர (மகா)

அம்பு பூரண பிணி (மகா)

ஆரணி (மகா).

அரிசோப கந்தர விரணம்.

அரி சோ பிணி.

அரிசோ வர்த்த ம நேத்திர பிணி.

அரித்திரா அரம் (மகா)

அரித்திராப் பிரமேகம் (மகா)

அரித்திரா மேகம்,

அருந்திமெஷ வர்த்தமம் நேத்தி

அருச்சுன நேத்திர பிணி.

அருண எலி.

அருணை தி எலி பேதம்

அரும் ஷிசை பிணி

அரையாப்புக் கட்டி (மகா).

அரோசக பிணி பேதம்.

அர்ச்சகா கிரகம் (மகா).

அர்த்த பிதர பூதம்

அர்த்த பேத பிணி

அர்த்தாங்க வாதம் (மகா)

அர்த்தித வாதம்

அலச கிட்டம்,

அலச பிணி பேதம்.

அலச விரணம்.

அலசி பிணி

அலசி பிணி விரணம்.

அலஜி நேத்திர பிணி.

அலஜி வர்த்தம நேத்திர பிணி,

அலாபுக பிணி

அலிச் சர்ப்பம் (மகா)

அலிப்பட்சி தோடம் (மகா)

அலிமுகப் பாண்டு.

அவகர்த்த விரணம்.

அவஜும் பரகிட்டம்.

அவபாகுக வாதம்.

அவ பேதக வாதம்.

அவமந்த பிணி

அவலம்பக சிலேஷ்மம்

அவி பாபுத பிணி

அவ பசர்க்கிகப் பிணி

அவஹத கந்தசுரம்.

அவஷ்மாபக வாதம்

அஸ்தகம்ப வாதம் (மகா)

அஸ்தி ஆவிருத வாதம்

அஸ்தி கிரந்தி

அஸ்திகிரா வோற்பத்தி (மகா).

அஸ்திதாது கதசுரம்.

அஸ்திகாய விரணம்

அஸ்தி மேக பிணி

அஸ்மரி பிணி அசாத்திய கிதா

அஸ்மரி பிணி சாமானிய பூர்வரூபம்.

அஸ்மரிபிணி பலம்,

அஸ்மரி பிணி பூர்வரூபம்,

அஸ்மரி பிணி பேதம்

அஷ்ட கேடை பேதம்

அஷ்டமகா பிணி.

அஷ்மூலா பிணி

அஷ்மூலா வாதம்.

அஷ்டீலிகா பிணி

அழுகு கமைரக்ஷ (மதா)

அழல் பித்த பிணி மதாந்தரம்.

அழற் புற்று நேத்திரம் மதாந்தரம்

அழி கருப்பலட்சணம்.

அளி தோடம் மதாந்தரம்.

அள்ளு மாந்தம் மதாந்தரம்

அட்சத பிணி.

அட்சர பிணி மதாந்தரம்.

அட்சி பாகாந்திய யரோகம்.

அறு புள்ளி வண்டு மதாந்தரம்.

அற்ப சோபாட்சி பாக பிணி

அற்ப விட சர்ப்ப கிரணம் (மதா).

அற்புத கிரந்தி பேதம்.

அற்புத வர்த்தம பிணி.

அற்புதா கிரகம் மதாந்தரம்.

அற்பு தோஷ்ட பிணி.

அனந்தன்.

அனல பித்தம்.

அனல பித்த பிணி (மதா).

அஜெமந்துப் புண் கோடம் (மதா).

அஜுஸ்தம் பவாதம்

அன்ன ஆக்கிருத வாதம்.

ஆகந்துக சுரம்

ஆகந்துக மசூரிகை

ஆகந்துக விரணம்

ஆகருஷணாஸ் தம்பன வாதம்.

ஆசன்னப் பிரசவம் (மதா)

ஆசன பவுத்திரம் மதாந்தரம்.

ஆசனக் கண்டமாலை பவுத்திரம் மதாந்தரம்.

ஆஷிக பிணி

ஆசிய தகராந்ன லட்சணம்.

ஆசியக் குவாத வாதம்

ஆசிய பாக பித்தம்

ஆசிய பாக வாதம்

ஆசியா க்ஷேப வாதம்

ஆக்சிய கந்திமேகம் மதாந்தரம்

ஆட்டிய வாதம்.

ஆணி நேத்திர மதாந்தரம்.

ஆணி பிணி

ஆண் சர்ப்பம்.

ஆண் பட்சி தோடம்

ஆண் மலட்டு பிணி

ஆதப சுரம் (மதா)

ஆதிக்க மேகம் மதாந்தரம்.

ஆதி மலடு.

ஆத்மான வாதம்

ஆனந்த கரப்பான் மதாந்தரம்.

ஆநாக சுரம்.

ஆநாக பிணி படலம்

ஆநாக பிணி பேதம்

ஆநாக பிணி லட்சணம்.

ஆந்திர பித்வாதம்:

ஆமக்கண பிணி (மகா).

ஆம சூல பிணி (மகா).

ஆம தோடம் (மகா).

ஆம்ல பித்த பிணி லட்சணம்.

ஆமாசய குதகரான்ன லட்சணம்.

ஆமா சீரண பிணி

ஆமால, சுக, பிணி

ஆணம யொட்டுக் கட்டி (மகா).

ஆம்ல பித்த பிணி

ஆம்ல பித்த பிணி லட்சணம்,

ஆம்ல விதக்த பிணி

ஆம்லோ ஷித பிணி

ஆயாசவர்த்த வாதம்

ஆரித்திர விடம் மகாந்தரம்

ஆருட நிதானம் மகாந்தரம்.

ஆர்த்திர மூல பிணி

ஆர்க்க மேக பிணி (மகா)

ஆலோசக பித்தம்

ஆவிரண பித்த பிணி

ஆவிருத வாத அசாத்தியம்.

ஆவிருத வாத உபத்திரவம்.

ஆவிருத வாத பேதம்.

ஆட்சேபக வாதம்.

இ.

இக்காசி லேஷமம்.

இக்கோ பித்தம்

இடர்ப் பில்லர நேத்திர பிணி மகாந்தரம்.

இத்மா பித்தம்.

இந்திர பூதம் (மகா).

இந்திர லுத்த பிணி,

இமை தடிப்பு நேத்திர மதாந்தரம்.

இமை நீர்ப்பாய்ச்சல் மாந்தரம்.

இமை 3-வது. பிரிவாகிய கழலை.

பிணி பேதம் மதாந்தரம்.

இமை 2-வது பிரிவாகிய தடித்தலாதி பிணிபேதம் மதா.

இமை 4. வது. பிரிவாகிய நீர்ப் பாய்ச்சல் பிணி பேதம் (மதா).

இமை 5 வது. பிரிவாகிய பதும் பிணி பேதம் (மதாந்தரம்)

இமை 1. வது. பிரிவாகிய பில்ல நோய் (மதாந்தரம்).

இமை யிறைச்சி (மதாந்தரம்).

இமையைப் பற்றிய பிணி பேதம்.

இமை பிணி பேதம்.

இமை வலி நேத்திர பிணி.

இரசுவ நேத்திர பிணி.

இருதயஸ் தான வித்திரதி

இருதா ஹிருத வாதம்

இரைப் பெலி (மதா)

இரைப்பு மாந்தம் (மதா).

இடுப்பு மாந்தம் (மதா).

இளம்பிள்ளை வாதம் (மதா).

இளிச்சக்கண் நேத்திர (மதா).

இக்ஷு மேக பிணி லட்சணம்.

இறங்கு அண்டம் (மதா).

ஈ.

ஈ. அர பூதம் (மதா).

ஈ. ளைத் தொனிச் சுரம் (மதா).

உ

உயிர்ச் சுற்று (மகாந்தரம்).

உக்கிராக்கிரக வாதகம்.

உத்சங்க வர்த்தம பிணி

உச்சிலிங்கத் தேள் (மகா)

உடலுருக்கி பிணி (மகா).

உட்சுரம்.

உதட்டு பிணி

உதய சுரம் (மகா)

உதர பிணி பூர்வரூபம்.

உதர பிணி பேதம்

உதர ரோக மகாந்தரம்.

உதராக்கினி பேதம்

உதறு வாதம் (மகா)

உதாவர்த்த யோனி பிணி.

உதாவர்த்த பிணி அசாத்தியம்.

உதா வர்த்த பிணி

உதாவர்த்த வாதம்.

உதான பிராண ஆவிருத வாதம்.

உதான வாயு.

உதான வாயுவின் விகுண லட்சணம்.

உதிரத்தல் வலி (மகா)

உதிர வாதம் (மகா)

உத்கார சிலேஷ்மம்.

உத்கோட பிணி

உத்தம மேகம் (மகா).

உத்த பா பிணி.

உத்தீதர சமூல பிணி

உத்தான வாத சோணிதம்

உத்தான வாதம்.

உந்தல் நேத்திர பிணி (மகா)

உந்து நெரிசல் நேத்திர (மகா)

உந்துரு எலி

உந்தெழுச்சி நேத்திர (மகா)

உபகுசை ரோகம்.

உபசர்க்கதாக பிணி

உபசீரிவு பிணி

உபதிக்வா பிணி

உபநக பிணி (மகா)

உபநாக நேத்திர பிணி

உபபுருத யோனி பிணி

உபயமுகரத்த பித்த பிணி

உபவிஷ்டக கருப்பம்.

உப்புமார்தம் (மகா)

உயிர்நிலை விழிக்கிழி (மகா)

உயிர்ப்பு பிளவை நிதானம் (மகா)

உவர்த்து ஆசு பிணி (மகா)

உஸப் பெலி (மகா)

உல்பக பிணி.

உஷ்டரகிரீவபகந்தர விரணம்.

உஷ்ண நெரிசல் நேத்திர (மகா)

உஷ்ண வாத மூத்திர பிணி

~~உஷ்ண வாத மூத்திர பிணி~~

உஷ்ண ~~[illegible]~~ வாயுகிரகணி (மகா)

உஷ்ண விதக்க பிணி

உஜுஸ பிணி (மகா)

உள் நெருக்கி (மகா)

உள மாந்தை பிணி (மகா)

உள மாந்தை பேதம்

உற்சுகா கிரணம்

உன் மாத பித்தம்

உன் மாத பிணிப் படலம்.

உன் மாத பிணி பேதம்.

(ஊ)

ஊதல் பிணி (மகா)

ஊது காமால பிணி (மகா)

ஊது மாந்தம் (மகா)

ஊராணை பிணி (மகா)

ஊருஸ் தம்ப வாதம்.

ஊர்த்துவ சக தோடம்

ஊர்த்துவ குத பிணி

ஊர்த்துவ சுவாச பிணி

ஊர்த்துவ பித்த பிணி

ஊர்த்துவ முகரத்த பித்தம்.

ஊர்த்துவமுக வாத பிணி

ஊர்த்துவாங்க பிணி

ஊர்த்துவாம் மிசர வாதம்.

எ

எக்கில் தோடம் மகாந்தரம்.

எரிகுன்ம பிணி – (மகா)

இது. சர்வாங்கத்திலும் கானலையுடன் தடிப்பு. நித்திரைப் பங்கம் தலைவலி ஸ்தம்பித்தல் வயிற்றில் ஆஸ நாவில் திமிருடன் படலம் எழும்புவது அன்றிக் கசப்பும் புளிப்புமாக இருத்தல் விக்கல் அவயவங்கள் இளைத்தல் எரிச்சல் சோகை மூர்ச்சை தாகம் தொடையிலும் முழங்காலிலும் நோவு. என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

16. வது. ஸ்வேத பித்த ரோகம்:

இது. சர்வாங்கத்திலும் வியர்வை அதில் கசந்த வாசனை நாவும் வாயும் கசத்தல் பலஹீனம் ஸ்தம்பித்தல் விக்கல் அசம் சைத்தியம் சிரோ பாரம் தாகம் அக்னி மந்தம். அரோசகம் தொடையிலும் முழங்காலிலும் நோவு நடுக்கல் என்னும் இக் குணங்கள் உண்டாகும் ஸ்வேதம் என்பது வியர்வை. இதுவே வியர்வைப் பித்தமாம்

---

17. வது. இத்மா பித்த ரோகம்:

இது, மாறுத விக்கல் சோகை ஏப்பம் மூர்ச்சை வியர்வை உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் கொப்புளம் எழும்புதல் சுரசுரப்பு இருமல் சுவாசம் தலைநோவு சுரம் தேகம் சில்லிட்டிருதல் ஸ்தம்பித்தல் மதிப்பிரமை என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

இத்மா என்பது விக்கல். இதனை விக்கல் பித்தம் என்றுஞ் சொல்வர்.

18. வது. இக்கா பித்த ரோகம்:

இது. ஓயாத கொட்டாவி, சர்வாங்கத்திலும், வியர்வை துளிக்கல் போல், சுரசுரப்பு, கொப்புளம் எழும்புதல், சீதளம் ரோமச்சிலிர்ப்பு சுரம் சோகை நடுக்கல் அதிக சூல் நடமாரியில் எரிச்சல் சிரோபாரம். நித்திரைப் பங்கம் கண்ணீர் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். இக்கா என்பது கொட்டாவி. இதுவே கொட்டாவிப் பித்தமாம்.

19. வது. சூலைப் பித்த ரோகம்:

இது. நாபியில் குத்தல் ஏப்பம் அதிக தாகம் அரிக்கத்தத்துடன் கசப்பான வாந்தி ரோமச்சிலிர்ப்பு வியர்வை தழைப்பு திமிர் நினைவு தலை சுழலல் நடுக்கல் குத்தல் இரைச்சல் அவயங்கள் கடுகித்தல் உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்

௨௦. வது. விஷ்டம் பித்த ரோகம்!

இது, தேகங்கட்டுப்பட்டது போலிருத்தல் மார்பைச் சுற்றியும் எரிச்சல் தலை திரும்பல் சுரம் குளிர் பலவீனம் ஈனத்தொனி ஞாபக மறதி பிரமை அதிக மயக்கம் மூர்ச்சை சோகை மிகு தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

விஷ்டம்பம் என்பது ஸ்தம்பித்தல்!

---

௨௧. வது. விரண பித்த ரோகம்!

இது, தேகத்தில் சிறிதும் பெரிதுமாக அதிக ரணம் பிறக்குதல் திமிர் கனத்தல், நமைச்சல், காவு சுத்தல் கருத்தல் கோசஞ் சிவக்குதல் நித்திரையில் திடுக்கிட்டெழுந் திருக்குதல் வாய்நீரூறல் கையில் நாடியானது படபடத்துத் துடிக்குதல் என்னும் இக் குணங்கள், உண்டாகும்.

௨௨. வது. ஊர்த்துவ பித்த ரோகம்!

இது, அதிக கோபம் சதா, சண்டை செய்தல் இரைந்து கூவுதல் ஆகாயம், பூமியிற் குதிவிடும் பழியான பேதி பிரமை கண் சிவத்தல் அனித்திரை சரீரந் தாலித்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

௨௩. வது. சுவாச பித்த ரோகம்!

இது, அதிக சுவாசம் வயிறு கனத்தலோடு பொருமல் தேமிளைத்தல் அதிகமாக வாய் நீரூறல் கண் கலங்குதலுடன் பார்வை மந்தம் மார்பு வலித்தல் இருமல் பசியின்மை என்னும் இக் குணங்கள் உண்டாகும்!

---

24. வது. செம்பித்த ரோகம்!

இது தேகம் சிவத்தல் செம்பின் களிம்பு ~~நிறமும்~~ நிறமாயும், சிவந்த நிறமாயும் வாந்தி யாகுதல் மலம் இறுகலோடு சிவந்து நடுக்கல் மயக்கம் முத்து முத்தாகச் சிவந்த வியர்வை கசிதல் மிகுந்த தாகம் தலை திரும்பல் தயக்கம் திகைத்திடல் பயந் தெளிந் திருத்தல் என்றும் இக் குணங்களை உண்டாக்கும்!

25. வது. கரும்பித்த ரோகம்!

இது கறுத்த நிறமான வாந்தி தயக்கம் சிரசிலும் சரீரத்திலும் நடுக்கல் தலைவலி நித்திரை கடைக்கண் சிவந்து மிதுமிதுத்தல் தேகம் களைத்து வற்றுதல் அருசி பசியின்மை என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

26. வது. காரப்பான் பித்த ரோகம்:

இது, சர்வாங்கத்திலும் சொறி உபத்திரவத்துடன் கட்டிகள் எழும்புதல், இழும்பான பேதி வயிற்றில் இரைச்சலுடன் பொருமல் இசிவு கால் கையில் விலவிலப்பு இழுப்பு நோவு திமிருடன் சரீரத்தில் இடைவிடாத காந்தல் இளைத்து இளைப்பு என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

27. வது. எரி பித்த ரோகம்!

இது, அடித்தொடை பாதம் கண் உள்ளங்கால் உள்ளங்கை, இவ் விடங்களில் எரிச்சல், காது முதுகு இவ் விடங்களில் வறவறப்பு, முழங்கை, முழங்கால் இவ் விரண்டிலும் விறுவிறுப்பு, சிரஸ்தானத்திலும் கிளிர்ந்த காற்றிலும் விருப்பம் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

28. வது. துவர்ப்பு பித்த ரோகம்:

இது. தேகத்தில் துடித்தலுடன் வெளிறல், பசுமையான நிறம், அரோசகம், சற்று நேரமாவது நில்லாத அசைதல், அரிசி தின்றலும், மாதர் மீதிலும், யாருடனாவது சண்டை செய்தல், அறு அறுப்பு, எந்த வஸ்துவிலும் இச்சை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

29. வது. விரம பித்த ரோகம்:

இது, சோர்ந்து விழுதல், கரைந்து பேசுதல், தேகம் முழுதிலும் விஷம் போல் பரவி விஷமிக்குதல் சிரசுநோவு, அன்னத்தில் வெறுப்பும், என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது அசாத்தியம்:

30. வது. மூல பித்த ரோகம்:

இது. வயிற்றில் இரைச்சலுடன் பேதி, மனச் சலிப்பு, தாறுமாறான. கோபம், மூலவாயத்தில் நின்றும் மூளை தொங்குதல், அடித்தொடையிலும், மேல் தொடையிலும் நோவு. தேகத்தில் வெளிறலுடன் வீக்கம், அதிக நித்திரை, சோம்பல், கண் எரிச்சல், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

31. வது. காய பித்த ரோகம்:

இது. குரல் வளை கனத்தல், கசந்த வாந்தி, கழுத்துக்குள் புண் போலிருத்தல், நாவில் வழுவழுப்புடன் வறட்சி, பாதத்தில் வீக்கம், காதிரைச்சல், சிவந்த மயிர் முளைத்தல் புற இசிவு என்னும் இக்குணங்கள் உண்டாகும்!

→

32. வது. ஓடு பித்த ரோகம்:

இது. எழுந்தெழுந்து ஓடுதல், பிதற்றல், யாரையும் தூஷித்தல், பல்லைக் கடித்தல், கண் சிவப்புடன் முழிமுழி ~~விழித்~~ விழித்தல், கூச்சல், கொக்கரித்தல், உத்தாருதல், குதித்தல், அகங்காரம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

33. வது. மூடு பித்த ரோகம்:

இது. ஆபரணமொன்று முதலிய வஸ்துக்கள் ஒருவருக்குத் தெரியாமல், கண்ட விடத்தில், மறைக்குதல், யாரையும் தூஷணித்துப் பேசுதல், மொண மொணப்பு, கையிலும் காலிலும் வீண் செய்கைகளைச் செய்தல், அன்னத்திவேஷம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

34. வது. நடுக்குப் பித்த ரோகம்:

இது. சிரசு நெற்றி பிடரி பிருஷ்டத்தண்டு கண்டம் தாடை ஆகிய, இவ்விடங்களில் நடுக்கல், கனத்தல், எரிச்சல், கசப்பாக்கிய வாந்தி, பொருமிருமல், நித்திரைப் பங்கம், வாய் நீரூறுதல் மார்பில் விசம்பு வருதல், எங்கெரமும் நாவு துடித்தல், என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

35. வது. கபால பித்த ரோகம்:

இது: கபாலமும் சிரசும் அதிர்வுடன் அம்புபட்ட புண் போலக் கடுக்குதல், நோவு, சர்வாங்கத்திலும் தீராத்துடன், மந்தாக்கினம், முதுகந்தண்டில் நோவு, முகத்தில் வீக்கம்; மூர்ச்சை, அடிக்கடி எழுந்திருக்குதல். என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

36. வது. தாக பித்த ரோகம்:

இது, அதிக ஜலபானம், அடிவயிறு அழுத்தல், சர்வாங்கத்திலும் அனல் வீசுதல் போல் இருத்தல், சீதள வஸ்துவிலும் புளிப்பு வஸ்துவிலும் இச்சை, கண்டத்தில் மிகு வியர்வை, பிடரியையும் அடிநாவையும் இழுத்துக் கொள்ளுதல் போலிருத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

---

37. வது. திமிர்ப் பித்த ரோகம்:

இது. சர்வாங்கத்திலும் திமிர் கனத்தல், இரு கிறைந்து இழுவல், வயிறு பொருமலுடன் முள்ளிச் சொருகுவது போலிருத்தல் உதய காலந்தோறும் வாந்தி, மறதி, அசந்த நித்திரை, மேனியில் தூசு நிறம், நடையின்மை, பிடித்தபிடி விடாமை என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

38. வது. வலிப் பித்த ரோகம்:

இது. அடிவயிற்றில் இசிவுடன் நோவு, இரைச்சல், நாவு வறளல், சிரோபாரம் கீல்களில் நோவு, சி.நீரும் குடலும் வலிக்குதல் பசுமஞ்சள் நிறம் போன்ற மலம், சர்வாங்கமும் நடுப்புடன் முடங்குதல், மார்பை அடக்குதல், என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

39. வது. கிருமிப் பித்த ரோகம்:

இது, மலத்தில் கிருமி வீழ்தல் வயிற்றைப் புரட்டிப் புரட்டி வலித்தல் சர்வாங்கத்திலும் இளைவு, நோவு, மலமும் ஜலமும் வறளல், கைகால் வாழைத் தண்டைப் போல் சில்லிட்டுக் கனத்துக் கடுக்குதல், தேகத்தில் ஒரு வித நாற்றம் வீசுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

→

40. வது. மருத்துதிரு பித்த ரோகம்:

இது, அகக்குடலில் வியாபித்துத் தங்கிக் கொண்டு ரோகிக்கு மவுனம், மனக்கலக்கம், தேகம் உளைதல், நெஞ்சு வறளல், அசதி, வயிறு வெருத்தல், நித்திரை பிடியாமை, போஜனத்தில் வெறுப்பு, உளறல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பித்த ரோகம் 40ம். முற்றிற்று!

அசாத்திய பித்த ரோக நிதானம்!

சில பித்த ரோகங்களிலும் வாதமாவது சிலேஷ்மமாவது சேர்ந்தால் கஷ்ட சாத்தியமாம். இவ் விரண்டுஞ் சேர்ந்தால் அசாத்தியமாம். இப் பித்த ரோகங்கள் அகத்தி இலை நசச் சுத் தோதகஸ்நானம், அவிவிஸ் கிழநீர், பேயப் புடல் கஷாயம், கார்ப் பாசச் சூரணம், நவரசாயனம், சம்பீரக் குழம்பு, தாமரைப்பூ மணப்பாகு, பன்னீர்ச் சந்தனலேபனம், சகதேவித் தைலம், பெருங் கொலிச் தைலம், பிருங்காமலகத் தைலம், பத்தூரத் தைலம், சீரகத் தைலம், சந்தனாதித் தைலம், மகா வில்வாதி லேகியம், ரசிதபஸ்மம், மகா வசந்த குசுமாகர மாத்திரை முதலிய அவுஷதங்களிலும் இன்னும் தேகோஷ்ண சாந்திகளிலும் நிவர்த்தி செய்ய வேண்டும்!

சித்தர் மாதாந்தரம்:

சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் பித்த ரோகத்தை 42, விதமாகச் சொல்லப் படுகின்றது, இவற்றுள் நாற்பது பித்த ரோகங்களும் முற்கூறியவைகளேயாம். மற்ற இரண்டு பித்த ரோகங்களையும் இனிமேற் காண்க:-

1. வது. அழல் பித்த ரோகம்:

இது, இளமையில் நல் நரைத்தல், தேக வெளுப்பு, கடைக்கண் சிவப்பு, பலவகை ஞானங்களை அதிகமாகப் பேசுதல், அவதூறான வார்த்தைகளைக் கூறுதல், மாதர்களின் இன்பங்களை வெளிப்படுத்திச் சொல்லல், அநேக சாஸ்திரங்களை மொழிதல் பாடல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

---

2. வது. மார்க்க பித்த ரோகம்:

இது, சகல நூல்களின் வகைகளைப் பேசுதல், விரைவில் உட்கார்ந்து விரைவில் ஓடுதல், சீலையைக் கிழித்தல், புலம்புதல், வாயில் வந்ததைப் பாடுதல், சிரசையும் பிடரியையும் நரம்பைப் பற்றி இழுத்தல், பிறரைப் பழித்தல், பல தொழிலைச் செய்தல் தேகம் வாடுதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

சித்தர் மதாந்தரம் முற்றிற்று!

சிலேஷ்ம ரோக பூர்வரூபம்:

தேகமெங்கும் நசுக்கித் துவைத்தது போல் இருத்தல், அத் தேகத்திலும் முகத்திலும் மினு மினுப்புடன் குடைச்சல், இருமல், இரைப்பு, ஆலசியம், நடுக்கல், சிரோ பாரம், நெஞ்சிற் கபாதிக்கத்துடன் சத்திப்பு, குளிர்ச்சி, வியர்வை, நீர்களெல்லாம் கட்டு விட்டுப் போவது போலிருத்தல், விக்கல், சுரம், குளிர், மந்தாக்கினி, வாயில் வழு வழுப்புடன் கோழை உண்டாதல், கண்ணில் சலக் கோவை, நாசியில் சலம் பெருகல், அடைப்பு, தும்மல், மந்தம், நாற்றம், வாந்தி என்னும் இக் குணங்களைச் சிலேஷ்ம ரோகமானது தனக்குப் பழைய ரூபமாகப் பெற்றிருக்கின்றது. இக்குணங்கள் சகல சிலேஷ்மங்களுக்கும் பொதுவாக இருக்கும் என்று அறிக.

சிலேஷ்ம ரோக பேதம்:

சிலேஷ்ம ரோகமானது வாத சிலேஷ்ம ரோகம் ௧ ஆதியாக சிலேஷ்ம ரோகம் ர. ஈறாக இருபது விதப் படுகின்றது. அவைகளின் பெயரையும் செய்கைகளையும் முறையே இதனடியிற் காண்க.

—)

1. வது. வாத சிலேஷ்ம ரோகம்!

இது, சர்வாங்கத்திலும் நகங்கிளித் தூளைத்தது போலிருப்பது மன்றி, வியர்வை, கிளிர்ச்சி, நடுக்கல், மார்பில் இத்தல், தலைநோவு, நெஞ்சில் கபாதிக்கத் துடன் வறால், வயிறுப்பல், வாந்தி, கொட்டாவி, விக்கல், வாதி நாடிக் கத்தால் சந்திகளில் பிடிப்பு, அரம், தாகம், துர்பலம், அவயவாதிகள் அசைவுதல், தொடையிலும் முழங்காலிலும் நோவு என்னும் இக் குணங்கள் உண்டாக்கும். அன்றியும், கழுத்துக் கடுத்து மலசலம் இறங்குதல், சர்வாங்கத்திலும் பாரம் வீழ்தல், நோவு, உதடும் பல்லும் கறுக்குதல், மேகத்தை யொத்த நிறங்கள், வெளிர் காணுதல், கர்ணங்களில் பொருக்கள் கேடாத இத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கு மென்பாருமுளர்!

௨. வது. பித்த சிலேஷ்ம ரோகம்!

இது தலைசுழலல், விக்கல், தெருவெளி ரத்தங்கக்குதல், நாவும் வாயும், முள்ளைப் போல் உறுத்தல், மஞ்சள் கோழை வீழ்தல்! கண்டத்தில் கபங் கட்டுதல், தேகம் பாவினம், மேல் மூச்சு விடுவதிலும் வேதனை அரம் வியர்வை, சோம்பல், தாகம், நித்திரையின்மை, தெருவெளி உறக்கம், கண்ணீர் பெருகுதல், மார்பு நோவு, வயிறுப்பல், வாந்தி, இருமல், இரைப்பு என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்.
அன்றியும், மயக்கம், பித்தாதிக்கம், அன்னத்தி வெறும் வாய் தீருதல் தேகத்தில் மஞ்சள் நிறம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கு மென்பாரு முளர்.

3. வாத இரத்த சிலேஷ்ம ரோகம்:

இது, தினந் தினமும் ரத்த வாந்தி அதில் துர்க்கந்தமான கோழை விழுதல் பலமுங் காந்தியும் கெட்டு அவயவங்கள் சுருங்கல், சுரம், எரிச்சல், அதிக சுவாசத்தோடு வேதனை, உள்ளங்கால், உள்ளங்கை காந்தல், மார்பிலும் தலையிலுங் குத்தல், வயிறுப்பல், வாந்தி தேகம் மரத்தல், சிரோபாரம், காதிரைச்சல், கோழை மூர்ச்சை கண் புகை அழலுடன் மயக்கம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். அன்றியும் முழங்கால் முதுகு விலா முழங்கை. நுனிக்கைகளில் இவ்விடங்களில் கடுமையான வீக்கத்துடன் குடைச்சல், சளி இருமல் நாண்டு வறட்டலின் கிர்த்திப்பாக இருக்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாருமோர்.

4. வாத க்ஷய சிலேஷ்ம ரோகம்:

இது, நாளுக்குநாள் அவயவங்கள் தும்பல், சுரம், எரிச்சல், கண்டத்தில், கபாதிக்கம், வயிறுப்பல், மேல் சுவாசம், கனத்தொனி, கொட்டாவி, விக்கல், ஸ்தம்பித்தல், சிரசிலும் செவியிலும் ஒரு வித இரைச்சல், தொடையிலும் முழங்காலிலும் நோவு, அரோசகம், அசீரணம் மலபந்தம் நீர்க்குறைவு சரீர வேதனை பிரலாபம் சோகை மூர்ச்சை, சோம்பல், தாகம், நித்திரை பிடியாமை, என்னும், இக்குணங்களை உண்டாக்கும், அன்றியும் நெய்யை ஒத்த சளி விழுதல், முகத்தில் பளபளப்பு குளிர் நாசியிற் ஜலம் வழிதல் தேகத்தில் பாண்டு நிறம் அதில் அற்ப உஷ்ணம் சீதங் கலந்த மலம் மஞ்சள் நிறத்துடன் மெதுவாக மூத்திரம் இறங்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்குமென்பாரும்

உளார்.

6. வது: அட்சகிலேஷ்ம ரோகம்!

இது சர்வாங்கமும் ஊம்பல், கபாதிக்கத்துடன் இருமல்; மேல் மூர்ச்சி சுரம் பலவீனம் வெகு நிறம் அன்னத்தி வெறும் அசீரணம் வியர்வை தாகம் மார்பு நோவு நித்திரைப் பங்கம் அதிக எரிச்சல் கழுத்து நேர்ந்து மெலிதல், கண்டத்தில் ஒருசத்தம் ஈனத் தொனி தலை சுற்றலுடன் நோவு மலபந்தம் வயிறு பொருமல் அக்கினி மந்தம் கண்களில் நோவுடன் கிந்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகிடும்.

5. வது. மூர்ச்சைச் சிலேஷ்ம ரோகம்!

இது மூர்ச்சை அதிக கோழை சுர எரிச்சல், சோகை சுரம். சைத்தியம் தலை நோவுடன் கனத்தல், அழுவல், நடுக்கல், சுவாச வேதனை கண்களில் உபத்திரவம் சோருதல், ஆலசியம், பிரமை, அன்னத்தி வெறும் அசீரணம், தொண்டையிலும், மூக்கின் குழியிலும் நோவு, வயிறுப்பல், இரைச்சல், மலபந்தம் என்னும் இக் குணங்கள் உண்டாகிடும்!

7. வது. சுர சிலேஷ்ம ரோகம்!

இது சுரம் எரிச்சல் தாகம் கபாதிக்கத்துடன் சீதளம் வியர்வை கால்களில் தூர்ப்பலம் ஏப்பம் கொட்டாவி. அசனக் கெடுதி அசீரணம் இருமல் தேக வன்மை கின்றல், கிந்தல், கண்டத்தில் கோழை நிறைதல், மார்பில் நோய் சோர்வு ஆலசியம், பிரமை என்னும் இக் குணங்கள் உண்டாகிடும். அன்றியும், தேகம் கனத்தல், வலித்தல், வயிறு இரைச்சல் நாவறளல் தாகம் என்னும், இக் குணங்கள் உண்டாகுமென்பாருமுளர்.

8-வது மூகைச் சிலேஷ்ம ரோகம்!

இது, குழந்தைகள் ஊமையைப் போல் சத்திப்பு, தினம் ஒன்றுக்கு ஒவ்வொருபடி கோழை விழுதல், மார்பு நோவு அசம் வாதாதிக்கம் சீதளம் தூர்ப்பலம் காலத்தினால் நாவும் வாயும் உலர்ந்து கசப்பு புளிப்பு தித்திப்பாக இருத்தல் கொட்டாவி ஸ்தம்பித்தல் மலபந்தம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

மூகை என்பது ஊமை.

9-வது. தூக்கச் சிலேஷ்ம ரோகம்!

இது, தூக்கம் கண்டத்தில் கோழைக் கட்டிக் கொண்டு சத்தித்தல், எரிச்சல் சுரம், தூர்ப்பலம் சர்வாங்கமும் மெலிதல் முழங்கால் நோவு வயிறு பொருமல், மலபந்தம். தீபனக் கெடுதி இரண்டு தொடைகளும் ஆம்பலுடன் நோதல், நித்திரைப் பங்கம் சிரோபாரம் இருமல், அவாசம். எப்போதும் கபமே பெருகுதல், வாயில் கசப்பு, புளிப்பு தித்திப்பாக இருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

10. வது. தொணிச்சி லேஷ்ம ரோகம்!

இது, ரீ. ணத் தொணி கபாதிக்கம் எரிச்சல் அசம், குளிர், தலைவலி மண்டைக்குள்ளும், காதுக் குள்ளும் இரைச்சல், சர்வாங்கத்திலும் வாட்டம் மார்பு கனத்தல், வியர்வை தொடைக் குள்ளும் முழங்கால்களுக்குள்ளுங் குடைச்சல், நித்திரை இன்மை என்னும் இக்குணங்கள் உண்டாகும்

~~ஊமைக் என்பது நாவை~~.

11. வது. கோஷ சிலேஷ்ம ரோகம்:

இது, கண்டத்தில் கோழை நிறைவில் ஓட்டை வெண்கலத் தொனிபோல் சத்தமும் நினைவும் பிறக்குதல் சிரோபாரம் தேகம் சூம்பல் தூர்ப்பலம் அக்கினி மந்தம் கொட்டாவி விக்கல் இருமல் தேகம் சில்லிட்டு ஸ்தம்பித்தல், குளிர் வியர்வை சகல கீல்களிலும் நோவு தாகம் வரவரக் கண்டத்தில் அதிக சத்தம் உண்டாதல், சிரசு அழலுடன் நடுக்கல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

கோஷம் என்பது சத்தம்!

12. வது. சுவேத சிலேஷ்ம ரோகம்:

இது தேகம் முழுதிலும் சூம்பல் கண்டத்தில் கபம் அடைதல் மார்பு உலர்தல் நித்திரையும் அமாக்கினியும் கெடல், மலக்கட்டு விக்கல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

சுவேதம் என்பது வியர்வை.

13-வது. மகா சிலேஷ்ம ரோகம்:

இது. சர்வாங்கத்திலும் வாயுவு வியாபித்தல் சூம்பல் அதிக கோழை விழுதல், நெஞ்சுக் குழியில் கார கரப்பு, சுரம் குளிர் சிரோபாரம் வியர்வை சகல கீல்களிலும் நோவு வயிறுப்பல் அக்கினிமந்தம். பித்தாதிக்கம் காச சுவாசம் தாகத்திருப்பல் அன்னத்தி வேஷம் அசீரணம் தூர்ப்பலம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

இது அசாத்தியமாம்!

→.

14. வது பேன சிலேத்தும ரோகம்:

இது, தினந்தினமும் நுரை நுரையாக ஒருபடி இரண்டுபடி கோழை வாந்தியாகுதல், மார்பில் எரிச்சல் குத்தல் உளைந்த அவாசம் வேதனை சுரம் குளிர் வியர்வை சிதாளம் ஆம்பல் ஆரிபலம் காந்தியினம் இருமல் தலைவலி ஓக்காளம் அரோசகம் அசிரணம் மலபந்தம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

பேனம் என்பது நுரை!

15. வது. லாலா சிலேத்தும ரோகம்:

இது, நாளொன்றுக்குச் சொற்ப வழுதல் போலக் கோழைச்சலம் ஒருபடி அளவு விழுதல் கண்டத்திலும் மார்பிலும் கோழைக்கட்டு, மார்பில் குத்தல் அவாசம் நீடல் இருமல் வேதனை அக்கினி நஷ்டம் மலபந்தம் சுரம் குளிர் அசிரணம் வியர்வை சர்வாங்க சிதாளம் கொட்டாவி பலவீனம் விக்கம், விர்ன்ன தேகம் ஏதேனும் ஒரு அவயவ ஹீனம் தலைதிருப்பலுடன் நடுக்கல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

16. வது. வமன சிலேத்தும ரோகம்:

இது, மாறாத வாந்தியுடன் கோழை வழுதல் மார்பிற் கண்டத்தில் கபம் அடைந்துக் கொள்ளல், மார்பிற் குத்தல், தேகம் கும்பலிலும் எரிச்சல், ஏப்பம் விக்கல், கொட்டாவி வாதாதிக்கம் அக்கினி மந்தம் மலபந்தம். என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

வமனம் என்பது வாந்தி.

17. வது சர்ணசி ஸேஷ்ம ரோகம்.

இது, பலக்குறைவு சுரம் குளிர் சிரோபாரம் தேகம் கனத்தல் அதிக தாகம் விக்கல் தொண்டை நோவு இருமல் இரைப்பு தஸ்த்திரும்பல் நடுக்கல் நித்திரைப் பங்கம் நாவும் வாயும் கசக்குதல் மலபந்தம் மார்பில் கிட்டல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்;

—‡.

18. வது. சோஷ சிலேஷ்ம ரோகம்!

இது, பித்தமும் வாயுவும் அதிகரித்தலினால் பிறந்து. சோர்ந்து விழுதல் சுரம் குளிர் வியர்வை. வீக்கம் அதிக சீதளம் சர்வமாமிஸதானங்களிலும் நோவு கொட்டாவி தொண்டைகளிலும் முழந்தாள்களிலும் வேதனை என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

சோஷம் என்பது சோர்வு.

19. வது. உத்கார சிலேஷ்ம ரோகம்!

இது, மாறுத ஏப்பம் அதிக வாந்தி தலை வலி கிளைத்தலையும் ஒருபடி கோழை வீழ்தல் மலபந்தம் அக்கினி மந்தம் வயிறு கல்லைப் போல் இருத்தல் சூல பொருமல் அதிக எரிச்சல் ஈனத் தொனி தஸ்த்திரும்பல் கண்ணீர் பெருகல் அசீரணம். தேக வேதனை ஆலசியம் தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

உத்காரம் என்பது ஏப்பம்.

20. வது. இக்காசி ஸேஷ்ம ரோகம்.

இது, விக்கல் கொட்டாவி சிரோபாரம் சர்வாங்க வேதனை மார்பிற்குத் தலை சீதளம் ஒருவேளை இன்மை அற்பலம் இரைப்பு தொண்டைக் கம்மல்.

வயிறு கற்போல இறுகுதலுடன் நோதல் கண்ணீர் வழிதல் வாயும் நாவும் புளித்தல் நெஞ்சு உலர்த்தல் என்றும் இக் குணங்களை உண்டாக்கும்.

இக்கா என்பது விக்கல்:

சிலேஷ்ம ரோகம் 20.ம். முற்றியது:

x x x

அசாத்திய சிலேஷ்ம ரோக நிதானம்.

சகல சிலேஷ்மங்களும் அபாவத்திலேயே நீடித்து உபத்திரவஞ் செய்யத் தக்கவைகள், இவைகளுடன் பித்தமாவது வாதமாவது கூடுதல் கஷ்ட சாத்தியமும் அசாத்தியமும் ஆம் இக்கால ரூபமாகிய சிலேஷ்ம ரோகங்களை, காசமாகிச் சுரசம் இராம்பாதிஜம் உடல்திக் கஷாயம் ஏலாதித் துவிதச் சூரணம், சிறிய சிற்க் குண்டித்தயிலம் முதலிய அவுஷதங்களைக் கொண்டும் 79, 81, 88ம் பக்கங்களில், காச சுவாச க்ஷய ரோகங்களுக்குச் சொல்லிய சிகிச்சைகளைக் கொண்டும் பரிகரிக்க வேண்டும்.

சித்தர் மதாந்தரம்:

சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில், சிலேஷ்ம ரோகத்தை 21. விதமாகச் சொல்லப்படுகின்றது. இவற்றுள், வாதம், பித்தம், ரத்தம், க்ஷயம், சுரம் என்னுமிவ்வைந்து சிலேஷ்மங்களும் முற்கூறியவைகளேயாம். மற்றைய 16 சிலேஷ்ம ரோகங்களையும் முறையே இதனடியிற் காண்க!

→

1. வது. காசிக சிலேஷ்ம ரோகம்:

இருமல், சீதளம் தேகம் பாரிப்புடன் கனத்தல், நாடி அற்ப வேகத்திலும் சிலேஷ்மகதியாக நடக்குதல், வாய்வறளல் அதிக உஷ்ணம். மூக்குத் தண்டின் அடியில் கனத்தல் நோவு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

2. வது. சுவாச சிலேஷ்ம ரோகம்:

அதிக சுவாசம் நெஞ்சில் காபாதிக்கம் இருமல் மூக்கடைப்பு குறட்டை விடுதல் குளிர் ஜுரம். மயக்கம் நெஞ்சில் கப நிறைதல் வாயு நாசியும் வறளல் அதிக தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. வது. தீபன சிலேஷ்ம ரோகம்:

அதிக தீபனம் சர்வாங்கத்திலும் எரிச்சல் நோவு. அருசி அழுகை நெஞ்சடைப்பு கைகால்களில் சீதளம் தேகங் கனத்தல் உண்ணாக்கில் பசபசப்பாகிய நோவு என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

4. வது. மந்தச் சிலேஷ்ம ரோகம்:

மந்தம் அடிவயிறு கல்லைப் போல் இறுக்கத்துடன் மலசலங் கட்டுப் படுதல் வாந்தி வியர்வை ஓக்காளம் மேல் சுவாசம் தொண்டைக்குள் காறல் இருமல் வாய் கசத்தல் துவர்த்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

5. வது தொந்தச் சிலேத்ம ரோகம்:

சர்வாங்கத்திலும் அழல், விக்கல் இருமல் சுவாசம்
அதிக சுரம் அசதி எரிச்சல் தாகம் தலைவலி மனச்
சஞ்சலம் மார்பு நோவு குளிர் ரோமச் சிலிர்ப்பு
என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

6-வது. சந்நிபாத சிலேத்ம ரோகம்:

நாக்கில் கறுத்தலுடன் வறளல் சுரம் எரிச்சல்
சர்வாங்கத்திலும் வலி அசதி மறதி கன்னம் காது
மருங்கிலும் நாசி சிரசு உச்சி இவைகளில் படபடப்
பாகிய துடிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

7. வது. அதிசார சிலேத்ம ரோகம்:

சிலந்தி பேதி வயிற்றில் இரைச்சல் குத்தல் இரண்டு
விலாவிலும் சூல பொருமல் மார்பிலும் நெஞ்சிலும்
நோவு, வாய்வறளல் இருமல். சுவாசம் தாகம் எரிச்சல்
என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

8. வது. சலசிலேத்ம ரோகம்:

அதிக தாகம் சிக்கலாய்த் தடிப்பாய் அழுக்கடை
நீர் இறங்கல் அழலல் இரத்தம் கம்மல் கோழையாகிய
சிலேத்மம் விழுதல் பல்லுகளெல்லாமசைதல்
என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

→

9.- வது. அக்கினி சிலேஷ்ம ரோகம்:

சர்வாங்கத்திலும் எரிச்சல், (அல்லது) கால்கை கண் மூக்கு இவ்விடங்களிலாவது எரிச்சல் இருமல் கோழை மிகுந்த தாகம், கைகால்களில் சிரமம். அதிக தீபனம் என்னும் இக் குணங்கள உண்டாகும்.

10- வது முசல் சிலேஷ்ம ரோகம்:

சர்வாங்கத்திலும் நோவு அசதி ஆரிப் பலம் கண்ணில் சிவப்புடன் சலம் வடிதல் சருமம் முருகும் காணுதலுடன் காதுகள் உணர்வின்றி மலசலம் தடுதல் அவாசம் இருமல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

11 - வது. வெறிச் சிலேஷ்ம ரோகம்:

மீசையை முறுக்குதல் கோபித்தல் எழுந்திருந்து ஓடுதல் பல்லை இளித்துக் காட்டுதல் பாடல் ஆடல் கண் சிவத்தல் தேகத்தில் கறுத்த நிறம் உதடு வறளல் என்னும் இக் குணங்கள உண்டாக்கும்.

12. வது. விகார சிலேஷ்ம ரோகம்:

விகாரப் பார்வை, ஸ்திரிகளிடத்தில் மிகுந்த இச்சை தேகம் அட்டிக்கில் சங்கடம் பாடுதல் அதிக மோகம் துக்கம் அன்னத்தில் வெறம் மயக்கம் மாறு ~~[illegible]~~ பாடான வார்த்தை என்னும் இக் குணங்கள உண்டாக்கும்.

13. வது. விரண சிலேஷ்ம ரோகம்.

நெஞ்சில் விரணம் சீழ் கலந்த சளி விழுதல், கழுத்து பிடரி, கன்னம் இவ்விடங்களில் வீக்கம் சுரம் குளிர் எரிச்சல் இருமல் கூச்சல் கண்டத்தில் புண் போலிருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

14- வது. துர்க்கந்த சிலேஷ்ம ரோகம்!

இருமினால் சீழும் ரத்தமும் விழுதல், அதில் கவிச்சு மணம் வீசுதல் அன்னமும் அவுஷதமும் செல்லாமை அடிவயிறு கால் கை இவைகளில் வீக்கம் தாகம் தேக அட்கம் அருசை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

15- வது. திக்திய சிலேஷ்ம ரோகம்!

வெள்ளைக்காமம், சுரம், இருமல், தேகம், அடக்கிச்சல், எரிச்சல், திருதிருத்துக் கேடு விழுதல் இரத்தம் மலி வார்த்தை இன்மை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

திக்தியம் என்பது கெடாமை.

16- வது. பூத சிலேஷ்ம ரோகம்!

கண்களால் உருட்டி உருட்டிப் பார்க்குதல், மவுனமாக உள்ளேயே பேசுதல் நெடுமூச்சு இரட்டை விடுதல் கொழ கொழயாகச் சளி விழுதல் இருமல் தேகத்தில் வெளிறுடன் வியர்வை நறநறவெனப்பல்லைக் கடித்தல் சந்தோஷம் கோபம் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவைகளும் முற்கூறிய சிலேஷ்ம ரோக சிகிச்சைகளால் வசப்படும். இத்தேரி மகாத்தர முற்றிற்று

வாத சோணித ரோக பேதம்:

இது, வாதத்தினாலும் பித்தத்தினாலும் சிலேஷ்மத்தினாலும் தொந்தங்களினாலும் திரி தோஷத்தினாலும் ஏழுவிதப்படும். ஆனால், இவைகள் உத்தானவாத சோணித ரோகம் கம்பீர வாத சோணித ரோகம் என இருவிதப் பெயர் பெறும்:

உத்தானம் என்பது மேல் கம்பீரம் என்பது ஆழம்.

வாத சோணித ரோக பூர்வரூபம்:

தேகமினைத்துத் தாருதல், தொடை, இடுப்பு முழங்கால் கணுக்கால் பாதம் தோள் கை கீல், ஆகிய இவ்விடங்களில் இளைவு, மினுமினுப்பு குத்தல் அதிர்தல் கனத்தல் திமிர் என்னும் இக்குணங்கள் அடங்கி, அடங்கி சண்டை எலிகள் கழுத்தினில் பிறக்கும் விஷரோகம் போலவே தேக முற்றிலும் கோரமாக வியாபிக்கும். இதுவே வாத சோணித பூர்வ ரூபமாம்.

உத்தான வாத சோணித ரோக லக்ஷணம்:

வாத சோணித ரோகத்தினில் பிறக்கின்ற நமைச்சல் குத்தல் முதலிய அர்க்குணங்கள், முதல் முதல் மாமிசாது சதாதுவில் நின்றும் உண்டாகி அம்மாமிச தாதுவைக் கடந்து கீழ் முகமாக ஆழாமல், வெளிமுகமாகச் சரும முற்றிலும் வியாபித்துக் கொண்டே இருக்கும். அப்பொழுது அச்சருமமானது கறுத்தும் சிவந்தும் தாம்பிர நிறத்தைப் பெற்றும் அக்கினிச் சுவாலையின் ஆவியைப் போல் அதிக வெப்பத்தைத் தருவதுமாக இருக்கும்.

கம்பீர வாத சோணித ரோக லக்ஷணம்.

முன்பு மாமிசத்தையும் சருமத்தையும் பற்றிய நமைச்சல் முதலிய துர்குணங்கள் இவனாள் பொருந்து உள்ளி ஆழப் பாய்ந்து சப்த தாதுக்களிலும் வியாபிக்கும். அப்போது உத்தான வாத சோணித ரோகத்தைப் பார்க்கிலும் அதிக உப்த்திரவம் பிறக்கும். இது முதிர்ந்த காலத்தில் உடம்பில் பூதினது போல் வீக்கம் உண்டாக்கும். அன்றியும் வாயுவானது தொடை எலும்பு மச்சை இவைகளில் சஞ்சரித்துக் கொண்டு பிளந்து போவது போல் நோவை எழுப்பி, எதுவோ ஆறுவது போல் தொற்று வித்துத் தேகத்தை வளைத்துச் சப்பாணியைப் போல் (அல்லது) நொண்டியைப் போல் செய்யும்.

1-வது வாதாதிக்க வாத சோணித ரோக லக்ஷணம்.

அதிக சூல அதிரல் இழுத்தல் வீக்கம் சுரித்தல் இது அதிக சூல அதிரல் இத்தல் வீக்கம் சுரித்தல் அறஅறப்பு மரத்தல் நடுக்கல் வாத நரம்புகளும் விரல்களும் கீல்களும் முடங்குதல் சர்வாங்கத்திலும் சகிக்கக் கூடாத வேதனை சீதளவஸ்துவில் விரோதம் போஜனம் அவஹம் நடை இவைகளில் வெறுப்பு உறக்கம் சருமத்தின் மேல் கருத்த நிறம், ஒரு வேளை கறுப்பும் சிவப்பும் கலந்த நிறம் என்றும் இக்குணங்களை உண்டாக்கும். சில வேளை இக்குணங்களில்லாதது போலும் அதிகரித்தது போலும் இருக்கும்.

—→ ,

2. வது பித்தாதிக்க வாத சோணித ரோக லக்ஷணம்:

இது, சோருதல் மூர்ச்சை தாகம் மதம் சருமத்தின் மேல் எரிச்சல் வியர்வை கொட்டல் சகிக்கக் கூடாத நோவு சிவந்த வீக்கம் அதிக காங்கை என்னும் இக் குணங்கள் மிகவும் அதிகரிக்கச் செய்யும்.

3. வது. சிலேஷ்மாதிக்க வாத சோணித ரோக லக்ஷணம்:

இது, சரீரம் மரத்தல் கனத்தல் கொஞ்சம் நோவு நமைச்சல் குளிர்ச்சி உறக்கம் சருமத்தின் மேல் மினு மினுப்பு என்னு மிக் குணங்கள் விசேஷமாக அதிக விரைவில் உண்டாக்கும்.

4. வது. தொந்த வாதிக்க வாத சோணித ரோக லக்ஷணம்:

இது வாத பித்தாதிக்க வாத சோணித ரோகங்களுக்கு உள்ள குணங்கள் எல்லாம் ஒரே காலத்தில் பிறப்பிக்கும் இவ்வாறே மற்ற இரண்டு இரண்டாகத் தொந்திக்கும் தொந்தங்களையும் அறிய வேண்டும்.

5. வது. திரி தோஷாதிக்க வாத சோணித ரோக லக்ஷணம்.

இது. வாதாதி மூன்று சோணித குணங்களுடன் மோக குணம் மதாத்திய குணம் மாதரோக குணம் சொற்பன குணமாகிய இக் குணங்களைப் பிறப்பிப்ப தன்றியும் தசை நோவு அரோசகம் இரைப்பு தேகம் முடங்குதல் வீக்கம் கொப்புளம் எலும்புருக்கு பேதி (அல்லது) மலக்கட்டு என்னும் இக் குணங்கள் உண்டாக்கும். இதனால் அற்புத ரோகங்களும் பிறக்கும். இது வயிற்று நரம்பின் சந்திகளில் வாயுவு நிறைந்து ரத்த மார்க்கத்தை அடைத்துப் பித்த சிலேஷ்மங்களில் கலந்து கொண்டு அதிக வேதனையைப் பிறப்பித்து மரணத்தைக் கொடுக்கும்.

வாத சோணித ரோக அசாத்திய நிதானம்!

இவ்வொரு தோஷத்தால் பிறந்த வாத சோணித ரோகங்கள், ஆரம்பமாக யிருக்கில் சிகிச்சையினால் சாத்தியம். தொந்தவாத சோணித ரோகங்கள் கஷ்ட சாத்தியம் திரிதோஷவாத சோணித ரோகம் அசாத்தியம்.

மேற் சொல்லிய வாத சோணித ரோகங்களை சிறு முத்துத்தயிலவி ரேசனம் விஷ்ணுதயிலக் குடிநீர் கசமூலரசாயனம் சித்தில் சருக்கரை சிற்று முட்டைத் தையிலம் கருப்பூரச் சிலாசத்துப் பஸ்பம் கண்டிந்து நரையெடுத்த கோமுத்திரம் முதலிய அவுஷதங்களில் விலக்கவும்!

வாத சோணித ரோக லக்ஷணம் முற்றியது.

பஞ்ச வாயுக்களின் விகுண நிதானம்:

1. வது. பிராண வாயுவின் விகுண நிதானம்:

காய்ந்த வஸ்து, அதிக நடை, மிகுந்த சையோகம், அதிகவேலை, சதுர்த்தச லங்கனம், வெகுதிண்டி, வேகத்தை யடக்கி விடுக்கும் போது சிரமந்தப்பி விடுக்கிறதல் (அல்லது) மறிக்குதல் ஆகிய இவைகளால் பிராணவாயு அதிகரிக்கும், இதனால் கண் முதலிய பஞ்சேந்திரியங்களுக்கும் உபத்திரவம் பீநசம் தாகம் இருமல் இரைப்பு அர்த்தித வாதகுணம் முதலிய ரோக குணங்களும் உண்டாகும்.

விகுணம் என்பது கெடுதி.

2. வது. உதான வாயுவின் விகுண லக்ஷணம்.

தும்மல் ஏப்பம் வாந்தி நித்திரைப் பங்கம் அதிக சுமை எடுத்தல் மிகுந்த அழுகை நகைப்பு முதலியவைகளால் உதான வாயுவு அதிகரிக்கும். இதனால் கழுத்தை விருவாக பிடித்துப் பிடித்தது போலிருத்தல் தாழ்வாய்க் கட்டையில் ரோகம் பிரமை வாந்தி அரோசகம் பிரசம் காசரோகம் முதலிய ரோகங்களும் உண்டாகும் அதுவே உணர்ச்சிவ முகமான நரம்புகளில் வியாபிக்கில் செவிடு முதலிய ரோகங்களும் உண்டாகும்.

3. வது வியான வாயுவின் விகுண லக்ஷணம்:

அதிக நடை. சதா உட்கார்ந்திருத்தல் விரோத போஜனம். காங்கை வஸ்து பயம் அதி சந்தோஷம் சையோகம் விஷம் சேட்டை விஷம் முதலியவைகளால் வியான வாயுவு அதிகரிக்கும். இதனால். புருஷத்துவம் உற்சாகம் பலம் இவைகள் நஷ்டப்படுவதுமன்றி, பித்தசுரம், சர்வாங்க நோவுடன் வீக்கம் குத்தல் ரோமச் சிலிர்ப்பு மந்தாக்கினி குஷ்டம் விசர்ப்பி சந்நியாச ரோகம் சரீரம் தபிக்கின்ற ரோகம் முதலியவைகள் உண்டாக்கும்!.

4. வது சமான வாயுவின் விகுண லக்ஷணம்:

அபக்குவ போஜனம் அஜீரண சீதள போஜனம் சங்கர போஜனம் அகால நித்திரை அகால விழிப்பு முதலியவைகளால் சமான வாயு அதிகரிக்கும். இதனால், ஆம குன்மம் கிரகணி முதலிய ரோகங்களும் பக்குவாசயஸ்தான ரோகங்களும் விரைவில் உண்டாகும்.

5. வது. அபான வாயுவின் விகுணலக்ஷணம்:

உஷ்ண அன்னம் மந்த அன்னம் வாகனத்தியால் வருகின்ற மெலிவு நடையிலும் அதிக நடை அசைவற்றிருத்தல் வேகமாகத் திரிதல் ஆகிய இவைகளினால் அபான வாயு அதிகரிக்கும். இதனால் பக்குவாசயஸ்தானத்தில் பிறக்கின்ற ரோகங்களுடன் மூத்திர ரோகம், சுக்கில மேகம் மூல ரோகம் குதப்பிரம்ச ரோகம் முதலிய ரோகங்களும் உண்டாகும்.

வாத சாமலக்ஷணம்:

முன் சொன்ன ஐந்து வாயுக்களும் ஆமத்தோடு கூடும் போது, சோர்வு சரீரம் மரத்தல் கனத்தல் மினு மினுத்தல் அரோசகம் மந்தம் சீதம் வீக்கம் அக்கினி மந்தம் கார வஸ்துக்களிலும் காங்கை வஸ்துக்களிலும் அபேக்ஷை என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

—.

வாத நிராமலக்ஷணம்:

பஞ்ச வாயுக்களும் ஆமத்தோடு கூடாத காலத்தில், மேற் சொன்ன நாற் குணங்களில் ஒன்றேனும் நிராமமென்றறிக!

ஆவிருத வாத பேதம்:

பிராண வாயு முதலி வாயுக்கள் 5, பித்தம் 1. சிலேஷ்மம் 1, ரத்தாதி முதலிய தாதுக்கள் 6, அன்னம் 1, மூத்திரம், மலம் 1, ஆகிய 16-ம். தனித்தனியே ஒன்றை ஒன்று மாறி மாறி ஆவரணமாகச் சூழும் போது, அவைகளாலுண்டாகின்ற ஆவிருத பேதங்களைச் சொல்லப் புகுந்தால், அளவைக் கடந்ததாகத் தொகையில் நின்றும் பெருகும். அது பற்றி, அப் பேதங்களில் பித்த விருதம் முதல் சிலேஷ்ம அபான ஆவிருதம் வரைக்கும் 30 ம். எடுத்துக் காட்டப் படும். இது போலவே மற்ற ஆவரண பேதங்களை ஆயுர் வேத பண்டிதர்கள் கூறக்கறிய வேண்டும்.

1-வது பித்த ஆவிருத வாதலக்ஷணம்:

பித்தமானது வாயுவை ஆவரணமாகச் சூழும்போது, பாதி உள்ளங்கால் உள்ளங்கைகளில் எரிச்சல், தாகம், ஆசு பிரமை கண்ணில் இருட்கம்மல் கார உஷ்ண புளி லவண வஸ்துக்களால் தாபவரல், சீதள வஸ்துக்களில் இச்சை என்னும் இக் குணங்கள் உண்டாகும்!

2. வது சிலேஷ்ம ஆவிருத வாத லக்ஷணம்:

சிலேஷ்ம மானது, வாயுவை ஆவரணமாகச் சூழும் போது தேகத்தில் சீதளம் கனத்தல் ஆலி காரவஸ்துவில் விருப்பம் சந்தோஷம் மேலில் எறும்பு ஊருதல் போல் இருத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3-வது. ரக்த ஆவிருத வாத லக்ஷணம்:

ரக்த தாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, தாகம் ஆயாசம், சருமத்திலும், மாமிசத்திலும், நோவு வீக்கம் மேலில் ரக்த நிறம், அவ் விதப் புடைகள் எழும்புதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4. வது. மாமிச ஆவிருத வாத லக்ஷணம்:

மாமிச தாதுவை வாயுவு சூழும் போது, மயக்கம். தேகங் கடுத்து நிறமாறுதல் கட்டிகள் எழும்புதல் தாண்டல் போலிருத்தல் கஷ்கார உஷ்ண வஸ்துக்களில் இச்சை இருமல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

5-வது. மேதோ ஆவிருத வாத லக்ஷணம்:

மேதோ தாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, சரீரங் கிருங்கல் இருத்தல் ஸ்திரம் மிருது சீதளம் அருசி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது கஷ்ட சாத்தியம். இதன் ஆட்டிய வாதம் என்பர்.

6. வது அஸ்தி ஆவிருத வாத லக்ஷணம்:

அஸ்தி தாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, தேகத்தைக் கையால் தொடில் அதிக உஷ்ணம் நோவு சந்தோஷம் நீங்குதல் ஊசியால் குத்துதல் போல் குத்துதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

7. வது. மஜ்ஜா ஆவிருத வாத லக்ஷணம்:

மஜ்ஜை தாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, சரீரம் குத்துதல் கொட்டாவி புரளல் வயிற்றில் சூல. அச் சூல நோவைக் கையால முத்திப் பிசைந்தால், அடங்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

8. வது. சுக்கில ஆவிருத வாத லக்ஷணம்.

சுக்கில தாதுவை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, சுக்கிலம் வேகமாக ஒழுகுதல், (அல்லது) இல்லாதிருத்தல், இதனால் புருஷத்துவம் நீங்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

9. வது. அன்ன ஆவிருத வாத லக்ஷணம்.

அஜீரணப்பட்டு நோவைத் தருகின்ற அன்னத்தை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, அவ்வ. ஜீரணச் சூல நொக்கம் சமமாக இருக்கும்.

10. வது. மூத்திர ஆவிருத வாத லக்ஷணம்.

மூத்திரத்தை வாயுவு ஆவரணமாகச் சூழும் போது. சாதாரணமாக மூத்திரம் கட்டுப் படுவது மன்றிக் கீழ் வயிற்றில் உப்பிசமும் உண்டாகும்.

—

11. வது. மல ஆவிருத வாத லக்ஷணம்:

மலத்தை வாயுவு ஆவரணமாகக் கூடும் போது, மலங்கட்டுப்பட்டு
இரண்டு மூன்று தினத்துக் கொருதரம் வருத்தத்துடன்
ஆட்டுப் புழுக் கையைப் போல் விழுதல், தேகத்தில்
வாளால் அறுப்பது போலிருத்தல், புசித்த தற்காலத்தில்
தேக மெல்லாம் மினு மினுப்பு, நிறைந்த மேனியுடன்
கிழவனைப் போல் தொடர்ந்த இடத்திலேயே கிடக்குதல்
என்னுமிக் குணங்கள் உண்டாகும்! -

12. வது. சகல தாதுக்களின் ஆவிருத வாத லக்ஷணம்:

சகல தாதுக்களையும் வாயுவு ஏக காலத்தில் லாவரணமாகக்
கூடும் போது பிட்ட பாகம் கவுட்டி முதுகு இவ்
விடங்களில் நோவும், இவ் வாயுவு அதிகரிக்கில்
மார்பில் ஓயாத வேதனையும் உண்டாகும்.

13. வது. பித்த பிராண ஆவிருத வாத லக்ஷணம்:

பித்தத்தைப் பிராணவாயுவு ஆவரணமாகக் கூடும்
போது, பிரமை மூர்ச்சை நோவு எரிச்சல்
என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

14. வது. பித்த உதான ஆவிருத வாத லக்ஷணம்:

பித்தத்தை உதானவாயுவு ஆவரணமாகக் கூடும் போது,
புசித்த அன்னம் வாந்தியாகுதல் பிரமை மூர்ச்சை
நோவ் மேலிலும் உள்ளிலும் எரிச்சல் மினு மினுப்பு
இன்மை என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

15. வது. பித்தவியான ஆவிருத வாத லக்ஷணம்:

பித்தத்தை வியானவாயுவு ஆவரணமாகக் ஆகும் போது, சர்வாங்க எரிச்சல், இளைப்பு தேக வியாபாரங் கெடல் வியர்வை எவ்வஸ்துவிலும் அசங்கிதம் தாகம் உஷ்ணங்கால் உஷ்ணங் கைகாலில் எரிச்சல் என்று மிக் குணங்களுண்டாகும்.

16.- வது. பித்தசமான ஆவிருத வாத லக்ஷணம்:

பித்தத்தைச் சமானவாயுவு ஆவரணமாகக் ஆகும் போது தேக அபால உஷ்ணம் நீங்குதல், மிகு வியர்வை, சகலவஸ்துவிலும் வெறுப்பு, தாகம் கை கால்களில் எரிச்சல் என்றும் இக் குணங்கள் உண்டாகும்:

—

17. வது. பித்த அபான ஆவிருத வாத லக்ஷணம்:

பித்தத்தை அபானவாயுவு ஆவரணமாகக் ஆகும் போது, மலத்தில் மஞ்சள் நிறமும் யோனிகாமியம் ஆதகம் ஆகிய இவ்விடத்தில் நோவும் எரிச்சலும் உண்டாகும். காமியம் என்பது: ஆண் குறி.

18. வது. சிலேஷ்ம பிராண ஆவிருத வாத லக்ஷணம்:

சிலேஷ்மத்தைப் பிராணவாயுவு ஆவரணமாகக் ஆகும் போது, கண்டத்தில் ஒரு சத்தம் கோம்பல் அரோசகம் வாந்தி சதா உமிழ்நீர் உமிழ்தல் தும்மல் ஏப்பம் மூச்சுத் திணறல் என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

—

19. வது சிலேஷ்ம உதான ஆவிருத வாதலக்ஷணம்:

சிலேஷ்மத்தை உதான வாயுவு ஆவரணமாகச் சூழும் போது. தேகம் கனத்தல் அரோசகம் ஈனத் தொனியோடு வார்த்தை இறைதல் ஆரம்பம் நிறமாறுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

௨௰- வது சிலேஷ்மவியான ஆவிருத வாத லக்ஷணம்:

சிலேஷ்மத்தை வியான வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, கீல்களும் எலும்பும் வாக்கும் ஸ்தம்பித்தல், சகல அவயவங்களும் கனத்தல், நடக்கும் போது கால் சறுக்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

௨௧-வது. சிலேஷ்மசமான ஆவிருத வாதலக்ஷணம்:

சிலேஷ்மத்தைச் சமான வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, வியர்வை நீங்குதல், தீதாகம், மந்தாக்கினி என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

—

௨௨-வது. சிலேஷ்ம அபான ஆவிருத வாதலக்ஷணம்:

சிலேஷ்மத்தை அபான வாயுவு ஆவரணமாகச் சூழும் போது, கோழையைப் போல் மூத்திரமும் மலமும் இறங்கும்.

ஆவிருத வாதம் ௨௨.ம். முற்றியது.

—— x x ——

இனிப் பிராணன் முதலிய பஞ்ச வாயுக்களும் ஆவரணமாகச் சூழுகின்ற பேதம்.

20. ம். இதனடியிற் சொல்லப்படும்:

——

1. வது. பிராண உதான ஆவிருதவாத லக்ஷணம்.

பிராணவாயுவு உதானவாயுவை ஆவரணமாகச் சூழும்போது உச்சுவாசம் நிச்சுவாசம் தடிப்படல் இருமல் வருத்தம் பீநசம் தலையும் மார்பும் நோதல் வாய் வறளல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

2. வது. உதான பிராண ஆவிருதவாதலக்ஷணம்.

உதானவாயுவு பிராணவாயுவை ஆவரணமாகச் சூழும்போது, தேக நிறமும் ஒளியும் பலமும் குறையும். இப்படியே மற்றை நான்கு வாயுக்களின் ஆவரண பேதங்களை அறிந்து கொள்க.

ஆக ஆவரண பேதம் 42.ம். முற்றியது.

(இப் பேதம் 42ம. எனச் சொல்லுகிறார்கள்).

ஆவிருதவாத உபத்திரவ நிதானம்.

சகல ஆவிருத வாதங்களையும், தசவித பஞ்சமூலக் கஷாயம், சிந்திலாதிச் சூரணம் திப்பிலிக் கஷாயம் ஆயிலேயே லேகியம் முதலிய ஔஷதங்களைக் கொண்டு வசப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிடில், அவைகளில் நின்றும் வித்திரதி, பிலிகம், குன்மம், மார்பு ரோகம், மந்தாக்கினி என்னும் ரோகங்கள் பிறந்து பலவித உபத்திரவங்களைச் செய்வனவாம்.

சர்வ ஆவிருதவாத அசாத்திய நிதானம்.

எந்த ஆவிருத வாயுவினாலாவது, நீங்காத சிரோபாரம், ஆரோசகம் அதிக இளைப்பு, ரூபக மறதி. மலபந்தம், மிகு தாகம், பிரமை முதலிய பற்பல ரோகங்கள் பிறந்தாலும் (அல்லது) சப்த தாதுக்களும் தீபாக்கினியும் பலமும் நாளுக்கு நாள் குறைந்தாலும் அசாத்தியமாம்.

விஷபாக ரோக பேதம்:

செம்பின் களிம்பு மீன் முள்ளு நெல்வாலின் முள் முதலியனவைகள் சேர்ந்த போஜனம் அருந்தல், காய்ந்திய அன்னம், மதைச்சலம், காடிநீர் தண்ணீர், விதித்திய சை யோகத்திலும் நோய் மாதர் சையோகம், முதல் நாளில் சமைத்த பதார்த்தம், அழுகிய மாமிசம், உஷ்ண மாமிசம், என்னும் இவைகளால் வாத விஷபாக ரோகம் முதல் கந்த விஷபாக ரோகம் ஈறாக எண்வகை விஷபாக ரோகம் உண்டாகும். அவைகளை அடியிற் காண்க: — x x x —

1. வது. வாத விஷபாக ரோகம்:

ஒரு பக்கத்தில் வீக்கம், சரீரம் வாட்டத்திலும் வெளிறல், கவிதை, உறக்கம், பசியின்மை, மலச்சிக்கல், என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

௨-வது. பித்த விஷபாக ரோகம்:

சர்வாங்கத்திலும், வெதுப்பு, கிராந்தி, பாரிப்பு, எரிவு, சுரம், உளறல், அசதி, அனித்திரை, மேல் மூச்சு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. வது. சிலேஷ்ம விஷபாக ரோகம்:

தேக முற்றிலும் மிகு நமைச்சல், வெளிறல், வீக்கத்துடன் வெடித்தல், வறவறப்பு, ~~அ~~ அழலல் நபாச்சுரம் குளிர், அற்ப இருமல், கோழை அருணையுடன் சிறுநீரிறங்கல், மேல் மூச்சு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

—

4-வது தொந்த விஷபாக ரோகம்!

மூர்ச்சை, மிகுந்ததாகம், அடிக்கடி நீரிறங்கல், விக்கல், மயக்கம், தேகம் வெளுத்துக் கண்ணூதலுடன் வீக்க, அருசி, பேதி பிரமை, வாய் நீரூறல் என்றும் இக் குணங்கள் உண்டாக்கும்.

தொந்தம் என்பது இரண்டு!

5. வது. சந்நிபாத விஷபாக ரோகம்!

சேறு போல் பேதி, நெஞ்சில் விரணத்துடன் ரத்தம் கசிதல், சுவாசம், சுரம், மயக்கம், காய்ந்த கொள்ளின் மணம் போல் சுரத வாசனை, முக வீக்கம், வியர்வை அசதி. பிதற்றல், என்று இக் குணங்கள் உண்டாக்கும்.

6-வது: அக்கினி விஷபாக ரோகம்!

வாதபித்தாதிக்கம், தேகம், இளைத்தல், வீக்கம், இடை பொருந்தாமை, புரளல், சோகை, இருமல் சர்த்தி, மூர்ச்சை, வாய் நீரூறல், வயிறுளைதல், மாச்சிக்கல் பக்க நோவு, என்றும் இக் குணங்கள் உண்டாக்கும்.

7-வது. எரிச்சல் விஷபாக பாகம்!

வாயினில் ரத்தம் விழ்தல், எரிச்சல், சோகை சுவாசம், மார்பில் அடைப்பு விரணம் அதில் மாமிசம் வளரல், இக்கல், கட்டி போல், நெஞ்சில் புரளல் பேதி, வீக்கம். என்றும் இக் குணங்களை உண்டாக்கும்!

8- வது ஸந்நி விஷபாக ரோகம்:

விஷபாக ரோகம் எட்டுக்குள் வாதம், பித்தம், சிலேஷ்ம தொந்தம். என்னும் நான்கு விஷபாக ரோகங்கள் சாத்தியமாம். மற்ற நான்கு விஷபாக ரோகங்களும் அசாத்தியமாம்.

இத்தர் மகாந்தரம் முற்றியது.

மேற்கூறிய விஷபாக ரோகங்களுக் கடுக்காய் ஊறிய கோமூத்திரத் தெட்டை மகா மண்டூரச் சிந்தூரம் முதலிய அவுஷதங்களினாலும், 179, 188, என்னும் பக்கங்களில் பாண்டு ரோகங்களுக்கும் சோபா ரோகங்களுக்கும் சொல்லிய அவுஷதங்களினாலும், பரிகரிக்க வேண்டும்.

ஒன்பதாவது மகா வாத ரோக படலம் முற்றியது.

10. வது. அதிதூல ரோக படலம்:

அதிதூல ரோக லக்ஷணம்:

தேகத்தில் அபாவமாக இருக்கின்ற மாமிச பேதங்கள் அதிகரித்து வளரும் காரணத்தால் சரீரம் பருப்பதுமன்றி ஸ்தனமும் வயிறும் தொடையும் பிரமாணமின்றிப் பருத்து அசைவற்றுக் கனமாயிருக்கும். இதனால் சங்கோச முதலிய அசௌக்கியங்களும் அறிவும் சதைக குறைதல், நடந்தால் அவ்வவ் இடத்துச் சதைக குலைதல், ஸொல்லாமல் குலுங்குதல், ஆயாசம், இறைப்பு, கபாதிக்கம், பொறுமையிருமல், மேல் சுவாசம் முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். தூலம் என்பது பருத்தல்.

இது சுக்கில சோணிதங்களில் தோஷத்தை உண்டாக்கிக் கருப்ப நாசத்தைச் செய்யும்.

இதனை கோமூத்திரம், நல்லெண்ணெய், தேனிற் கலந்த அசுவகந்திச் சூரணம் முதலிய அவுஷதங்களால், வசப்படுத்த வேண்டும்.

அதி அர்க்க ரோக லக்ஷணம்!

ஜடமாக்கினியின் குணத்தால் கொழுத்து வளர்ந்த மாமிசங்களானவை அவ்வக்கினிக் குறைவால் திரண்டிருக்கும் காரணத்தால், சரீரம் அழுகுவதுமன்றி, நரம்புகளும், கீல்களும், கழுத்தும், வயிறும் தொடைகளும், தாடைகளும், புயங்களும், உலர்ந்து ஆடம்பலாகும். அப்போது ஆயாசமும் தீர்ப்பலமும் தேவாங்கு என்னும் ஒரு வித மிருகத்தையொத்த உருவமும் உண்டாகும். அர்க்கம் என்பது இஃதேதால். இதற்கு எருமைத் தயிர், அக்கோதகத்தாதிய வெற்றியம். திவக்குமின் ஆரணம். ஜடமாண்ட கிருதம் முதலிய அவுஷதங்களும் நன்மையாம்.

மலட்டு ரோக பேதம்!

சுக்கில சோணிதங்களில், வாதாதிகளால் உண்டாகின்ற தோஷங்களினாலும், ஜன்மாந்தர பாவத்தினாலும், மலட்டு ரோகம் உண்டாகும். அது ஆண் மலடு, பெண்மலடு, என இருவகைப் படும். இவற்றுள் பெண் மலட்டில் ஆதிமலடு, காகமலடு, கதலிமலடு, கருப்பமலடு, என 4 (நான்கு) பிரிவுண்டு.

ஆண் மலட்டு ரோகலக்ஷணம்:

புருஷர்களின் விந்துவானது, தித்திப்பு இல்லாததும், ஜலத்தில் விட்டால் கரைந்து மிதப்பதும், உயிர்ப் பற்றதும், மூத்திரத்தில் நுரை கட்டுவதுமாயிருக்குமாயின் அதனால் ஒருக்காலும் கருப்பந்தரிக்கமாட்டாது என்றறிக. இதனைப் பால் நெய் முதலிய மதுர வஸ்து, மதனகேசரிச் சூரணம், மன்மத சிந்தாமணி வடகம், அவர்ணபூரணதி லேகியம், பூரண சந்திரோதயம் ஆகியான வீரிய விருத்தி அவுஷதங்களைக் கொண்டு போஷிக்கவும்.

பெண் மலட்டு ரோகலக்ஷணம்:

ஸ்திரிகளுக்கு மாதாந்தர ருது காலத்தில் ஸ்ரவிக்கின்ற ரத்தமானது சிவந்தும் கறுத்தும் இருந்து, தேகத்தில் வாதகுணத்தையுண்டாக்கும். இது வாத தோஷமாம். மஞ்சள் நிறமாயும் நீல நிறமாயும் இருந்து, தேகத்தில் பித்த குணத்தை உண்டாக்கும். இது பித்த தோஷமாம். தயிரைப் போல் வெளுப்பாக இருந்து, தேகத்தில் மந்தாக்கினி முதலிய சிலேஷ்ம குணத்தை உண்டாக்கும். இது சிலேஷ்ம தோஷமாம். பிரதோரத்தம் போலும் உருண்டை உருண்டையாயும் இருக்கும், இது வாத சிலேஷ்ம தோஷமாம். சர்ப்ப தீழ் போல் இருக்கும்.

இது ரக்த பித்த ரோக தோஷமாம். கண்டுமறையும்; இது வாத பித்த தோஷமாம். மலமுத்திர நிறமாக இருக்கும். இது சந்நிபாத தோஷமாம். இவற்றுள் தனித் தனியான மூன்று தோஷங்களும் தொந்த தோஷங்களும் முறையே சாத்தியமும் கஷ்ட சாத்தியமுமாக இருப்பதால், சிகிச்சையினால் மலடு நீங்கி கருப்பம் உண்டாகும். திரிதோஷம் அசாத்தியமாகையால், எவ்விதச் சிகிச்சைகள் செய்யினும் கருப்பம் தரிக்காதென்றறிக. அக்கிலத்தையும் இவ்விதமாக நிதானிக்க வேண்டும். முற்கூறிய வாதாதி மூன்று தோஷங்களுக்கும், வாத பித்த சிலேஷ்மங்களுக்குரிய அவுஷதமும், பிரேதரத்தனைச் சோணிதத்திற்கு, ஆறைப்பூ, கருங்காலிப்பூ, மாதுளம்பூ, மருதம்பூ, செம்பரத்தம்பூ இவைகளின் ரசங் கூட்டிக் காய்ச்சிய கிருதமும், உருண்டையான சோணிதத்திற்கும், சீழ் போன்ற சோணிதத்திற்கும், முருக்கம்பூவைச் சுடலையும் பஸ்மஞ் செய்து அந்த பஸ்மத்தையும் பீளைப்பூவையும் இடித்துச் சேர்த்துக் காய்ச்சிய கிருதம் ஊனசோணிதத்திற்கு, சங்கம் பால் ஆல் முதலிய பஞ்ச பல்லவ ரசங்கள் கூட்டிய கிருதமும் இன்னும் பெரிய விருத்தியைச் செய்கின்றன. பரிபால.

---

1. வது. ஆதி மலட்டு ரோக லக்ஷணம்:

வயிற்றில் மூன்று மடிப்பும் விரிந்த இடுப்பும் பருத்துச் சதையும் ஸ்தூலித்ததால், இவர்கள் தேவஸ்திரீகளாயிருந்தாலும், கருப்பந் தரிக்கமாட்டார்கள் இதனைச் சண்ட மலட்டென்றுஞ் சொல்வர்.

2-வது காகமலட்டு ரோகலக்ஷணம்:

முதல் முதல் இரண்டு பிள்ளையைப் பெற்று, பின்பு கருப்பம் இல்லாதிருப்பது காகமலடாம்.

3-வது கதலி மலட்டு ரோகலக்ஷணம்:

வாழை மரத்தில் உண்டாகும் தாறு போல் ஒரு பிள்ளையைப் பெற்று பின்பு கருப்பம் இல்லாதிருப்பது கதிலி மலடாம்.

4-வது. கருப்ப மலட்டு ரோகலக்ஷணம்:

வயிற்றிலேயே செத்துச் செத்து விடுகின்ற பிள்ளைச் சாதாரணமாக வருஷந்தோறும் பெறுவது கருப்பமலடாம். இவைகளுக்குக் கரும சாந்தியுடன் நாகப் பிரதிஷ்டையும் செய்து, சாஸ்ரம் என்னும் சாஸ்திரத்தில் கூறிய பிரகாரம் சிகிச்சைகளையும் செய்தால், நல்ல கருப்பம் உண்டாகும். அவுஷதங்களும், மலடுத்திரத் திற்கு ஒப்பாகிய சோணிதத்திற்கு, ஒப்பாகிய சோணிதத்திற்கு, பெருங்காயம், வெட்டிவேர் முதலிய வைகளினால் செய்த கிருதமும் நன்மையைச் செய்யும்.

சித்தர் மதாந்தரம்!

அகஸ்திய மகாமுனிவர் அருளிச் செய்த ~~15~~ 1500ல் சொல்லியிருக்கிற, மலட்டு ரோகம் எழு விதப்படுகின்றன. அவைகளில் விவரம்.

1. புருஷன் புணரும்போது அந்தரங்கத்துக்குத் தலைநோவு உண்டாகில்: கருக்குழியில் பாரம் (அல்லது) பாசி பற்றி விளக்கமற்றிருக்கும்:

2. வது. அந்த ஸ்திரிக்கு அக்காலத்தில் சர்வாங்கத்திலும் நோவு காணுமாகில், கருக்குழியில் வாயுவு வியாபித்திருக்கும்.

3.-வது. நெஞ்சு வலி காணுமாகில், யோனியைச் சுருக்கித் தசை வளர்ந்திருக்கும்.

4. வது. முதுகு நோவுண்டாகில் யோனியில் கிருமி நிறைந்திருக்கும்.

5. வது. கண்டச் சதை வலிக்குமாகில், யோனியில் ரத்தம் கட்டியிருக்கும்.

6-வது. ஏப்பம் காணுமாகில், யோனி மதத்துக் கொழுப்படைந்திருக்கும்.

7. வது. விந்து சேராமல் நஷ்டப்படுமாகில், பேயினாலும், பயத்தினாலும், யோனிக்குள் விரோத வியாதியுண்டாயிருக்கும். இவைகளே மலட்டு ரோகங்களாகும். இவைகளுக்கு மேற்படி முனிவர் கூறிய சிகிச்சைகளைச் செய்யில், கருப்பம் உண்டாகும்.

சித்தர் மாதாந்தர முற்றியது.

அழிகருப்ப லக்ஷணம்.

வயிற்றில் உருவம் ஏற்படாத இளங் கருவாயிருக்கும் போது, விலா கீழ் வயிறு, மேல் வயிறு, புட்டம் ஆகிய இவ்விடங்களில், அதிக உக்கிரமான வேதனையும், மார்பு நோவும், முகவெளுப்பு, நாபியின் கீழ் உபத்திரவமும், ஆயாசமும், வயிற்றில் வாளால் அறுப்பது போல் இசிவும் உண்டானால், கருப்பம் கரைந்து விடுமென நினைத்துச் சிகிச்சை செய்யவும்.

கருப்ப பேதம்!

அறிவதற்கு அருமையாகிய கருப்பமானது உப விஷ்டக கருப்பம், நாககோதர கருப்பம், லீநாக்கிய கருப்பம் என மூன்று விதப்படும்.

1-வது உப விஷ்டக கருப்பலக்ஷணம்.

சில ஸ்திரீகளுக்கு, அக் கருப்பந்தரித்து நாளுக்கு நாள் விருத்தியடையும் போது, மாதம் மாதம் ருது காலத்தில் வெளிப்படுவது போல் சோணிதம் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். அப்படி இருந்தாலும் அச் சிசுவுக்குக் கெடுதியிராது. ஆனால் அது காத்திரமாயிராமல் மெதுவும் இளைத்து மரப்பாவையை யொத்துத் தாயிக்கும் தெரியாமல் வயிற்றுக்குள் ஒவ்வொரு வேளை கொஞ்சம் அசைவதாயிருக்கும். இதனால், வயிறு பருக்க மாட்டாதென்று அறிக! இதனை உப விஷ்டகம், நவிக பிண்டம், சப்தி பிண்டம் எனவும் சொல்வர். இது அல்குல் வழியாக ரத்தம் விடுகிற காலத்தும் பிரவிருத்தியாகிற காலத்தும் கருப்பஸ்தானத்தில் கொஞ்சம் அதிரல் உண்டாக்கும்:

உப விஷ்டகம் என்பது பிண்டப் பிரவேச மாத்திரம் உடையதாம்:

2-வது. நாககோதர கருப்பலக்ஷணம்.

துக்கம், உபவாசம், உஷ்ண திரவிய போஜனம், அல்குலில் மாறுமல் ரத்தம் வழிதல், வாதாதிக்கம் ஆகிய இவைகளினால், கருப்பமானது விருத்தியடையாமல் இருப்பதுமன்றி, வயிற்றில் ஒவ்வொரு வேளை கொஞ்சம் அதிரல் உண்டாக்கும். அந்த மாதங்களுக்குச் சில நாள் வயிறு பருத்தது போலிருந்தாலும் பின்பு வாடும்.

நாகம் என்பது பாம்பு, உதரம் என்பது வயிறு.

மேற் கூறிய உபவிஷ்டி, நாகோதரம் என்னும் கருப்பங்களுக்கு, வாத ஹரங்களான திரவியங்கள் நெய், பால், தயிர், மாமிசரசம் இவைகளில் இனியாகிய் யிருக்கின்ற திருப்தி செய்வது அன்றி, மிருக மாமிசரசத்திலும் திருப்தி செய்து சித்தத்தைப் புஷ்டியாக்கி, அந்த ஸ்திரீயைப் பல்லக்கு முதலிய வாகனங்களிலேற்றி உடம்பு குலுங்கும்படிச் செய்யவும்.

3-வது. லீ நாக்கிய கருப்பலக்ஷணம்:

இது. முற் கூறிய இரு கருப்பத்தைப் போலவே இருந்தாலும், அசைவு மாத்திரம் இல்லாமல் மூன்று வருஷத்திற்கு மேல் பிரயாசத்தோடு பிரசவ பிறக்கும். (அல்லது) மறைந்தாலும் மறையும். இது வயிற்றுக்குள் அந்தர்ப்பூதமாக இருக்கிற காரணத்தால் லீ நாக்கிய கருப்பம் எனப் பேர் பெற்றது. இதனை முடம் மாங்காய் எனவும் வழங்கி வருகிறார்கள். இக் கருப்பத்தை

ராஜாளிப்பட்சி, கோழி, மச்சம், கத்திக் கொண்டை. கெளிற- மிருகம் முதலிய மாமிசங்களில் அதிக நெய் கூட்டிப் பாகஞ் செய்துக் கொடுத்துக், கருப்பத்தைச் சவுக்கியஞ் செய்யவும்.

கருப்ப காலத்தில் ஆகாதவஸ்துக்களைப் புசித்தலினாலும், சிற்சில ரோகங்களினாலும் காரணம், இல்லாமல், ருதுவாவது. ஆசயாவது உதாவர்த்த வாயுவாவது காணுவதுண்டு, அதற்கு உடனேயே சிரேஷ்டமான சிகிச்சைகளைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்யாவிடில், கருப்பம். ~~[illegible]~~ சிதைவதும் அன்றித் தாய்க்கும் அபாயம் நேரிடுமென்றறிக.

கருப்பம் மரிக்கும் லக்ஷணம்!

கருப்ப ஸ்திரிகளுக்கு மலமூத்திர பந்தம், வளையல் ஓட்டைப் போல் தேகம் கறுக்குதல், வாயில் அதிக துர்க்கந்தம் வீசுதல், கையும் காலும் மிகவும் கறுக்குதல், தலையிலும் முகத்திலும் வீக்கம், அடிக்கடி நெட்டுயிர்ப்பு என்னும் இக்குணங்கள் உண்டானால், சிசு மரிக்கும். இதனைக் கருப்ப வியாப்தி என்றுஞ் சொல்வர்.

அக மரித்த கருப்ப லக்ஷணம்!

தெய்வச் செயல், திரிதோஷ விஷமம், அபத்தியம் ஆகிய இவைகளினால் வயிற்றுக்குள் சிசுவும், இறந்தால், தொப்புளைச் சுற்றியுமாவது வயிறு முற்றியுமாவது தேக முற்றியுமாவது சீதளம், வயிறு கெட்டியாக அப்புதல், அதிசங்கட்டம் பிண்டம் அசையாது இருத்தல், மிகுந்த தாகம், ஸ்தனம் தளருதல், பிரயாசத்தின் மேல் சுவாசம் வருதல், இளைப்பு, எந்த வஸ்துவிலும் அருவருப்பு, துர்க்கந்தத்துடன் குழம்பாக மூத்திரம் இறங்குதல், மயங்கிய நித்திரையில் இறந்தவர்களைக் காணுகின்ற கனவு கண் வட்டமிட்டுச் சுழலல், பிரசவ நோவு நீங்குதல், மிகுந்த வேதனை எந்தப் பக்கம் திரும்பினாலும் அந்தப் பக்கத்தில் பிண்டமானது கனமாகத் தோன்றல், பிரமை, துக்கம், மரத்தல், வெளிர், ஆவி பிடித்த கையை வயிற்றின் மேல் வைக்கில் அதிரல் இல்லாதிருத்தல். என்னும் இக்குணங்கள் உண்டாகும். அப்போது சிசு மரித்ததென்றறிந்து தாய்க்குச் சேதம் இல்லாமல் அந்தச் சிசுவைக் கைப் பழக்கத்தினாலாவது ஆயுதங்களினால் சேதித்தாவது மருந்தினாலாவது நஞ்சுக் கொடியுடன் சீக்கிரத்தில் வெளிப்படுத்த வேண்டும்.

தருணப் பிரசவ லக்ஷணம்.

வயிற்றில் கருப்பம் நிறைந்து இன்றைக்கோ நாளைக்கோ பிரசவம் என்றிருக்குங் காலத்தில், ஆயாசம், வயிறு தளரல், கண்கள்குழி விழுதல், பலவித இளைப்பு, சோர்வு கீழ் வயிறு கனத்தல், அரோசகம், வாய் நீருறல், அழுக்குநீர் கழிவுகள், தொடை வயிறு இடுப்பு முதுகு மார்பு கீழ் வயிறு இருகவுட்டி அபானம் என்னும் இவ்விடங்களில் நோவு, அல்குல் விரிதல், அவ் அங்கங்களில் அதிரல், வேதனை ஒருவேளை ஊசியால் குத்துவது போல் குத்தல், ஜலம் பெருகுதல் என்னும் இக்குணங்களும், வயிற்றில் பெரிய நோவென்னும் மிகு நோவும் சலோதயமும் உண்டாகும். இதுவே தருணப் பிரசவசமயம். இதனை ஆசன்னப் பிரசவமென்றுஞ் சொல்லப்படும்.

———— × × × ————

மக்கலாக்கிய ஆசு லக்ஷணம்.

பிரசவித்தவுடனே அந்த ஸ்திரீகளுக்கு, அழுக்கினால் மார்பிலாவது சிரசிலாவது கீழ் வயிற்றிலாவது, சகிக்கக் கூடாத குத்தலும் நோவும் உண்டாகும். இதனை மண்ணிந்து நோவென்று சொல்லுகிறார்கள். மக்கலம் என்பது அழுக்கின் சேர்க்கையால் பிறக்கும் வேதனையாம். இது திரிகடுகு லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, ஏலம் இவைகளை சுத்தி செய்து வெய்யிலில் உலர்த்தித் தனித் தனியே பொடித்து வஸ்திரகாயஞ் செய்து, வகைக்கு ஒரு வராகனெடை நிறுத்துக் கருப்பிலாவது வெல்லத்திலாவது கலந்து, இரண்டு வேளையுங் கொடுக்க நிவர்த்தியாகும்.

அசாத்திய கருப்ப லக்ஷணம்.

சிசுவு வெளிப்படாதிருக்கில் அல்லது தடித்து மூடிக் கொண்டு கொஞ்சம் வெளியில் வந்தது போலிருக்கில், மலஜல அடைகாணுதல், உலர்த்த சுவாசம், தூக்கமற்ற ஏப்பம், தேகத்தில்லிடல் என்னுமிக் குணங்கண்டாயிருந்தால், அந்த ஸ்திரீகளுக்கு வைத்தியத்தால் பயன் இல்லை என்றறிக. இது நிற்க.
வஸ்திஸ்தானத்தில் சிக்கிக் கொண்டு கருப்பத்திலே தாயிறந்தும், வயிறு மாத்திரம் வெந்நீர் ஆவிக்கு அதிருமாகில், அவ்வயிற்றைக் கீறி உபாயமாக அச்சிசுவை மாத்திரம் எடுத்துக் கொண்டு வளர்ப்பிக்கவும்.

மூட விஷ்டம்ப கருப்பங்களின் லக்ஷணம்.

மேரு பார்ஸ்தானப் படுக்கை முதலிய தீர்செய்கைகளினாலும், அபான வாயுவின் விகுணத்தினாலும், பிரசவகாலத்தில் தாறுமாறாகப் புரண்ட விகற்பத்தினாலும் வயிற்றிலிருக்கும் சிசுவினது சிரசும், கையும், பாதமும் ஸ்தானந் தப்பி ஸ்தானத்தில் சிக்கிக் கொள்ளும். இதனால் அப்பிண்டம் வெளிப்படாமல் இருக்கும். இதுவே மூட கருப்பமாம். யோனிஸ்தானத்தில் ஒரு காலும், குதஸ்தானத்தில் ஒரு காலும் மாட்டிக் கொண்டு ஸ்தம்பித்துப் பிரசவமாகாதிருக்கும். இதுவே விஷ்டம்ப கருப்பமாம். இவற்றுள் எந்தக் கருப்பமாவது பிரசூதவாயுவினை முறுக்கிக்கொண்டு அழப்படும் போது தாய்க்கு அதிக கருப்ப வேதனை உண்டாக்கி, அச்சிசுவானது அவ்வாயாசத்தினால் ஸ்தம்பித்து மயங்கிக் கிடக்கும் போது அவ்வேதனை சடிரென்று நின்று விடும். இதனால் அந்த ஸ்திரீக்கு இரண்டு நாள், மூன்று நாள் வரைக்கும் பிறகு வேதனை காணப்படும். சிசுவு வெளிப்படாமல் இருக்க அவ்வேதனை நின்று

போவதும் உண்டு. அத் தருணத்தில் உயிர்த்திருக்கின்ற சிசுவைக் கைச் சாதகத்தினாலும், ஆயுதத்தினாலுமாக வெளிப்படுத்த வேண்டும். அதை விட்டு மரித்ததென நினைத்து அச்சிசுவைச் சோதிப்பார்களாகில், அத்துடன் கூடத் தாய்க்கும் சேதம் வரும் என்று அறிக. இக் கருப்பங்கள் உள்ளில் உபத்திரவஞ் செய்வதும் ஸ்தம்பிப்பதுமாக இருக்குங் காரணத்தால், மூட விஷ்டம்ப கருப்ப கருப்பங்கள் எனப் பேர் பெற்றன.

வஸ்திரோக லக்ஷணம்.

பிரசவித்துச் சரீரமுழுவது பச்சைப் புண் போலி இருக்கின்ற ஸ்திரீகளுக்கு, எந்நேரமும் உடம்பு அதிரும்படியான அதிக சையோகத்தினாலும் சதுர்த்தச வேகத்தை மறித்ததினாலும், கருப்பகால அபத்தியத்தினாலும், கருப்பஸ்தானத்தில் இருக்கும் வாயுவானது அதிகரித்து, இடுப்பு, பிட்டம், திரிகஸ்தானம், கவுட்டி, யோனி, கீழ்வயிறு, தொப்புள், முலைக்காம்புகளின் கீழ்ப்பக்கம் ஆகிய இவ்விடங்களில் சகிக்கக் கூடாத பிரசவ நோவைப் பார்க்கிலும் அதிக நோவை உண்டாக்கும். இதை ரத்தக் குன்மக் கட்டி, அஷ்டிலா வாதக் கட்டி எனவுஞ் சிலர் சொல்வர். இவ்விரண்டும் அல்லவேயல்ல. இது, சையோகம், ஆதியாக வரும் உபத்திரவத்தால் பிறந்த சுத்த வாதக் கட்டி எனவே நயமாகச் சொல்ல வேண்டும். ஏனெனில், இது பக்கங்களில் குத்தலையும் நோவையும் தபித்தலையும் உண்டாக்கச் செய்வதுமன்றி, தான் அநுசரித்த பக்கத்தில் மிகுந்த வேதனையைக் கொடுத்துச்

சமுத்திரத் தவளையைப் போல். கருப்ப முகத்தை
அடைத்துக் கொள்ளுவதால் என்றறிக. முற் கூறிய
கட்டிகளே ஆயின், அது கருக்குச் சுதாவில்
கரைந்து விடுகின்ற தன்மை இராது. இது வோ
வென்றால் மாதாந்தர ருது காலத்தில் அதிகரித்த
வாயுவின் வேகத்தால் அடிபட்டு அங்கங் வழியாகப்
பட்டைக் கஷாயத்தைப் போலும் மாமிசங் கலந்த
சலத்தைப் போலும் கரைந்து ஒழுகுவதும் அன்றி,
நெளிந்தும் கும்பியும் கறுத்தும் இறைந்தும்
அதிகரித்தும் உதிரமாகப் பெருகும். இச்சையால்
உண்டாவதற்கு, துஷ்டி ரோகம் என்று பெயராம்.
இதில் வாயு அதிகரிக்கில், துவஷ்டி ரோகமாம்,
பிரசவித்து மூன்று மாதமான ஸ்திரீகளுக்கு
ஆமாசயஸ்தானத்தில் நூட்டை காணுவதும் உண்டு.
அதற்கு வெட்டிவேர், நீர்த்தில் தண்டு கொத்து மல்லி
விதை, பூனைப்புருக்கம் வேர், பற்பாடகம், சந்தனக்
கட்டை அதிவிடையம், திற்குட்டிவேர் இவைகளை
வகை 1க்குப் பலம் 1/4 நிறுத்தி நய்ய நசுக்கி, ஒரு படி
நல்ல ஜலத்தில் சேர்த்து, அத் தொனையில் 4ல்
ஒரு பங்காகக் காய்ச்சிய கஷாயத்தை அவ்வப்பம்
தணியும் பரியந்தம் காலையிலும் மாலையிலும்
கொடுக்கவும். இதற்கு இச் சாப்பத்தியம்.

எந்த ஸ்திரிகளுக்கும் கருப்பமடைந்த
மாதம் முதல் ஏழு மாதம் வரைக்கும் இரண்
வருக்கையின் தன்மையை யொத்து வருகின்ற
இரசங் கருவாகையால், அது வாதாதிகளினாலும்
ஜாதா நடத்தைகளினாலும் ஒரு வேளை கரைந்தும்
கரையாமலும் விடும். அப்படிக்கு விழ ஒட்டாமல்
அந்தந்த மாதங்களுக்கும் தனித்தனியே
அபிர ஆத்திரம் என்னும் சாஸ்திரத்தில்
சொல்லிய பிரகாரம் அவுஷதங் கொடுக்க வேண்டும்.

அந்த ஒரு மாதத்திற்கு மேல் வயிற்றில் பிண்டம் சிக்கிக் கொள்ளாமல் அகப்பிரசவம் ஆகும் பொருட்டுப் பத்து மாதம் வரைக்கும் ஆமணக்கின் நெய் கூட்டிய அருமாரவி ரேசன அவுஷத முதலிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

சில ஸ்திரீகளுக்குக் கருப்பஸ்தானத்தில் வாதாதிக்கத்தால் கட்டுப் பட்டிருக்கின்ற ரத்தமானது. காரசார உஷ்ணமுள்ள வஸ்துக்களினால் கரைந்து விடுவதுண்டு. அதைச் சிலர் பிண்டமென நினைத்து பிசாசு அறைந்ததினால் கரைந்து விடுந்ததென வீண் அவதூறு சொல்வர்.

இதனை மந்திர சாலியின் லேபனம் குளிர்ச்சாதகத்திலும், காரசாரத்திலும், வாதாதி எண்ணெய்களிலும், தேக வளர்ச்சிக்காகப் பிறந்த அவுஷத முதலிய சிகிச்சைகளிலும் பரிகரிக்க வேண்டும்.

கருப்ப பேத ரோகலக்ஷணம் முற்றிற்று.

இனி, பாலரோக நிதானம்.

பாலரோக பேதம்.

பால் குடிக்கும் சிசுக்கள், பாலும் அன்னமும் அருந்தும் சிசுக்கள், அன்னம் மாத்திரம் புசிக்கும் சிசுக்கள் ஆகிய மூன்று விதச் சிசுக்களுக்கும் அஜீரணம், என்கிற அஜீரோகம் உண்டாகும். இதனை, மந்தம், மாந்தம், பால்கட்டு, புளிப்பு, எனவுஞ் சொல்வர், இவை நிற்க! வாதம், பித்தம், சிலேஷ்மம், என்னும் மூவகைத் தோஷங்களால் கெடுதியை யடைந்த முலைப்பாலின் வழியாகப் பால் குடிக்கும் சிசுக்களுக்குப் பால்மாந்தம் என்கிற

சஷீராவஜக ரோகம் பிறக்கும். அது பாலூட்டிய தாய்க்கு ஒத்தபடியே வாதாதிகளால் மூவிதப்படும். இதனில் ஆமாசயஸ்தானத்தைப் பற்றி வாதகுண்டாலம், பித்த குண்டாலம், சிலேஷ்ம குண்டாலும், தாலு கண்டகம், கிருமி காஷிரணம், பாலசோஷம் தாந்தம் குக்ஷடம், விஷமகிரா, முகதாஷிகம் எனப் பத்து விதரோகம் உண்டாகும்.

சஷீரபேதம்:

வாத பதார்த்தக் சேர்ந்த அன்னம், ஷாரோத பலகாரம் புளியவைகளைப் புசிக்குதல், பசியால் வருந்தல், நித்தப் பிரமை, பற்பல ரோகம், கருப்பம், ஆகிய இவைகளை உடைய ஸ்திரிகளின் முலைப்பாலால், பரிஅத்தமாகிரா. இந்த பாலர்களுக்கு அநேக ரோகம் உண்டாகும். இவற்றுள், கருப்பஸ்திரிகளின் முலைப்பாலானது எவ்வளவும் கூடாது. அது சேர்ந்தால், அக் கருப்ப வயிற்றைப் போலவே சிசுக்களுக்கும் வயிறு பெருக்கும் என்றறிக. இது நிற்க, சிசுக்கள் தங்களுக்கிருக்கும் சங்கடத்தை இவ்விதமெனச் சொல்ல ஞானமில்லாமையால், அச்சங்கடத்தையும், உள் காய்ச்சலையும், தாகத்தையும் இன்னும் பலவித நோவையும், அவ் வகுணையினில், மருத்துவர் அதி நுட்பத்துடன் யூகித்து கொள்ளக் கவும்.

சுவீநாலஜக ரோக லக்ஷணம்!

திரி தோஷத்தால் கெடுதியை அடைந்த மூலப்பாலக் குடிக்கும் பாலர்கட்கு மலமானது துர்க்காந்தத்துடன் அஜீரணப்பட்டு, அத்தலம் போலும் கலங்கல் ஜலம் போலும் கட்டுப் பட்டது போலும் சிதறிச் சிதறி நானாவித நிறமாகவும் பேதியாகும். அன்றியும் மூத்திரமானது மஞ்சள் வெண்மை நிறத்துடன் கொழும்பாக இறங்கும், இருமல், சுரம், அரோசகம், தாகம், வாந்தி, அபான ஒப்பம், கொட்டாவி சர்வாங்க நோவு, விக்கல், நடுக்கல் வயிற்றில் இரைச்சல் பிரமை கண், நாசி, வாய் என்னும் இவ்விடங்களில் துர்கந்தம் முதலிய குணங்கள் உண்டாகும். இது, வாதாதி மூன்று தோஷங்கள் சேர்ந்த மூலப்பாலால் பிறப்பதால் அந்தந்தப் பேதங்களை அறிந்து உசிதமான சிகிச்சைகளைத் தகுந்த படிக்குச் செய்யவும்.

குண்டால ரோக பூர்வரூபம்!

இது, 145 வது பக்கத்தில் கூறிய விக்கிரக் கட்டிகளைப் போலவே ஆரம்பித்து, மாமி சாதுவை ஒட்டிக் கட்டிகள் பிறக்கும். பருக்கும் காலத்தில் அதுகளில் திருகலசத்தைப் போல் பள்ளம் விழும் இதுவே குண்டாலக் கட்டியின் பூர்வரூபமாம்.

(குண்டாலம் என்பது செவ்வாப்புக்கட்டி)

1. வது வாத கண்டமாலைக் கட்டி:

இது கறுத்த நிறத்துடன் எழும்பும். அப்போது அதில் குத்தலும் தேகத்தில் சுரமும் உண்டாகும். இதுவே, வாத செவ்வாப்புக் கட்டியாம். இதற்கு வச்சிர பிசு எண்ணெயையும் பிரயோகஞ் செய்யலாம்.

2. வது. பித்த கண்டமாலைக் கட்டி.

இது மஞ்சள் சிவப்பு நிறங்களை உடைத்தாய், வேகாத எரிச்சலைக் கொடுத்துச் சீக்கிரத்தில் பழுத்து உடையும். அப்படி உடைந்தால் அக் கட்டிகளில் நின்றும் வெறும் ரத்தம் மாத்திரம் வடியும். இதுவே பித்த செவ்வாப்புக் கட்டியாம். இது பஞ்சாங்குலப் பாவனத்தைலத்தாலும் வசப்படும்.

3. வது. சிலேஷ்ம கண்டமாலைக் கட்டி:

இது, கனத்தும் வெளுத்தும் நமைச்சலுடன் அசைவற்றும் புடைகள் உள்ளதாய் வெகு கோரமாக எழும்பும். இதுவே, சிலேஷ்ம செவ்வாப்புக் கட்டியாம். இக்கட்டி கஷ்டசாத்தியமாம். ஆயினும் ஆகாயத்தாமரை எண்ணெயினால் சாத்தியம் ஆனாலும் ஆகும்.

4. வது. தாலு கண்டக ரோகம்:

இது, சிலேஷ்ம தோஷம் அதிகரித்துத் தாடைகளில் இருக்கும் மாமிசத்தை அனுசரித்து, அவ்விடத்திலும் தசையிலும் குழிவிழும்படிக்குச் செய்யும் போது பிறக்கும். இதனால், சிசுக்களுக்கு முலைப்பாலில் அசிங்கியம், பிரயாசத்தின்மேல் கொஞ்சம் பாலுண்ணல், தாகம், வாயில் நமைச்சல், கண் கணைவு, கடுத்து விக்குத்தல். வாந்தி, பச்சை நிறத்துடன் அஞ்சலமான பேதி என்னுங் குணங்கள் உண்டாகும், இது. தாடையால் முள்ளுக்குத்தல் போல் உபத்திரவத்தை யுண்டாக்கலால்,

தாது கண்டகமெனப் பேர் பெற்றது. இதனைத் தாதுபாக ரோகமெனவும் சில மாந்திரத்தில் சொல்லப்படும்.

இதற்கு, கருந்துளசி வேர்க்கஷாயம், அமுக்காரிக் குளிகை, அன்ன ரோலரைந்த அயகாந்தச் செந்தூரம் முதலியவற்றால், வெற்றி செய்யவும்.

—.

5. - வது. சிதனி காவிரண ரோகம்:

இது பிறந்ததில் நமைச்சலுடன் கூடப் பிறக்கும்: அப்போது உடம்பெங்கும் சிறு சிறு கொப்புளங்கள் எழும்பி அடங்கும். அடங்கினது இரவிலாவது பகலிலாவது முன்பு உண்டானது போல் மிக நெருக்கமாகப் பரவும். இது சரீர முற்றிலும் வேர்க்குருக் கொப்புளங்களில் சட்டைப் போட்டது போல் மறைப்பதால் சிதனி காவிரண மெனப் பேர் பெற்றது. இது ஜெயரச பஸ்மம் நெய் முதலியவற்றில் விலகும். சேர்ந்த ஆமணக்கு

6. வது. பால சோஷ ரோகம்:

இது, குளிர்ந்த சலம், சிலேஷ்மப் பிரதானமானதால் இவைகளைக் குடித்துப் பகலில் நித்திரையும் செய்து அதன் மேல் நேசப் பாலையும் குடிக்கிற சிசுக்களுக்கு, ரசதாது ஓடுகின்ற சிலேஷ்ம நரம்புகளின் மார்க்கத்தை அச்சிலேஷ்ம மேதி நிறைந்து அடைந்துக் கொள்ளும் போது பிறக்கும். இதனால், சரீரசுஷ்கம், முகத்திலும் கண்ணிலும் காந்தி நீங்குதல், பீநசம், அரோசகம், சுரம், இருமல், என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

இதனை உள்ளுருக்கி, உடலுருக்கி எனவும் சொல்லுகிறார்கள். இதற்குச் சிலேஷ் மாறிக் கொடுத்த தயிலமும், தேசபுஷ்டிக் கிருதமும் ஆகும்.

7-வது. ஆந்த்ர ரோகம்:

இது, வாயுவினால் பிறக்கும், அப்பொழுது சிசுக்களுக்கு வயிறுப்புசமும் நாபியில் நோவும் உண்டாகும். ஆந்த்ரம் என்பது அதிரண வயிறு. இதனை வாதாரிக் கருக்கு முதலியவற்றால் நிவர்த்தி செய்யவும்.

8. வது. குதக்கூட ரோகம்:

இது, பாலர்கட்கு வயிற்றில் புளித்த மலம் சேருவதினாலும் அதிசார ரோகத்தினாலும் பிறக்கும்; அப்பொழுது, குதஸ்தானத்தில் சிவந்த சிலேஷ்ம மொத்தையைப் போல் சிவந்த நிறத்தையுடைய விரணமும், உள்ளில் அதிக எரிச்சலும், அதனால் மிகுந்த உபத்திரவமும் உண்டாகும். இதனைச் சிலர் மாதுகுதோஷம், ஏழுகம், பிரஷ்டகுக்கு, சதனம் எனவுஞ் சொல்வர்.

குதம் என்பது ஆசனம். கூடம் என்பது புற்று. இதற்குச் சீதோஷ்ண காரசாரம் முதலிய சிகிச்சைகளும் உதவும்.

— —

9. வது. விஷமசிரா ரோகம்:

இது, அதிரணத்தினால் சிசுக்களுக்கு ரத்த நரம்புகளில் எந்நேரமும் காய்ச்சலையும் அதிக நமைச்சலும் உண்டாகும். போது பிறந்து, மிகுந்த உபத்திரவத்தைச் செய்யும். சிரா என்பது நரம்பு. இதற்குக் கோரி விரேசனமும், அரைவித்தாதிக் கல்புகப் பூச்சுக் குளிகையும் ஆகும்.

——— x x ———

10 - வது. முகதூஷிக ரோகம்:

இது, சிலேஷ்மவாதம் அதிகரித்ததினால் பிறந்து, சிசுக்களுக்கு வாயில் இலவ முள்ளுகளைப் போலவே முள்ளுகளையுண்டாக்கும். முகம் என்பது வாய். தூஷிகம் என்பது விகாரம். இதனை நாய் முள்ளு என்பர்.

இது செங்கான் கைது வட்டும் எண்ணெயைச் சீலையாலும் விலகும்.

—

தந்தோற்பவ ரோகம்:

இது, பல்லினது நால் தரும் சமயம் முதலியவைகளைச் சிசுக்கள் விரும்பும் காரணத்தால் பிறக்கும். இதில் அதிசுரம், ஓயாதபேதி, இருமல், வாந்தி, தலைநோவு, ஒருவேளை மலபந்தம், முதலிய ரோகங்களும் உண்டாகும். தந்து என்பது பல். உற்பவம் என்பது உண்டாகுதல். இதற்குச் சுகவிரேசனம் நன்மையைச் செய்யும்:

———

உல்பக ரோக வர்ணனம்!

பிரசவித்த மறுமாதம் ருதுகாலத்திலேயே புருஷச் சேர்ந்து மறு கருப்பத்தைக் கொண்ட வாலிந்தி என்கிற ஸ்திரீகளுக்குக் கருப்பாசயத்தில் பிண்டோற்பத்திக்குக் காரணமான கருப்பச் சாலத்தினல், கண்டகமென்கிற சிலேஷ்மம் இருக்கிற பையானது விருத்தியடையும்போது அன்னரசமானது சிசு போஷகங்களான நாடி மார்க்கங்களில் விருத்தியையும். இதனல், முன்பு பிறந்திருக்கின்ற சிசுவானது மயக்கத்துடன் கைகளை முஷ்டி பந்தமாக மூடிக் கொள்ளும். அன்றியும் மார்பு நோவு, கால்களைச் சொறிதல், இருமல், இரைப்பு, வாந்தி, சுரம் முதலிய ரோகங்களினல் இளைக்கும். இது தாயினது கருப்பத்தால் பிறந்தமையால், சகச ரோகமெனவும், அம் பூரண ரோகமெனவும் சொல்லப்படும். இது, முல மார்க்கச் சலத்தால் பிரவேசித்துச் சிசுவை மூடுதலால், உல்பக ரோகம் எனப் பேர் பெற்றது.

உல்பகம் என்பது மறைப்பதாம்.

இதற்கு வேறு முலைப்பால் ஊட்டுவது தவிர - அபிப்ரசவம், ஆகும் பரியந்தம் இச் சிசுவைப் பாதுகாக்க வேண்டும்!

பால விசர்ப்பி ரோகலக்ஷணம்!

பாலர்கட்கு விசர்ப்பிக் கொப்பிளமானது கீழ் வயிற்றிலும் குய்யிலும் வியாபிக்கில் மரணத்தைக் கொடுக்கும். அன்றியும் திரிதோஷத்தால் பிறந்த விசர்ப்பிக் கொப்பிளமானது செந்தாமரை இதழை ஒத்திருப்பதால், இதனை மகா பதும விசர்ப்பி எனவுஞ் சொல்வர். இது முதல் முதல் நரம்பின் வழியாக நெற்றியில் கண்டு மார்பில் இறங்கும். பின்பு மார்பிலிருந்து குதஸ்தானத்தில் இறங்கும். இப்படிக்கு அதோமுகமாக இந்த ரோகம் இறங்கி இறங்கிச் சுற்றுவதால் அசாத்தியமாம். ஆயினும் 191-வது பக்கத்தில் இவ்வித ரோகத்திற்குச் சொல்லிய சிகிச்சைகளில் அகோரமாத அவுஷதங்களை எடுத்துப் பிரயோகிக்கில், சாத்தியம் ஆனாலும் ஆகும்.

மிருத்திகா பக்ஷண ரோக லக்ஷணம்!

தினந்தினமும் மண்ணைத் தின்னுகின்ற சிசுக்களுக்கு தேகம் வெளிறலுடன் வீக்கம், இருமல், இரைப்பு, பேதி, வயிற்றில் கிருமி சேருதல், வாந்தி, மூர்ச்சை, மந்தாக்கினி, முலைப்பாலில் அசப்பியம், சுர நோவு, பிரமை, முதலிய ரோகங்கள் உண்டாகும். இதற்கு, ரத்த விருத்தி அவுஷதமுதவும்.

பாரிகர்ப்பிக ரோகலக்ஷணம்.

கருப்பஸ்திரிகளின் பாலைக் குடிக்கும் சிசுக்களுக்கு இருமல், மந்தாக்கினி, அரோசகம், வாந்தி, சோம்பல், இளைத்தல், பிரமை என்னும்

இக் குணங்கள் பிறப்புடனன்றி, வயிறு படுக்கும், பரிகரிக்கிகம் என்பது நரிவாய் கத்திரியும் சகிக்கக் கூடாத உபத்திரவத்தைச் செய்வதாம். இது, கபாலிச்சிகிச்சைகளால் நீங்கும்!

பால ரோக ரூபகம்!

மலபந்தம், வாந்தி, முலைப்பாலில் அசிங்கியம், குடல் இரைச்சல், வயிறு பொருமலுடன். பருத்தல், சரீரங் கூன் வீழ்தல் என்றும் இக் குணங்கள் இருந்தால், அச் சிசுவுக்கு வயிற்றைப் பற்றிய ரோகமென்றறியவும்.

வஸ்திகுய்ய ரோக ரூபகம்!

மலசல பந்தம், திடுக்கெனப் பயப்படல், வெருட்சியாக விழித்தல் என்றும் இக் குணங்கள் இருந்தால், அச் சிசுவுக்குக் கீழ் வயிற்றையும், குய்யஸ்தானத்தையும் பற்றிய ரோகமென நிதானிக்கவும்:

சகல ரோக ரூபகம்!

சிறிச் சிறி அழுகின்ற விகாரக் கூச்சலினாலும், தேக மெலிவினாலும், ரோக அபாவ குணங்களினாலும் இன்னும் பலவித அநுபவக் குறிகளினாலும். இன்ன வித ரோகமென யூகையுடன் நிதானித்துச் சிசுக்களுக்குத் தகுந்தபடி சிகிச்சை செய்பவரே பண்டிதர்களாம்.

—7.

சிக்ஷா மார்க்கம்.

உலகத்தின், தாய் தந்தைகளின் சோணித சுக்கிலங்களைப் பற்றிய தோஷம், கெடுதியை அடைந்த முலைப்பால், அதிக தின்பு ஆகிய இவைகளால், சிசுக்களுக்குக் கண தோஷம் முதலிய பலவித தோஷம் உண்டாகும்.

கண தோஷ பேதம்.

கண தோஷம் எண் விதம் ஆவன: ஆலிகணம், ஆமகணம், தேரைக் கணம், மகாகணம், கழிகணம், சுழிகணம், வறள் கணம், என்பதாம். மாதா பிதாக்களின், நாத விந்துக்குள் அடங்கிய வாதாதி தோஷங்களில் நின்றும் உற்பத்தியாகிக் கர்ப்பாசயத்திலுச் சிசுவைப் பற்றி அச்சிசுவினது சப்த தாதுக்களும், வன்மையடையும் காலத்தில் விருத்தியை அடைவதால், இது கண தோஷம் எனப் பெயர் பெற்றது.

கணம் என்பது கூட்டம்.

சாமானிய கண தோஷ லக்ஷணம்.

மார்பிலும் முதுகிலும் இண்டு போல் வீக்கம் எடுப்புதல், தேகவாட்டம், வாய்நாற்றம், தலை சுற்றல், உள்சுரம், ஒரு வேளை வெளிச் சுரம், சில வேளை வயிற்றின் மேல் அடுகை, மயக்கம், வறண்டமலம் என்றும் இக் குணங்கள் உண்டாகும். இக் குணம் சகல கண தோஷங்களுக்கும் பொதுவாயிருக்குமென்றறிக. இது 12 வயது வரைக்கும் தொடரும்.

1. வது. சூலிகண ரோகம்:

மேல் மூச்சு, இருமல், நெஞ்சம், நாபியும் புண் போலிருத்தல், பாலுண்ணாமை, முகநாற்றம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

2. வது. முக்கிகண ரோகம்.

வயிற்றுக் கடுப்பு, நாவில் வெடிப்புடன் வெந்தது போலிருத்தல், வறளல், சுரம், தலைவலி, எரிச்சல், ஆசனம் வெளிப்பட்டு முக்கலுடன் ரத்தமும் சீதமும், ஒடுதல், தேகவாட்டத்திலும் கறுத்தநிறமும், முடி சொறுதல், தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும். இதுவே மூலகணமாம்.

3-வது. ஆமக் கண ரோகம்:

நெஞ்சில் துடித்தல், இருமல், மஞ்சளாக இறங்குதல், தேகத்தில் புகை. கப்பினதுபோல் மாறுநிறம். ஒரு வேளை சுரவாய்த்திலும் வெதும்பல், இருமல், வயிறிரைச்சல், புகைந்து புகைந்து மேல்மூச்சு உண்டாக்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

4-வது தேரைக்கண ரோகம்:

வாதநாடி மற்ற நாடிகளில் பின்னிக்கொண்டு நடக்குதல், புளிப்பு துவர்ப்புள்ள வஸ்துக்களில் வெறுப்பு, அன்னத்தில் வெஷம் திரிதோஷாதிக்கம் நாபியில் புண் போலிருத்தல், உட்காய்ச்சல், தேக வாட்டம், எரிகுன்மக் குணம், பித்த வெட்டை, காது நஷ்டம், என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். இது 6. வயதுக்குள் நிங்காவியல் 32 வயது வரை இருக்கும்.

5. வது. மகாகண ரோகம்:

முகம் புறங்கால் புறங்கை இவ்விடங்களில் மினு மினுப்பு, நகமும் விழியும் வெளிறல், மயக்கம், மிகுந்த வெதும்பல், உடம்பு புண்போல் வலித்திருத்தல் என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

6. வது. கழிகண ரோகம்:

சீதச்சிதமாயும் மலமாயும் பாலைப் போலவும் சலம் சலமாகவும் பேதியாகுதல், உள்ளங்கை உள்ளங் கால்களில் திமிரம், ஒரு வெளுக் காங்கை என்றும் இக் குணங்கள் உண்டாகும்!

7. வது. சுழிகண ரோகம்:

கண் சொருகுதல், மார்புநோவு, வயிறு ஊதல், நெஞ்சு நரம்பு இவைகள் வெந்தது போலிருத்தல், பால் உண்ணாமை, அழுதல், இருமல், செருமுதல், மேல்மூச்சு, கைகால்களில் திமிரம், வயிற்றுப் பொருமல், நோவு, சுரம், நாக்கு வறளல், என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

8. வது. வறள்கண ரோகம்:

மேனி வறளல், நெஞ்சுதுடித்தல், புகைந்திருமல், தாது நீரம், விட்டு, விட்டு வயிற்றில் இரைச்சல் என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

இவைகளைப் பஞ்சாங்கில பாவனத்த தயிலம், வடப்பக்கல் சேர்ந்த கணைத்தெண்ணெய், நாசிரோவணம் முதலிய உபாயச் சிகிச்சைகளைக் கொண்டு நிரோகரிக்க வேண்டும்.

—

சித்தர் மாந்த ரோக பேதம்:

வெல்லம், தேங்காய், மாங்காய், அண்டக்கறி, முருக்கைக் கீரை, வாளை மீன், விரால் மீன், கெட்டு உலர்ந்த பாலை, ஆட்டுடன் இறைச்சி, புளிப்புமோர், பாகற்காய், முதிர்ந்த வாழைக்காய், கிழங்கு வகை மந்த வஸ்து, எருமைப்பால், தினசை யோகம், சரகு ஊறிய ஜலம், ஜலதோஷம், பசி, துயரம், என்று இவைகளை அனுசரிக்கும் ஸ்திரிகளின் முலைப்பாலைக் குடிக்கும் சிசுக்களுக்கு மாந்தரோகம் உண்டாகும். அது, செரியா மாந்தம், பர் மாந்தம், சுர மாந்தம், விஷ மாந்தம், கழி மாந்தம், ஊது மாந்தம், நீர் மாந்தம், கண மாந்தம். என 8 விதப் படும். அன்றியும் இசிவு மாந்தரோகம் என்பது ஒன்றுண்டு.

மாந்த ரோகக்குறி:

பசியில்லாமை, தேங்கலந்த நாற்ற நிறத்துடன் பால் போலவும் தெளிந்த ஜலம் போலவும் துர்க்கந்தமாகவும் பேதியாகுதல், சுரம், மயக்கம், கையும், காலும், இசிவிடல், கண்களில் வெதுப்பம், ஒரு வேளை குளிர்ச்சி, சோருதல், முகத்தில் பல நிறத்துடன் படபடப்பு இவை முதலிய குணங்கள் உண்டாகும். இக் குணங்கள் சகல மாந்தத்திற்கும் பொதுவாயிருக்கும் என்றறிக.

---

1. வது. செரியா மாந்த ரோகம்:

வயிறு உப்பலோடு மாவைக் கரைத்தது போல் கண்டலும் கரைச்சலுமான பேதி, விக்கல், சுரம், தலைவலி, அரைக் கண்மூடிய பார்வை, துர்ப்பலம், துயரம், சோருதல், என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

௨. வது. க்ஷீர மாந்த ரோகம்!

வயிறு பொருமலுடன் பால் நிறமான பேதி, புகைச் இருமல், பால் உண்ணாமை, வாந்தி, கண்களில் குழி விழுதல், தாகம், அதிக வெப்பம், மார்பு நோவு, கை நடுக்கல், வயிற்று வலி, சிறிச் சிறி அழுதல், பெருமூச்சு, சுரம் என்னும் இக் குணங்கள் உண்டாகும். க்ஷீர் என்பது பால்!

3. வது. சுர மாந்த ரோகம்!

சுரம், முலையை வாயில் வைத்து உறிஞ்சுகிறதும் கொஞ்சம் கொஞ்சம் உண்ணுதல், அடிக்கடி அழுகை. பொடி இருமல், மலக்கட்டு, பசி யில்லாமை, மயக்கம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4. வது. விஷ மாந்த ரோகம்!

அரைக்குக் கீழ்ச் சீதளம், வயிறிரைச்சல், பயந்த பார்வை, தாய் கையிலிருந்திறங்காமை, சோருதல், மயக்கம் என்னுமிக் குணங்கள் உண்டாகும்.

5. வது. கழி மாந்த ரோகம்!

நானாவிதமான கழிச்சல், வாந்தி, மயக்கம், சுவாசம், வாயுவுறும் இலட்டது போல் தோற்றுவதுமன்றி, வயிறு கை கால் இவ் விடங்களில் சீதளத்துடன் வியர்வை என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

—ı.

6. வது. ஊது மாந்த ரோகம்:

கால் கை வீக்கம் சோர்வு அசம், அன்னபானதில் இறங்காமை, நாவில் புண் போலிருத்தல், மிகுந்த சுவாசம், எழும்புதல், என்னும் இக் குணங்கள் உண்டாகும். இது 12 வயது வரைக்கும் போராடும்.

7. வது. நீர் மாந்த ரோகம்:

சர்வாங்க வியர்வை, சீதளம், குளிர், முகத்தில் பளபளப்பு, தேகத்திலாவது கை கால்களிலாவது நீருடன் வீக்கம், தலைநோவு, மூக்குடன் நீர்ப்பாய்தல், இரைந்திரைந்து வயிறு கழிதல், வாய் நீரூறல், இக்காளம், மெலிந்த வார்த்தை, உறக்கம், நகைப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

—

8. வது. தலை மாந்த ரோகம்:

தலையிலும் கழுத்திலும், உளைதல், கைகால்களில் குளிர்ச்சி சர்வாங்க நோவு, ஒரு வேளை தலைநோவு, இதன் துள்ளித் துள்ளி விழுதல், குளிர் அசம், முகத்தில் வியர்வை, புருவ சுளிப்பு, பலவித நிறமான பேதி, வயிறு பொருமல், வலி விழித்த பார்வை, ஏப்பம், நாசியிற் புண் போல் நோவுடன் நீர் வடிதல், மார்பு வலி, பற்கிட்டலுடன் நெறுநெறுவென்று கடித்தல், இசிவு, கைகால்களில் இசிவு, எழுந்திருக்கக் கூடாமை, அன்னபானாதிகளில் வெறுப்பு, அசதி, கொட்டாவி, இளைப்பு, என்னு-மிக் குணங்களுண்டாகும்.

சிங்கி மாந்த ரோகம்:

நாபியைச் சிறுகெறும்புகள் போலும் சிரங்கு புண் போலும் இருக்குதல், திணறலான மேல்மூச்சு, சுரம், இருமல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதனை மாந்தசுரமென்பர். அன்றியும் உள்ளில் வெப்பம் இருந்தால் கணமாந்தம், கண் சொருகில் சொருகு மாந்தம், உச்சிக் குழி விழுந்தால் குழி மாந்தம், கைகால் இழுத்தால் இழுப்பு மாந்தம், வயிறு உப்பினால் உப்பு மாந்தம், இரைத்தால் இரைப்பு மாந்தம், பேதியில்லாவிட்டால் கட்டு மாந்தம், விலாவைத் தாக்கில் அரி மாந்தம், விக்கலிருந்தால் விக்கல் மாந்தம், வாத பித்த சிலேஷ்மங்களின் சேஷ்டைகள் அதிகரித்தால் அவைகளின் பேர் கொண்ட மாந்தம். சந்நி பாதக் குறிகள் இருந்தால் சந்நி மாந்தம் எனவும் பலவாறாகச் சொல்லுகிறார்கள்.

<u>குறிப்பு</u>:- இவைகளை உத்தாமணிச் சமூலக் கருக்கு, மாணிக்கவச நுரையீரல் பஸ்மக் கஷாயம், காடிச் சாதப் பஸ்மக் குளிகை, ஹோம ஜலம் சேர்ந்த மாத்திரை மாந்தத் தயிலம் முதலிய உபாயச் சிகிச்சைகளைக் கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டும்.

இனிச் செங்கிரந்தி ரோகம் முதல் கக்கிருமல் ரோகம். ஈறாகிய ஆறு வகை ரோகங்களைச் சொல்லப்படும்.

---

1. வது. செங்கிரந்தி ரோகம்!

முழங்கால், முழங்கை வரைக்குமாவது தேகம் முழுவதுமா
வது சிவந்த நிறமான வீக்கம், அவ்வீக்கம்,
தொடுவோமாயிற் கடுத்தல், வாய் குழறுதல், மலமூத்திர
பந்தம், பூனைக் குரலோசையை யொத்து விம்மி
அழுதல், பிரேதம் போல் கிடக்குதல், என்னும்
இக் குணங்கள் உண்டாக்கும்.

2.-வது கருங்கிரந்தி ரோகம்!

தேகம் முழுவதுமாவது முழங்கால் முழங்கை
வரைக்குமாவது நீலம் போல் கறுக்குதல், வெளிச்சுரம்,
முலையுண்ணாமை (அல்லது) வலது முலையுண்ணாமை,
நாவுலறல், உடலிலாவது தோலிலாவது அருகை
மாரவிழுந்து, விழித்துப் பார்க்குதல், மேல் மூச்சு
மாறுகுணம். அலறல், இருமல், குரல் கம்மல், வயிற்றில்
வேதனை என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.
இக் கிரந்தியும், செங்கிரந்தியும், பச்சைச்
சிசுக்களுக்கே முக்கியமாக உண்டாகும். இதுகள்
கண்டவுடனே மூலயோக கிரந்தி எண்ணெய்
முதலிய அவுஷதங்களைக் கொண்டு தகுந்த
சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம்.
செய்யாவிடில் ஐந்து நாளில் அசாத்தியமாம்.

3-வது. பால்கரப்பான் ரோகம்!

சர்வாங்கத்திலும் பரபரப்பான ஊரல், பல
நிறத்துடன் சாரைப் பாம்பின் தோலை யொத்த
சொறி, அதில் சிவந்த சலங்கசிதல், கண்டத்தில்
விசக்கமுரோகம் போல். வெடித்துச் சலம் வடிதல்,
விகாரரூபம், தாது நஷ்டம் என்னும் இக்குணங்கள்
உண்டாக்கும்.

அன்றியும் கருத்தால், கருங்கரப்பான், சிவந்தால் செங்கரப்பான், வரிவரியாக இருந்தால் வரிக்கரப்பான், சொறி எடுமிடங்களில் சொறி கரப்பான், நீர்வடிந்தால் ஆறாத கரப்பான், தலையில் கண்டால் மண்டைக் கரப்பான் எனவும் பலவாறுகச் சொல்வர்.

இது இடுப்பில் படர்ந்தால் கடுவனென்கிற ரோகமாம். இதற்கு உள்ளுக்குக் கரப்பான் எண்ணெயும் மேலுக்குப் பூச்சு மருந்தும் பிரயோகிப்பதுடன் பாலுடுவர்க்கு மிச் சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

4-வது. மலவாத ரோகம்:

மல பந்தம், வயிறு முற்றியும் நோவு, கையும் காலும் நாவும் தடித்தல், புருவத்தில், கரப்பான் படரல் பாலுண்ணிமை என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது மலத்தில் வாயு சேர்ந்தால் பிறக்கும்.

இதற்கு விரேசன மருந்தும், தீபாக்கினி அவுஷதமும் ஆகும்.

5-வது. தசனோற்பவ ரோகம்:

இது சிசுக்களுக்குப் பல்முளைக்கும் போது பிறக்கும். இதனால், மிகுந்த பேதியும் சுர இளைப்பும், அற்ப சுரமும், மயக்கமும், தாகமும் உண்டாகும். இது சாத்தியம்.

தசனம் என்பது பல்.

இதற்குத் தடங்கற்பட்டிருக்கிற பல்லின் அரசுகள் சீக்கிரத்தில் வெளிப்படும் படிக்கு நெல்லின் புனையைக் கொண்டாவது ஏதினது தலையில் ரோமம் ஆடு அருந்தும் கீற்றுப் போல் கொஞ்சம் கீறி விட்டாலும் விடலாம்.

6. ஊது கக்குவான் என்கிற கக்கிருமல் ரோகநிதானம்.

இது, பாலின் தோஷத்தினாலும் சல தோஷத்தினாலும் வாயுவு அதிகரித்து மார்பில் இருக்கிற சிலேஷ்மத்தை ஒவ்வொரு வேளை இளக்குந் தருணத்தில் பிறக்கும்; அப்போது மிகு சத்தியுடன் பிரபலமான தீவிர இருமல், அதில் இரத்தம் விழும். திணறலாவச்சு, விழி பிதுங்கிவது போலிருத்தல். ஆயாசம், வியர்வை பெருத்தபாலும் இத்த அன்னமும் கக்குதல் மலமும் மூத்திரமும் நழுவுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது 90-வது நாள் வரைக்கும் பேய் பிடித்து ஆடுவது போல் சிசுக்களை ஆட்டுவிக்கும்.

இது, வியாக்கிரியா இரசாயனம், இங்கமுகி பாணிதம் முதலிய அவுஷதங்களால் விலகும் இவற்றுள், வியாக்கிரியா இரசாயனத்தின் முறையை மாத்திரம் இங்கு கூறப்படும். கண்டங் கத்திரிரசம் பலம் 1¼, கருந்துளசிரசம், பலம் 2½ ஆடாதோடைரசம் பலம் 3¾ இம்மூன்றிற்கும் சமபாகம் தேன் கூட்டி ஒரு சிறிய புது சட்டியில் விட்டு, இதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், சிற்றரத்தை பேரரத்தை, அதிமதுரம், தாளிசம், ஜாதிக்காய், ஜாபத்திரி என்னும் 15-வகைச் சரக்குகளையும்,

தனித்தனியே அதுதிட்துரவியருர்த்தி, வஸ்திர காயப் பொடி செய்து, வகை 1க்கு ½ விராகனிடை நிறுத்துச் சேர்த்து, அப்பாத்திரத்தை அடுப்பின் மேல் வைத்து மிருதுவாகத் தூவி யெரித்து, ஜலமறுந்தும் பக்குவமான பாகுபதத்தில் இறக்கிப் பதனம் பண்ணிக் கொண்டு, இதைக் காலை மாலை மத்தியானம் என்றும் மூன்று வேளையும், இவ்வாறே இரவில் மூன்று வேளையும் ஒவ்வொரு விரலில் தோய்த்துக் கொடுத்துக் கொண்டுவரில் தேவல் முதலிய சகலவுபத்திரவங் களும் நாளுக்கு நாள் குறைப் படுவது மன்றி 90- நாளுக்குள் சென்ற பின்பு பரிகாரப் படும். வியாக்கிரி என்பது கண்டங்கத்திரி, சிங்கமுகி என்பது ஆடாதோடை, பாணிதம் என்பது பாகு? இச் சாபத்தியம்.

இனி நாய்முள் தோஷம் முதல் தேரைத் தோஷம் ஈறாகிய ஒன்பது விதத் தோஷங்களுக்குச் சொல்லப்படும்!

→ x x ———

1-வது நாய்முள் தோஷம்!

இது தாயின் பசியினாலும், துயரத்தினாலும், சிசுவின் சந்தோஷத்தினாலும் பிறக்கும். இதனால், வாயிலும், தொண்டையிலும் முள்ளைப் போல் தூர்மாமிசம் எழும்புதல், முலையுண்ணாமை, சுரம், மேல்மூச்சு, கண்ணில் ஜலம் வடிதல், கால்வலி, அள்ளெடுத்தல், கபத்தால் அழுக் கொடாமை, தலை நடுக்கல், கனவு, பொருமி காணுதல், என்னுமிக் குணங்கள் உண்டாகும்.

———

2. வது. ராகில் தோஷம்!

தாய வெறுக்கக் கூடாத மயக்கம், சுரவாட்டம், அதில் பல நிறத்துடன் நாறுதல் மூசயுண்ணமை, அற்ப பேதி, இமை வெட்டாது கொள்ளாமல் கண்களை விழித்துக் கொண்டு மண்ணில் புரண்டு அழுதல், பூத சுரம், ஒரு வேளை தாயைக் கண்டு சீறிய முதல் என்றும் இக் குணங்கள் உண்டாக்கும்!

3-வது இரிசு தோஷ லக்ஷணம்!

கருப்பம் வெண்டின ஸ்திரீகள் இரிக்கும் கழுக் கொள்ளும் பொழுது. அவ்விடத்தில் கெவிட்ட குழந்தைகளுக்கு உச்சிற் பள்ளம் கண்ணில் குழிவிழுதலுடன் சலம் வழிதல், தேக மெலிதல், அதிக சுரம், நோவு, குய்யத்தில் விரணம், பேதி, அழுகை தாகம், நெஞ்சுவலி, [illegible] வறட்சியாக அழுதல், கால்களில் வீக்கம், வாந்தி என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

4-வது. தாரஸ்திரீ பக்ஷ தோஷம்!

தேகம் இளைத்துப் பலஹீனமாகத் தோற்றல், தாக்காற்றம், பாலகுடித்தாலும் அழுகை கக்குதல், காய் மீதில் இச்சையில்லாமை, கொஞ்சம் கொஞ்சம் பேதி, சுரம், உச்சந்தலையில் சிரமம், கண்மூடல், பிலாசால் என்றும் இக் குணங்கள் உண்டாகிறது, இதுவே முட்டுத் தோஷமாம். ஆகையால் தூரஸ்திரீகள் பிறர் குழந்தைகளைத் தொடலாகாது.

5-வது சையோக புருஷ பரிச தோஷம்:

கண்ணிலும் உச்சியிலும் குழி விழுதல், தேகத்தில் பச்சை நிறம், (அல்லது) வைர நிறம் தோற்றல், சிறிச் சிறியழுதல், அவ்வழுகையின் சத்தம் பக்ஷிகளின் குரல் ஓசைப் போல் இருக்குதல், குழந்தைப் பால் எடுக்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். இதனை விஷ தோஷமென்பர்.

6. வது. சையோகஸ்திரி பரிச தோஷம்:

நெக்கு வறால், கண் குழி விழுதல், வெளிறல், பெருமூச்சு, பால் குடியாமை, இரவிலும் பகலிலும் அனித்திரை வியர்வை, மயக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். ஆதலால், சையோகஞ் செய்தவர்கள் அந்த அசுசியுடன் எந்தக் குழந்தைகளையும் தொடலாகா தென்றறிக!

7. வது. அனி தோஷம்:

குடித்த பால், தங்காமை, தலையில் ரோமக்கால் எல்லாம் நோவுதல், நெஞ்சில் புகை யெழும்பி அடைக்குதல், சோபாலிருத்தல், தேகத்தில் ஒருவித நாற்றம் கை கால்களில் நோவு என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

8. வது. குளித்தவர் எடுத்த தோஷம்:

சுரவாட்டம், பால் தங்காமை, உச்சியல் குழிவு விழுதல், வாந்தி, கண்ணில் நீர்க்கம்மையுடன் குழி விழுதல், வாயுவரல், என்னு மிக்குணங்கள் உண்டாக்கும். தாரஸ்நானஞ் செய்தவுடன் ஏதேனும் ஒன்றை அருந்தாமல் சிசுக்களை

எடுப்பதால் இந்தத் தோஷம் நீங்கும். மேற்சொல்லி வந்த தோஷமேறும் எட்டும் (8) மாந்திரிகச் சிகிச்சைகளால் விலகும்.

7. வது. தேரைத் தோஷம்:

காலுங்கையும் ஆம்பலுடன் கட்டிப் போட்டது போல் கிடக்குதல், சந்திரவாட்டம், வெளிறல், மாறுநிறம், குரல் நெரிதல், பால் குடியாமை என்னும் இக் குணங்கள் உண்டாகும். இது தேரைகள் இடுந்தையின் மேல் விழுந்து பீச்சவிடுவதுண்டாகும் இதற்குக் கூஷ்மாண்ட சிகிச்சையே ஆகும்.

→.

பாலகிரக உற்பத்தி நிதானம்:

முற் காலத்தில் கைலாச பதியால் படைக்கப் பட்ட கந்த, விசாக மேஷ அவான, பிதுர் என்னும் இவ்வைந்து புருஷ கிரகங்களும், சகுனி பூதனை, சீதபூதனை, அதிர்ஷ்ய பூதனை, முகமண்டலிகா, ரேவதி, சுஷ்கரேவதி, என்னும் இவ் ஏழு பெண் கிரகங்களும், கிருத்திகையாகிய அப்பிரமணியருக்கு ஏவல் செய்துக் கொண்டிருந்து, பின்பு ஆக்கினைப் படியே அன்னதிபலி, ரத்த, கந்த, அட்சதை இவைகளை விரும்பிப் பூலோகத்திற் பிரவேசித்து அதிதிபிளை, பிதுர் தேவதாவிரதம், தேவ பூசனை, ஓமாதி, கருமங்கள், முதலிய வைகளைத் தவிர்த்து அசௌசமாக ஒட்டைக் காதில் புகிக்கப் பட்டவர்களுடைய அசுசி மாதரின் பாலக்குடிக்கின்ற சிசுக்கள்,

ஆகிய இச்சிசுக்களின் ஆரோக்கியம், சுகம், வயசு, இவைகளில் பாதிபாதியை அபகரிக்கும் பொருட்டு, சிசுக்கள் அழுங்காலத்தும், மல சலத்தால், அசங்கியமாகக் கிடக்குங் காலத்தும், நித்திரை காலத்தும், அநித்திரை காலத்தும் பருவகாலத்தும், வருஷசந்தி, மாதசந்தி காலத்தும், கூகை, ஆந்தை, பூனை, பக்ஷி முதலியனவைகளைப் போலும், முன்பு சொன்ன ப்ரபத்தியத்தைப் பெற்ற கந்தக்கிரகம் ஆதியான 12 கிரகங்களும் அப்பாலர் களைப் பிடித்துக் கொண்டு பலவித ரோகங்களிலும் வருத்தும், ஆகையால் தாயானவள் சாந்தருவ மாதரைப் போல் பரிசுத்தமாக இருக்க வேண்டும். அவைகளின் செய்கைகளை இனிமேற் காண்க!

கிரக தோஷ பூர்வரூபம்.

சிசுக்களுக்குக் கிரகதோஷ ஆரம்பத்தில் ஓயாத அழுகை, ஒருவேளை [illegible] அழுகை, சுரம் விகாரரூபம், சரீரக்குலுங்கள், கொட்டாவி, புருவம் நெறித்தல், வாயில் நுரை விழுதல், மேல்பார்வை, உதட்டையும் பல்லையும் கடித்தல், அநித்திரை, திடுக்கிட்டு அழுதல், விகாரச் சப்தம், நெஞ்சில் குறுகுறுவென்னும் ஒரு சத்தம், முலைப்பாலில் அசங்கியம், உடம்பைக் கீறிக் கொண்டிருத்தல், முலைக் கொடுக்கிறவளை நகத்தால் புரண்டல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதுவே பூர்வரூபமாம்!

1. வது ஸ்கந்தகிரக தோஷம்:

இது, ஒரு கண்ணில் நீர்க்கம்மல், அழுக்கை தலையாட்டல், அடிபட்டதுபோல் ஒரு பக்கமாகவே கிடக்குதல், கழுத்தில் வியர்வை, தலையைத் தூக்கித் தூக்கிப் பார்க்குதல், பற்கடித்தல், பாலுண்ணாமை, பயந்து பயந்து ஈனச் சுரமாக அழுதல். ஒரு பக்கம் ~~[illegible]~~ கொட்டாவி வாயிச் சலம் வடிதல், மேல்பார்வை, ரத்தக் கவிச்சாக வாயி நாறல், உளரல், இரண்டு கையும் முஷ்டி பந்தமாகப் பிடித்தல், மலபந்தம், ஒரு பக்கத்துப் புருவமும் கண்ணும் தாழ்வாய்க் கட்டையும் துடித்தல், இரண்டு கண்களும் சிவத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். இது மெலியச் செய்யும் (அல்லது) மரிக்கச் செய்யும்.

2-வது விசாககிரக தோஷம்:

இது தேகமறதி, தலைமயிரைக் கையால் பிக்குதல், தலை தொங்கவிடல், அகாலக் கொட்டாவியால் மலமும் மூத்திரமும் நழுகல், நுரைத்த வாந்தி, உரத்து விழித்து, காலு கையும் ஆடுதல், பால்குடிப்பது போல் முலையைச் சப்புதல், சுரம், செந்நிறப் பசிக்கம், சீழ் ரத்தம் போல் வாயில் துர்க் கந்தம், விழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

—

3-வது மேஷ கிரக தோஷம்!

இது, மேலில் ஆட்டுமொட்டை அடித்தல், வயிறுப்பல், கையும், காலும் அசைவறக் கிடக்குதல், நுரைத்த வாந்தி, தாகம், மூர்ச்சை, முஷ்டி பந்தனம், பேதி, A·னத்தொனி, மாறுருபம், நெஞ்சில் ஒரு சத்தம், வாந்தி, இருமல், விக்கல், நித்திரைப் பங்கம், உதட்டைக் கடித்தல், திமிர் முறுக்குதல், நடு மேட்டைப் பார்த்து நகைத்தல், இடுப்பு வலிதல், சுரம் ஒரு கண் வீக்கம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். "மேஷம் என்பது ஆடு".

—— x —.

4-வது. சுவான கிரக தோஷம்!

இது, நாயைப்போல் குரைத்தல், நடுக்கல், ரோமச் சிலிர்ப்பு, அயர்வை கண் மூடல், அடிக்கடி எழுந்திருக்குதல், நாக்கைக் கடித்தல், நெஞ்சில் குறு குறு வென்னும் ஒரு சத்தம். தேகத்தில் மலவாசனையுடன் எரிச்சல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

சுவானம் என்பது நாய்.

5-வது. பிதுர் கிரக தோஷம்!

இது, தேகத்தில் பிண நாற்றம் வீசுதல், மயிர்க் கூச்செறிதல், அடிக்கடி பயப்படல், விடாத அருசை, சுரம், இருமல், பேதி, வாந்தி, கொட்டாவி, தாகம், கையும் காலும், உதைத்துக் கொள்ளுதல், தேகம் மெலிதல், மறத்தல், நிறமறல், கண் குழி விழல், இரண்டு கையும் முஷ்டி பந்தமாக மூடிக் கொள்ளுதல், என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்!

—.

6. வது சகுனி கிரக தோஷம்:

இது, மேலில் பக்ஷி நாற்றம் வீசுதல், பல்கள்
கறையுடன் தோதல், பேதி, நாவு, கழுத்து, தாடை
இவ் விடங்களில் விரணங்களுடன் கொப்புளம்,
எழும்புதல், அக் கொப்புளமும் எரிச்சலும்
பகலில் அதிகரிக்குதல், இரவில் அடங்குதல்,
முகத்திலும் ஆசனத்திலும், எரிச்சல், பயப்படல்,
என்னும் இக் குணங்கள் உண்டாகும்.
சகுனம் என்பது பக்ஷி.

---

7. வது பூதனை கிரக தோஷம்:

இது, வாந்தி, நடுக்கல், சோர்வு, இரவில் அதிநித்திரை,
விக்கல், வயிறுப்பல், மலபந்தம், தாகம்,
நீர்க் கட்டு, பல்கள் தளரல் ரோமச் சிலிர்ப்பு,
கழுத்தில் பக்ஷிநாற்றம் வீசுதல் என்னும்
இக் குணங்கள் உண்டாகும்.

8. வது சீத பூதனை கிரக தோஷம்:

இது, நடுக்கல், அதிகமாக அழுகுதல், ஒருக்
கணித்த பார்வை, தாகம், குடலிரைச்சல், பேதி,
ஒரு பக்கத்தில் குளிர்ச்சி, ஒரு பக்கத்தில்
அடுகை, சரீரத்தின் மேல் கொதிப்பு, இவை
கழுகின் நாற்றத்தைப் போல் தேகத்தில்
நாற்றம் வீசுதல், என்னும் இக் குணங்கள்
உண்டாகும்.

9-வது அதிர்ஷ்டி பூதனை கிரகதோஷம்!

இது, அற்ப பார்வை, வாந்தி, சுரம், இருமல், மலத்துக்கு மலம் பேதமாகத் தோற்றல், தேக நிறமாறல், அத் தேகத்தில் துர்க்கந்தக் கவிச்சு வீசுதல், (அல்லது) அசங்கிய நாற்றம், இளைத்தல், சொற்ப நித்திரை, உதரநோவு, நினைவு, விக்கல், பயம், முலைப்பாலில் அசங்கியம், சினத்தொனி நடுக்கல், நகைத்துப் பேசுவது போலிருந்து திடீரென்று பேச்சு நிற்குதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

இது குருட்டுக் கிரகமாம்!

—— .

10. வது. முகமண்டலிகா கிரக தோஷம்!

இது. முகமும் கையும் காலும் முன்பு இருந்ததைப் பார்க்கிலும் அதிக தேகசுருக்கு உண்டாகி இளைக் காதிருத்தல், உடம்பின் மேல் கறுத்த நரம்புகள் தோற்றல், பயிரம், சுரம், அரோசகம் ஏக்கல், சரீரத்தில் கோ-மூத்திர நாற்றம், வீசுதல், என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

11. வது ரேவதி கிரக தோஷம்.

இது. தேகத்தில், கருமையுடன் கழுகுகளின் நாற்றம் வீசுதல், கண்டத்திலும் நாசியிலும் கண்களிலும் நோவு, பல நிறமலத்திலும் மஞ்சள் நிறமே அதிகரிக்குதல், மிகுந்த அழுகை என்னும் இக் குணங்களை உண்டாக்கும்!

—— .

12-வது அட்சக ரேவதி கிரக தோஷம்:

இது, தேகமுழுவதும் சூம்பி இளைத்தல், தினந்தோறும் நிறமாறல், தேகமெல்லாம் முறைத்தல் பேதி, சரீரத்தின் மேல் தேன் வாசம் வீசுதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

கிரக தோஷ அசாத்திய நிதானம்:

எந்தக் கிரக தோஷத்திலாவது, சிசுக்களுக்கு, வட்டம் வட்டமான கொப்புளம் எழும்புதலும், பேதியில் பலநிறமுள்ள மலங்களும் நாக்கு நடுவில் வெளுப்பான பள்ளங்களும், தாடையில் கறுப்பும் உண்டாகில் அசாத்தியமாம், அன்றியும் நானாவித போஷணம் பண்ணப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும், அச்சிசுக்களுக்குக் கண் சிவந்து, அதிக தாகமும் உண்டாகித் தேகமும், இளைக்குமாகில், அட்சக ரேவதி கிரகத்தால் மரணமே ஆயினும் இதுகளுக்கு நல்ல பாம்புத் தோல், பசுமாட்டின் கொம்பு, அதன் குளம்பு, கோஷ்டம், மஞ்சள், கருஞ்சிவதை வேர், பருத்தி விதை, புருபத்திரம், தேவதாரி விதை, இருகடுகு, வெப்பில், நறுநெய், என்னும் பன்னிரெண்டு வகைச் சரக்கையும் சமபாகமாக நிறுத்தி, நெய் தவிர மற்றவைகளை நன்றாக இடித்து பின்பு மேற்படி நெய்யைவிட்டுப் பிசறி வைத்துக் கொண்ட தூளில் கொஞ்சம் எடுத்து அந்தி சந்தி ஆகிய இரண்டு வேளையும் புகை போடுவதுந் தவிர, வில்வ, நாவல், பால, புரச, சிற்றுமுட்டி, என்னும் ஐவகைப் பட்டைகளையும் வகைக்கு 1க்கு பலம் 4 ஆக நிறுத்து இடித்துப் பத்துபடி நல்ல தண்ணீரில் போட்டு, 4-ல் ஒன்றாகக் காய்ச்சி, வடிந்ததால் ஸ்நானம் செய்வித்து பரயோக சாரம் என்னும் வைத்திய சாரத்தில் அந்த மாதத்திற்காகச் சொல்லிய பலி முதலிய சிகிச்சைகளை முறைப்படிக்குச் செய்யச் சிசுக்கள் பூரணசுகம் பெற்றிருக்கும். →

கிரகக் கிரகண காரணம்!

உலகத்தில் கொலை, போகம், பலி என்னும் மூவிதத் தொழிலினால் கிரகமானது மூன்று விதப்படும். அதன் விவரம். கொலையை இச்சிப்பதால், கொலை இச்சைக்கிரகமென்றும் போகத்தை இச்சிப்பதால் போக இச்சைக்கிரகமென்றும் பலியை இச்சிப்பதால், பலி இச்சைக்கிரகமென்றும் பெயராம். இவைகள் பாலராகி இருக்கும் பரியந்தம் தொடர்வனவாம்.

1. வது. கொலை இச்சைக் கிரகம்!

இது, நாசி உயரல், நாக்கைக் கடித்துக் கொள்ளல், வெறிக்க வெறிக்கப் பார்த்தல், ஒருவேளை தலையைத் தூக்கிப் பார்க்குதல், கண்களில் கலங்குதல், மாறுரூபம், முகவிகாரம் தேகத்தில் மெலிவுடன் துர்க்கந்தம், மலமூத்திரத்தைப் பிசைதல், மார்பில் அடித்துக் கொள்ளுதல், எதிரில் வருவோரையும் அடித்தல், கத்திகள் தடிகள் முதலியவைகளால் எறிதல், அக்கினியில் குதித்தல் கிணற்றில் விழுவதற்கே ஓடுதல் முதலிய தூர்ச்செய்கைகளை உண்டாக்குவதன்றியும், தாகம் வயிற்றில் எரிச்சல், ஆபதபயங்கம், அகாரணக்கும் பிராந்தம் போல் வாந்தி, நவத்துவாரங்களிலும் ரத்தம் விழுதல் என்னும் இக்குணங்களையும் உண்டாக்கும்.

இது அசாத்தியமாம்!

2. வது போக இச்சைக் கிரகம்:

இது தங்கள் புருஷருடனே ஸ்திரீகள் ஏகாந்தமாக இருந்தாலும் தனித்திருந்தாலும் கூட்டமாக இருந்தாலும் அவர்களை இழுத்துப் புணர்ச்சிச் செய்தல். எந்த ஸ்திரீகளுடனேயும் நயமாகப் பேசுதல் சுகந்தாதி மாலைகளிலும் ஆபரணங்களிலும் அதி விருப்பம், சந்தோஷம். ஒருவேளைக் கன கோபம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும். இது கஷ்ட சாத்தியம்.

3. வது. ஸ்ரீ பலி இச்சைக் கிரகம்:

இது, அசைவியம், எந்நேரமும் முகத்தைக் கையால் துடைத்தல், உதடு உலரல், கன்னத்தில் பள்ளம் விழுதல், திகைவான பார்வை, தீனமாக இருத்தல், இருந்த இடத்தில் இல்லாமல் திரிதல். அன்னம் புசிக்க வேண்டுமெனக் கேட்குதல், கொடுக்கும் அன்னத்தை வாங்கி எறிதல் என்னுமிக் குணங்கள் உண்டாக்கும். பலி என்பது பிணக்ஷ இது சாத்தியமாம்!

பாலகிரக தோஷ மதாந்தரம்:

உலகத்தில் இரத்மாலாங்காரமாகப் பாலர்களைத் தொடருகின்ற பெண்கிரகங்கள் பன்னிரெண்டையும் இதனைத் காண்க!

1. வது. நந்தனை கிரகம்:

இது, குழந்தை பிறந்த முதல் நாளிலாவது, முதல் மாதத்திலாவது முதல் வருஷத்திலாவது, சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது ஆரம்பத்தில் ஜுரம், தேகம் இளைத்தல், வீக்கம், நானாவித நிறமான பேதி என்னும் இக் குணங்கள் உண்டாகும். இது அசாத்தியமாம்.

2. வது. சுநந்தனை கிரகம்:

இது குழந்தைப் பிறந்த இரண்டாம் நாளிலாவது இரண்டாம் மாதத்திலாவது இரண்டாம் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது ஜுரம். பல்லைக் கடித்தல் வயிறு உப்பல், அன்னத்தி வேஷம். கண்மூடல், எப்போதும் அழுகை, என்னுமிக் குணங்கள் உண்டாகும். இது சிசுக்களின் உடம்பைக் கெடுக்கும்.

3. வது. பூதனை கிரகம்:

இது குழந்தைப் பிறந்த மூன்றும் நாளிலாவது, மூன்றும் மாதத்திலாவது, மூன்றும் வருஷத்திலாவது, சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது ஜுரம், ரோமச் சிலிர்ப்பு, உடம்பு நோவு, அன்னத்தி வேஷம், கண்களை மூடிக் கொள்ளுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4-வது முகமண்டலிகாகிரகம்:

இது, குழந்தைப் பிறந்த நாலாம் நாளிலாவது, நாலாம் மாதத்திலாவது, நாலாம் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும் அப்போது சுரம், சரீரநோவு, தயிரழுத்தலோடு தயிரிறங்கக் கூடாமை, கண்கள் மூடிக் கொள்ளுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

5. வது. பிடாலிகிரகம்:

இது, குழந்தைப் பிறந்த ஐந்தாம் நாளிலாவது, ஐந்தாம் மாதத்திலாவது ஐந்தாம் வருஷத்திலாவது, சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது பூனைப் போல் கத்தல், சுரம், இளைத்தல், அவாசம், இருமல், சூல, விக்கல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

பிடாலிகா என்பது பூனை.

6. வது. சகுனிகிரகம்:

இது, குழந்தைப் பிறந்த ஆறும் நாளிலாவது ஆறும் மாதத்திலாவது, ஆறும் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும், அப்போது சுரமும், சரீர மெலிவும், நோவும் உண்டாகும்.

7. வது. அவ்கரேவதிகிரகம்:

இது, குழந்தைப் பிறந்த ஏழாம் நாளிலாவது ஏழாம் மாதத்திலாவது, ஏழாம் வருஷத்திலாவது, சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும்.

அப்போது அன்னத்தி வெறுப்பும், கொட்டாவியும், சரீர நோவும் உண்டாகும்.

8. வது அந்நிய லோடவிகா கிரகம்:

இது, குழந்தைப் பிறந்த எட்டாம் நாளிலாவது, எட்டாம் மாதத்திலாவது, எட்டாம் வருஷத்திலாவது, சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது அன்னத்தி வேஷம், அழக்கடி நாவை நீட்டுதல் இளைத்தல் நோவு, சதா அழுகை, கண்மூடல், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

9. வது. மத பேதக்கிரகம்:

இது, குழந்தைப் பிறந்த ஒன்பதாம் நாளிலாவது ஒன்பதாம் மாதத்திலாவது, ஒன்பதாம் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது சுரம், வாந்தி, சிர நோவு, பேதி, வயிறுப் பல் இருமல், அன்னத்தி வேஷம் காது குத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

10. வது. ரேவதி கிரகம்:

இது, குழந்தை பிறந்த பத்தாம் நாளிலாவது பத்தாம் மாதத்திலாவது பத்தாம் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது சுரம், வாந்தி, அன்னத்தி வேஷம், இருமல், இரைப்பு, வயிறுப்பலோடு, சகிக்கக்கூடாததாகி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

11. வது: அர்ச்சகா கிரகம்:

இது, குழந்தைப் பிறந்த பதினொன்றும் நாளிலாவது, பதினொன்றும் மாதத்திலாவது, பதினொன்றும் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும். அப்போது தேகம் இளைத்தல், சுரம், சர்வாங்கத்திலும் மிகுநோவு, அன்னத்தி வேஷம், விழித்த விழி விழித்தபடி இருத்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

அர்ச்சகா என்பது நாட்டபட அனுசரித்தல்:

12. வது அற்புதாகிரகம்:

இது குழந்தைப் பிறந்த பன்னிரெண்டாம் நாளிலாவது, பன்னிரெண்டாம் மாதத்திலாவது பன்னிரெண்டாம் வருஷத்திலாவது சிசுவை (அல்லது) தாயைப் பிடிக்கும் அப்போது அறிவின்மை, பல்லைக்கடித்தல், அழுகை, கண்கனவு, ரோமம் முறைத்தல், ஏதாவது தரச்சொல்லி அழுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இம் மதாந்தரம் ராவணேசுவரன் குமார தந்திரம் என்கிற வைத்திய கிரந்தத்தில் இருக்கிற தோஷ பேத நிதானங்களைச் சுருக்கிப் பராசுர மகாரிஷி அருளியதென்றறிக.

பக்ஷி தோஷ பேதம்:

அந்திசந்தி, நடுப்பகல், பாதிராத்திரி, ஆகிய காலங்களில் தெருக்கடக்கத் தெருக்களில் எடுத்துக் கொண்டு போவதினால் சிசுக்களுக்கு, நான்குவித பக்ஷி தோஷம் உண்டாகும். அவையாவன. ஆண்பக்ஷி, தோஷம், பெண்பக்ஷி தோஷம், மலட்டுப்பக்ஷி தோஷம், அலிப்பக்ஷி தோஷம். என்பவைகளாம்!

பக்ஷி தோஷ சாமான்ய குணம்:

சிசுவுக்கு வாந்தி, பேதி, ஜ்வரம், சுரம், அவயவங்கள் இளைத்தல், பால்குடியாமை, நடுக்கல், அநித்திரை, தோள், இடுப்பு, நடுநெற்றி, ஆகிய இடங்களில் இசிவு விழுதல், என்னும் இக்குணங்கள் உண்டாகும். அன்றியும் குழந்தைபால். நெஞ்சில் எதிர்த்தல், மயக்கம், சிறிச்சிறி அழுதல், தலைநோவு வயிற்றில் கடுப்புடன் கழிதல், பொருமல், உச்சியிலும் புருவமார்பிலும், அழுகை, நாக்கு வறளல், தலையெடுத்துப் பார்க்கக்கூடாமை, கண் வெளிறல், அதில் பீளை சாரல், முகத்தில் பச்சையும் மஞ்சளும் கலந்த நிறம் போல் தோற்றம் என்னுமிக்குணங்கள் உண்டாகும் என்பாருமுளர்.

1. வது. ஆண்பக்ஷி தோஷம்:

இது, தாகம், பேதி, சுரம், உதரல், கண்கள் குழி விழுதல், நாக்கை நாக்கை நீட்டுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

2. வது. பெண்பக்ஷி தோஷம்:

இது, சர்வாங்க நடுக்கல், காங்கை, தாகம், பேதி, பால் குடியாமை, என்னும் இக் குணங்களுண்டாகும். அன்றியும், கண் சொருகுதல், சீதபேதி, கடுப்பு, ஆசனம் பிதுங்கல், சீறியழுதல், கைகால்கருத்தல், கண்ணெவு, விக்கல் வாயி நீருறல், என்னும் இக் குணங்கள் உண்டாகும். என்பாருமுளர்.

3. வது மாட்டுப்பக்ஷி தோஷம்:

இது, ஆயாசத்துடன் இளைப்பு, உச்சியில் குழி விழுதல், வாந்தி, பேதி, தாகம், தேக காங்கை, என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4. வது. அலிப்பக்ஷி தோஷம்:

இது, தோள், முதுகு, கண்டம், முழங்கை ஆகிய இடங்களில் குழி விழுதல், வாந்தி, பேதி, தாகம், என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பக்ஷி தோஷ நிக்கர் மதாந்தரம்

சில நூலில், பக்ஷி தோஷத்தை, வரப்புள் தோஷம், நீர்ப்புள் தோஷம், தூங்கு புள் தோஷம், அடைத்துப் புள் தோஷம், காணப்புள் தோஷம், என ஐந்து விதமாகச் சொல்லப்படுகின்றன. அவைகளை எடுத்துக் காட்டப்படும்.

1. வளி வறப்புள் தோஷம்:

இது, பாசிப் போல் தேகம் வெளிறல், கண் களங்கல், அக் கண்களில் துளித்துளியாகச் ஜலம் வடிதல், தொண்டையும், நாவும் வறால், வேம்பழச் சாற்றை யொத்த பேதி, தச நடுக்கம், தேகத்தில் அருசை, யானை விளிடல் போல் இரவோசை, கைகால்களில் இசித்தல், விக்கி விக்கி அழுதல் அன்னத் வேஷம், களைத்தல் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

2. வளி நீர்ப்புள் தோஷம்:

இது, நெஞ்சு வறால், அபாசம், கண் குழிந்து வெளிறல், முசயுண்மை, சரீரம் வெளுத்து இளைத்தல் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

3. வளி தூங்கிபுள் தோஷம்:

இது, உறக்கம், மயக்கம், வாந்தி, பேதி, உச்சியிற் பாரம், மேல்மூச்சு, தேகவாட்டம், மாறுமுகம், என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

4. வளி அடைத்துப்புள் தோஷம்:

இது நெஞ்சிலும் உந்திகிலும் தழுத்தலான விக்கம், பால் தங்காமல் கக்குதல், அதில் கசப்பான நாற்றம் வீசுதல், தேகத்தில் நோவு கால் கை நாசி இவைகளில் எரிச்சல் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

5. பது காணப்புள் தோஷம்!

இது உச்சியிலும் கண்ணிலும் குழி விழுதல், பூச்சியுண்ணுமை, பச்சைப் பச்சென்று பேதியாதல், பறவைக் குரல் ஓசையைப் போலச் சீறிச் சீறி அழுதல், தாகம் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இதுகளை மருந்தியந்த்ரய மந்திரம் ஓதிச் சலம், இறைத்தல், வலம் புரிக்காய், குளிச்சம் கட்டல், பூதப்பு கைபோடுதல், முதலிய சிகிச்சைகளால் வசப்படுத்தலாம்!

தூரஸ் திரீ பார்வைத் தோஷலக்ஷணம்!

எந்த ஸ்திரீயாவது, மாந்தரமுகத்து முழுமையுடன் கருப்பத்தை விரும்பி, மற்றொரு குழந்தையின் முகத்தில் விழித்து, அன்றிரவில் புருஷனைச் சேர்ந்து கருப்பமானால் முன்பு இவர்கள் பார்வைக்குள் அகப்பட்ட குழந்தை அன்னம் சாப்பிடுவதாய் இருந்தாலும் அதற்குத் தேகம் நாளுக்கு நாள் மெலிந்து இளைத்தல், வயிறுப்பல், தலை தொங்கவிடல், ரோமபங்கம், வாயுலரல், தலைமயிர் உதிரல், அரைக்கண் பார்வை, காலும் கையும் சூம்பல், எழுந்திருக்கக் கூடாத துர்ப்பலம், பேதி என்னும் இக் குணங்கள் உண்டாகும். அந்த ஸ்திரீகளுக்கு ஆண் குழந்தையைப் பார்ப்பதனால் ஆண் கருப்பமும் பெண் குழந்தையைப் பார்ப்பதினால் பெண் கர்ப்பமும் தரிக்கும், அக் கருப்பம் விருத்தியடைய விருத்தியடைய முன்பு தோஷம் தாக்கிய குழந்தைக்கு அளவிடக் கூடாத வேதனைகளும் விருத்தியடையும். இச் சிசு வெளிப் பட்டவுடன் அக் குழந்தையானது பிழைத்தாலும் பிழைக்கும் (அல்லது) இறந்தாலும் இறக்கும்.

இதனைச் சுவாச ரோகம் எனவும் சொல்வர். அன்றியும் பேதி, வாந்தி, தேகத்தில் ஒருவித நாற்றம் வீசுதல், மயக்கம் என்றும் இக் குணங்கள் உண்டாகும் என்பாருமுளர்!

இனிப் பூதகண பேதம்!

மாந்திரீக சாஸ்திரத்தில் அடங்கிய பூதகண பேதம் 18 வகைப்படும். அவையாவன! தேவ, அசுர, காந்தருவ, யக்ஷ, சர்ப்ப, ராக்ஷச, கூஷ்மாண்ட, காம, கிரண, வேதாள, பிரமராக்ஷச, யதகாரிவ, அர்த்த பிதா, பைசாச, விருத்த, சித்த, முனி என்பவைகளாம். இவைகளின் பரிவாரங்களையும் குணத்தியங்களையும், கூடில், கோடா கோடி சங்கற்றிற்கும் அதிகமாகப் பெருகும் இவை நித்த! இப் பூதகணங்கள் அந்தந்த தலைவர்களின் நாமத்தையும் அச் செய்கைகளையும் பெற்றுப் பயங்கரமான உருவத்தோடு மாமிசம், கொழுப்பு, ரத்தம் முதலிய ஆகாரங்களை விரும்பி, பூலோகத்தில் பாதிராத்திரி வேளையிற் சஞ்சரித்து மனிதரை வருத்துமென்றிக:-

பூதப் பிரவேச பூர்வரூபம்!

பூதம் பிடிக்குந் தறுவாயில் புத்தியும், அறிவும், கெடுதல், மிருசையோகா விருப்பம், கோபம் மோகம் என்றும் இக் குணங்கள் உண்டாகும் அது பிடித்த பின்பு, நடுக்கம் கெடுதி, ஆசார விரதாதிகளைக் கைவிடல், அசுசி, துன்மார்க்கம், பெரியோரை வணங்காமை, மனதின்படி நடக்குதல் புத்தியைக் கெடுத்துக் கொள்ளுதல் என்று இக் குணங்கள் உண்டாகும்

பூத வேஷாந்தர லக்ஷணம்:

தேவாதி பூதங்கள் ஜாக வழுவங்கொண்டு,
உன்மாதி ஜாகங்களினை வேதனையையுண்டாக்கிச்
அநாதி ரோகங்களால் திடச்சித்தம் இல்லாத
மாண்டர்களைப் பயன் படுத்தும் (அல்லது) கொல்லும்,
இதுகள், உத்யாருள்ள வினைமாகிய மனிதரைப்
போல்லவே தரும விரோத காரியங்களை செய்வித்து
தேகத்தில் நிருவாசனையான துர்க்கந்தத்தை
உண்டாக்கி வாசஞ்செய்யும்:

பூதாதி காரிய நிதானம்:

தேவ பூதங்களும், அசுர பூதங்களும், அவைகளின்
பரிசனங்களும் தொடருமாகில், மனதில்
ஏங்கருமும் பயங்கரமுண்டாகும். காந்தருவ
பூதம் தேகத்தைத் தொட்டு அசைக்கும்
அப்ப பூதம் தேகத்தில் வாசமாகவே இருக்கும்.
யக்ஷ பூதம், தேக வாசனையைப் பற்றிய பின்
தொடரும், ராக்ஷச பூதம் மனிதரை வாகனமாக
ஏற்றிக் கொண்டே திரியும். ஜுவர் மாண்டம்
காமம், கிரணம், வேதாளம், பிரமராக்ஷசம்,
யதா காரிஷம், அர்த்த பிரேதம், பைசாசம், ஆகிய
8 பூதங்களும் எடுத்து விருங்க வருவது போல்
எதிரில் தோற்றப்படும். இரு, விருத்த, சித்த,
முனி என்னும் 4 பூதங்களும் சபிக்கும்!
→.

காண வேச நிதானம்:

இஷ்டப் பிரதானத்தையுள்ள தேவாதி பூதங்கள்,
மனிதரிடத்தில், பதகத்தில், பிரதி பலிக்கின்ற
ஆகிய* கிரணத்தைப் போலும், வீட்டுக்குள்
கெடிலடத்தில் ரந்திர வழியாக இறங்கும்.
வெயிலைப் போலும் பிரவேசிக்கும்
என்றறிக: →.

பூத கிரகண கால நிதானம்:

ஒருவருக்குக் கேடு செய்ய நினைக்கும் காலம், உடற்வினை, அனுபவ காலம், சூரிய சந்திர கிரகண காலம், மாத மயங்கும் காலம், அந்தி சந்தி காலம், சுக்கில பக்ஷ கிருஷ்ண பக்ஷ சந்திகளில் சையோக காலம், தூரஸ்திரீ புணர்ச்சி காலம் துன்மார்க்க க்ஷுத்திர பிரயோக காலம், வேள்வி, வேதம், சுபகாரியம், பிரமசரிய விரதம், மகா விரத முதலியவை களை அனுஷ்டிக்கத் தவறிய காலம், மகாயுத்த காலம், விடியச் சாம நேரத்திற்கு முன் துஷ்ட கிரக மாலிகா யோகத்தில் ஸ்திரீகளோடு ஊர்ப் பயணம் போகும் காலம், அசுசியிடத்தில் சஞ்சார காலம், வாந்தியிலும், ரத்த வாந்தி காலம், பிந்து ஸ்கலித காலம், மாந்த்ர முருக்கைத் தப்பிய காலம், பாழும் கோயில் பாழும் சாவடிகளில் சயன காலம், ஒருவர் எச்சிலான மது, மாமிசம், வெல்லம், என்று முதலியவைகளைப் புசித்து எச்சிற் கையோடு இருக்கும் காலம், நிர்வாண காலம், நாலு சந்தி கூடிய ஊர் அடுத்த வனத்திலும் மயானத்திலும் பாதிராத்திரியில் செல்லும் காலம் ~~[illegible]~~

~~[illegible]~~

தேவர்கள், குருக்கள், பிராமண சிரேஷ்டர்கள், இருடிகள், பெரியோர்களை என்றும் இவர்களை இழிவாகப் பேசும் காலம்.

சர்வ பூத கிரகண பூர்வரூபம்:

சகல பூதங்களும், தேகம் இளைத்து நிறம் மாறுதல், தேசு குறைதல், தூர்ப்பலம், ஆயாசம், கொலை செய்வதற்கு இச்சை, எவ்வஸ்துக்களிலும் அசங்கியம், மனக் கெடுதி, நித்திரா காலத்திலும் அநித்திரா காலத்திலும் பயந்தவர் போல் திடுக்கிட்டெழுந்து ஒரு யாவரையும் அடித்துக் கிட்டு அளவிடக்கூடாத ஆர்ப்பாட்டம் பண்ணுதல் என்னும் இக் குணங்களைத் தங்களுக்குப் பழைய ரூபமாகப் பெற்றிருக்கின்றன:

1. வது தேவ பூதம்:

இது - இனிரிச்சியான சமபார்வை, பரிசுத்தம், கோபம், இல்லாமை, நாசியால் பேசுவர் போல் பேசுகின்ற வார்த்தையிலும் கொஞ்ச வார்த்தை சயனமை போகம், அற்ப மலமுத்திரம் சாருதல், லோப குணம், வெகு காலச் சமாச்சாரத்தை யெல்லாஞ் சொல்லுதல், பிராமணர்களிடத்தும் தேவர்களிடத்தும் பக்தி, வெள்ளை வஸ்திரம், சுகந்த புஷ்பம், நதி, மணற்குன்று, மலை, மெத்தை வீடு, பால், தயிர், ஆகிய இவைகளில் இச்சை, மிகுந்த தேசசு. அலர்ந்த செந்தாமரைப் பூவை ஒத்த முகவிலாசம், ஒரு வேளை கண்களை மூடிக் கொள்ளுதல் எப்போதும் சுகந்தாதிகளைத் தரித்தல், யாவருக்கும் வரங் கொடுக்கின்ற தன்மை என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்

---

2. வது அசுர பூதம்

இது, பிராமணர்களிடத்தில் அபகார நோக்கம், பிரமாதி தேவர்களும், நான்தானென்று கூறுதல், விகார வார்த்தை, அதிக பராக்கிரமம், யாவருக்கும் பயப்படாமை, சரீரத்தில் மிகு வியர்வை, கோபம், சஞ்சலப் புத்தி, அபிமானம் விடுதல், மத்திய பானத்திலும் மாமிசத்திலும் விருப்பம், தேவர்கள் பிராமணர்கள் ஆசிரியர் ஆகிய இவர்களிடத்தில் மகாவிரோதம், பெரியோரைக் கண்டு நகைத்தல், வாயினிலும், பல்லினிலும் நகத்தினிலும் யாவரையும் சேஷ்டை செய்தல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

3-வது. கந்தர்வ பூதம்:

இது, மிகுந்த ஆசாரவொழுக்கம், நிர்விகாரம், சந்தோஷம், மேனியில் சுகந்த பரிமளம் வீசுதல், அற்ப வார்த்தை, பூஞ்சோலையிலும் ஆற்று மணற் குவையிலும் சிவந்த புஷ்பத்திலும் இச்சை, அடிக்கடி நகைப்பு, கேளிவிலாசம், சங்கீதம் பாடல் என்னும் குணங்களை உண்டாக்கும்.

4-வது. யக்ஷ பூதம்:

இது, குந்திக் கொண்டிருத்தல், நகைத்தல், ஆடல், பாடல், அழுதல், யார் வந்தாலும். அவர்களுடைய துணியைப் பிடித்துப் பிடித்து இழுத்தல், துர்ப்பார்வை, கைகளையாட்டுதல், யாகத் திட்டுதல், பரிகாசஞ்செய்தல், ஸ்நானம் போஜனம் பானம் ரத்தம் சந்தனம் தூபம் வஸ்திரம் மது மாமிசம் வேட்டையாடுதல், ஆகிய இவைகளில் இச்சை, கண் சிவந்து கலங்குதல், அதில் ஜலம் வடிதல், மதத்த நடை, சந்தோஷம், அதி வார்த்தை, ஸ்திரீகளிடத்தில் கோலாகலம், விகாரமும் அற்ப கோபம் (அல்லது) அதிககோபம்.

மிகு பயம், அறிவின்மையாக எந்த வஸ்துக்களையும், ஏ.தல் தானே தேடிக் கொள்ளுதல் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்!

5. வது. ராக்ஷச பூதம்!

இது, புருவ நெறித்தல், சிவந்த நேத்திரம், குரூரபார்வை, பேய்க் கூச்சல், பிரமித்து ஓடுதல், அதிக்கிரை, அசன வெறுப்பு (அல்லது) புசிக்கையில் நனைகத்தல், சில முள்ள ஏரி மருக்கனில் திரிதல், இளைத்தல், தூர்ப்பலம், ஆடல் கண்டவர்களை அடித்தல், அசங்கித உருவம், நாணமின்மை, அஜ்ஞையியியம், அழுதல், மது மாமிசம், இரத்தம், சையோகம், புஷ்ப கந்த வருக்கம், பலி, இவைகளில் விருப்பம், ஆரம் போல் உதட்டை உதட்டைக் கடித்தல், அநேக நேரம் பேசாதிருத்தல், என்றுமிக் குணங்களை உண்டாக்கும்!

6.-வது. கூஷ்மாண்ட பூதம்!

இது முகத்தைப் பார்ப்பதற்கே பயங்கரம் தோற்றல், அதிக கோபம், தாமதவார்த்தை (அல்லது) மிகுவார்த்தை, நடந்தால் இரண்டு பக்கங்களும் கனத்து தாழ்ந்து தொங்குதல் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

7. வது. காம பூதம்!

இது. தானே அழுத்துக் கொள்ளுதல், பலவிதத் தொனியாகப் பேசுதல், கம்பிய வார்த்தை, அழுக்கடை நாவை நீட்டுதல், ஜெபம் பண்ணுதல், ஆசை வழத்திக் கொண்டு பார்த்தல், அசி, என்றுமிக் குணங்களை உண்டாக்கும்!

8. வது. இரண பூதம்!

இது ரத்த நேத்திரம், உக்ர பார்வை, பயங்கரவார்த்தை அதிக திண்டி, துன்மார்க்கச் சாவகாசம் என்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

9. வது. வேதாள பூதம்:

இது, பொய்யில்லாத வார்த்தை, தேக நடுக்கல், நாடை புரளல், சுகந்தாதி வஸ்துக்களைத் தரித்தல், பூமாலை புனைதல், அகில் முதலிய தூப வருக்கத்தில் இச்சை, நித்திரை என்னும் குணங்களை உண்டாக்கும்.

10. வது. பிரம்மராக்ஷச பூதம்:

இது, சொருசி சேஷ்டை, அதிக கிண்டி, வேத சாஸ்திரியர், தேவர், வைத்தியர், மந்திரவாதியர் போதனர் ஆகிய இவர்களிடத்தில் மகா விரோதம், கத்தி, தடி முதலிய ஆயுதங்களினால் தானே அடித்துக் கொள்ளல் எவர்களையும் அவமரியாதையாக அழைத்தல், சமயம் பார்த்து அடித்தலென்னும் மிக் குணங்களை உண்டாக்கும்.

11. வது. அர்த்த பிரேத பூதம்:

இது, கண்ணிமைகள் சரிந்து, தொங்குதல், தலைமயிர் முறைத்தல், நாடை புரளல், முகக்களை நீங்குதல், துக்கித்த முகம், உருட்டி, உருட்டிப் பார்க்குதல், அகால நித்திரை, மாந்தாக்கினி, கபாலவார்த்தை, சொப்பனத்தில் இறந்தவர்களைக் கண்டு பேசுதல், கருப்பாகிய வஸ்து, வெல்லம், பால், மாமிசம், இவைகளில் விருப்பம், என்னும் குணங்களை உண்டாக்கும்.

12. வது. பைசாச பூதம்:

இது மனது துன்மார்க்கத்தில் செல்லுதல், நகைத்தல், அறிவு நீங்குதல், நகத்தால் கீறிக் கொள்ளுதல் (அல்லது) அடித்துக் கொள்ளுதல், யாரையும் மதிப்பில்லாமல் பேசுதல், தேகசு நீங்கிச் சலிக்கை புன்னவர் போல் இருக்குதல், தெரிந்தும் தெரிந்தும் தெரியாத வார்த்தை துக்கத்தை ஒருவரோடு சொல்லுதல்,

சரீரத்தில் வியாதியுடன் துர்க்கந்தம் வியர்தல், தலையிறக்கம், குரல் கம்மல், நிதமும் பயங்கரத்தோடு கூடிய அசுசியான நடை நடக்குதல், எச்சில், கறிமாமிசம், கீதம், நாட்டியம், பாழ்வீடு, ஆகிய இவைகளின் இச்சை, கல், முள், பாம்பு, இவைகள் இருக்கும் வழிகளில் ஓடுதல், உட்கார்ந்து தலை அசைந்தாடுதல். என்னும் குணங்களை உண்டாக்கும்!

13-வது. சித்தர் முதலிய நான்கு பூதங்களின் லக்ஷணம்:

சித்தர், முனிவர், இரவர், விருத்தர் ஆகிய இவர்களால் சபிக்கப் பட்டவர்களுக்கு அந் நால்வர்களின் சொரூபங் களும் உருவங்களும் வரும். இதனால், அவர்கள் புசிப்பது போல், புசித்தல், ஞானம், விசேஷ அறிவு, மிகு வார்த்தை, சேஷ்டை, பலம், வீரம், வீரிய விர்த்தி முதலிய குணங்கள் அதிகரிப்பதும் அன்றி, அவர்களின் செய்கைகள் எல்லாம் உண்டாகும். இந்த வாக்கியத்தில் நான்கு பூதங்களின் குணங்கள் அடங்கி இருக்கின்றன. என்றறிக! இவை நிற்க. 307 வது. பக்கத்தில், தொகுத்துக் காட்டிய 18 வகைப் பூதகணங்களின் குணங்களை எடுத்துக் கிரமமாக விவரித்துச் சொல்லி வந்த இடத்தில், சர்ப்பம், பதாகாரிஷம், என்கிற இரண்டு பூதகணங்களுக்கும் குணங்களை முன்நூலில் சொல்லாமையால் இதிலும் சொல்ல வில்லை.

முன் சொன்ன 18. வகை பூதகணங்களும் பிடிக்கும். அதன் விவரம் தேவ பூதங்களும், அசுர பூதங்களும் அமாவாசைக்குப் பின்பு வருகின்ற திரையோதசி, சதுர்த்தி, பூர்ணை என்னும் இத் திதிகளில் எருதேற்றம், ஆலங்கைப் பழித்தல், சுனைவச் சல்லாபித்தல், சிவதவ வேதாந்தியர்களைத் தவறுதல் ஆகிய இக்

செய்கையுள்ளவர்களைப் பிறக்கும். காந்தர்வ பூதம்,
சதுர்த்தி, அஷ்டமி, துவாதசி, சதுர்த்தசி என்னும்
இத்தினங்களில் இதவஞ்சகம், சுகந்தாதி புஷ்பத்
துடன் திவ்விய வஸ்திராதிகளைத் தரித்தல், விளையாடல்,
ஸ்திரிகள் கூட்டத்தோடு கேளிவிலாசம், ஒருநேத்ரம்.
ஆகிய இச்செய்கையுள்ளவர்களைப் பிறக்கும்.
யக்ஷபூதம், சதா நகைப்பும் அதிக அழகும்
உள்ளவர்களைப் பிறக்கும். சர்ப்ப பூதம், பஞ்ச
மியிலும், திரிசந்தி காலத்திலும், நீங்காத நித்திரை.
அதிக கோபம், சபலசித்தம், ஆகிய இச்செய்கை
உள்ளவர்களையும் அங்கசாதியரையும், மிகுந்த
திரவிய ஸ்தரையும் பிறக்கும். ராக்ஷசபூதம்,
கிருஷ்ண பக்ஷ நவமியிலும், துவாதசியிலும், பொறுமைக்
குறைந்தர், குருவார்த்தையர், பூஜைகண்ணர், பிரிய
மில்லாத வஸ்துக்களைப் பூசிப்பவர் ஆகிய இவர்களைப்
பிறக்கும். கூஷ்மாண்ட பூதம், சுக்ல பக்ஷ
அஷ்டமி, பஞ்சமி, சந்திரோதய காலம், சந்தியா
காலம். என்னு மிக்காலங்களில் பலாட்டியமும்
மிகுந்த அபிமான முள்ளவர்களைப் பிறக்கும்.
காமபூதம், பாக்கியம், சவுரியம், மிகுந்த பலம்,
புஷ்ப சுகந்தாதி சிங்காரம் அருக்கு வஸ்திரம்
புனைதல், ஆகிய இச்செய்கையுள்ளவர்களையும்.
அதிக பாக்கிய வந்தரையும் பிறக்கும். இரணபூதம்,
சப்தமியிலும், ஏகாதசியிலும் அதிகபாக பகமிரு
கருமிகளைப் பிறக்கும்: வேதாள பூதம்
கிருஷ்ண பக்ஷ துவாதசியிலும், சந்தியாகாலத்திலும்
தற்புகழ்தல், கோள் சொல்லல், இலக்கிலும்,
உருவத்திலும். தானே அகோரஷ்டனைத் தன்னை
மதித்தல் ஆகிய இச்செய்கையுள்ளவர்களைப்
பிறக்கும். பிரமராக்ஷசம், யதாகிகிரவம், அர்த்த
பிதரம் என்னும் இம்மூன்று பூதங்களும்,

அர்த்த ராத்திரியிலும் மரணம் நேரிட்ட காலத்திலும், வேதம், தபசு, ஆசாரம், நல்ல திடச் சித்தம், குருபூஜை, பெரியோர்கள், பூஜை, ஏகாதி தேவதா பூஜை, ஆகிய இவைகளில் ஒன்றும் தவறிய அசுத்தமுள்ள பிராமணர்களையும், மற்றைச் சாதியரையும், நெறி வழுவாத வேதியர் வீடு, தேவாலயம், தண்ணீர்த் துறை முதலிய இடங்களில் சையோகஞ் செய்பவரையும் பிடிக்கும். பைசாசம், குரு. விருத்தம், சித்திர முனி, என்னும் இவ்வைந்து பூதங்களும், அஷ்டமி, துதியை, திரிதியை, என்னும் இத்திதிகளில், பொன்னை அபகரிப்பவர், தூர்ப்பவர், சோரர், முதலியவர்களைப் பிடிக்கும். மற்றைச் சாமானிய கிரக பூதங்கள், ராக்காலங்களில் சமயம் நேரிடும் போதெல்லாம் பிடிக்கும். ஆதலால், தூர்ச் செய்கை கூடாது.

—

பூதகண மதாந்தரம்:

சில நூலில், பூதகணத்தை, ஈசுர பூதகணம் ஆதியாக கசுமல பூதகண ஈறாக 16 - விதம் எனக் கூறப்படுகின்றன. அவைகளையும். இதனையடுத்து முறையே வகுத்துக் காட்டப்படும்:

1 - வது ஈசுர பூதம்:

இது, விகாரமில்லாத நேத்திரம், பித்த முகத்தோடு சதா சிவ சரித்திரங்களையே சொல்லிக் கொண்டிருத்தல், கம்பீரமான கண்டத் தொனி என்னுமிக் குணங்கள் உண்டாகும். இது நேத்திரத்தால் விளங்கும்.

—

உ-வது இந்திர பூதம்:

இது, கோடை இடி இடித்தல் போல் மிகுந்த வார்த்தையை உண்டாக்குவதன்றியும் நல்ல போகங்களையும் விரும்பும் படிக்குச் செய்யும்.

3-வது குபேர பூதம்:

இது, யார் கேட்கினும் உடனே வேண்டியப் பொருளைக் கொடுப்பிக்கும்.

4. வது வருண பூதம்:

இது, அசுத்தம், கள், சாராயம் ஆகிய இவைகளில் விருப்பம், ஏதேனும் ஒரு கொம்பை வில்லாகவும், அதற்குப் புற்களை நாணாகவும் எண்ணிக் கையில் பிடித்துத் திரிதல் என்று மிக் குணங்களை உண்டாக்கும்.

5-வது யாகசேன பூதம்

இது, பிரமக்கியானத் தோடு பிரம நினைவைக் கூறுதல், பெரியவர்களுக்கு நல்ல வெகுமானம் கொடுத்தல், தொனி பேதமாகச் சமஸ்கிருத வார்த்தைகளைப் பேசுதல் என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்.

6-வது. விருபாக்ஷ பூதம்:

இது, பச்சை மாமிசம் கனி வர்க்கம் அதிரசம் மாப்பண்டம் பாயசம் ஆகிய இவைகளில் இச்சை, ரோமச் சிலிர்ப்பு, தேகம் புழுதியாகக் கெட்டுப் பட்டிருத்தல் என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்!

—

7-வது வித்தியுன் மாலி பூதம்.

இது, மேகம், குமுறும் போதும், மின்னல் மின்னும் போதும், இடி இடிக்கும் போதும், மிகுந்த பயங்கரத்தை உண்டாக்கும்.

8-வது. அக பூதம்!

இது, கால், கை முதலிய அவயவங்களெல்லாம் நடுக்குதல், அடிக்கடி ஆடல் பயப்படக் காட்டுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

9-வது கிஸ்க் கேச பூதம்.

இது, கோபம் வந்தால் தனக்கு வேண்டிய வஸ்துக்களைப் புசித்தல், வழி மறித்து ஸ்திரிகளை வெருட்டல், சாம்பலிலும் குப்பையிலும், காட்டிலும் படுக்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

10-வது. சாகோர்த்த பூதம்!

இது, கொம்புகளையும், கறிகளையு மெடுத்துக் கொண்டு தெருவிலும் மசானத்திலும் அதிற் சுற்றித் திரிதல், புல், செத்தை, இலை முதலியவைகளை வஸ்திரமாகத் தரித்தல், ஒரு வேளை நிர்வாணமாக இருத்தல், யாவரிடத்திலும் மதிப்பில்லாமை, பட்டமரங்களின் மேல் ஏறிக் கொள்ளுதல், எரிகலந்த அன்னத்திலும், மதுபானத்திலும் மாமிசத்திலும் மிகு விருப்ப மென்னு மிக் குணங்கள் உண்டாக்கும்!

11-வது. நகு பூதம்!

இது, நகைத்த வார்த்தையாடல், நன்மை தீமை என்னது நினைத்த படியே நடக்குதல், மத்திய பானஞ் செய்து எந்நேரமும் பிறரைத் தண்டை யிட்டல், ஆசு ரசத்திலும் இச்சை, முகவாத்தியம் பண்ணுதல் மல இறைகை மலச் சாரல் தடாகம், சாவடி இவ்விடங்களில் சஞ்சரித்தல்,

துந்துபி பேரிகை மேகம் ஆகிய இவைகளின் சத்தத்தை கேட்டுச் சந்தோஷப் படுதல், இப்புறப் படுத்தல், உட்காரலில், தலைகுனிதல், பால், தயிர் மத்திய பானம் ரத்தம் இவைகளில் அபேக்ஷை, தேகங் குலுங்குதல், எந்த வஸ்துக்களை யாவது பல்லினாற் கடித்தல், தானே தனித்துப் பேசுதல், அதில் எதிராளிக்கு உத்தரவு கொடுப்பது போல் கொடுத்தல் எப்போதும் சலத்திற் கிடத்தில் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

12-வது மணிவர பூதம்:

இது, அதிக கோபம், மேல்பார்வை, தேகத்தின் ரோம மெல்லாஞ் சிலிர்க்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

13-வது கிட பூதம்:

இது, ரகசியத்தில் சங்கீதம் பாடல், ஆடல், மவுன மாயிருத்தல், நகைத்தல், ஆட்டியும் பாட்டியும் இச்சை கொள்ளல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்:

14-வது. விசாக பூதம்

இது, அழக்கழ நகைத்தல், பூமியைக் கையால் அறைதல், கம்மிய வார்த்தை கிரேதுவாக அழுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

15-வது. பித்த பூதம்:

இது மல சலங்களைக் கையால் பிசைதல், நகத்தால் துரும்பைக் கிள்ளிக் கொண்டே யிருத்தல், அசன வெறுப்பு, பயம், பித்தன் போல் சேஷ்டை செய்தல் என்னுமிக் குணங்கள் உண்டாகும்.

16-வது. கதுமால பூதம்:

இது, போஜனத்தைக் கண்டு நகைத்தல், திக்கக்குரலால் கூப்பிடுதல் திடுக்கெனப் பயப்படுதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

அசாத்திய பூத கிரகணம்:

எந்தப் பூதம் பிடித்திருந்தாலும், அம்மனிதர்கட்கு மனம் நாலுவிதமாகக் கலங்குதல், தலைமயிரை விரித்துக் கொண்டு திரிதல், நிர்வாணமாக அலைதல் என்று மிக்க குணங்கள் இருந்தாலும், நெடுநாள் ஆகியும் இக்கிரகசங்கை நீங்காவிட்டாலும், அவர்கள் பின்னில், இருவர்கள் கும்பலாகக் கூடிக் கொண்டு கூச்சலிட்டுத் தொடர்ந்தாலும் அசாத்தியமே.

மேற் சொல்லிய பூதகணங்கள் ஓட்டி விடுவதற்கு எண்ணங் கொண்ட அவுஷத விநோதன் என்கின்ற மகாசிகிச்சகன், வீரபத்திர ரசியம், நந்திசர் ஆக்கிரணம் பூதகலிக்கம், ருத்திர கபாலவுருண்டை, அஷ்ட காளித்தூபம், பூதநாசத்திரி, காலபயிர வத்திபம், அகத்தீசர், குழம்பு, விஷமுஷ்டித் தயிலம் முதலிய ஔஷதப் பிரயோகங்களையும், வேப்பிலை, வசம்பு, மைசாட்சி, மான் கொம்பு, யானைக் கொம்பு, வெண்கடுகு, மஞ்சள், மயிலிறகு என்னும் எட்டுச் சரக்குகளையும் சமமாகச் சேர்த்து இடித்துத் தூபம் போடுகின்ற புகைச் சிகிச்சைகளையும், செங்கடம்பு, கோஷ்டம், செருப்படை, நெட்டைப் பேய் மிரட்டி, இலவங்கப்பட்டை ஆகிய இவ் ஐவகைச் சரக்குகளையும் வகை 1க்கு, பலம் 1/2 விழுக்காடு ஒரு படி நல்ல சலத்தில் சேர்த்து எட்டில் 1 ஆகக் காய்ச்சிய குடிநீரை, அந்தி சந்தி கொடுப்பிக்கின்ற வஸ்தி சிகிச்சைகளையும், இன்னும் சிகிச்சாசாரத்தில் கூறிய பற்பல சிகிச்சைகளுடன் மாந்திரீகச் சிகிச்சைகளையும் செய்ய வேண்டும்.

உன்மாத ரோக பேதம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், ஆகிய இம் மூன்று அதனதன் மார்க்கந்தப்பி நடக்கும் போது மனதில் ஒருவித மதம் பிறக்கும். அதுவே உன்மாத ரோகமாம். இது. வாதோன் மாதம், பித்தோன் மாதம், சிலேஷ்மோன் மாதம், திரிதோஷோன் மாதம், வியாத்தியோன் மாதம், விஷோன்மாதம் என்பது மதம்.

1-வது வாதோன் மாத ரோகம்:

இது, கைகளைச் சேர்த்துத் தட்டுதல், நகைத்தல், ஆடல், ஒருவனைப் பிடிக்க எழுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

2. வது. பித்தோன் மாத ரோகம்:

இது, யாவரையும் பயப்படுத்துதல், எழுந்தெழுந்து ஓடுதல், சீதள பதார்த்தத் திச்சை என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

3-வது சிலேஷ்மோன் மாத ரோகம்:

இது, அதிநித்திரை, யாவரையும் பயமுறுத்துதல், ஸ்திரீகளிடத்தில் மிகுந்த விருப்பம், சகல பதார்த்தங்களையும் வேண்டுமெனக் கேட்டல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

1-வது வாத அபஸ்மார ரோகம்.

இது இரண்டு தொடைகளும் ஒடுங்கி விழுந்து போவது போலிருந்ததுடன் அதிரல், அறிவு நீங்குதல், ஞாபகமறதி, அழுகை, கண்ணை விழித்தபடியே நித்திரை செய்தல், நுரை நுரையாகக் கக்குதல், நடுக்கல், தலையில் அடித்துக் கொள்ளுதல்,

பற்களை நறநறவென்று கடித்தல், தலை தொங்க விடல், திமிர் முறுக்குதல், இரகக்குவலி போல் விரல்களெல்லாம் வளைதல், கண், முகம், நகம், சருமம் ஆகிய இவைகள் தேசசு, நீங்கிக் கறுத்தல், நிறவேளை சிவத்தல் என்றும் இக் குணங்கள் உண்டாகும். இந்த ரோகத்தில், சரீரமெல்லாம் துடிப்பும் தேசசு மங்குதலும் விகாரமுமுண்டாகும்.

௨-வது. பித்த அபஸ்மார ரோகம்.

இது, தேகமறதி, உடனே தெளிதல், கண் சருமம் முகம் ஆகிய இவைகள் மஞ்சள் நிறமாகுதல், ஒரு வேளை கண்கள் வெளுத்தல், (அல்லது) சினங் கொண்டவன் கண் போல் சிவத்தல். வெறித்த பார்வை, பூனைமியாக் அறைதல் என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

3-வது. சிலேஷ்ம அபஸ்மார ரோகம்

இது, சகல காரியங்களிலும், மறதி, வெகுநேரம் பொறுத்துத் தெளிதல் வெறிச் சேஷ்டை, அதி கரித்தல், ஒருவேளை குரைதல், சதா சொல்லுச் சலம் வடிதல், கண் முகம் நகம் ஆகிய இவைகள் வெளிறல், தேகம் பருத்த போல் ஒருவித வெளுப்பு என்றுமிக் குணங்கள் உண்டாகும்.

4-வது. திரிதோஷ அபஸ்மார ரோகம்.

இது, வாதம் முதலிய மூன்று அபஸ்மார ரோகங்களிற் கண்டுள்ள குணங்களெல்லாம் ஒரே காலத்தில் உண்டாகும். இது அசாத்தியமாம்.

முற்கூறிய அபஸ்மார ரோகங்களைத் திரிகடுகு, திரிபலை, பூண்டு, புங்கம் பருப்பு, எட்டிப் பழத்தசை இவைகள் உதவிய பகிரங்க ரகசியம்.

சிங்கம், யானை, குதிரை, ஒட்டை, கிளி, பூனை என்னும் இச் செந்துக்களின் ஆண் பிச்சுக் கருவிலேல் கூட்டிய ஆக்கிரான நசியம் மகாபூத கலிக்கம், மலகுடாரி, வமன விரேசனம், கருங்காக் கட்டாண்பூ, பிரமிய வருக்கை, நன்னாரி வேர், சதாவரி, அகத்தியில இலைகளின் கஷாயம், கூவிள லேகியம், ஆலகால விஷத்தயிலம், கோட்டான், வலியான் ஆகியான பக்ஷிகளின் இறகுப் புகை முதலிய ஆஹாரங்களிலும் ஸூத்திர ஸ்வாராக்கினிச் சிகிச்சைகளிலும் ஆயுர் வேதியர் கவர்த்தி செய்ய வேண்டும்.

அபஸ்மார ரோக பூர்வரூபம்!

அபஸ்மார ரோகமானது, மார்பு துடித்தல், புத்திக்குத் தெளிவின்மையால் ஒன்றும் தோன்று திருத்தல், பிரமை, கண்களில் இருட்கம்மல், கிடந்த இடத்திலேயே கிடக்கிதல், கண்ணிமை நோதல், விகாரப் பார்வை, காது கோணமை, ஊமை போலிருத்தல், சர்வாங்க வியர்வை, சொர்ஞுவழியுஞ் சலத்தைச் சப்புதல் நாசியிற் சலம் வடிதல், அசீரணம், அரோசகம் மூர்ச்சை, வயிற்றில் இரைச்சல், துர்ப்பலம், சிரநோவு, தாகம், அநித்திரை, ஒரு வேளை அற்ப நித்திரை. அந்த நித்திரையில் தான் ஆடுவது போலும் பாடுவது போலும், சாராயம், கள், எண்ணெய் இவைகளை குடித்தது போலும் தோற்றல், பின்பு அவைகளில் இச்சைப் படல் என்னும் இக் குணங்களைத் தனக்குப் பூர்வரூபமாகப் பெற்றிருக்கின்றது!

அபஸ்மார ரோக சாமான்ய லக்ஷணம்:

பல்லைக் கடித்தல், நுரை நுரையாகக் கக்குதல், கை கால் உதறுதல் பார்க்கும் உருவமெல்லாம் கண்ணுக்குத் தோற்றுமை, நடக்கும் போது கால்கள் பின்னிக் கொள்ளுதல், நான்கு கண் புருவம் ஆகிய இவைகள் விகாரப்படல் என்னும் இக் குணங்கள் உண்டாகும். இக் குணங்கள் சகல அபஸ்மார ரோகத்திற்கும் பொதுவாம். இந்த ரோகத்தில் வாதஞ்சாரம் மட்டிருக்கில், அறிவு கொஞ்சம் தெளிவடையும். அது அதிகரிக்கில், சில நாள் பொறுத்து முன்பு சொன்ன குணங்களெல்லாம் அதிகரிக்கும்.

—

வலியின் பேதம்:

வலியானது, அமரகண்டவலி, குமாரகண்டவலி, பிரமகண்டவலி, காக்கைவலி, முயல்வலி, என ஐந்து விதப்படும்!

1-வது அமரகண்டவலி.

இது, வரும்போது தேகத்தில் நோவுண்டாகி மூர்ச்சை காணல் கையுங்காலும் அடித்துத் துவைத்தது போல் அசைவறக் கிடத்தல், இடைச்சல், பல்ல இளித்து மூடல், கழுத்திலும் இரசிலும் மிகு வியர்வை நெஞ்சிலும் தோளிலும் முதுகிலும் உதிரத்தைப் பற்றிய உபத்திரவம் என்னும் இக் குணங்களே உண்டாக்கும். இதுவே குதிரை வலியாம்.

—

௨-வது குமரகண்ட வலி

இது, வாத சிலேஷ்மத்தால் பிறந்து, முன் கழுத்தை யும், முகத்தையும், முறுக்கித் தோள் பக்கத்தில் வைக்குதல், தாடை உதடு செவி கண் இவைகள் கோணுதல், அப்பக்கத்தில் அதிக உபத்திரவம், சந்நிபாத குறிகள் என்னுமிக் குணங்களு உண்டாக்கும். இது, மாதர்களுக்குக் கண்டால் கருப்ப வாயுவைப் போல் வயிற்றில் உதிரத்தைப் பிதுங்க வொட்டாமல் கட்டிக் கொண்டு கருப்பா சயத்தில் அடங்கி இருந்து, சில நாள் பொறுத்துச் சந்நிபாதம் போலவே காணும், இது திரிதோஷத்தால் பிறக்கும்.

௩-வது பிரமகண்ட வலி

இது, கை கால் நீட்டினபடியே இருந்து துடித்தல், ஆகாயத்தைச் சிமிட்டாமல் பார்க்குதல், தேகத்தில் அதிக உபத்திரவம் என்னுமிக் குணங்களு உண் டாக்கும். இது சுத்த சிலேஷ்மத்தில் பிறக்கும். இதனைக் கிரங்கு வலி எனச் சிலர் கூறுவர்.

௪-வது. காக்கை வலி

இது, கண்களு மலர மலர விழித்தல், அவ்வேளையில் மலஜலம், கைகால், இரண்டு கால்களும் முறைத்துக் கொள்ளுதல், தொண்டையும், நாவும், உலரல், சிலேஷ்மத்தில் வாயிலிருந்து கோழை விடுதல் என்னுமிக் குணங்களு உண்டாக்கும். இது வாத சிலேஷ்மத்தால் பிறக்கும்.

—

5-வது முயல் வலி

இது, உடலில் வாயு நிறைந்த காலத்தில் எழும்புதல், வயிற்றில், வாயு, வாயால் நுரை தள்ளுதல், கைகால். கண் இவைகள் முறைக்குதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இந்த ரோகம் தண்ணீரைக் கண்டாலும், தண்ணீரைச் சிரசில் தெளித்தாலும் (அல்லது) அக்கினியைக் கண்டாலும், அக்கினிச் சுடுகை பட்டாலும் அனைப் பெருக்கத்தைக் கண்டாலும் அதிகமாக உண்டாகும். இது வாயுவினால் பிறக்கும்.

வர்த்தமம் என்கிற இமையைப் பற்றிய ரோகபேதம்.

இமைகளில் கிருச்சிரோன் மீலம் ஆதியாக அதி சோவர்த்தமம் ஈறாக 27 விதரோகம் பிறக்கின்றது. அவைகளின் பெயரையும் செய்கைகளையும் இதன் பின் காண்க:

வர்த்தமம் என்பது கண்ணிமை.

1-வது கிருச்சிரோன் மீலன வர்த்தம ரோகம்:

இது, அபத்திய வஸ்துக்களைப் புசிப்பதினால் வாயுவு அதிகரித்துக் கண்களில் இமைகளில் ஒட்டியிருக்கின்ற நரம்புகளை அமுக்கும் போது, பிறக்கும். இதனால், நித்திரை, தெளிந்த உடன் கண் வேதனையுடன் விழிக்கக் கூடாமை, தூசி விழுந்தது போல் உறுத்தல், மூடிக் கொள்ளுதல், பிரயாசத்தின் மேல் விழித்தல், சீக்கிரம் மூடல், இமை கனத்தல். என்னுமிக் குணங்களை உண்டாக்கும். ஆகில் கண்ணை நிமிண்டில் கொஞ்சம் சாந்தப் படும். கிருச்சிரம் என்பது பிரயாசை,

உன்மீலனம் என்பது விழித்தல்.

2-வது அருஞ் நிமேஷ வர்த்தம ரோகம்.

இது, வாயு இமைச் சந்திகளில் நிற்கும் போது பிறந்து, இமைகளை ஓயாது ஆட்டுவித்து ஒருவேளை ஆடவும் மூடவும் திறக்கவும் செய்யும்.

அருஞ் என்பது நோவின்மை நிமேஷம் என்பது இமைக் கொட்டல்.

3.வது சிக்தா வர்த்தம ரோகம்:

இது, வாயுவானது இமைச்சந்திகளிருக்கும் நரம்புகளைத் தடிக்கப் பண்ணும்போது பிறக்கும். இதனால் அவைகளில் சாங்கையுடன் அணுவிலும் அணுத்துவமான சிறுசிறு கொப்பளங்கள் எழும்புதலும், அந்த இமைகளுக்குள் மணல் விழுந்து உறுத்துவது போல் இருத்தலும் நீர் முட்டலும் உண்டாகும்.

சிக்தா என்பது மணல்,

4வது. வாதஹதவர்த்தம ரோகம்:

இது, வாயுவானது, கண்களை மூடும் போது பிறக்கும். இதனால் இமைகள் சந்தில்லாமல் ஒட்டிக் கொள்ளலுடன் அசைக்கக் கூடாமையாக இருக்கிறதல் அன்றுமிக் குணங்களை உண்டாக்கும்.

ஹதம் என்பது அடித்தல்;

5.வது கும்பிகா வர்த்தம ரோகம்:

இது, பித்தமானது இமைகளின் உள் நரம்புகளையும் வெளி நரம்புகளையும் அனுசரிக்கும் போது பிறக்கும். இதனால், பிரமாணத்திற்கு உயராமல் கெட்டியாகத் தடிக்கும், அந்த தடிப்பானது நீலோற் பலத்தின் வித்துக்களைப் போலவே சிறு கட்டிகளாக ஏற்பட்டு உட்புறத்திலேயே அடங்கி இருக்கும்.

கும்பிகம் என்பது நீலோற்பல விதை.

6-வது போதகி வர்த்தம ரோகம்

இது, சிலேஷ்மமானது இமை நரம்புகளில் சேரும் போது பிறக்கும். இதனால் அந்த நரம்புகளில் சீரகத்தைப் போலும் கடுகைப் போலும் சிறு சிறு கட்டிகள் எழும்பும், அவைகள் கெட்டிப் பட்டும், உயர்ந்தும், வெளுத்தும் இருக்கும்.

போதகி என்பது சீரகம்:

7-வது. அஞ்சன நாமிகா வர்த்தம ரோகம்:

இது, இமைகளில் நடுமையத்திலாவது, முனைகளிலாவது, பயறுகளின் பிரமாணமாகத் தாம்பர நிறத்துடன் உதிரத்தைக் கக்குவதான கட்டிகளை எழுப்பும், அக்கட்டிகள் தினவுடன் நோவைத் தருவதுகளும். ஸ்திரம் உள்ளதுகளுமாக இருக்கும்.

அஞ்சன என்பது தீபச்சிகை:

8-வது அற்புத வர்த்தம ரோகம்:

இது, கண் இமையின் ஓரங்களில் மாமிச மொத்தையைப் போல் தடித்தல் உண்டாகும். அது உருண்டையாகத் திரண்டு நோவில்லாமல் தீர்க்கமத் தருகின்ற கட்டிகளாம். அவைகள் சில தோஷங்களினால் விஷமித்துப் பருத்துக் கண்ணுக்கு வெளிப்புறத்தில் பிதுங்கித் தொங்கி அசைவிக்கப் படுவதாக இருக்கும்.

அற்புதம் என்பது அதிகரித்தல்

9- வது பிசவர்த்தம ரோகம்.

இது, வாதாதிகளால் பிறந்து, இமைகளின் வெளிப் புறத்தில் கட்டிகளை எழுப்பும். அவைகள் உப்பலுடன் கரைந்து உட்புறத்தில் சிறிய துவாரத்தை வைத்துக் கொண்டு நீர்க் கசிவைத் தரும். அதனால், கண்ணில் கொஞ்சம், வச்சிரம் உண்டாகிச் சலம் வடியும், அது தாமரை நூலைப்போல் உறைந்தும் பிசுபிசுத்தும் இருக்கும்.

பிசம் என்பது தாமரை வளையம்.

10- வது கிலிஷ்ட வர்த்தம ரோகம்.

இது, கபத்தினால் பிறந்து, இமைச் சந்துகளில் சிவந்த வீக்கத்தை உண்டாக்கும். அவ் வீக்கம் கட்டிகளாகத் தோன்றித் தினவையும், உபத்திரவத்தையும் கொடுக்கும்.

கிலிஷ்டம் என்பது உபத்திரவம்.

11- வது கர்த்த வர்த்தம ரோகம்.

இது, கருவிழியிக்கு வெளியில் சிவந்த கட்டிகளைப் பிறப்பிக்கும். அக் கட்டிகள் கெட்டிப்பட்டு உயர்ந்து அடிக்கடி உப்புவதும் ஓயாத பீளையைத் தருவதுமாக இருக்கும். அலஜி என்பது வீக்கத்தை உடையது.

12- வது கர்த்தவர்த்தக ரோகம்.

இது, இமைச் சந்திகளில் உண்டாகின்ற கட்டிகள் உடையும் போது பிறக்கும். அதனால், அவ்விடம் சேற்றைப் பூசினது போல் இருக்கும்.

13-வது பக்ஷ்ம சாத ரோகம்:

இது, இமைமுனைகளிலெரிச்சலைப் பிறப்பித்து அவ்விமை மயிர்களை உதிரப் பண்ணி, அவ்விடத்தில் மஞ்சள் நிறத்தையுண்டாக்கும். ~~பக்ஷ்~~

பக்ஷ்ம என்பது இமை:
சாதம் என்பது உபத்திரவம்:

14 வது. சகண வர்த்தம ரோகம்:

இது, சிலேஷ்மத்தினால் பிறந்து இமைச்சந்திகளில் கட்டிகளைப் பிறப்பிக்கும். அக்கட்டிகளிலந்தைக் கொட்டைப் பிரமாணமுள்ளதுகளும், ஒருவேளை அதிகரித்தும் குறைந்தும் கெட்டிப்பட்டும் வெளுத்தும் வட்டவடிவுடன் தினவைத் தருவதுகளுமாக இருக்கும். அவைகள் பழுத்து உடையுங் காலத்தில் மிக நோவுண்டாகும்:

சகணம் என்பது உபத்திரவக் கூட்டத்தை உடைய விரணமாம்:

—

15-வது பித்தோத்கிலிஷ்ட ரோகம்:

இது, பித்தத்தினால் பிறந்து, இமைச் சந்திகளில் எரிச்சல், நீர்க்கசிதல், சிவத்தல், ரத்தம் போல் சிவக்குதல், தொடக் கூடாத நோவு என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

உத்து என்பது அதிகரித்தல்.

16-வது. கபக்லிஷ்ட ரோகம்:

இது, சிலேஷ்ம தோஷமானது இமைகளில் அதிகமாகச் சேருங் காலத்தில், பிறந்து அவ்விடங்களில் நீர்க்கசிதல், ஒருவேளை மரத்தல், எரிச்சல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்

—

17- வது ரத்த கிலிஷ்ட ரோகம்:

இது, ஒரு காரணமும் இல்லாமலே கண்களுக்கு மிகுந்த ரத்த நிறத்தையும், புஷ்பம் வருவது போல் வாட்டத்தையும் உண்டாக்கும்!

18- வது. கிரிதோஷ கிலிஷ்ட ரோகம்:

இது, கண்களில் கிரிதோஷம் அதிகரித்துச் சேரும் காலத்தில் பிறந்து, அக்கண்களைச் சிவப்பாக்கிக் கலங்கும்படி செய்யும்.

19- வது சியாவ வர்த்தம ரோகம்:

இது, கிரிதோஷமானது இமைகளில் இருக்கின்ற ரத்தத்துடன் கூடும் போது பிறந்து, அவைகளில் வீக்கத்தை உண்டாக்கும். இதனால் அம்மார்க்கத்தில் கறுத்த நிறமும் நோவும் நீர்க்கம்மலும் உண்டாகிக் கொண்டே இருக்கும்.

சியாவம் என்பது கறுப்பு:

20. வது. உச்சங் கவர்த்தம ரோகம்:

இது, பாலர்களின் கண் இமைக்குள் சிவப்பு கறுப்பு நிறங்களான கொப்பளத்தைப் பிறக்கும். மீளவும் அவைகளைச் சுற்றி அந்நிறங்களை உள்ள அனந்தங் கொப்பளங்கள் உண்டாகிக் கொண்டேயிருக்கும். உச்சங்கம் என்பது மிகவும் சேர்க்கையை யுடையதாம்.

21- வது குகூண வர்த்த ரோகம்:

இது, சிசுக்களுக்குக் கபத்தினாலும் பித்தத்தினாலும் ரத்தத்தினாலும் பிறந்து கண்களில் வீக்கம், சிவப்பு, குத்தல், நீர்க் கம்மல், பார்ப்பதற்குப் பிரயாசை, கண், காது, மூக்கு ஆகிய இவைகளைக் கையால் தேய்த்துக் கொள்ளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இந்த ரோகம் குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்போது தான் காணும்,
இருவணி ரோகம் என்ப்பேர் பெறுவது.

௨௨-வது பகள வர்த்தம ரோகம்:

இது, நாளுக்கு நாள் புதிது புதியதாகத் துர்மாமிசத்தை வளர்ப்பித்து இமைகளைப் பருக்கப் பண்ணும்

பகளம் என்பது அதிகம்:

௨௩-வது வர்த்துமோபரோத ரோகம்:

இது, இமைகள் தழைந்து வீங்கும் போது பிறக்கும். இதனால் கண்விழி மூடுதல், இமைமயிர் முளைத்து உறுத்தினபோல் விழிகள் குத்தல், அப்போது கண்கள் கலங்குதல், இதில் வாயுவும் சேருவதால் நோவோடு வீக்கம் முதல் என்னுமிக் குணங்கள் உண்டாகும். இத் துர்குணங்களால் நேத்திரப் பார்வை கெடும். அம் மயிர்களை வாங்கி விடில் கொஞ்சம் அநுகூலமாக இருக்கும்.

உபரோதம் என்பது மூடுதல்:

௨௪-வது அரிசோ வர்த்தம ரோகம்:-

இது, இமைச் சந்திகளில் துர்மாமிசம் வளரும் போது பிறக்கும். இதனால், கண்களில் மரத்தல், மினுமினுப்பு, எரிச்சல், அதிக நோவுடன் சிவப்பு என்னும் இக் குணங்கள் உண்டாகும். அத் துர் மாமிசஸ்தானத்தில் ரத்தம் வாங்கில் அது கரையும் கரைந்தாலும் மறுபடியும் வளர ஒட்டாத சிகிச்சை செய்ய வேண்டும்:

நேத்திர சந்தி ரோக பேதம்:

வெள் விழிக்கும் இமைச் சந்திக்கும் நடுவில் ஜலஸிராவம், கபஸிராவம், ரத்தஸிராவம், பருவணி, பூயாலஜம், பூயஸிராவம், கிருமிக்கிரந்தி, உபநாகம். அலஜி என ஒன்பது விதரோகம் பிறக்கும்.

---

1. வாத சாசிராவ ரோகம்:

இது, இமைச் சந்தி மார்க்கத்தில் ஓட்டியிருக்கின்ற சின்ன நரம்புகளில் வாயு வியாபித்துப் பின்பு கண்களுக்குச் சாரத்தைத் தாங்கிக் கொண்டு இருக்கும் நரம்புகளின் -இல் சேரும்போது பிறக்கும். இதனால், வெள்விழிக்குச் சந்திஸ்தானமாகிய கருவிழியிலிருந்து கொஞ்சம் சிவந்த நிறமுள்ள சலம் ஒழுகுதல், கண்ணோவுடன் சிவத்தல் வீக்கம், நீர்க்கம்மல் என்னும் குணங்களுண்டாகும்.

சலம் என்பது நீர். சிராவம் என்பது ஒழுகுதல்.

2. வாத கப சிராவ ரோகம்:

இது, முன் சொன்ன வாயுவைப் போல் நரம்புகளில் சிலேஷ்மம் வியாபிக்கும் போது பிறக்கும். இதனால், கண்களிலிருந்து வெளுப்பாயும் பிசுபிசுத்த குழம்பாயும் விஸ்தாரமாயும் சலம் ஒழுகும்.

3. ரத்த சிராவ ரோகம்:

இது, முற்கூறிய கபத்தைப்போல் நரம்புகளில் ரத்தமானது வியாபிக்கும் போது பிறக்கும். இதனால், கண்களில் இன்றும் அத்த உதிரம் போல்வே சிவந்தும் அதிகரித்தும் குறைந்தும் உஷ்ண சலம் ஒழுகும்.

4. வாத பருவணி ரோகம்:

இது, வெள்ளி விழிச் சந்திகளில் பழுப்புகளின் பிரமாணங்களை ஒத்து வளர்ந்திருக்கின்ற கட்டிகளைப் பிறப்பிக்கும்; அவைகள் பழுத்து உடைந்தால், ரத்தம் ஒழுகுதல், கண்களில் எரிச்சல், குத்தல் என்னுமிக் குணங்கள் உண்டாகும். இது, பருவகாலத் தோன்றும் மாமிச உதிரத்தை ஒழுகும் படிக்குச் செய்வதால் பருவணி ரோகம் எனப்பேர் பெற்றது,

5-வது. பூயாலஜ ரோகம்:

இது, வெள் விழிச் சந்திகளில் நோவையும் வீக்கத்தையும் தருகின்ற வெகு ஆழமமான கட்டிகளை எழுப்பும். இதனால், கண்களில் மாறுத பீளை உற்பத்தியும் மிகுந்த வேதனையும் கருவிழி உப்புதலுடன் உண்டாகும்.

பூயம் என்பது பீளை, அலஜம் என்பது மாந்தம்.

---

1. வது - சிரோத்பாத ரோகம்:

இது வெள்ளி விழிமேல் வளையாகாரம் போல் சிவந்த வர்ணத்தைப் பிரதிப்பிக்கும். இதனால் அவ்விடத்தில் வெந்தது போல் இருப்பதுமன்றி வீங்குதல், நீர்க்கட்டுதல், ரத்தநிறம், எரிச்சல், வேதனை என்னுமிக் குணங்கள் உண்டாகும். உத்பாதம் என்பது காரணம் இன்றி வருதலாம்.

2-வது. சிராஹர்ஷ ரோகம்:

இது முற்கூறிய சிரோத்பாத ரோகத்திற்கு வைத்தியம் பண்ணாவிடில், அந்த நேத்ர வளையமானது விருத்தியடையும் போது பிறக்கும். இதனால் நீர் கோவையும் எரிச்சலும் உண்டாகிப் பார்வையும் கெடும்.

சிரா என்பது நரம்பு. ஹர்ஷம் என்பது சிலிர்த்தல்.

3.-வது. சிராஜால ரோகம்:

இது, வெள்ளி விழிகளின் மேல் இருக்கின்ற நரம்புகளைப் பருக்கவும், சிவக்கவும், கனக்கவும், உப்பவும் செய்யும். இதனால் பற்பல வேதனைகளும் உண்டாகும்.

சிரா என்பது நரம்பு.

ஜாலம் என்பது கூட்டம்.

4-வது அக்ஷிக ரோகம்:

இது, பித்தத்தைக் கொண்டு வெள் விழிகளின் மேல் புடைகளை எழுப்பும்; அப்போது அவைகள் மஞ்சள் கறுப்பு வெளிமான் இவைகளின் நிறமாக இருப்பதன்றியும், வாயிலே அவைகளின் மேல் உளுந்து புகை கம்மியது போல் முருவையும் வெளுப்பாகத் தோற்றுவதுந் தவிர, நோவு, தாகம், சுரம், என்னும் இந்த குணங்களை உண்டாகும்.

அக்ஷிகம் என்பது முத்துச் சிப்பி.

5-வது அக்கிலார்ம ரோகம்:

இது, கபத்தைக் கொண்டு வெள்ளி விழி மேல் வெண்புடையை உண்டாக்கும். தாமதத்தில் மாமிச நிறத்தைப் பெற்று வளர்ந்து அடைந்து நோவின்றித் தடித்திருக்கும். மிருதுவுடன் பரவி நோவின்றித் தடித்திருக்கும்.

அக்கிலம் என்பது சிலேஷ்மம்; அர்மம் என்பது படலம்.

6-வது பிஷ்ட ரோகம்:

இது, வெள்ளிவிழி முற்றிலும் நெருக்கமாக மாவைக் கரைத்து தெளித்தது போல் பரவுகின்ற புடையை உண்டாக்கும்.

பிஷ்டம் என்பது மாவு.

7-வது சிராபிடக ரோகம்:

இது, வெள்ளி விழி நரம்பின் மேல், கடுகுப் பிரமாணத்தை ஒத்துக் கறுத்த நிறத்தைப் பெற்ற கொப்புளங்களைப் பிறப்பிக்கும். அப்போது அவைகளின் மேல் கன எரிச்சலும் கிள்ளிட வேண்டும். என்கிற நினைப்பும் உண்டாகும்.

7.

8-வது. சோணிதார்ம ரோகம்:

இது, வெள்விழிகளின் மேல் ரத்த நிறத்தை உடைய புடையைப் பிறப்பிக்கும். அப்போது அது வடுவடுத்தும் சதை மேல் சதை வளர்ந்தது போலும் பாணைகாரமாகவும் இருக்கும்.

சோணிதம் என்பது - ரத்தம்.

9-வது. பிரஸ்தாரியார்ம ரோகம்:

இது, வெள்ளை விழிகளின் மேல் படலத்தை உண்டாக்கும். அப்போது அது கறுப்பதும் சிவப்பதும் மிருதுவாகிய ரத்தப் பிள்ளையைத் தருவதும் விழிகளுக்கு ஒரு உபத்திரவமும் இல்லாமல் வெகு சீக்கிரத்தில் பரவுவதுமாக இருக்கும்.

பிரஸ்தாரியம் என்பது பரவுதல்.

10-வது. அதிமாமிசார்ம ரோகம்:

இது, வெள்விழி மேல் அதிமாமிசத்தை வளர்ப்பிக்கும். அப்போது அது உலர்ந்த ரத்த உருண்டையைப் போல் கறுத்தும் பருத்தும் இருக்கும்.

11-வது. பலாஸக்கிரந்தி ரோகம்:

இது, வெள் விழிமேல் கப மொத்தையைப் போல் சதையை வளர்ப்பிக்கும், அப்போது அது உயர்ந்தும் மினு மினுத்தும் நீர்க்குமிழியை ஒத்தும் இருக்கும்:

பலாஸம் என்பது - கபம்.

கிரந்திதம் என்பது மொத்தை..

12-வது ஸ்நாயுவார்ம ரோகம்:

இது, வாத பித்த சிலேஷ்மங்கள் ரத்தத்தோடு கூடுங்காலத்தில் பிறந்து, வெள்விழிமேல் படலத்தை உண்டாக்கும்: அப்போது அது அங்குள்ள சின்ன நரம்புகளையெல்லாம் அனுசரித்துப் படர்ந்து கண்களில் வீக்கத்தை உண்டாக்கும்.

ஸ்நாயு என்பது சின்ன நரம்பு.

13-வது. அருச்சுன ரோகம்:

இது. வெள்விழிமேல் கடப்பம்பூ நிறமான படலத்தைப் பிறப்பிக்கும். அப்படலமானது முதிலினது ரத்தம் போல் துளித்துளியாக நோவில்லாமல் வழு வழுப்பை உடையதாயிருக்கும்.

அருச்சுனம் என்பது கடம்பம்பூ.

சுக்கி மண்டல ரோக சாத்யாசாத்ய நிதானம்.

சுக்கில மண்டல ரோகம் 13ல் சிரோத்பாதம், சிராஹர்ஷம், சிராஜாலம், பிஷ்டகம், பலாஸக்ரதிதம், அருச்சுனம், இவ் 6ம். சவ்வீராஞ்சன முதலிய ஔஷதங்களால் சாத்தியம். மற்ற 7ம் சலாகை முதலிய ஆயுத சிகிச்சைகளில் சாத்தியம். அன்றியும் சர்மம் எனச் சொல்லிய ஐந்து ரோகங்களும், வெள்விழி மாமிசம், நரம்பு, ஸ்நாயு ஆகிய இவைகளில் வியாபித்துச் சருமத்தை உப்பச் செய்து துர்மாமிசத்தை வளர்ப்பதால், அவைகள் ஆயுதங்களால் அறுத்துவைத்தியம் செய்யவும். பார்வை தெரிந்தவுடனே மேற்படி சிகிச்சையை நிறுத்தி உபசரிக்க வேண்டும்.

கிருஷ்ண மண்டல ரோக பேதம்:

கருவிழியில், ஸவ்ரண சுக்கிலம், சுத்த சுக்கிலம், சிராசுக்கிலம், அஜிகம், பாகாத்திய ஜசுக்கிலம். என ஐந்து வித ரோகம் பிறக்கும்.

1. வது ஸவ்ரண சுக்கில ரோகம்.

இது, கருவிழியிலாவது பார்வையிலாவது காயம் படுவதனால் விரணம் பிறக்கும் போது பிறக்கும். இதனால் குத்தல் எரிச்சலும் உண்டாகி, அக் கருவிழியில் கொஞ்சம் குழி விழுவதும் அன்றி, அவ்விடம் அவித்த நாவல் பழத்தை ஒத்திருக்கும். இந்த ரோகமே கஷ்ட சாத்தியம். இவ்விரணம் முதல் புரையைப் பற்றினால், இன்னும் கஷ்ட சாத்தியம். இது இரண்டாம் புரையைப் பற்றி நோவுடன் ஊசியால் குத்துவது போல் குத்தல் எடுப்பி, அவ்விழியை மிகவும் கருக்கச் செயின், கஷ்ட சாத்தியத்திலும் கஷ்டசாத்தியம். அது மூன்றாம் புரையை பற்றினால் சுத்த அசாத்தியமே:

உ-வது சுத்த சுக்கில ரோகம்:

இது, சிலேஷ்மத்தினால், கருவிழிமேல் நோவில்லாமல், வலம்புரிச் சங்கைப் போல், வெளுப்பை மாத்திரம் உண்டாக்கும். இது சாத்தியமாம்:

இது முதிருங்காலத்தில், திருஷ்டிக்கு நாசத்தை உண்டாக்கலால், பாகாத்திய யஜசுக்கில ரோகம் எனப்பேர் பெற்றது.

இது அசாத்தியமாம்:

→

3-வது. சிராசுக்கில ரோகம்!

இது, சன்ன நரம்புகளைப் பற்றிப் பிறந்து, கரு விழியில் ரத்தப்பிளி சாருதல், குத்தல், எரிச்சல், சிவப்பு, என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இதனால் காரணம் இல்லாமலே அருகையும் நீளமும் குழம்பி ரத்த ஒழுக்கம் உண்டாகும். இது அசாத்தியமாம்.

4-வது ஆஜிக ரோகம்!

இது, ரத்தத்தைக் கொண்டு, கருவிழியில் ஆட்டினது புழுக்கையைப் போல் உயர்ந்தும் பளபளத்தும் இருக்கின்ற விரணக் கொப்புளத்தை உண்டாக்கும். அதைச் சுற்றிலும் சிறு சிறு கொப்புளங்கள் நிறையப்படும். இதனால் அக் கண்ணில் அதிக நோவும் உதிரம் போல் சிவந்த சல ஒழுக்கும் உண்டாகும். இது, ஆட்டின் புழுக்கையைப் போல் காடான கொப்புளங்களை எழுப்பலால், ஆஜிகரோகம் எனப் பேர் பெற்றது!

5-வது. பாகாத்திய யஜசுக்கில ரோகம்!

இது, வாத பித்த கபங்களானவை ரத்தத்தோடு கூடிக் கருவிழியை வெண்மையாக்கும் போது பிறக்கும். இதனால் அவ்விடம் மேகங் கம்மியது போல் படலங்கள் முழுவதுங் கவிர, மொச்சை இலையின் வெண்புரை போல் புரை விழுந்து பழுத்தல், நோதல், இமையப்புதல், கண் சிவத்தல், வீங்குதல், வேதனையதிகரித்தல், என்னுமிக் குணங்கள் உண்டாகும்!

கிருஷ்ண மண்டல ரோக சாத்தியா சாத்திய நிதானம்.

இதர வஸ்துக்களைத் தவிர ஓட்டாமல், திரை போட்டதுபோல் மறைதல், கறுத்தல், சிவத்தல், உப்புதல், குழிவிழுதல், என்னும் இவ் ஐந்து குணங்களைக் கருவிழியில் உண்டாக்குகின்ற ரோகங்கள் சாத்தியம். இவைநீக்க, ரத்தங் கம்முதல், விரணம் மேற்கிருக்குதல், நடுவில் விஷமாய் இருத்தல், வின்னப் படுதல், என்னும் இவ்வைந்து குணங்களை வெள்விழியிலாவது கருவிழியிலாவது உண்டாக்குகின்ற ரோகங்கள் அசாத்தியம்.

திமிர ரோகாதி பேதம்

பார்வையில் திமிரம், காசம், லிங்கநாசம், கம்பீரம். என்னும் நான்கு வகைப் பிரிவில் 24 வித ரோகம் பிறக்கும். அவையாவன. திமிரத்தில் 6ம். காசத்தில் 6ம். லிங்கநாசத்தில் 6ம். கம்பீரத்தில் 9ம். இவைகளின் பெயரையும் செய்கைகளையும் இதனடியிற் காண்க!

சாமானிய திமிர ரோக லக்ஷணம்:

கண் புரைகளில் வாயு அநுசரித்து திமிர ரோகத்தை யுண்டாக்கும். அதன் விபரம்!-

வாயுவானது சன்ன நரம்புகளின் துவார வழியாகக் கண்களின் 1வது புரையில் இறங்கிச் சஞ்சரிக்குமாயின், நன்றாகத் தெரியப்பட்ட உருவங்கள் ஒரு காரணமுமில்லாமலே மறைக்கப்படும். அது 2வது புரையைச் சேருமாயின் இல்லாத வஸ்து எதிரில் இருப்பது போலவும் சமீப வஸ்து தூரத்தில் இருக்கிற மெல்லிய வஸ்துவைப் போலவும். தூர வஸ்து சமீப வஸ்துவைப் போலவும்,

சமீப வஸ்து தூரவஸ்துவைப் போலவும் தோன்றும். அந்த வாயுவே கருவிழியைச் சாருமாயின் சகல வஸ்துக்களும் சக்கிர ஆகாரமாகவே தோன்றும். அது பார்வை ஒட்டியிருந்தால், ஒரு வஸ்து இரண்டு வஸ்துவாகத் தோன்றும். அது விழிக்கு உட்புறத்தில் நின்றால், பார்வையானது சூக்ஷமமாகத் தோன்றும். அது விழிக்கு கீழ்ப்புறத்தில் நின்றால், அண்டையில் இருக்கின்ற வஸ்துக்கள் தோன்றாது. அது விழிக்கு மேற்புறத்தில் நின்றால், தூரத்திலிருக்கின்ற வஸ்துக்கள் தோன்றாது. அது விழிக்குப் பக்கங்களில் நின்றால் பக்கங்களில் இருக்கின்ற வஸ்துக்கள் தோன்றாது என்றறிக. இக் குணங்கள் சகல திமிர ரோகங்களுக்கும் திமிர போகம் எனப் பேர் பெற்றது.

திமிரம் என்பது — இருள்.

1.-வது. வாத திமிர ரோகம்:

இது, கண் கலங்கித் திவக்குதலுடன் பார்வை திகில், புகை கம்மியது போல் தெளிவின்மை, காரணம் ஒன்று இல்லாமலே கொசு, வலைக்கண், ரோமம் கயிறு ஆகிய இவைகளைப் போல ஒவ்வொரு வேளை தோற்றுதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

2-வது. பித்த திமிர ரோகம்:

இது, பார்வைக்குள் மின்னல் மின்னுதல், மின்மினிப் பூச்சியும் ஊர்க்குருவியும் பறக்குதல், கானற் சலம் ஓடுதல், மயிலிறகைப் போல் பலநிறம் தோன்றுதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இதனில் எவ்வகைப் பொருள்களும் கறுப்பாகவே தோன்றும்.

3-வது. சிலேஷ்ம திமிர ரோகம்:

இது, விழிகளை மிகு மினுப்புடன் வெறுப் பாக்குவது மன்றிப் பார்வை மிகு மிகுத்தல், வெளுத்தல். சூரியன், சந்திரன், மல்லிகை மொக்கு, வெள்ளைப் புஷ்பம் ஆகிய இவைகள் குப்பல் குப்பலாகக் கிடக்குதல் போல் தோற்றல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

4-வது தொந்த திமிர ரோகம்:

இது, பார்வையில், வாததிமிரம், பித்ததிமிரம், ஆகிய இவ்விரண்டினில் உண்டாகும். குணங்களை யெல்லாம் ஒரே காலத்திலுண்டாக்கும். இவ்வாறே மற்ற இரண்டு திமிர ரோகங்களை அறிய வேண்டும்.

5-வது. திரிதோஷ திமிர ரோகம்:

இது, பார்வைக்குள் வாதாதி மூன்று திமிர ரோகங்களுக்குள்ள குணங்களை எல்லாம் பிரகாசமாக உண்டாகும்:

6-வது. ரத்த திமிர ரோகம்:

இது, கண்களைச் சிவப்பாக்குவது மன்றிப் பார்வையிலும் அவ்வண்ணமாகவே தோற்றுவிக்கும். ஆக திமிர ரோகம் 6.ம் முற்றியது.

இத் திமிர ரோகத்தினில், காச ரோகமும் கூடாகிய லிங்கநாச ரோகமும், இத்திமிர ரோகத்தினில், காச ரோகமும் கூடாகிய லிங்க நாச ரோகமும் உண்டாக்கும். ஆகையால் இதற்கு உடனேயே பண்டிதர்கள் நாலுவித சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்: செய்யாவிடில் அசாத்தியமே.

சாமானிய காச ரோக லக்ஷணம்.

முன்பு சொன்ன திமிர ரோகத்தினது ஆதிக்கத்தால், வாயுவானது கண்களின் மூன்றும் புரையை அனுசரித்துக் காச ரோகத்தைப் பிறப்பிக்கும். இதனில் மேற்பார்வை தெரிதலும், கீழ்ப் பார்வை திரை போட்டது போல் மறைதலும் உண்டாகும். இந்த ரோகமானது, எந்தத் தோஷத்தை அனுசரிக்குமோ அந்த தோஷத்தையே பார்வையும், அனுசரிக்கும், இக் குணங்களெல்லாம் சகல காச ரோகங்களுக்கும் பொதுவாக இருக்கும். இது, கருவிழியல் ஓட்டின் நிறத்தைப் பெற்றிருப்பதால், காச ரோகம் எனப் பேர் பெற்றது.

காசம் என்பது — விழியல்.

இனி ஆறு வகையாகிய காச ரோகங்களைச் சொல்லப்படும்.

1. வது. வாத காச ரோகம்:

இது, கண்களைச் சிவப்பாக்குவதுமன்றி, எதிரிலிருப்பவர்களுக்கு மூக்கின்மை போலவும், சந்திரனும், தீபமும் அநேகங்களாகவும், நேரில் இருக்கிற கனத்த பொருள்களை மெல்லிய உருவாகவும் தோற்றுவிக்கும்.

—.

2-வது. பித்த காச ரோகம்:

இது. கண்களில் வெண்கலம் நீலம் இவைகளின் காந்தியைப் போல் பிரகாசத்தை உண்டாக்குவதுமன்றி, பார்வையில், சூரியன், சந்திரன், பரிவேடம், அக்கினி சுவாலை இந்திர தநு ஆகிய இவைகளை, முன்பு வாதகாச ரோகத்திற் சொன்னது போல், அநேகங்களாகத் தோற்றுவிக்கும்.

—.

3.வது. சிலேஷ்ம காச ரோகம்:

இது, பார்வைக்குள் வெறுப்பை உண்டாக்குவது மன்றிச் சூரியனைத் தீபத்தைப் பார்க்கும் அளவில் அவைகள் ஒளி மழுங்கி அநேக உருவங்களாகத் தெரியும் படிக்குத் தோற்றுவிக்கும்.

4-வது. தொந்த காச ரோகம்:

இது, கண்களிலும், பார்வையிலும் வாத காச குணத்தையும் பித்த காச குணத்தையும் ஒரே காலத்தில் உண்டாக்கும். இவ்வாறே மற்ற இரண்டு தொந்த காச ரோகங்களையும் அறிய வேண்டும்.

5-வது திரிதோஷ காச ரோகம்:

இது, பார்வைக்குள் வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்று காசங்களுக்குள்ள குணங்களையெல்லாம் விரைவில் உண்டாக்கும்.

6-வது. ரத்த ~~[illegible]~~ காச ரோகம்:

இது, கண்களைச் சிவப்பு கறுப்பு நிறமாகச் செய்வது மன்றிப் பார்வையிலும் அவ்வாறே தோற்றுவிக்கும்.

சாமானிய லிங்க நாச ரோக லக்ஷணம்:

முற்கூறிய காச ரோகத்தைச் சீக்கிரத்தில் நிவர்த்தி செய்யாவிடில், வாயுவானது கண்களில் நாலாம் புரையை அநுசரித்து, லிங்க நாச ரோகத்தைப் பிறப்பிக்கும். இதனால், சிற்ப மண்டலமாகிய பாவை திரை போட்டதுபோல் மறையப்படும். இது பார்வையைப் பலவாறாகக் கெடுத்துக் கொஞ்சமேனும் ஸ்தூல ரூபவஸ்துவையும் தெரிய வொட்டாமல் செய்தால், லிங்க நாச ரோகம் எனப்பேர் பெற்றது. லிங்கம் என்பது கருவிழியின் நடுவிலிருக்கும் பாவை:- நாசம் என்பது கெடுதல்.

இனி வகையாகிய லிங்கநாச ரோகங்களைச் சொல்வோம்.

1-வது வாதலிங்க நாச ரோகம்.

இது, முன்பு சொன்ன காச ரோக விருத்தியினால் வாயுவானது கண்களின் நாலாம் புரைக்குள் சஞ்சரிக்கும் போது பிறந்து, அக் கண்களில் மிகவும் தூசி படிந்தது போலவும் புகை கம்மியது போலவும் செய்வதுமன்றிக் குருவி ரத்தம் போல் சிவந்த நிறத்தையும் உண்டாக்கும். இதனால் விழிகளின் நரம்புகள் முடங்கிக் கொள்ளுதலும், எதிரிலிருக்கின்ற வஸ்துவும் உருவமும் கொஞ்சமேனும் தெரியக் கூடாமையாக இருக்கும்.

2-வது. பித்த லிங்க நாச ரோகம்:

இது, கண்களைக் கருவண்டைப் போல் மிகுந்த கறுப்பாக்குவதுமன்றி எவ்வளவேனும், பார்வையைத் தெரிய வொட்டாமற் செய்யும்.

3-வது. சிலேஷ்ம லிங்க நாச ரோகம்:

இது, விழிகளின் மேல் சங்கு, மல்லிகை மொக்கு, சந்திரன், வெள்ளை, அல்லிப்பூ, படிகம், பல்லி முட்டை, ஆகிய இவைகளைப் போல் சதையை வளர்ப்பிக்கும். அப்போது நிழலில் திரிவதற்கே இச்சை உண்டாகும்.

4-வது. தொந்த லிங்க நாச ரோகம்:

இது வாதலிங்கநாசம், பித்தலிங்க நாசம் ஆகிய இவ்விரண்டினால் உண்டாகின்ற குணங்களையெல்லாம் ஒரே காலத்தில் உண்டாக்கும். இவ்வாறே மற்ற இரண்டு தொந்தங்களையும் அறிய வேண்டும்.

5-வது திரிதோஷ லிங்க நாச ரோகம்:

இது, வாதலிங்க நாச ரோகம் முதலிய மூன்று ரோக இனங்களையெல்லாம் கண்களிலும் பார்வையிலும் நிரம்ப உண்டாக்கும்.

6-வது. ரத்த லிங்க நாச ரோகம்:

இது, பார்வையை ரத்த நிறம் ஆக்குவதும் தவிர அப்பார்வையையும் கண்களின் ஒளியையும் கெடுக்கும். —.

1. வது கம்பிர ரோகம்:

இது முன்பு சொன்ன லிங்க நாச ரோகங்களின் இன்னும் அதிகரித்த வாயுவின் விருத்தியினால் கண்களில் நரம்புகள் முடங்கிப் பார்வைக்குள் உருவி ஆழ்ந்து விடும் போது பிறந்து, கொஞ்சமேனும் பார்வையைத் தெரியவொட்டாத விதத்தைச் செய்யும்.

கம்பீரம் என்பது ஆழம்.

௨-வது இரசுவ ரோகம்:

இது, பித்தத்தினால் பிறந்து, கண்களின் பார்வையை மறைக்கும், மறைந்தாலும் அற்பமாகத் தெரியும்.

இரசுவம் என்பது — அற்பம்.

3-வது. நகுலாந்த ரோகம்:

இது. இரண்டு கண்களையும் கீரிப் பிள்ளைக் கண்களைப் போல் இவப்பாகிப் பிளைய நிறைப்பிக்கும். பகல் காலத்தில் இதனால் எதைப் பார்த்தாலும் விசித்ரை விசித்ரையாகத் தோற்றுவதும், இராக்காலத்தில் எவ்வளவேனும் பார்வை தோன்றாததுமாக இருக்கும். இது கீரிப் பிள்ளைக் கண்களைப் போல் இருத்தலால், நகுலாந்த ரோகம் எனப் பேர் பெற்றது.

நகுலம் என்பது கீரி, அந்தம் என்பது குருடு.

4-வது நக்தாந்த ரோகம்:

இது, வாதபித்த கபங்களினால் பிறந்து, சூரிய அஸ்தமான காலத்தில் திருஷ்டியை மறைத்து, அச் சூரியன் உதித்தவுடன் அம் மறைப்பை விட்டு இதனால் இரவில் பார்வை தெரியாமலும் பகலில் நன்றாகத் தெரிதலுமாக இருக்கும். நக்தம் என்பது இரவு. அந்தம் என்பது இருடு. இதனை மாலைக்கண், இராக் குருடு என்பர். இது சுத்திப் பண்ணிய மிளகை வெள்ளாட்டுப் பித்தப்பை கொண்ட மட்டும் கொட்டி, அச்சலம் வெளிப்படாமல் வாயைத் தைத்து நிழலில் தூக்கிக் கட்டி, அம் மிளகு நன்றாக உலர்ந்த பின்பு, அதில் ஒன்றைச் சுத்த சலத்தில் உரைத்து ஒரு மண்டல காலம் வரைக்கும் இரண்டு வேளையும் கண்ணிலிட்டுக் கொள்ள விலகும்.

5-வது. உஷ்ண விதக்த ரோகம்.

இது, கணநேரமென வெய்யிலில் அடிபட்டு உடனே மிகு சீதள சலத்தில் ஸ்நானம் செய்தலால் பிரகோபித்த திரிதோஷத்தில் நின்றும் ஒரு அவாஸ எழும்பிச் சென்ன நரம்புகளின் வழியாகச் சிரசில் ஏறி விழிகளைப் பற்றும் போது பிறந்து, உபத்திரவத்தைச் செய்யும். இதனால், கண்களில் எரிச்சலுடன் மயிர்ப்பாய்தல், இமைக்கின்ற வெளிறல், பகலில் கலங்கிய பார்வை, இரவில் அதுவுந் தெரியாமை என்னுங் குணங்கள் உண்டாகும்.

6-வது. பித்த விதக்த ரோகம்:

இது, பித்தத்தினால் பிறந்து, கண்களில் மஞ்சள் நிறத்தை உண்டாக்கும்.

7-வது ஆமில விதக்த ரோகம்:

இது, மெத்தவும் புளிப்புள்ள வஸ்துக்களைப் புசித்ததினால் ரத்தத்தோடு கூடிய திரிதோஷங்களானவை கண்களின் பார்வையைச் சேரும் போது பிறந்து, உபத்திரவத்தைச் செய்யும். இதனால், விழிகளில் வீக்கமும் நமைச்சலும் கலங்கலும் உண்டாகும்.

8-வது. தூம்பிர ரோகம்:

இது, தூக்கம், சுரம், தலைநோவு ஆகிய இவைகளால் வருந்தும் காலத்தில் பிறந்து, கண்களிற் புகை கம்மியது போல் கம்மலைச் செய்யும். இதனால் எந்த வஸ்துக்களும் புகை நிறமாகவே தோற்றும்.

தூம்பிரம் என்பது — புகை.

9-வது. அவுபசர்க்கிக ரோகம்:

இது, அற்ப பல காலத்தில் ஆகிய விம்பம் முதலிய தீக்ஷண ஒளிகளைத் தினந்தினமும் முற்றும் பார்ப்பதனால் வாத பித்த கபங்கள் கண்களில் வியாபிக்கும் போது பிறந்து அவ்விழிகளின் ஒளியைக் குறைத்துப் பார்வை இல்லாதது போல் செய்யும், (அல்லது) வைடூரியத்திற் ஜொலிக்கும் நிறங்களைப் போல் தோற்றுவிக்கும். இதனால் அங்கே ஜோதியின்மை, தெரிந்தும் தெரியாததப் பார்வை, யார் பார்த்தாலும் விழிகளில் யாதொரு தோஷங்களும் இன்மையாக மயங்குதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மற்றொரு ஒளியினால் பிறந்து நேத்திர ஒளியைக் கொடுத்தலால், அவுபசர்க்கிக ரோகம் எனப் பேர் பெற்றது.

→—.

பார்வை ரோக சாத்தியா சாத்திய நிதானம்:

பார்வையில் பிறக்கின்ற 20ல் வாத திமிரம், பித்த திமிரம், சிலேஷ்ம திமிரம், தொந்த திமிரம், திரிதோஷ திமிரம், ரத்த திமிரம், சிலேஷ்மலிங்க நாசம், ரத்தாந்தம், உஷ்ண விதக்தம், பித்த விதக்தம், ஆம்லவிதக்தம், தூம்பிரம், அவுபசர்க்கிரகம் ஆக 13 சாத்தியம், காசம்ம, நகுலாந்தம் 1. ஆகாம் கஷ்ட சாத்தியம், வாதலிங்க நாசம், பித்தலிங்கநாசம், தொந்தலிங்க நாசம், திரிதோஷ லிங்க நாசம், ரத்தலிங்க நாசம், கம்பீரம், இரசுவம், ஆக 7ம். அசாத்தியம்: ———.

சர்வ நேத்திர ரோக பேதம்:

கண்கள் முற்றிலும், அபிஷ்யந்தம், அதிமந்தம், என்னும் மூன்று வகைப் பிரிவினில், 16விதம் சங்கரம், என்னும் ரோகம் பிறக்கும். அவைகளின் விவரம். அபிஷ்யந்தில் 4ம் அதிமந்தத்தில் 5ம், சங்கரத்தில் 7ம். ஆகும்.

இனி அபிஷ்யந்த ரோகம் நான்கும் சொல்லப்படும்.

1. வாத வாதாபிஷ்யந்த ரோகம்:

இது, கண்களில் உப்பல், உலர்ந்த பீளை சாருதல், அற்ப நோவு, பூச்சி பறப்பது போல் தோன்றல், சிறு எறும்புகளால் குத்துதல் போல் குத்தல், குளிர்ச்சியாக கொஞ்ச ஜலம் வடிதலுடன் அவைகளை மூடுதற்கும் திறப்பதற்கும் பிரயாசை நாசியில் உப்பலோடு சிறிய வீக்கம், நெற்கண், புருவம் ஆகிய இடங்களில் இருக்கின்ற எலும்புகளிலும் நரம்புகளிலும் குத்தல், அவைகளில் அடித்தது போலிருத்தல் என்னும் குணங்கள் உண்டாகும். அபிஷ்யந்தம் என்பது ஒழுகுதல், இது உஷ்ண திரவியத்தினாலும் மதுரதிரவியத்தினாலும் உபசரிக்கில், சாந்தமாகும்.

2-வது பித்தா பிஷந்த ரோகம்:

இது, கண்களில் எரிச்சல், அருகுதலுடன் உஷ்ண சலம் வழிதல் புகை கம்மியது போலிருத்தல், நீர் முட்டுதல், கடைக்கண் கறுத்தல், சிவத்தல் எதிரில் இருக்கும் வஸ்து நிறமாறித் தோற்றல், உப்பு நீரைத் தெளிந்தது போல் கரித்தல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

3-வது சிலேஷ்மா பிஷந்த ரோகம்:

இது, கண்களில் நீர்க் கோவை, வீக்கம், தினவு, தடித்து வெளுத்து மினு மினுத்து நார் நாராகப் பீளை வழிதல், தேக சாட்டியம், அசன வெறுப்பு, நித்திரைப் பங்கம். என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

4-வது. ரத்தா பிஷந்த ரோகம்:

இது. கண்கள் கோவைப் பழம் போல் சிவக்குதல், ரத்த நிறத்தை ஒத்த சலமும் பீளையும் ஒழுகுதல், கருவிழி வெளிறல், என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.
இனி அதிமந்த ரோகம் நான்கும் சொல்லப் படும்:

1. வது. வாதாதி மந்த ரோகம்:

இது. கண் புருவம் நெற்றி ஆகிய இடங்களில் மத்தைக் கொண்டு மத்தித்தல் போல் இருத்தல். வாயுவினால் செவிகள் ஓயாத இரைச்சல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.
மந்தம் என்பது மத்து!

2- வது. பித்தாதி மந்த ரோகம்:

இது, கண்களைக் கருங்காலிக் கட்டையினது நெருப்பைப் போலும் காய்ந்து சிவந்து இரும்புக் கட்டியைப் போலும் சிவக்கச் செய்யும்.

3-வது சிலேஷ்மாதி மந்த ரோகம்:

இது, வெள்விழி எல்லாம் அழுக்கடைந்து இருதல், கருவிழி, உயர்ந்து உப்புதல், அதில் தூசி பட்டது போலிருத்தல், சலம் வடிதல் நாசியின் பக்கங்கள் புடைத்திருதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4-வது ரத்தாதி மந்த ரோகம்:

இது கண்கள் சிவத்தல், சிலவேளை செம்பரத்தம் பூப்போல மிகவும் சிவத்தல் இறைக்கும் போது நொடும் போதும் நோதல், கருவிழியானது ரத்தத்தில் மூழ்கினது போல தோற்றல், நெற்றி, தாடை, மண்டை ஆகிய இடங்களில் வேதனை என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

5-வது அதாதி மந்த ரோகம்:

இது, கண்களில் விரணத்தைப் பிறப்பித்தும் பார்வையைக் கெடுக்கும். இதற்குத் தீவரமாக பார்வையைக் கெடுக்கும். இதற்குத் தீவரமாக அநேக விதவேதனைகளையும் வைத்தியம் பண்ணவிடில், அநேக வித வேதனைகளையும் உண்டாக்கும். ஆக அதி மந்த ரோகம்

5ம் முற்றியது.

1. வது. அன்னிய தோவாத ரோகம்:

இது, கண் நெற்றி வாத நரம்பு மற்றைய நரம்பு ஆகிய இந்த இடங்களில் வாயுவு தங்கிச் சஞ்சரிக்கும் போது பிறந்து, கண்களில் சிவப்பு, வீக்கம், அதிக நோவு, நீர்க்கம்மல். என்னும் இக் குணங்கள் உண்டாக்கும். வாயுவானது தனக்கு அன்னியஸ்தானமாகிய பித்த சிலேஷ்ம நரம்புகளிலும் வியாபித்து ~~கு~~ நேத்திரத்திற்கு உபத்திரவத்தைக் கொடுப்பதால் இது அன்னிய தோவாத ரோகம் எனப் பேர் பெற்றது.

2- வது வாதபரியாய ரோகம்:

இது, முன்பு சொல்லிய அன்னிய தோவாத ரோக குணங்களுடன் வக்கிர பார்வையையும் சதா வீக்கத்தையும் உண்டாக்கிக்கும். இந்த ரோகம் மேற்கூறிய ரோகத்தைப் போல் இருந்தாலும், கொஞ்சம் பேதப்படுதலால், வாத பரியாய ரோகம் எனப் பேர் பெற்றது.

3- வது. சுட்காக்ஷி பாக ரோகம்:

இது, வாத பித்த சேர்க்கையில் பிறந்து, கண்களில் அட்கம் இருக்கம் பிடித்தல் போலிருத்தல் ஆகிய இக் குணங்களைப் பிறப்பிக்கும். இதனில் இமிண்டல், நோதல், அதிர்தல், எரிதல், தேசக்கிவிடுதல், சிவக்குதல், மூடலில் திறத்தலில் பிரயாசை, சீதாவஸ்துவில் இச்சையென்னும் இக் குணங்களுமுண்டாகும். இந்த ரோகம் முதிர்ந்தால் குத்தல் அதிகரிக்கும். சுட்கம் என்பது உலருதல். அக்ஷி என்பது நேத்திரம். பாகம் என்பது முதிருதல்.

4- வது சோபாக்ஷி பாக ரோகம்:

இது, திரி தோஷங்களில் சேர்க்கையால் பிறந்து, கண்களில் வீக்கம், சிவப்பு, நோவு, எரிச்சல், சதாமூடல், வெள்விழி, அத்திப்பழம் போலிருத்தல், அதில் நின்றும் அழுக்கையாயும் சீதளமாயும் நெய்யாயும் பிசுபிசுப்பாயும் விஸ்தாரம் அலம் ஒழுகுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

5-வது அற்ப சோபாக்ஷிபாக ரோகம்:

இது, முன்பு சொன்ன ரோகத்தின் குணங்களெல்லாம் உண்டாகும். ஆனால் கண்களில் அற்ப வீக்கம் இருக்கும்.

6-வது அக்ஷி பாகாத்திய ரோகம்:

இது, கண்கள் வீங்குதல், காய்குதல், நீர்கம்முதல், பிளவடைதல், கருவிழி, வெள்விழி சிவத்தல், எரிச்சல், பார்வை கெடுதல், பொறுத்துப் பொறுத்து நோதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

7-வது ஆம்லோஷித ரோகம்:

இது, பித்த ரத்தம் முதலிய வாதாதி தோஷங்களான வைசி அதிரண வஸ்துக்களைக் கூட்டிப் புசிக்கப் பட்ட அன்ன சாரங்களை வயிற்றுக்குள் புளிக்க வைத்து அந்த நீரைக் கண்களுக்கு ஆதாரமாக இருக்கின்ற நரம்புகளின் துவார வழியாக நேத்திரங்களில் பிறக்கும். வெதுப்பி நெய்ப் பிடிக்கும். போது இவக்குதல், அதைல், கண்கள் கறுக்குதல், மாறுதல் நீரொழுகுதல், வீங்குதல், எரிதல், காய்குதல், பார்வை கெடுதல், என்னும் இக் குணங்கள் உண்டாகும். ஆம்லம் என்பது புளிப்பு உஷிதம் என்பது - பழையது ஆம்ல உஷிதம் ஆம்லோஷிதம் எனவாயிற்று.

சர்வ நேத்திர ரோக அசாத்திய நிதானம்:

கண்கள் முற்றிலும் பிறக்கின்ற பதினாறு ரோகங்களுக்குள் அதிமந்த ரோகமும், அக்ஷி பாகாத்திய ரோகமும், அசாத்தியமாம். அன்றியும் வாதத்தினால் பிறந்த அதிமந்தரோகம் ஐந்து நாளிலும் சிலேஷ்மத்தினால் பிறந்த அதி மந்த ரோகம் ஏழு நாளிலும். ரத்தத்தினால் பிறந்த அதி மந்த ரோகம் மூன்று நாளிலும், பித்தத்தினால் பிறந்த அதி மந்த ரோகம். கண்ட நாளிலும் பார்வையைக் கெடுக்கும்.

மேலும், இந்த அதிமந்த ரோகங்களெல்லாம் அசாத்திய மென்றே நிராகரிக்க வேண்டும்.

அன்றியும், சிலேஷ்ம பித்த ரக்தங்களால் பிறந்த ஷுரகம், பக்ஷ்மப ரோகம், அர்காவதி பாதம், பூயாலஜம், பிசவர்த்தமம், போதகி. ஆம லோஹிதம். அர்ப்பசோ பாஷி பாகம், அபிஷ்யந்தம், அதிமந்தம், அதாதிமந்தம், அக்ஷி பாகாத்தியயம், ஆகிய 18 ரோகங்களுக்கும், பில்ல ரோகம் என்று பெயர். இவைகள் வச்சிராத்தி-ஜைர மாத்திரை, அவ்விராக்சனம், சுவேதச்சிருமா, நேத்திரோதகம் முதலிய அவுஷதங்களை கொண்டு சிகிச்சை செய்யில் சிலநாள் பொறுத்துச் சாத்தியமாம். தன்வந்தரி முதலிய பெரியோர்களால் சொல்லப்பட்ட

நேத்திர ரோகம் 94ம் முற்றியது.

சித்தர் மதாந்தர நேத்திர ரோகம்:

நயனவிதி நாலாறு என்கிற சாஸ்திரத்திலும், இன்னும் சில கிரந்தங்களிலும், கருவிழி, வெள்விழி, இமை, கடைக்கண் என்னுமிந் நான்கு ஸ்தானங்களைப் பற்றி வருகின்ற ரோகம் 96 விதம் எனச் சொல்லப் படுகின்றன. அவைகளின் விவரம்:- கருவிழியில் காசம், படலம், குக்கம், விழியுந்தல், சுகிசல், வரி கத்தம், திமிரம், அக்கிரேன், பூ, என்னும் 10 வகைப் பிரிவினில் 45 வித ரோகமும், வெள்விழியில் எழுச்சி, படாத்தி சுகிசல், புற்று, கிமினம், வரி என்னும் 6-வகைப் பிரிவினில் 20 வித ரோகமும் இமைகளில், விலம், தடிப்பு, கழல, கீற்பாய்ச்சல் பற்பம். என்னும் 5. வகைப் பிரிவினில், 16 வித ரோகமும், கடைக்கண்களில் கண்ணெடுப்பு, பூசாந்தரம், படாத்தி, கீற்குழை, விழிவாதம், விரணப்படு, விக்கிரதி, இமைக்குடு, கிமின், நேத்திர வாயு, கண்ணேவு, என்னும் 11 வகைப் பிரிவினில் 15 வித ரோகமும் உண்டாகும்.

கருவிழி ரோகத்தில் முதற்பிரிவாகிய காச ரோக பேதம்.

காச ரோகமானது, வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம், வாலகாசம், நீலகாசம், மந்தாரகாசம், விரணகாசம், கருப்பகாசம், என எட்டு விதப்படும். இவற்றுள் 1வது வாதகாசம், அது கண் மணியில் வண்டைப் போல் கருமை நிறத்தை உண்டாக்கி, அதில் நின்றும் கறுத்த சலத்தை ஒழுகுவிக்கும்.

2-வது. பித்தகாசம்:- இது மஞ்சள் நிறமான சலம் அழியும் படிக்குச் செய்யும்:

3-வது. சிலேஷ்மகாசம்: இது, அத்தவெண்மை, நிறமான சலத்தைப் பெருக்கும்!

4. வது. வாலகாசம்: இது கருவிழியில் புகை கம்மியது போல் செய்யும்!

5-வது நீலகாசம்! இது கருவிழியில் கருவிளம்பூ நிறத்தை உண்டாக்கும்.

6-வது. மந்தாராகாசம்:- இது. கருவிழியில், செம்பஞ்சு (அல்லது) லோக மினைவகளின் நிறத்தைப் பிறப்பிக்கும்;

7. வது. விரணகாசம்: இது கருவிழியில், முத்தைப்போல் நாதனைப்பான நிறத்தை உண்டாக்கும்!

8. வது. கருப்பகாசம்: இது. கருவிழியில் அத்தக் கருமை நிறத்தைக் காண்பிக்கும். ஆகாச ரோகம் 8ம் முற்றியது. இவற்றுள், பித்தகாசம், ஆநீலகாசம். மந்தார காசம், ஆகிய 3ம். வில்வ வேர்த்தைலம். சந்திர தனைத் தயிலம் அங்கு மாத்திரை கையாந்தகரை குழம்பு முதலிய ஔஷதங்களினாலும் ஆயுத சிகிச்சைகளினாலும் நிவர்த்தியாகும். மற்ற ஐந்தும் அசாத்தியமாம். ஆயினும் இச்சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியம் ஆனாலும் ஆகும்!

கருவிழி ௨-வது பிரிவாகிய படலரோக பேதம்:

படலரோகமானது, சதைப்படலம், ரத்தப்படலம், நீர்ப்படலம் வரிப்படலம், கருநாகப்படலம், மாமிசபடலம், பசுவிழிப்படலம் என 7. விதப்படும். இவற்றுள் 1. வது சதைப்படலம். இது கருவிழியில் குத்தலுடன் நோவை உண்டாக்கி மேலில் சிவந்த சதையை வளர்ப்பிக்கும்.

௨-வது. ரத்தபடலம். இது கண்மணியில், கரித்தல், குமறல், காந்தல்; கன்றுதல், நீர்சொரல், எரிதல், ரத்தங்கட்டுதல், நெறிக்குங்கீழ் புருவம். நெற்றி பிடரி உச்சி ஆகிய இடங்களில் குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

3. வது. நீர்ப்படலம் இது, கருவிழியின் மீது மேகம் கம்மியது போல், இருட்டல், கனத்தல், மிகுந்த சலம் வடிதல், கண் மயக்கம், சிரசில் குத்தலுடன் அக்கோர்வை என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

4. <u>வரிப்படலம்</u>: இது கருவிழியின் மீது கயிறு போல் வரிகளும், காந்தலும், குத்தலும், அகண்ட நோவுடன் உறுத்தலும், புகைச்சலும் உண்டாக்கச் செய்யும்

<u>5. வது.</u> <u>கருநாகப்படலம்</u>: இது, கருவிழியில், இந்திர தனுப் போல் பாசிறடும். குத்தலும். நோவும், உறுத்தலும், சலப்பெருக்கு முண்டாகச் செய்யும்.

<u>6-வது. மாமிசப்படலம்</u>: இது. விழிமணியின் முனையில் சதையை வளர்ப்பித்து, அதில் உளரல், கூசுதல், இடித்தல், சலம் வடிதல், என்னும் இக் குணங்களை உண்டாக்குவதன்றியும், பிடரியில் நோவையும் உண்டாக்கும்.

7. வது. பசு விழிப்படலம் இது, கருவிழியில் பசுமை, கிரமமான சதையை வளர்ப்பித்து, அதில் இரத்தமான குத்தல், தீ இருக்குமிடம் போல் காந்துதல், பார்வை மறைத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ஆக படலம். 7. ம். முற்றியது. இவற்றுள் சதைப் படலம் ரத்தப்படலம், நீர்ப்படலம், வலிப்படலமென்னும் 4. ம் சாத்தியமாம். மற்ற 3. ம். அசாத்தியமாம். இவைகள் பரிகாரமாகியான மருந்து, நத்தைச் சிப்பி நெய் முதலிய ஔஷதங்களால் வசப்படும்.

<u>கருவிழி 3. வது. பிரிவாகிய குமுத ரோக பேதம்:</u>

குமுத ரோகமானது, செங்குமுதம், கருங்குமுதம், வெண்குமுதம் என 3. விதப்படும். இவற்றுள் 1-வது செங்குமுத ரோகம். இது கருவிழியில் செங்கழுநீர்ப் பூவைப் போல் சிவந்த சதையை வளர்ப்பித்து, அதில் நெருப்பினில் சுட்டப்புண் போல் எரிச்சலையும் குத்தலையும் உண்டாக்கும்.

2. வது. கருங்குமுத ரோகம்:- இது கருவிழியில் கருங்குவளைப் பூவைப் போல் விரணத்தை எழுப்பிப் பார்வையில் இருள் கம்மியது போல் செய்யும்.

3. வெண்குமுத ரோகம்: இது கண்களில் பஞ்சுபோல் வெளுத்த புள்ளி விழுந்து பரவுதல், குத்தல், மிகுந்து நோதல் பார்வை மங்குதல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும். ஆக குமுத ரோகம். 3 ம். முற்றியது. இவற்றுள், செங்குமுதம், சாத்தியம் மற்ற 2 ம். அசாத்தியம்:

→

<u>கருவிழி 4. வது. பிரிவாகிய விழியுந்தல் ரோகபேதம்:</u>

விழியுந்தல் ரோகமானது, செஞ்சதை விழியுந்தல், வெண்சதை விழியுந்தல், கருவ நேத்திர விழியுந்தல், என 3. விதப்படும். இவற்றுள் 1-வது செஞ்சதை விழியுந்தல் இது குமுதரோகத்திலும்.

மற்றும் நேத்திர ரோகங்களிலும், கருவிழியில் சிவந்த சதையைப் படரச் செய்து அதில் உறுத்தல் உண்டாக்கும்!

2. வது. வெண்சதை விழியுந்தல்! இது வெண்மைச் சதையைப் படரச் செய்து அதில் நோவை மாத்திரம் உண்டாக்கும்.

3. வது. சருகுவந்திர விழியுந்தல், இது கண் முழுமையும் சுற்றுக் கொள்ளும்படிக்குச் சதையைப் படரச் செய்யும். ஆக விழியுந்தல் ரோகம் 3ம் முற்றியது. இம் மூன்றும் அசாத்தியமே.

<u>கருவிழி 5. வது பிரிவாகிய நெரிசல் ரோக பேதம்</u>:

உஷ்ணம், வெக்கை, ஆகாரபேதம், மிகுசுமை எடுத்தல், கண் சிவத்தல், நீர் ஒழுகல், என்னும் இச் செய்கைகளினால், நெரிசல் ரோகம் பிறக்கும். இது உஷ்ண நெரிசல், சோணித நெரிசல், நீர் நெரிசல் என 3 வகைப்படும். இவற்றுள் 1. வது. உஷ்ண நெரிசல் இது கருவிழியில் விருத்தமான வெளுப்பை உண்டாக்கும். 2. வது சோணித நெரிசல் இது விழி மையத்தில் ரத்த நிறத்தையும் கருமையையும், உண்டாக்கும். 3. வது நீர் நெரிசல் இது ~~கருவிழியில்~~ நடுவில் மாற்றான நிறத்தையும், குளிர்ச்சியுடன் நீர் கோவையையும் உண்டாக்கும்.

கருவிழியில் அப்புகை மேகம் கம்பியைப் போல் செய்து நுட்பப் பொருள்களைத் தெரிய வொட்டாமல் மறைக்கும். இந்த ரோகம் பாலர் முதல் விருத்தர் பரியந்த முண்டாயிருக்கும், ஆனால் நாற்பத்தைந்து வயதிற்கு மேல் மேற்படி பித்த ஒளி மட்டுப் படுங்காலத்தில், அபாயமாகத் தோன்றும். (அல்லது) மேற்படி வயதிற்கு மேலும் நீங்காவிடில் இதில் வாயுவின் கூட்டுறவில் திமிர ரோகம் ஆரம்பமாகும்!

2 வது. மாலைக்கண்: இது மாலைக் காலத்தில் பார்வைக்கு இருளடையும்படிச் செய்வதும், உதய காலத்தில் அவ் விருள் நீங்கும்படிக்குச் செய்வதுமாக இருக்கும்.

3. வது. மந்தார திமிரம்: இது கருமணியில் பஞ்சுபோல் புகையை யெழுப்பி அந்தி நேரத்தில் இருளுண்டாக்கு வதும், பின்னும் ஒரு சாமத்திற்குள் தெளிவைத் தருவதுமாக இருக்கும்.

4. வது வறட்சி திமிரம்: இது கருவிழியில் மந்தமும், கரு நரம்பில் குத்தலும் பீளையுடன் சலப் பெருக்கும் உண்டாகும்படிச் செய்யும். இது கபால மூளையை பித்தம் வறட்டும்போது பிறக்கும்.

5. வது. நீர்த்திமிரம்: இது நா, நாசி, செவி, கண் ஆகிய இவ்விடங்களில் விரணத்தை உண்டாக்குவதும். அன்றி, கருவிழிப் பக்கங் களில் குத்தலும், நடுவில் புகைச்சலும். உண்டாக்கும்.

6. வது. சிலேஷ்ம திமிரம்: இது கரு விழியை வெளுப் பாக்கிப் பார்வைக்கின்றும் அப்படியே தோற்றுவிக்கும்.

7. வது. மேக திமிரம்: இது கருவிழியில் மேகம் கம்மியது போல் இருள் அடையச் செய்யும்.

ஆக திமிர ரோகம் 7ம். முற்றியது.

இவற்றுள் வெள்ளெழுத்து மாலைக் கண், மாந்தார திமிரம் என்னும் 3ம். சாத்தியமாம்.

மற்றவை அசாத்தியமாம்.

கருவிழி 6-வது பிரிவாகிய வலி ரோக பேதம்.

வலி ரோகமானது, நீர்வலி, இமைவலி, சோரி வலி என 3. விதப்படும். இவற்றுள் 1 வது நீர்வலி, இது வெளுத்து நீண்டிருக்கும். 2 வது இமைவலி, இது பிறப்பைப் போல் வளர்ந்திருக்கும். 3. வது சோரி வலி இது இரண்டு கடைக்கண் வரைக்கும் ரத்த நிறத்துடன் படர்ந்திருக்கும். ஆக வலிரோகம் 3ம். முற்றியது.

கருவிழி 7. வது. பிரிவாகிய குந்த ரோக பேதம்.

குந்த ரோகமானது சுதைக் குந்தம், ரத்த குந்தம், மோர்க் குந்தம், என மூன்று விதப்படும். இவற்றுள் ரத்த குந்தம், 1ம். அசாத்தியமாம். மற்ற 2ம். சாத்தியமாம். ஆக குந்த ரோகம் 3ம். முற்றியது.

கருவிழி 8 வது பிரிவாகிய திமிர ரோக பேதம்.

திமிர ரோகமானது, வெள்ளெழுத்து, மாலைக்கண், மந்தார திமிரம், வாதபித்த திமிரம், நீர்த்திமிரம், சிலேஷ்ம திமிரம், மேக திமிரம், என 7 விதப்படும். இவற்றுள் 1 வது வெள்ளெழுத்து, இது அகாலத்திலும் காலத்திலும், இரு விதப்படும். இவற்றுள் அகால வெள்ளெழுத்து என்பது 11 வது பக்கத்தில் கூறிய ஆலோசக பித்தத்தினது பிரகாசம் சில பித்த வஸ்துக்களினால் அதிகரிக்கும் போது சிறுவர்களுக்கும் உண்டாக்கும். இதனால் எழுத்து முதலிய சிறிய வஸ்துக்களும் கண்ணுக்குப் புலப்படுவது போல் இருந்து காரணமில்லாமலே மயங்கி மறையப்படும். கால வெள்ளெழுத்து என்பது 37 வயதிற்கு மேல் சொல்லாநின்ற பித்த கோளை ஒளியானது வலிகின்ற போது பிறந்து, இவ்வொரு வேளை கொஞ்சம் வயிற்று கோளை தருவது மன்றி

<u>கருவிழி ௭. வது. பிரிவாகிய அக்கிர ரோக பேதம்:</u>

அக்கிர ரோகமானது, விரண அக்கிரன், கருங் அக்கிரன், விழி விழுங்கிச் அக்கிரன், வெண் அக்கிரன், கனற் அக்கிரன், என ஐந்து விதப்படும்.

இவற்றுள்:- 1. விரண அக்கிரன்:-

இது கருமணியின் மீது மிகுந்த விரணத்-தை உண்டாக்கும்.

<u>2. வது.</u> <u>கருங் அக்கிரன்</u>: இது விழியைச் சுற்றிலும் உளுந்து போல் ஆவாரங்களை உண்டாக்கும்.

<u>3 வது</u> <u>விழி விழுங்கிச் அக்கிரன்</u>: இது கருவிழியின் கீழ்ச் சந்தியில் நின்றும் வெள்ளொருச்சி போல் படர்ந்து விழியை மறைக்கும். இதனால் அதிக வேதனையும் எரிச்சலுமுண்டாகும்.

<u>4. வது. வெண் அக்கிரன்</u>:- இது குழந்தைகளின் கரு விழியை விட்டுச் சுற்றிலும் அக்கினி நிறத்தை உண்டாக்கும்.

<u>5. வது.</u> <u>கனற் அக்கிரன்</u>:- இது விழியில் கோளையும், உள்ளில் அனல் போல் காந்தலையும் உண்டாக்கும்

ஆக அக்கிரன் 5. ம். முற்றியது.

இவற்றுள் விரண அக்கிரன் ஆதியான 3. ம். அசாத்தியமாம். மற்ற 2:ம். சாத்தியமாம்.

கருவிழி 10. வது. பிரிவாகிய பூரோக பேதம்:

மதுமேக ரோகத்தினாலும், உஷ்ண ரோகத்தினாலும், மிகு நீர்க் கோவையினாலும், கருவிழியில், ஆணி உக்கல், புகை என்னும் 3. விதப் பூ உண்டாகும். இவற்றுள் புகை சாத்தியம். மற்ற 2.ம் அசாத்தியம். ஆக பூரோக மூன்றுடன் கருவிழி ரோகம் 45.ம். முற்றியது.

வெள்விழி ரோக பேதம்:

வெள்விழியில் எழுச்சி, படர்த்தி, நெரிசல், புற்று, இமிழம், வரி, என்னும் 6. வகைப் பிரிவினால் 20 வித ரோகம் பிறக்கும்.

வெள்விழி:- 1. வது. பிரிவாகிய எழுச்சிரோக பேதம்:

எழுச்சி ரோகமானது, வலி எழுச்சி, விரண எழுச்சி, குலை எழுச்சி, நீர் எழுச்சி, உக்கிரெழுச்சி, என 5 விதப்படும்.

இவற்றுள் 1. நீர் எழுச்சி ரோகம்:- இது வெள்விழியில் தேக மசப்போல் வட்டமாகத் தசையைப் பரவச் செய்யும்.

2. விரண எழுச்சி:- இது வெள்விழியில் கருங் குன்றியைப் போல் மாமிசத்தை வளர்ப்பிக்கும்.

3. குலை எழுச்சி:- இது உடுக்கினது பிரமாண சதையைப் பிறப்பிக்கும்.

4.வது. நீர் எருச்சி:- இது நீர் துளியைப் போல் கனகனப்பான சதையை உண்டாக்கும்.

5.வது உள் தெருச்சி:- இது பருக்கைக் காயைப் போல் துர் மாமிசத்தை வரப் பண்ணும்.

ஆக எருச்சி ரோகம் 5.ம். முற்றியது.

இவற்றுள் வலி எருச்சி, நீர் எருச்சி, குலை எருச்சி, ஆகிய 3ம். சாத்தியமாம். மற்ற 2ம் அசாத்தியமாம்:-

---

<u>வெள்விழி. 2. வது. பிரிவாகிய படாத்தி ரோக பேதம்:</u>

படாத்தி ரோகமானது, சதைப்படாத்தி, வலிப் படாத்தி, சோரிபடாத்தி என 3 விதப்படும். இவற்றுள் 1.வது சதைப்படாத்தி, இது வெள் விழியில் மிருதுவான சதையைத் தழைக்கும் படிச் செய்யும்.
2.வது. வலிபடாத்தி. இது வெள் விழியில் வலிக் கண் கனைப் போல் மாமிசத்தைத் வளர்ப்பிக்கும். 3 வது சோரிபடாத்தி, இது வெள் விழியில் ரத்தம் கழும்பும் பழுவாகிய சொறிச் சதையை வளர்ப்பிக்கும். ஆக படாத்தி ரோகம் 3.ம். முற்றியது. இவற்றுள் வலிப் படாத்தி ரோகம் சாத்தியமாம். மற்ற 2ம். அசாத்தியமாம்.

<u>வெள்விழி 3. வது பிரிவாகிய நெரிசல் ரோக பேதம்:</u>

நெரிசல் ரோகமானது, துளி நெரிசல். உலர்ந்து நெரிசல், விரண நெரிசல், என 3. விதப்படும். இவற்றுள் 1. வது துளி நெரிசல், இது வெள் விழியில் வீங்கி வினது துளியைப் போல் மாமிசத்தை உண்டாக்கும். 3. வது விரண நெரிசல், இது விரணத்தை உண்டாக்கும். ஆக நெரிசல் ரோகம் 3.ம். முற்றியது. இம் மூன்றும் சாத்தியமாம்.

வெள்விழி 4. வது பிரிவாகிய புற்று ரோக பேதம்!

புற்று ரோகமானது, சதைப் புற்று, நீர்ப் புற்று, அழற்புற்று என 3 விதப்படும். இவற்றுள் 1. வது சதைப் புற்று இது வெள்விழியில் ரத்தத்தினால் சிவந்த சதையை வளர்ப்பிக்கும். 2 -வது நீர்ப் புற்று. இது. வெள் விழியில் நீர்க் குமிழி போல் சதையை எழுப்பும்.

3. வது அழற்புற்று!- இது வெள்விழியில் காந்தலுடன் விம்மலான சதையை உண்டாக்கும். ஆக புற்று ரோகம். 3. ம். முற்றியது. இவற்றுள் அழற்புற்று அசாத்தியமாம். மற்ற 2. ம். சாத்தியமாம்!

வெள்விழி 5. வது. பிரிவாகிய குமிள ரோக பேதம்:

குமிள ரோகமானது, மாமிசக் குமிளம், ரத்தக் குமிளம், நீர்க் குமிளம் என 3. விதப்படும். இவற்றுள் 1. வது சதைக் குமிளம், இது வெள்விழியில் கறுத்த கொப்புளத்தை உண்டாக்கும்.

2. வது. ரத்தக் குமிளம்!- இது வெள்விழியில் செவ் குன்றியைப் போல் சிவந்த கொப்புளத்தை உண்டாக்கும். 3. நீர்க் குமிளம். இது வெள் விழியில் அங்கம் படும் போல் கொப்புளத்தை உண்டாக்கும். ஆக குமிள ரோகம் 3. ம். முற்றியது. இவற்றில் மாமிசக் குமிளம் சாத்தியம்! மற்ற 2. ம். அசாத்தியமாம்!

3. வது. இடர் பில்லம்!- இது இமையின் அடியிலும் கருவ மத்தியிலும் இருக்கின்ற நரம்புகளை மஞ்சள் நிறமாக்கித் தடிக்கப் பண்ணும். ஆக பில்ல ரோகம். 3. முற்றியது. இவற்றுள் நீர்ப்பில்ல ரோகம் அசாத்தியமாம். மற்ற 2. ம். சாத்தியமாம்!

3. வது இடர் பில்லம்: இது இமையின் அடியிலும், புருவ மத்தியிலும் இருக்கின்ற நரம்புகள் மஞ்சள் நிறமாகித் தடிக்கப் பண்ணும். ஆக பில்ல ரோகம் 3.ம் முற்றியது. இவற்றுள் நீர்ப் பில்லரோகம் அசாத்தியமாம். மற்ற 2.ம் சாத்தியமாம்.

<u>இமை: 2. பிரிவாகிய தடித்தலாதிரோக பேதம்:</u>

தடித்தல் ரோகமானது, இமைத் தடித்தல், இனிச் சக்கண் முடமயிர் என 3 விதப்படும். இவற்றுள். 1. வது இமைத் தடிப்பு. இது கண்களில், பரபரப்பான தினவு. நீர்த்தும்பல், இமையில் பரு விருப்புடன், திமிர், விம்மல், ஓரமெல்லாம் கனத்தல், என்னும் இக் குணங்களை உண்டாக்கும். 2. வது இனிச் சக்கண். இது. இமை விளிம்பில் தடித்தல், விரணம், மிகுந்த அக்கோளை, கண் கூசுதல், இதனில் வியசனம் என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இதை புளிச்சக் கண்ணென்றும் சொல்வர். 3. வது முடமயிர் இது இரண்டு இமைகளும் சரிந்து ஒட்டிக் கொண்டு நீர் பெருக்கினால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும் போது பிறக்கும். இதனால் இமையின் உள்ளில் தைத்துக் கொள்ளல், வேதனை, கருமணி வெளுத்தல், அதில் திமிர் என்னும் இக் குணங்களுண்டாகும். ஆக தடித்தலாதி ரோகம் 3.ம் முற்றியது. இவற்றுள். முடமயிர் அசாத்தியம். மற்ற 2ம். சாத்தியம்.

வெள்விழி 6-வது. பிரிவாகிய வரி ரோக பேதம்:.

வரி ரோகமானது, வெள்வரி, நீலவரி, ரத்தவரி, என3 வகைப்படும்.
இவற்றுள் 1. வது வெள்வரி:- இது வெள்விழியில், மீனின் சினைப் பைபோல் வரையை உண்டாக்கும்.
2. வது நீலவரி, இது மிகுந்த பசுமை உள்ள துரிசினது நிறத்தை ஒத்த வரையைக் காண்பிக்கும். 3-வது ரத்தவரி, இது, செந்நிற வரையைப் பிறப்பிக்கும்.
இவற்றுள், நீலவரி, சாத்தியமாம். மற்ற 2.ம். அசாத்தியம்.
ஆக வரி ரோகம் மூன்றுடன் வெள்விழி ரோகம். 20.ம். முற்றியது.

இமை ரோக பேதம்:.

இமைகளில் பில்லம், தடிப்பு, பழுமம், கழல், ஷேர்ப்பாயிசிஸ், என்னும் 5. வகைப் பிரிவினில் 16. வித ரோகம் பிறக்கும்.

இமை 1. வது பிரிவாகிய பில்ல ரோக பேதம்:.

பில்ல ரோகமானது, ஷேர்ப்பில்லம், அமரபில்லம், இடர் பில்லம், என 3 விதப்படும். இவற்றுள், 1. வது ஷேர்ப்பில்லம், இது, இமை முறைக்கருடன் கனத்தல், கண்ணில் மிகுந்த அலம் வடிதல், அக் கண்ணைச் சுற்றிலும் புருவத்திலும், உச்சியிலும் நிமிடுடன் கில்லிட்டு நோதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும். 2. வது அமரபில்லம். இது இமையில் ரத்தம் போல் சிவந்த தசை தடித்தல், கீழ் இமை ஒட்டிக் கொள்ளுதல் கண்ணெளி மயங்குதல், அதிக அலம் வடிதல். என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

→

கடைக்கண் ரோக பேதம்:

கடைக் கண்களில், கண்ணடைப்பு, பூசாந்திரம் படாத்தி இவை விழிவாதம், விரணப்பரு, ஒளித்திரதி, இமைக்குரு, குமிழ், நக்ஷத்திரவாயு, கண்ணெவு என்னும் 11 வகைப் பிரிவினில் 15 வித ரோகம் பிறக்கும்!

கடைக்கண் 1-வது பிரிவாகிய கண்ணடைப்பு ரோகம்:

இது கடைக்கண்ணில் உப்பல் உண்டாக்கிக் கொண்டை இருக்கும்!

கடைக்கண் 2-வது பிரிவாகிய பூசாந்திர ரோகம்:

இது, கடைக்கண்ணில், பீளசாரும் இடத்திற்கு எட்கடை இடம் விட்டு, பருத்தி விதையைப்போல் உப்பல் உண்டாக்கும்.

கடைக்கண் 3-வது பிரிவாகிய படாத்தி ரோக பேதம்:

படாத்தி ரோகமானது, சீழ்ப் படாத்தி, சதைப் படாத்தி, ரத்தப் படாத்தி என 3 விதப்படும். இவற்றுள் 1-வது சீழ்ப்படாத்தி இது, கடைக் கண்ணில் சீழ்த்தை ஒழுகவிக்கும். 2-வது சதைப் படாத்தி, இது கடைக் கண்ணில் தூரிச் சதையை வளர்ப்பிக்கும். 3-வது ரத்தப் படாத்தி இது கடைக்கண்ணில் வெப்பத்துடன் ரத்தத்தை வடியப் பண்ணும். ஆக படாத்தி ரோகம் 3ம் முற்றியது. இவை 3ம் சாத்தியமாம்;

→

கடைக்கண் 4.வது பிரிவாகிய குவை ரோக பேதம்:

குவை ரோகமானது, நீர்க் குவை, சதைக்குவை, ரத்தக் குவை என 3 விதப்படும். இவற்றுள்:

1 வது நீர்க்குவை. இது, கடைக் கண்ணில் சிலேஷ்ம மொத்தையைப் போலவே நீர் மாமிசத்தை வளர்ப்பிக்கும்.

2.வது சதைக்குவை!- இது கடைக் கண்ணில் கருங்குன்றியைப் போல் தசையைப் புடைப்பிக்கும்.

3.வது. ரத்தக் குவை!- இது. கடைக் கண்ணில் ரத்த நிறத்துடன் கடினத்துவமான சதையை உண்டாக்கும்!

ஆக குவைரோகம் 3.ம். முற்றியது. இம்மூன்றும் சாத்தியமாம்:-

கடைக்கண்: 5.வது பிரிவாகிய விழிவாதம்:

இது வாயுவைக் கொண்டு இமைகளை ஆட்டுவித்துக் கண்களைச் சுருக்கும்.

கடைக்கண் 6-வது பிரிவாகிய இரணப்பரு:

இது. கடைக் கண் விளிம்பில் கற்கண்டுவடிவுள்ள இரணத்தை உண்டாக்கும்.

கடைக்கண் 7.வது பிரிவாகிய விக்கிரதி:

இது கடைக் கண்ணில் நரம்பின் வழியாகத் தடித்தல் உண்டாக்கும்.

கடைக்கண் 8 வது பிரிவாகிய இடைக்கிரு:

இது, கடை விழியில் சிறிய கட்டிகளை எழுப்பும். இதனைக் கண் கட்டி என்பர்!

கர்ண ரோக பேதம்:

கர்ணம் என்கிற காதுக்குள் வாதகர்ண சூல ஆதியாக ரத்த கர்ண சூல ஈறாக 5 வித ரோகம் பிறப்பது மன்றி. சங்கராதியாக ௨0 வித ரோகம் பிறக்கும். அர், கர்ணம். கர்ணம், சோத்ரம், சிரவணம், சிரவம், சுருதி; அசோத்திரம் - செவியன் ஆகி 10ம். காதின் பெயராம்.

1 - வது வாதகர்ண சூல ரோகம்:

இது பிரசவம், நீர் விளையாடல், நினைவினை செவியைக் குடைந்து சொறிதல், ஆகிய இவைகளால் பிறந்து, அதிகரிக்கின்ற திரி தோஷங்களினால் செவி நரம்புகளில் வியாபித்து, அம்மார்க்கத்தில் வேதனை செய்யும். இதனால், காதுகளில் குத்தல், திரும்பிக்கும் நோவு. அந்த இடத்தில் மரத்தல், குளிர்ச்சியாகிய வஸ்துக்களைப் பிழிந்தால் ஸ்பரிச ஞானந் தெரியாமை நாட்சென்று பக்குவப்படல், நோவு நிற்றல் கொஞ்சம் சலங்கம் முதல், சத்தம் கேளாமை, உள்ளில் பூச்சிகள் பறப்பது போல் ஒரு விகாரமாகத் தோற்றுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

---

௨. வது. பித்த கர்ண சூல ரோகம்:

இது. காதுகளில் எரிச்சல், வீக்கம், சீதள வஸ்துவைப் பிழிந்தால் இதவு, அதிகை, சீக்கிரத்தில் பக்குவப்படல் அதில் நின்றும் குளிர்ச்சியாகிய சலம் வடிதல், அது வடியாமல் உள்ளில் கம்மிய காலத்தில் நோவு நிற்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்:

3-வது. சிலேத்ம கர்ண சூல் ரோகம்!

இது, சிரசு, தாடை, கழுத்துப் பிடரி, ஆகிய இடங்களில் கனத்தல் உஷ்ணவஸ்துவில் இச்சை, காதுகளில் அற்ப நோவு, ~~[illegible]~~ நமைச்சல், வீக்கம் என்றும் இக் குணங்கள் உண்டாக்கும். இது பக்குவப்பட்டு உடையுங்காலத்தில், கெட்டியாயும், வெண்மையாயும் சலம் வழியும்.

4-வது. திரிதோஷ கர்ண சூல் ரோகம்:

இது சுரம், சொக்சம் உஷ்ணவில் இச்சை, காது வீக்கம், அதிக நோவு, சத்தங் கேளாமை. என்றும் இக் குணங்கள் உண்டாக்கும்:

5-வது. ரத்த கர்ண சூல் ரோகம்:

இது, பித்த கர்ண சூலையினு பற்றிய லக்ஷணமும், வாத கர்ண சூலைக்குரிய சில குணங்களையும் உண்டாக்கும். அன்றியும். செவியானது கல்லு முதலியவைகளால் அடிபட்ட காலத்தில் உள்ளில் சீழ் ரத்தம் சேர்ந்து கெட்டால், பிறகதால், அபிகாதத்தால் எனப் பேர் பெறும். அதற்கும் இக் குணங்களெல்லாம் உண்டு. ஆக கர்ண சூல் ரோகம் ஐந்தும் முற்றியது!

---

1. வது. கர்ண நாத ரோகம்:

இது. காதுகளில் சத்தத்தை உண்டாக்குகின்ற நரம்புகளில் வாயு சேரும்காலத்தில் பிறக்கும். இதன் காரணம் இல்லாமலே காதுக்குள் நானாவித சத்தமான நாதங்கள் உண்டாகும்.

2. வது. பாதிர்ய ரோகம்:

இது, வாயுவு, சிலேஷ்மத்துடன் கூடி சத்த நரம்பில் வியாபிக்கும் போது பிறக்கும். இதனால் காதுக்குள் சகல சத்தத்தையும் தெரிவிக்கின்ற நாதமானது நெருக்கி அடையா இருந்தாலும் அதற்கு வெளி ஓட்டம் இல்லாமையால் அதிகக் கூச்சலிட்டு உரக்கக் கூவினாலும் கிணற்றுக் கிள் பேசுவது போல் பிரயாசத்தின் மேல் கொஞ்சம், கொஞ்சம் சத்தம் கேட்கும்.

3. வது. பிரதிநாக ரோகம்:

இது, வாயுவினால் சிலேஷ்மம் உலர்ந்து சத்த நரம்புகளில் அடர்ந்து கொள்ளும் காலத்தில் பிறக்கும். இதனால், காதுகளில் அதிக நோவும். சத்தக் கெடுதியும் உண்டாகும். இது சத்தத்தை மிகவும் வெளிவிடாமல் கட்டுதலால் பிரதிநாக ரோகம் எனப் பெயர் பெற்றது.

நாகம் என்பது கட்டுதல்.

---

4. வது. கர்ணன் கண்டு ரோகம்:

இது. காதுக்குள் அதிக கபத்தினால் நமைச்சலையே உண்டாக்கும்!

5. வது. கர்ண சோபை ரோகம்:

இது. காதுக்குள் அதிக வீக்கத்தை மாத்திரம் உண்டாக்கும்.

6. வது. கர்ண பூதி ரோகம்:

இது பித்தத்தினால் கபமானது கெடுதியை அடையும் காலத்தில் பிறக்கும். இதனால் காதுக்குள் இருக்கும் இரும்பின் சருமத்தில் நோவு, ஒரு வெளி இன்மை, மிகுந்த துர்க்கந்தம் வியர்வை போல் ஒழுகு சலம் வடிதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பூதி என்பது — துர்க்கந்தம்!

7. வது கர்ண விக்கிரதி ரோகம்:

இது. செவிக்குண்டாகிற நமைச்சலால் சில கருவியைக் கொண்டு குடைவதனால் புண்ணாகும் காலத்தில் பிறக்கும். இதனால், முற் கூறிய விக்கிரதிக் கட்டிகளுக்குள்ள குணங்களெல்லாம் உண்டாகும்!

—

8. வது. கர்ண அற்புத ரோகம்:

இது. காதுகளின் மூலத்தில் மூலரோக உபத்திரவம் போல், உபத்திரவமும், துர்க்கந்தமும், செவிடும் உண்டாகும்படிக்குச் செய்யும்.

கர்ணம் என்பது காது, அசம் என்பது மூலம் அற்புதம் என்பது உள்ளிலே மிகுந்த நோவுடன் [illegible] வீக்கம்!

9. வது. கர்ணார்புத ரோகம்:

இது. காதுகளில் முன்பு சொன்ன கர்ணா சோர்புத ரோகங்களுடன், செவிப்பிரதேச மெல்லாம் ஏக வீக்கத்தையும் உண்டாக்கும்.

10. வது. கர்ண கிருமி ரோகம்:

இது, காதுகளில் கிரிமி தோஷச் சேர்க்கையினால் பிறக்கும். இதனால் கிருமிகள் ஜனித்து, அந்த இடத்து சீழ், ரத்தம், மாமிசம் இவைகளைப் புசித்துக் கொண்டு அதிக உரஸையும் நோவையும் உண்டாக்கும்.

---

11. வது. கர்ண கூசிகா ரோகம்:

இது. காதுகளில் வாயு தங்கும் காலத்தில் பிறக்கும் இதனால், செவியினது உட்கருவியாகிய குறும்பி முடங்கிக் கொண்டு, மிகுந்த உபத்திரவத்தை உண்டாக்கும்.

கூசிகா என்பது முடங்குதல்.

12. வது. கர்ண பிப்பலி ரோகம்:

இது மாமிசத்தைப் பற்றிப் பிறக்கும். அப்போது, காதுகளில் துர்மாமிசமானது திப்பலிக் காயைப் போல் ஒன்றாயேனும் பலவாயேனும் உண்டாகிக் கொண்டே இருக்கும்.

பிப்பிலி என்பது திப்பலிக்காய்.

---

13 - வது. கர்ண பிதாரிகா ரோகம்:

இது, திரிதோஷத்தினால் காதுக்கு சிறிய வெட்பூசினிக் கிழங்கைப் போல், மாமிசத்தை உண்டாக்கும். இதனால், அந்த இடத்தில் நோவு, பாரத்தல், வீக்கம், கருத்த தயிலம் போல் சலம் வடிதல், பொறுத்துப் பொறுத்துக் குத்துதல், திரும்பி படுக்கில் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதனைச் சஷ்குலி ரோகம் என்பர்:

சஷ்குலி என்பது - முறுக்கு:

14. வது. கர்ண பால சோஷ ரோகம்:

இது காதுக்குள்ளிருக்கும் நரம்புகளில் வாயுத் தங்கிச் சஞ்சரிக்கும் போது பிறக்கும்: இதனால், நெற்றியானது மிகவும் உலர்ந்து கஷ்டத்தை அடையும்:

பாலம் என்பது நெற்றி.

சோஷம் என்பது - அஹிகம்:

15 - வது. கர்ண தந்திரிகா ரோகம்:

இது காதுக்குள் பிசினைப் போல் கெட்டியாகவும், இழுத்தால், அறுமல் தந்தியைப் போல் நீளுவதாயும் இருக்கின்ற சீழை உண்டாக்கும்:

—

16. வது. கர்ண பரிபோடக ரோகம்:

இது. வாயுவினால் காதுக்குள் அற்ப வீக்கத்தை உடைய கொப்புளத்தைப் பிறப்பிக்கும். அது வெகு நாள் அப்படியே யிருக்கும். பின்பு விருத்தி அடைய ஆரம்பித்தால் சீக்கிரத்தில் விருத்தியடையும். இதனால் அம்மார்க்கத்தில் மிக சிவப்பு நிறமும் நோவும் உண்டாக்கும்.

17. வது. கர்ணோற்பாத ரோகம்:

இது. இரத்த பித்த ரோகத்தினாலும் மெத்தவும் கனத்த காதணிகளினாலும், காதுகளில் வேர்க்குரு போல் சிறிய கொப்புளத்தை உண்டாக்கும். அது பழுத்து உடைகையில் வீக்கம், அத்துடன் பரும் பருமாய் கொப்புளங்கள் விஸ்தாரம், எழும்புதல், அவைகளில் வியர்வையும் ரத்தமும் அருகையும் பிறக்கிறதுடன் தினவு நோவு, எரிச்சல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

உற்பாதம் என்பது — அதிக உபத்திரவம்.

—

18. வது. கர்ணோன் மந்த ரோகம்:

இது வாத சிலேஷ்மங்களினால் பிறக்கும். இதனால். செவி மார்க்கத்தில் நிலை பெற்ற வீக்கம், அதில் நோவின்மை, அதிக கனைச்சல், சீக்கிரத்தில் வசப்படாமை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது. வீக்கத்தைக் கொண்டு மந்தத்தை உண்டாக்கலால், கர்ணோன் மந்த ரோகம் எனப் பேர் பெற்றது.

இதற்கு கலிலகம் என்றும் ஒரு பேருண்டு!

௧௯. வது. துக்க வர்த்தன ரோகம்!

இது, காது குத்தும் போது கை வசமறியாமல் நரம்பின் மார்க்கங்களில், குத்துவதனால் பிறந்து. வேதனையைச் செய்யும், அப்போது நமைச்சல் எரிவு, வீக்கம், பக்குவகாலத்தில் நோவு என்னுமிக் குணங்கள் உண்டாகும்!

வர்த்தனம் என்பது — அதிகரித்தல்!

௨௦ – வது. கர்ணலிகிய ரோகம்:

இது, சிலேஷ்மத்துடன் கூடிய ரத்தத்தினால் காதுக்குள் கிருமிக்களைப் பிறப்பிக்கும். அக்கிருமிகள் சிறு சிறு கொப்பிளங்களை உண்டாக்கும். அதனால், காதுகளில் வெகு தினவு, வியர்வை, வேதனை, அம்மார்க்கத்தில் எந்நேரமும் ஒரு கருவியைக் கொண்டு குடைதற்கே நினைப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

லிகியம் என்பது — துழாவிக் குடைதல்!

———×××———

11. வது. விஸ்போட ரோகம்!

இது, முற்கூறிய குரு ரோகத்தைப் பார்க்கிலு மதிக விரணத்தையும் நோவையும் வெகு சங்கடத்தையும் உண்டாக்கும்!

—

12. வது. வித்தா ரோகம்:

இது, வாதபித்தங்களில் தாமரைக்காய்ப் போல் உருவமும் நிறமும். முளைகளும் உள்ள புடைகள் உண்டாக்கும். அதி வேதனையோடும் கூடிய விரணத்திற்கு வித்தா எனப் பெயராம்:

13. வது. கர்த்தபி ரோகம்:

இது, மண்டலாகாரமாய் வெண்காக்கட்டான் காயினது உருவத்துடன் கொப்புளங்கள் விஸ்தபட் உண்டாக்கும்:

14. வது. கட்சியா ரோகம்:

இது, வாதத்தை (அல்லது) பித்தத்தைக் கொண்டு அக்குளுக்கு உள்ளிலாவது அதைச் சுற்றிலுமாவது நெற்பொரியைப் போல் மெல்லிய கொப்புளங்கள் நெருக்கமாக நிறைப் பண்ணும். கட்சி என்பது — அக்குள்:

15. வது. கண்ட ரோக லக்ஷணம்:

முற்கூறிய கட்சியா ரோகத்தினது பக்கத்தில் கட்டிகள் உண்டாகி வெடித்துப் பழுத்தால் கண்ட ரோகமாம். கண்டம் என்பது - இடம்.

16 - வது. ராஜிகா ரோகம்:

இது, வெய்யிலாகிய இருக்கத்தால் வருகின்ற வியர்வையைக் கொண்டு கடுகு நிறம் போலவே இருத்தலும் பழுத்தலும் அளைகளை ஒத்தும் வட்டவடிவாய் நெருங்கிய வேர்க்குருவை உண்டாக்கும். இதில் நமைச்சல் விசேஷமாய் இருக்கும். ராஜிகா என்பது கடுகு. இதுவே வேர்க்குருவாம்!

17. வது. ஜாலகர்த்த பிரோகம்:

இது, பித்தப் பிரதானமான வாத சிலேஷ்மங் களினால், விசர்ப்பி ரோகத்தைப் போலக் கறுப்பு, சிவப்பான கொப்புளங்கள் தாமதத்தின் மேல் பிறப்பிக்கும். அவைகள் சிக்கிரத்தில் பழுத்து உடைந்து வலைக்கண்களைப் போல் இருப்பதன்றியும் சுரத்தையும் உண்டாக்கும்.

ஜாலம் என்பது வலை.

18. வது. அக்கினி ரோகணி ரோகம்:

இது. அரத்தினால், மெலிந்தவர்களுக்குப் பித்தப் பிரதானமான வாத சிலேஷ்மங்களினால் அக்குளுக்குள் மாமிசகண்டத்தைப் போல் கட்டிகளை உண்டாக்கும். அவைகள் கட்டை நெருப்பைப் போல் எரிந்துக் கொண்டு உபத்திரவத்தைச் செய்து 5, 7, 15. என்னும் நாட்களில் தப்பாது மரணத்தைக் கொடுக்கும். அந்நாள் தப்பில் சாத்தியமாம்!

19-வது. பரிசல்லி ரோகம்:

இது, வாத பித்த சிலேஷ்மங்களின் குறிகளுடன் வளையாகாரமான கட்டிகளை நெஞ்சு எலும்புகளைச் சுற்றிலும் உண்டாக்கும்:

20:-வது. பிதாரிகா ரோகம்:

இது. அக்குளுக்குள்ளாவது அரைக்கருக்குள்ளாவது நிலப் பூசினிக் கிழங்கைப் போலப் பருத்துக் கெட்டிப் பட்ட கட்டிகளை உண்டாக்கும்:

---

௨1. வது. சர்க்கரை ரோகம்:

இது. அஸ்திநரம்பு, மாமிசநரம்பு, மற்றைய நரம்பு ஆகிய இவைகளில் அநுசரித்து மேகரோகாதியினாலும், வாத சிலேஷ்மத்தினாலும், சரீரம் முற்றிலும், சக்கான் கல்லுகளை கிரந்திகளை உண்டாக்கும். அவைகள் பழுத்து உடைந்தால்: தேன், நெய், கொழுப்பு, என்னும் இவைகளைப் போல் சீழ் வடியும். சிலவேளை அது வாதாதிக்கத்தால் மணலைப் போலும் உமியைப் போலும் உண்டை உருண்டையாக விழுந்தாலும் விழும்.

௨௨- வது. சிருக்கராற்புத ரோகம்:

இது, முற்றிய கட்டிகளைப் பார்க்கிலும் பருத்த கட்டிகளை உண்டாக்கும். இதினின்றும் சர்க்கராரக்தத்துடன் பல நிறச் சீழ் வடியும்.

௨3- வது. வன்மீக ரோகம்:

இது, பாதம், கை, கால், இரண்டு எலும்புகள் சேர்ந்தஸ்தானம். ஆகிய இடங்களில், புற்றினது முகங்களைப் போல் சிறு முகங்களை உடைய கிரந்திகளை எழுப்பும், இதனால், நோவும் திணவும் வியர்வையும் அதிகப்படும்.

௨4. வது கதர ரோகம்:

இது, பருக்காய் கல்லுகளின் மேல் நடக்குதலாலும், முள்ளுகள் தைத்து ஒடிதலாலும் பாதத்தில் அரத்தைப் போலுமிருக்கின்ற முடிச்சுகளை உண்டாக்கும். கதரம் என்பது அரம். இதனை ஆணி என்பர்:

25. வது ரத்த கிரந்தி ரோகம்:

இது நாள்தோறும் மலத்தை அடக்கி, அடக்கி விடுதலால் அபான வாயுவு. ரத்தத்தை நன்றாக அநுசரித்து, அந்த்துவார வளையத்தின் அடியையும் நுனியையும் அருங்கச் செய்யுங் காலத்தில் பிறக்கும். அந்தச் சுருக்கத்தினால் மலமானது பிரயாசையின் மேல் வெளிப் படும். இப்படிக்கு வெளிப்படுந் தோறும் ஆசனத்தில் வெடிப்பு உண்டாக்கிப் பச்சைப் புண்போல் உபாதி செய்துக் கொண்டே இருக்கும்:

ரத்தம் என்பது தடுக்கப்பட்டதாம்:

26-வது. கில்வ ரோகம்:

இது, பித்தப் பிரதானமான வாத சிலேஷ்மங்களினால் நகக் கண்களைச் சுற்றிலும் இருக்கின்ற மாமிசத்தில் கோபவோடுங் கூடிய வீக்கத்தை உண்டாக்கும். இதனால், எரிச்சல், சுரம், முதலிய துக்கங்கள் பிறக்கும். அதுபோல் ஒவ்வொரு நகங்களில் கட்டி எழும்பி உபத்திரவஞ் செய்யும், இதனை, நகச்சுற்று, விரற் சுற்று, உகிர்ச் சுற்று என்பர். இது. வேதனையைச் செய்து நகத்தின் வேரைக் கெடுத்து அந் நகம் விழுவதற்கு முன்பே மறு நகத்தை முளைப்பித்தால் உபநகரோகம் அக்ஷத ரோகம் எனப் பேர் பெறும்!

கில்வம் என்பது உபத்திரவத்தை உண்டாக்குதலாம்:

27-வது குநக ரோகம்:

இது, நகத்தின் பலமான அடிபடுவதனால் பிறந்து, அதில் கடினத்தையும் சொறசொறப்பையும் உண்டாக்கும்:

கு - என்பது கெடுதி:

28-வது அலச விரண ரோகம்:

இது, சாதாரண காலத்திலும், மாரிக் காலத்திலும், கெடுதி மண்ணையாவது அவ்விதச் சலத்தையாவது அழுகிய சேற்றையாவது எந்நேரமும் மிதித்தலினாலும், மிதித்தவுடன் சுத்தி செய்யாமையினாலும், பிறந்து பாதங்களின் ஓரங்களிலும், உள்ளங்காலிலும், விரற் சந்துகளிலும் தினவுடன் கூடிய வெளுத்த புண்கள் உண்டாக்கும்: அதில் நீரும் புளித்த அளம் வடிந்து கொண்டே யிருக்கும். இதை, விரற்புண், சேற்றுப்புண் என்பர். இது கடுக்காயினாலும் வெற்ற புளியங் காய்த் தசையினாலும் போம்.

29-வது திலக ரோகம்:

இது, காலின் விரல் சந்துகளில் திலகம் போல் சிவந்த கொப்புளங்கள் பிறப்பிக்கும். அவைகள் நசுங்கினால் விரணமாகும். திலகம் என்பது பவளம் போல் மிகுந்த சிவப்பு நிறம் உள்ள ஒருவித மரம்.

30-வது மச ரோகம்:

இது கரிய நிறமும், மரத்தலும் உடையதாய் நோவில்லாமல் கொஞ்சம் உயர்ந்திரா நின்ற காப்புகளை எழுப்பும். இதை மருவென்பர்

—

31 - வது. ஜது மணி ரோகம்:

இது முற்கூறிய ரோகத்தைப் பார்க்கிலும் உயர்ந்தது. ஆரம்பத்தில் சிவந்து பின்பு வெளுத்து கறுப்பு நிறத்தையும் எட்பிரமாணத்தையும் அரக்கு மணியின் உருவத்தையும் ஒத்து, சருமத்தில் ஆணி அடித்தது போல் மருவுகள் உண்டாக்கும். ஜது மணி என்பது அரக்குமணி.

32 - வது. லாஞ்சன ரோகம்:

இது, பிறக்கும் போது கறுப்புச் சிவப்புப் புள்ளியுடன் வட்ட வடிவாய் இருக்கின்ற மச்சங்கள் உண்டாக்கும். லாஞ்சனம் என்பது புள்ளி.

33 - வது. வியங்க ரோகம்:

இது, துக்கத்தினாலும் கோபத்தினாலும் வாதமும் பித்தமும் அதிகரிக்கையில் பிறந்து முகத்தில் கறுத்துச் சிறுத்து வட்டமாயிராநின்ற மச்சங்கள் உண்டாக்கும். இது மற்றைய இடங்களில் பிறந்தால், நீலிகா ரோகம் எனப் பெயர் பெறும். இவ் விரண்டிடங்களிலும் வாயுவினால் பிறக்கின்ற மச்சங்கள் சொறசொறப்பாக விருக்கும். பித்தத்தால், பிறந்தால், பிறக்கும் போது சிவந்து வளரும் போது கறுத்திருக்கும். சிலேஷ்மத்தால் வெளுத்துத் தினவைத் தருவதாயிருக்கும். ரத்தத்தால் பிறந்தால், அழற்சியும் நுனியிலும் ரத்த நிறம் உண்டாகிச் சுடுகையாய் ~~விருப்பத்தை~~ வெறுப்பைத் தருவதாயிருக்கும். வியங்கம் என்பது — மச்சம்.

34. வாத பிரசுப்தி ரோகம்:

இது, வாயுவினால் அடிப்பட்ட சிலேஷ்மம் சருமத்தில் சேர்ந்து உலர்த்தும் போது பிறந்து அங்கு வெண்மை நிறத்தையும் செம்மை நிறத்தையும் உண்டாக்கி, பரிசஞானத்தைக் கெடுத்து, தினவுடன் திமிரை உண்டாக்கும். இதனை மேகப் படை என்றும் திமிர் வாதம் என்றும் கூறுவர்:

35. உத்கோட ரோகம்:

இது வாந்திக்குக் கொடுக்கில் வாந்தி ஆகாமல் இரத்த ஜலதிகம் உள்ளே தங்குவதனால் கப-பித்தங்கள் அதிகரிக்கும் போது பிறந்து வட்டாகாரமாய்ச் சிவந்த நிறத்தையும் நமைச்சலையும் உள்ள அனேக விதப் படைகளை உண்டாக்கும். கோடம் என்பது மண்டலம். இதனைத் தேமல் என்பார்:

36. வாத. கோட ரோகம்:

இது, உத்கோட ரோகத்திலுள்ள நமைச்சல் முதலிய குணங்களைப் பெற்று, விசேஷமாகப் படருகின்ற பல விதத் தேமல்களை உண்டாக்கும். இவைகளுக்கு நாறு சங்கிலைக் குடிநீரிலும் காமாசிந்தூரத் தைலமும் பூவரசுக் கலக்கம். வெள்ளைச் சந்தனப் பூச்சு உஷ்ணகால ஸ்நானம் முதலிய உபாயச் சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்:

இமை 3. வது பிரிவாகிய கழல் ரோக பேதம்:

கழல் ரோகமானது, நீர்க்கழல், ரத்தக் கழல், சதைக் கழல் என 3. விதப்படும். இவற்றுள் 1. வது நீர்க்கழல். இது இமைக்கு மேல் புறத்தில் நல் மழையாகிய ஆலங்காட்டியைப் போல் கட்டியை உண்டாக்கும்!

2. ரத்தக் கழல், இது முன்பு சொன்ன இடத்திலேயே ரத்த நிறக் கட்டியை எழுப்பும்!

3. சதைக் கழல் இது மாமிச நிறமுள்ளக் கட்டியைப் பிறப்பிக்கும். ஆக கழல் 3. ம். முற்றியது. இவற்றுள் ரத்தக் கழல் ரோகம். அசாத்தியமாம்: இம் சாத்தியமாம்.

இமை: 4. வது பிரிவாகிய நீர்ப்பாய்ச்சல் ரோக பேதம்:

நீர்ப்பாய்ச்சல் ரோகமானது, இமை நீர்ப்பாய்ச்சல், சற்றுக் குவவு, புகுவெட்டு, இமை பிறச்சி என 4 விதப்படும். இவற்றுள் 1. வது இமை நீர்ப்பாய்ச்சல், இது சிரசின் நீரை இமை நரம்பில் இறங்கும். படிக்கச் செய்யும். இதனால், இமை கனத்தல்: மரத்தல், திமிர், வீக்கம், என்னும் இக்குணங்கள் உண்டாகும். 2. வது. சற்றுக் குவவு, இது இமையினது ரோமம். உதிரவுடன் அந்த இடத்தில் விரணம், நீர் வடிதல், வீக்கம், நோவு, குத்தல், கண் மயக்கம், மிகுந்த பீளை சாரல், என்று மிக் குணங்கள் உண்டாக்கும். 3. வது புகுவெட்டு இது இமை மயிர் உதிரவுடன் அந்த இமையில் விரணம். அனல் போல் காந்துதல், ரத்தம், வடிதல், வீக்கம், தடிப்பு, என்று மிக் குணங்கள் உண்டாக்கும்:

4-வது. இமை விறைச்சி, இது இமைச் சுருக்கம் இல்லாத இறைச்சியைப் போல் செய்வதன்றியும் அதில் நின்றும் சலப் பெருக்கை உண்டாக்கும். இது வாத தோஷம். மசூரி உஷ்ண வியாதி என்றும் ரோகங்களில் உண்டாக்கும். ஆக நீர்ப் பாய்ச்சலாகிய ரோகம் 4.ம் முற்றியது. இந்த 4 ரோகங்களும் சாத்தியமாம்.

<u>இமை 5-வது பிரிவாகிய பதும ரோக பேதம்</u>:

பதும ரோகமானது, நீர்ப்பதுமம், ரத்தப்பதுமம், சதைப்பதுமம், என 3. விதப்படும். 1. வது நீர்ப்பதும ரோகம். இது இமையில் தடிப்பையும் அதிக நீர்ச் அரைப்பையும் உண்டாக்கும். 2. வது. ரத்தப் பதும ரோகம் இது இமையில் சிவந்த நிறத்தையும் ரத்த நீரையும், உண்டாக்கும் 3. வது சதைப் பதும ரோகம் இது இமைக்குள் துர் மாமிசத்தை வளர்ப்பிக்கும்: இவற்றுள் சதைப் பதும ரோகம் அசாத்தியம். மற்றவும் சாத்தியம் ஆக பதும ரோகம் மூன்றுடன் இமைகளில் பிறக்கின்ற ரோகம் 16. ம் முற்றியது.

—.

<u>கடைக்கண் 9. வது. பிரிவாகிய குமிழ ரோகம்</u>:

இது கடைக் கண்ணில் குமிழ் போல் சவ்வைப் புடைப்பிக்கும்.

<u>கடைக்கண் 10. வது. பிரிவாகிய நக்ஷத்திர வாயு</u>:

இது, நயனத்திலும், புருவத்திலும் குத்தலுடன் விரணத்தை எழுப்பி, நாசியில் சலப் பெருக்கை உண்டாக்கிக் கொண்டே இருக்கும்:

கடைக்கண் 11-வது. பரிவாசிய கண்ணெழு.

இது, கண்கள் முற்றிலும் சிவத்தல், உறுத்தல், நீர் சொட்டல், வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாமை, மாதர் மேல் விருப்பம் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

ஆக கடைக்கண் ரோகம் பதினொருடன்

நேத்திர ரோகம் முற்றியது.

—————

விழியுந்தலுக்கு, ராஜை, கொரிதலுக்கு, முருங்கைப் பூவாதி இருதையும், விரிகளுக்கு, அஞ்சனைப் பொடியும். சுக்கிர ரோகங்கட்கு, தாரா நெய்யாதி பதகாரப் பொடியும். படலத்தி, திமிர் இவைகட்கு பசுவின் பாலும், இந்துப் பாதி நெய்யும், பச்சைத் தாம்பர உண்டையும், பூ ரோகங்கட்கு, பச்சை உருண்டை, யானைப் பல்லாதி மாத்திரையுடன் கடல் நுரையும், எழுச்சிகளுக்கு, தேற்றான் கொட்டை [illegible] கிருதமும், படலத்திகட்கு, அமிர்தாஞ்சனப் பொடியும் நெரிசலுக்கு, இந்துப்பும், திரிகடுகாதி நெய்யும் ஆகும். அன்றியும், மேற்கூறிய நேத்திர ரோகங்களுக்கெல்லாம் கிரமமாகச் சிகிச்சாசாரம் என்னும் சாஸ்திரத்தில் விவரித்திருக்கும் அமிர்தாமலக தயிலம், பிக நோகிணித் தைலம், கருஞ்சிறுமா, வெண்சிறுமா, விகெசவந்த பாவனைவரு காஞ்சனம் கோகிலாக்ஷி மூலாஞ்சனம், நாரி கொளாஞ்சனம். வச்சிர ரத்தின காமத்திரை முதலிய ஔஷதங்களையும் ரத்தின சுதாரத்தின சிகிச்சைகளையும் முறைமைப் படிக்கச் செய்யில், அவைகள் சொஸ்தியாகும்.

—————

அவ்விடத்து நரம்புகளில் நின்றும் மயிர்வைச்சலம் கசியப்படும்: சிலேஷ்மத்தால் பிறந்தால் அச்சருமமானது மிகவுங் கடினமாயிருக்கும். திரிதோஷத்தால் பிறந்தால், அச்சருமமெல்லாம் நகத்தினது நிறம் போல் தோற்றுவதும் தவிர அதில் மாறாது எரிச்சலும் உண்டாகும்:

கலதி என்பது - மருங் கலாக்குவதாம்:

9-வது. பலித ரோகலக்ஷணம்:

அதிக துக்கம், கனகோபம், மிகு பயம், கடு முதலியவற்றையுண்டல், சுரா அருந்தல், பலவித வேலையான உழைப்பு, மனச்சஞ்சலம், தேக காங்கை ஆகிய இவைகளினால் உண்டான வெப்பமானது, தேகம் முற்றிலும் வியாபித்து, சிரசைப் பற்றி ஏறி, அங்குள்ள கபால ரோமங்களின் வேர்களையெல்லாம். வெகும் பழுக்கச் செய்து நரையை உண்டாக்கும். அப்போது அம்மயிர்கள் வாதத்தால் நரைத்தால் முனைத்ததுடன் முனை பிளந்து கொஞ்சம் கருமை நிறத்தையும், நகங்களின் நிறத்தையும் பெற்று, தொட்டால் வெப்பத்தைத் தருவதாயிருக்கும்! பித்தத்தால் நரைத்தால், செம்மை பீதம் என்னும் நிறங்களைப் பெற்றிருப்பதன்றியும். அந்த ரோமக்கால்கள் தோறும் எரிச்சலும் உண்டாகும்! சிலேஷ்மத்தால் நரைத்தால், அம்மயிர்கள் வெள்ளிக் காசைப்போல் வெளுத்தும் மினுமினுத்தும் நரை அதிகரித்தும் இருக்கும்: அன்றி நரைக்கும் இடங்களில் நமைச்சல் உண்டாக்கும். திரிதோஷத்தால் நரைத்தால் வாத முதலிய மூன்று ரோகங்களுக்குள்ள.

குணங்களெல்லாம் இதில் உண்டாயிருக்கும்.

பலிவிதம் என்பது நரை. ஆக கபாலரோகம் 9-ம்
முற்றியது:-.

13- வது விரண பேத படலம்:

விரண பேதம்:

தேகத்திலுண்டாகின்ற விரணமானது இருவகைப்படும். அவையாவன:- வாதம், பித்தம், சிலேஷ்மம், தொந்தம், திரிதோஷம் என்று இவைகளினால் பிறக்கின்ற விரணங்கள் ஒரு வகை. இதற்கு நிச விரணம் என்று பெயர். காயங்களினால் உண்டாகின்றது ஒரு வகை: அதற்கு அகந்துக விரணம். என்று சத்தியோ விரணம் என்றுபெயர். இவ் இருவகை விரணங்களின் குணங்களினால் அவைகளுக்கு துஷ்ட விரணம் என்றும் அதுஷ்ட விரணம் என்று கூறப்படும். அதன் விஸ்தாரம் என்னைக்கும் ஆறு இருப்பதெதுவோ அதுவே துஷ்ட விரணமாம். சீழ், ரத்தம், சிவந்த தண்ணீர் முதலியவைகளைக் காட்டிக் கொண்டிருந்தாலும், சில நாட்பொறுத்து சிகிச்சைகளினால், ஆறப்படுவதும் எதுவோ, அதுவோ, அதுஷ்ட விரணமாம். இவைகள் 65 விதப்படும்.

அவையாவன:- துஷ்ட விரணம் 15, அதுஷ்ட விரணம் -49. அந்த ரத்தத்தால் பிறக்கின்ற விரணம் ஒன்று எனபனவாம்.

8-வது. ஊர்த்து வகுத ரோகம்:

இது, தொப்புளின் கீழிருக்கும் அபானவாயு வானது, மூல ரோகத்தினாலாவது, குன்ம ரோகத்தினாலாவது, சிலேஷ்மரோகத்தினாலாவது, மேல் நோக்கி ஏறும் போது பிறக்கும். அவ்வாயுவு மலசலாதிகளில் தோய்ந்து மேல் நோக்கலால், வாயில் துர்க்கந்தம் உண்டாகிக் கொண்டே இருக்கும். இது வாய்க்குக் கொடிசப் புரிவிப்பதால் ஊர்த்துவ குதரோகம். எனப் பேர் பெற்றது.

முக ரோக சாத்தியா சாத்திய நிதானம்:

முகரோகம்: 75ல். ரத்ததோஷ்டம், அற்பு தோஷ்டம், மாமிச தோஷ்டம், சலாற்பு தோஷ்டம். தந்தகரோணம், தந்தசியாவம். தந்த அஸ்திரம், தந்தமகா அஸ்திரம். வாத தந்த மூலம், பித்த மூலம், சிலேஷ்ம தந்தமூலம், திரிதோஷ தந்த மூலம், அஜ தந்த மூலம், ஜிகவாலதகம், உபஜிக்வா ரோகம், தாலுபிடகம், தாலுவற்புதம் தாலுகச்சபரோகம். கண்டரந்த ரோகணி, கண்பிருந்தம், கண்டகரோகம், அஜய ரோகம், சதக்கிணி, கொற்புதம், கண்கண்ட அரக்கிணி, ஊர்த்துவகுதம். ஆக 27 வித ரோகமும். கஷ்டத்தின் மேல் ஒரு வருஷத்திற்கு பின்பு சாத்தியமாம். மற்ற 48 வித ரோகமும். ஆயுர் முதலிய வைகளில் சரியான சிகிச்சை செய்யில், சாத்தியமாம்.

சிரோ ரோக நிதானம்:

புகை, வெய்யில், பனி, மித்தியசை யோகம், அதி நித்திரை, நித்திரைப் பங்கம். சதா சலத்திலாடுதல் கீழ்க் காற்று, கண்ணீரை அடக்குதல், ஓயாத அழுகை மிகுந்த ஜலபானம். அப்படியே மத்திய பானம். கிருமி சேருதல், பதினாலு வேகத்தை மறித்தல், சகிக்கக் கூடாத கன உஷ்ணமுள்ள வாசனையை முகருதல், வெகு வார்த்தை ஆகிய இச் செய்கைகளினால் வாத பித்த கபங்கள் அதிகரித்து சிரோ ரோகத்தை உண்டாக்கும்:

சிரோ ரோக பேதம்:

மேற்கூறிய காரணங்களைப் பற்றி, சிரசில் வாத சிரஸ்தாப ரோகம் ஆதியாகக்குரிய அர்த்த ரோகம் ௧௦, 10. வித ரோகம் பிறக்கும்:

1. வது. வாத சிரஸ்தாப ரோகம்:

இது, வாதாதிக்கத்தினால், நெறிகளில், கடவாத்தியம் வாசிப்பது போல் அதிரல், கண்ணும் புருவமும், நெற்றியும் அற்று விடுவது போல் தெறித்தல், வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாமை, தலை சுழற்றலுடன் நோதல், காதிரைச்சல், பல்கள் தளரல், நரம்புகள் புடைத்து உப்புதல், நாசியிற் சலம் வடிதல். என்று மிக் குணங்களை உண்டாக்கும். இக் குணங்கள் காரணம் இல்லாமலே அதிகரிப்பதும் குறைவதுமாயிருக்கும். இது தொக்கிடம் லேபம், பூச்சு, பால் வேது, பொட்டணம் முதலிய சிகிச்சைகளினால் சாந்தமாம். ஸ்தாபம் என்பது உபத்திரவம். இதுவே வாதத் தலைவலியாம்!

———

2-வது. பித்த சிரஸ்தாப ரோகம்:

இது. தலையில் புகை கம்மியது போலிருத்தல், அரம், வியர்வை, கண்ணெரிச்சல், மூர்ச்சை முதலிய குணங்களைப் பாதிராத்திரியிலுண்டாக்கும். இதுவே பித்தத் தலைவலியாம். இதற்குக் கோசாதகித் தயிலமாகும்:

3. வது: சிலேஷ்ம சிரஸ்தாப ரோகம்:

இது, சிரோபாரம், குத்தல், சரீரம் முழுதும் கனத்தல், மூர்ச்சை அரோசகம், வாந்தி, கண்கள் உப்பலோடு நோதல், காதுகளில் நமைச்சல் என்னும் குணங்களை உண்டாக்கும். இதுவே கபத் தலைவலியாம்:

4. வது. திரிதோஷ சிரஸ்தாப ரோகம்:

இது, வாதம், முதலிய மூன்று சிரஸ்தாப ரோக குணங்களையெல்லாம் ஒரே காலத்தில் உண்டாக்கும். இதுவே திரிதோஷத் தலைவலியாம்.

5. வது. ரத்த சிரஸ்தாப ரோகம்:

இது, பித்த சிரஸ்தாப ரோக குணங்களைப் பார்க்கிலும், அதிதுர்க் குணங்கள் உண்டாக்கி வேதனையைச் செய்யும். இதுவே உதிரத் தலை வலியாம்:

௬-வது. அர்த்த பேத ரோகம்:

இது, ஒரு பக்கத்திலுண்டாகி, வாத சிரஸ்தாப ரோக குணங்களைப் போல் வேதனையைச் செய்வதுந்தவிர, 15 நாளுக்கொருதரம், (அல்லது) மாதத்திற்கு ஒரு தரம் அதிகரிப்பதும், தானே சாந்தியை அடைவதுமாயிருக்கும். இந்த ரோகம் எப்பக்கத்தில் அதிகரிக்கின்றதோ அப்பக்கத்து நேத்திரம் கெடும். (அல்லது) அப்பக்கத்துக் காதாவது செவிடாகும். இதை ஒற்றைத் தலைநோவென்றுஞ் சொல்வர். இது சிரசில் ஒரு பக்கத்தைப் பேதிப்பதால், அர்த்த பேதம் எனப் பேர் பெற்றது. இதனை நாணல் தயிலம் சந்தனத் தயிலம் முதலிய சிகிச்சைகளினால் விலக்கவும்!

7-வது. கிருமி சிரோ ரோகம்:

இது, சங்கீரண போஜனத்தினால், திரிதோஷத்தை அதிகரிக்கச் செய்து சிரசில் இருக்கும். ரத்த மாமிசத்தைக் கரைத்து, கிருமிகளைப் பிறப்பிக்கும். அக்கிருமிகள் உதிரத்தைப் பானம் பண்ணும் போது அச்சிரசில் கோரமான வேதனை உண்டாகும்: இதனால் மண்டை வறளல், மரத்தல், வீக்கம், பிளந்து போவது போலிருத்தல், மிகுந்த எரிச்சல், துர்க்கந்தம், நாசியிற் சலம் வடிதல், காலையில் சிவந்த ரெத்தத்துடன் நமைச்சல், உண்டாகிப் பின்பு அது வெளுத்த வீக்கமாக எழும்புதல், காதிரைச்சல், சுரம், இருமல், தீப்பலம், மனக்கலக்கம். என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

6. வது கண்ட சாலிக ரோகம்:

இது, சிலேஷ்ம கதியை அடைந்த வாத பித்தத்தைக் கொண்டு கழுத்திற்கு உட்புறத்தில் சாதிக்காயைப் போல் திரட்சியான வீக்கத்தை உண்டாக்கி, அதன் மேல் நெல்வால ஒத்த முள்ளுகளை முளைப்பித்து, கழுத்தைத் திருப்பக் கூடாமையாகச் செய்யும். சாலிகம் என்பது — நெல் முள்ளு.

7. வது கள பிருந்த ரோகம்:

இது, கழுத்திலிரண்டு பக்கங்களிலும் சுருக்கமாயும், வட்ட வடிவாயும் உயர்ந்ததாயும் இராநின்ற தூர்ம மாமிசத்தை வளர்ப்பிக்கும். இதனால், அக் கண்டத் துவாரம் அடைபடுதல் காசம், சுரம், என்னும் இக் குணங்கள் உண்டாகும். பிருந்தம் என்பது - கூட்டம்:

8. வது. துண்ட கேரிகா ரோகம்:

இது. கண்டத்திற்கும் புறத்து அனுசந்திகளில் பருத்திக் காயைப் போல் கெட்டியாய் மினு மினுத்த வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அற்ப உபத்திரவம் உண்டாக்கும். துண்ட கேரிகா என்பது பருத்திக் காய்:

9-வது. கள ஓக ரோகம்:

இது, கண்டத்திற்கு உள்ளிலும் வெளியிலும் பார்ப்பதற்குப் பயங்கரமான வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அம்மாள்களத்தில் ஆப்பு அமுத்தது போல் இருத்தல், சிரோபாரம், சோம்பல், சொள்ளுச்சலம் வடிதல், சுரம் என்னும் குணங்கள் உண்டாகும். ஓகம் என்பது தமுகம். இதுவே இன்னும் நீளமாக உயர்ந்து அதிக நோவில்லாமல் கழுத்தைச் சுற்றிலும் வீங்கினால் உகாய ரோகம் எனப் பெயர் பெறும்.

10-வது. அலாபுக ரோகம்:

இது, கழுத்திற்கு உட்புறத்தில் திரி-தோஷத்தால் புடைகள் பிறப்பது போல் அடியகன்ற சிறிய ~~அரு~~ அரைப் பிஞ்சை ஒத்த மாமிச கண்டத்தை ஒன்றையேனும் பலவாயேனும் பிறப்பிக்கும். இதனால் அதி நோவும், பிரயாசையின் மேல் சுவாசமும் உண்டாகும்!

அலாபுகம் என்பது - சுரைக்காய்.

11-வது: சதக்னி ரோகம்:

இது, கண்டத்திற்கு உட்புறத்தில் விருத்தியடைந்து, தூர்மாமிசத்தைக் கொண்டு, பல முள்ளுகளை ஒத்த முள்ளுகள் நிறையப்பட்ட பெரிய இரும்புத் தண்டத்தைப் போல் கழுத்தை வீங்கப் பண்ணும். இதனால் மிகுந்த உபத்திரவமும் தாகமும், சுரமும், நல்நோவும் நீங்காமலே இருக்கும். சதக்னி என்பது முட்கள் நிறைந்த ஒருவித இரும்பு தண்டமாம். இதன் ஆயுத சாஸ்திரத்திற் கண்டு கொள்க!

12. - வது. கள விக்கிரந்தி ரோகம்:

இது, கருத்து முற்றியும் விரைவில் வீக்கத்தை உண்டாக்கும். இதனால், அதிக நோவும். பழுத்தால் துர்க்கந்தச் சீழும் உண்டாகும்.

13. - வது. களார்புத ரோகம்:

இது நாவின் புறச்சியும் அரக்கருத்தும் நோவில்லாத வீக்கங்களை உண்டாக்கும். அவை சிறி தோவாத்தால் பழுக்காமலே இருக்கும். ஒரு வேளை பழுத்து உடைந்தால், அதின் நின்றும் குழம்பான ரத்தம் ஒழுகும்:

14. - வது வாதகள கண்ட ரோகம்:

இது. வாதகபத்தினாலும் மேதோ தாதுவினாலும், கருத்திருக்கும். தாடைக்கும் இடைவெளியில் வளியைப் போல நோவில்லாத மாமிச மொத்தை யைத் தொங்கப் பண்ணும். இது எந்தப் பக்கத்திலாவது பிறக்கும். கண்டம் என்பது தாடை. இதனைப் புரைக்கிற்றை என்பர்:

15. பித்த கள கண்ட ரோகம்:

இது கண்டத்திற்கும் உள்ளிலும் தாடைக்கு உள்ளிலும் விரணமான புடைகளைப் பிறப்பிக்கும்: அப்புடைகள் கருமையாயும் செம்மையாயும் படரும்: இதனால், நோவு அதிகரிப்பதும் உயிரை கெடுவதுமாக இருக்கும்:

16-வது. சிலேஷ்மக கண்ட ரோகம்:

இது, முற்கூறிய ஸ்தானங்களில் மிகு விரணமாகிய புடைகளைப் பிறப்பிக்கும். ஆனால் அப்புடைகள் வெளுத்துச் சிலிட்டு நின்று நமைச்சலுடன் விருத்தி அடைவதும் வாயில் இனிப் புண்டாவதுமாக இருக்கும்.

17-வது. மேதோகக கண்ட ரோகம்:

இது, மேற்சொன்ன ஸ்தானங்களில், விரணப் புடைகளைப் பிறப்பிக்கும். அப்புடைகளோ என்றால், அதிகரிப்பதும், சாந்தியை அடைவதுமாக இருக்கும். இதனால், தேகம் ஸ்தூலித்தல், வாயால் கோழை விழுதல், கண்டத்தில் ஒரு சத்தம். அ.னத்தொனி என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

18- வது சுரக்கினி ரோகம்

இது, கண்டத்திற்குள்ளிலும், தாடைக்கீழிலும் படருகின்ற விரணப் புடைகளைப் பிறப்பித்து, தொனியை அடக்கும். அப்புடைகளோ என்றால், அதிகரிப்பதும் சாந்தியை அடைவது மாயிருக்கும். இதனால் கோழையின்று நித்திரை பிடிக்கில் பெருமூச்சு விடுதல், கபங் கக்கல், நெஞ்சுவரல், அ.னத்தொனி என்னும் இக்குணங்கள் உண்டாகும். சுரம் என்பது தொனி, கினி என்பது அடித்தலையுடையது. மேற்கூறிய கண்ட ரோகங்களை, ரசத்தைலம், கற்பகரசாயனம், பாதரசமெழுகு, சாதிலிங்கப்புகை முதலிய ஔஷதங்களைக் கொண்டும். விரணச் சிகிச்சைகளைக் கொண்டும் வசப்படுத்த வேண்டும்.

சீர்முக ரோக பேதம்:

உவாய் முகவழியும் வாதமுக பாக ரோகம், ஆதியாக உணர்த்து வருகரோகம் 8.வகை எண் வகை ரோகம் பிறக்கும்.

1. வாதமுக பாக ரோகம்:

இது, வியான வாயுவைக் கொண்டு, வாய்க்குள் சிவப்பான விரணத்தைப் பிறப்பிக்கும். அப்போது அவைகள் அடங்கி அடங்கி உண்டாவதும் அவ்விரணத்தால் உதடுகள் சொர சொரத்து உப்புவதும். நாவு கனத்து வெளுத்து வெடிப்பதும் இதனால் காரம் படக் கூடாமல் வாயானது முள்ளைப் பொத்திக் கொண்டது போல் அருவருப்பாக இருக்கும்.

2. வது. பித்த முக பாக ரோகம்:

இது, பித்தத்தைக் கொண்டு, வாய்க்குள் நெருப்பான ஆவியைப் போல் புகையை எழுப்பும். இதனால், வாயில் அடிபட்ட காயம் போல் சகிக்கக் கூடாத கோரமும் நாவில் கசப்பும் ஒரு வேளை உப்பு கரிப்பதும் உண்டாகும்.

3. வது. சிலேஷ்ம முக பாக ரோகம்:

இது கபத்தைக் கொண்டு, நாவில் வழுவழுப்பான விரணத்தைப் பிறப்பிக்கும். அதனால் நாவில் தினவும், புண்ணும், வாயிலிணிப்பும் உண்டாகும்.

4. வது. திரிதோஷ முகபாக ரோகம்:

இது. வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்று முக பாக ரோகங்களுக்குள்ள குணங்களை எல்லாம் வாயில் உண்டாக்கும்:

5. வது. ரத்த முக பாக ரோகம்:

இது. பித்த முகபாக ரோகத்தை ஒத்திருக்கும். ஆனால் வாயிக்குள் ரத்தம் போல் சிவந்த நிற மாத்திரம் ஒன்று அதிகமாக உண்டாகும்.

6. வது பூத்தியாசிய ரோகம்:

இது. நெஞ்சில் துர்க்கந்தத்தை உண்டாக்குவதும் அல்லாமல், பற்களைக் கறுக்கச் செய்து குச்சியினால் பல் விளக்கக் கூடாத நோவையும் அரு — வருப்பையும் மாறாது உண்டாக்கும்:

7. வது கண்டார்புத ரோகம்:

இது, கண்டத்திற் பிறந்த விரண வேகம் கபாலத்தில் அடிபடுவதால் பிறக்கும். இதனால் அங்கிருக்கும் கபமாகிய கோழைச்சலம் கறுத்தாவது வெளுத்தாவது நாசிவழியாலேனும் தொண்டை வழியாலேனும் மாறாது விழுந்துக் கொண்டே இருக்கும்: இது இரணச் சிகிச்சையாலும் தீரும்:

—

18! வது. நாசிகார்புத ரோகம்:

இது, நாசியில், வீக்கத்துடன், பித்த கப நீர்க் கிரிகையுமுண்டாக்கும். ஆக நாசிரோகம் 18ம் முற்றியது. மேற்கூறிய நாசிகா ரோகங்களை சஜீர காடிமிபுஷ்ப பாவனகிருதம். தைல. துலவத்திரி, கோமயச்சூரணம்:

சுவாசாக்கிராணம். சொறி மெருக்குப் புகை முதலிய ரந்திர சிகிச்சைகளிலும், இஞ்சித் தயிலம், கொம்பரக்குத் தயிலம், நாசிகா ரோகத் நாசத் தயிலம் முதலிய தயில சிகிச்சைகளில் சஸ்த்திர க்ஷாராக்கினி சிகிச்சைகளிலும் நிவிர்த்தி செய்ய வேண்டும்.

முக ரோக பேதம்:

ஏழு ஸ்தானங்களைப் பற்றி முகத்தில் .75. வித ரோகம் பிறக்கும்.

அவையாவன:- உதட்டில் 11.ம். தாடைக்கு நடுவில் 1.ம். பல்லுகளில் 10.ம். அப்பல்லுகளின் வேரில் 13.ம். நாவில் .6.ம். தாடைகளில் 8.ம். தொண்டையில் 18.ம். முகம் முற்றிலும் 8.ம். ஆம். முகம் என்பது வாய்:

முக ரோக நிதானம்:

மீன், எருமை, மாமிசம், பன்றி மாமிசம், சைத்திய வஸ்து, முள்ளங்கிக் கிழங்கு, உளுந்தம் பருப்பு, தயிர், பால், காடி, லவணவஸ்து கரும்பு ரசம், சாந்திய அன்னம். இவைகளை இடைவிடாது விசேஷமாக அகாலத்தில் புசித்தலினாலும், ஒருக்களித்துப் படுத்தல், பல் விளக்காதிருத்தல், சலத்தைக் கொப்பளித்துக் கொப்பளித்து விசையாக உமிழல், புகை பிடித்தல், வாந்தி செய்தல், விடாத தலைநோவு ஆகிய இவைகளினாலும் வாத பித்த கபங்கள் சிலேஷ்மப் பிரதானமாகி அதிகரித்து, முகத்தில் இருக்கின்ற சப்த தாதுக்களிலும் பரவி அந்தந்த இடங்களில் ரோகங்களைப் பிறப்பிக்கும்.

ஓஷ்ட ரோக பேதம்:

உதட்டில், கண்டோஷ்டம், ஆதியாக, சார்பு தோஷ்டம் ௧.௧௧ பதினொருவித ரோகம் பிறக்கும்:

1. வது. கண்டோஷ்ட ரோகம்:

இது வாயு உதட்டில் சேரும் போது பிறந்து, அவ்வுதடுகளில் வெடிப்பை உண்டாக்கும். கண்டம் என்பது வெடிப்பு, இதற்கு அந்தோஷ்டம் என்றும் ஒரு பெயர் உண்டு.
அந்தம் என்பது நாசம்.

2. வது. வாத தோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில் கத்தியின் வாயைப்போல் கருக்கான வெடிப்புகளும், ரத்தமும் அதிக நோவும் உண்டாக்கும் பழுக்கச் செய்யும்.

3. வது. பித்த தோஷ்ட ரோகம்:

இது, உதடுகளின் அதிக தீக்ஷணத்துடன் கடுகு பிரமாணத்தை யொத்து மஞ்சள் நிறத்தைப் பெற்ற கொப்புளங்களை பிறப்பிக்கும், அப்போது, அவைகளில் நின்றும் வியர்வைக் கசிவு உண்டாக்கும். அக் கொப்புளங்கள் சீக்கிரத்தில் உடைவதாக இருக்கும்.

---

4. வது. சிலேஷ்மோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில் அதிக சீதளத்தைக் கொண்டு சகிக்கக் கூடாத சொரணையும், வீக்கத்தையும், வெளுப்பான சிறிய கொப்புளங்களையும் உண்டாக்கும். அவைகளில் வியர்வை நீர் பெருகும்:

5-வது. சந்நிபாத தோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில் வெளுப்பு, அதிகநோவு, மரத்தல், நானாவித கொப்புளங்கள் எழும்புதல், அதில் மாறுதலாக வடிதல், துர்கந்தம், ஒரு வேளை வாடுதல், ஒரு வேளை உப்புதல், வறளல், என்றுமிக் குணங்களை உண்டாக்கும். அதில், வாதாதிக்களுக் குள்ள குணங்களும் இருக்கும்:

6. வது. ரக்த தோஷ்ட ரோகம்:

இது உதடுகளில் ரத்தம் பூசினதுபோல் நிறத்தை உண்டாக்கும். இதனால் அவ்வுதடுகள் ரத்தத்தைக் கக்குவது போலவே இருக்கும்:

7. வது. அற்புத தோஷ்ட ரோகம்:

இது உதடுகளில் சிறிய பேரீச்சங் காயை ஒத்த வீக்கத்தை எழும்புவதும் தவிர அவைகளின் மேல் சிவந்த நிறத்தையும் உண்டாக்கும்:

8. வது. மாமிஸகோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில், சிவந்த மாமிச திரத்தை ஒத்த விரணத்தை உண்டாக்கும். அப்போது, அதில் சீன்றும். அந்நிறத்தைப் பெற்ற கிருமி நெளிதலும், நமைச்சலும், நோவும் உண்டாக்கும்:

9. வது. மேதோஷ்ட ரோகம்:

இது. உதடுகளில் எண்ணெய்த் தடவினது போல் மினு மினுத்த வீக்கம், அதில் கொழுப்பைப் போல், நல்ல மிருது, வியர்வை, மிகுந்த தினவு என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

10. வது. க்ஷத கோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில் காயங்கள் படுங்காலத்தில் பிறந்து, அந்த இடங்களில் கட்டிகளைப் பிறப்பித்து, அவைகள் உடையும் பழுக்கச் செய்து விரணமாக்கும் (அல்லது) வெடிப்பை ஆவது உண்டாக்கும். அப்போது அவ் வெடிப்புக்கள் கெட்டியாக கூடிக் கொண்டு தினவைத் தருவதாக இருக்கும்.

11. வது. ஜலார்பு கோஷ்ட ரோகம்:

இது, உதடுகளில் வாத சிலேஷ்மங்களின் நீர்க் குமிழியைப் போல் மாமிசத்தை வரைப் பண்ணும். இதனால், சலமும் நீரும் கசிந்தாலும் கசியும்:

மேற்கூறிய ஓஷ்ட ரோகங்கள் எல்லாம் நவநீதக் களிம்பு, அக்க நவீதம், கனகமிருதார பஸ்பம் இவைகளைப் பூசுவதிலும் கேல் டீ. கேர். ஏலாதிச் சூரணம் முதலிய சிகிச்சைகளிலும் உபயோகப்படுத்த வேண்டும்:

1. வது. கண்டாலஜி ரோகம்:

இது, எந்தப் பக்கத்துத் தாடையிலாவது, நீங்காத வீக்கத்தைப் பிறப்பிக்கும். இதில் சுரமும், தாகமும் உண்டாகும்:

தந்த ரோக பேதம்:

தந்தங்களில் தந்த தாளன ரோகம் ஆதியாக தந்தப் பிரவான ரோகம். க௦. ஆக 10. வித ரோகம் பிறக்கும்:

1. வது. தந்த தாளன ரோகம்:

இது உண்ணுகின்ற ரசாதி வஸ்துக்களின் பேதத்தால், வாயினிடத்தில், சீதள வாயு வியாபிக்கும் போது பிறந்து, உபத்திரவத்தைச் செய்யும். இதனால், பல்லில் உஷ்ண வஸ்துக்கள் படுதல் இதுவும், சீதள வஸ்துக்கள் படில் வேதனையும். குத்தலில் அப்பற்கள் பிளந்து போவது போல் இருத்தலும் உண்டாகும்:

தாளனம் என்பது : பிளத்தல்:

2. வது. தந்த ஹர்ஷ ரோகம்:

இது பல்லுகளில், புளிப்பு வஸ்துவானது, சீதளவஸ்துவாவது, காற்றுவது படில், சகிக்கக் கூடாத கூசுதல், இலேசு அவ்வஸ்துக்களைப் புசிக்கில் மிகுந்த உபத்திரவம், அப்பல்லுகளில் அசைவது போலிருத்தல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இது கோசலப் புகையால் நிவிருத்தி:

3. வது. தந்த பேத ரோகம்:

இது, பல்லுகளில் குத்தலும், நோவுமுண்டாகும் படிக்குச் செய்யும். இதனால் தந்தங்கள் பிளந்து போவது போலவே இருக்கும்:

தந்தம் என்பது பல், பேதம் என்பது வேறு பாட்டை யுடையதாம்:

4. வது. தந்த சலன ரோகம்:

இது. வாயுவைக் கொண்டு தந்தங்களை அசையும்படிக்குச் செய்வதும் அன்றி, ~~[illegible]~~ விதமான மருதுவஸ்துக்களைப் புசிக்க போதிலும் அதிக நோவையுமுண்டாக்கும்:

சலனம் என்பது அசைதல்:

5. வது தந்தகராள ரோகம்:

இது. ஈறுகளைத் தேயும் படிக்குச் செய்து, தந்தங்களை வெளிப்புறத்தில் சாய்ந்து விடும்.

கராளம் என்பது: திக்கினம்:

14. வது பூதி நாசிகா ரோகம்:

இது, வாதபித்த கபங்களான தொண்டையின் மூலத்தைப் பற்றுங்காலத்தில் பிறக்கும். இதனால் நாசியிலும் வாயிலும் துர்க்கந்த முண்டாகும்:

15. பூயாஸ்ர நாசிகாரோகம்:

இது, பித்தகோபத்தினாலும் அபிகாதத்தினாலும் பிறக்கும். இதனால், நாசியில் நின்றும் சீழானது ரத்த நிறமாக விழுதலும், சிரசில் நோவுடன் எரிச்சலும் உண்டாகும்:

பூயம் என்பது சீழ், அசிரம் என்பது ரத்தம்:

16. வது. நாசிகா புடக ரோகம்:

இது, பித்த சிலேஷ்மங்களினால் நாசித் துவாரம் அடைபடுங் காலத்தில் பிறக்கும். இதனால், சளி என்கிற சிலேஷ்மமானது மெத்தவும் வறண்டு கட்டியாக விழுவது மன்றி அவ் விடத்தில் கொப்பளமுமுண்டாகும்.

17. வது நாசார்ச ரோகம்:

இது, நாசியின் மூலத்தில், அங்குரம் போல் துர்மாமிசத்தை வளர்ப்பித்தும் தவிர வாத கப பிரசா குணங்களையும் உண்டாக்கும்.

10. வது. கிராணபாக ரோகம்:

இது, பித்தத்தைக் கொண்டு நுனி மூக்குப் பக்கங்களில் உட்புறத்தை வெந்தது போல் செய்விக்கும்: இதனால் அச் சருமத்திலும் மாமிசத்திலும் எரிச்சலுடன் கன நோவு உண்டாகும்.

11. வது. நாசிகா ஸ்ராவரோகம்:

இது, சிலேஷ்மத்தைக் கொண்டு நாசி வழியாகக் கலங்கலில்லாத தெளிவை உடைய அந்த ஜலத்தை விஸ்தாரம் வடியப் பண்ணும்.

12. வது. அபீநச ரோகம்:

இது, சிலேஷ்மத்தைக் கொண்டு மூக்கின் நரம்புகளை அடைப்பிக்கும். இதனால், முன்பு சொன்ன பீநசங்களைப் பார்க்கிலும் அதி உபத்திரவம் பிறக்குதல், சுவாசம் விடும்போது குரு குரு என்னும். நாசியில் எந்நேரமும் ஈயர்வை என்னு மிக்குணங்களுண்டாகும். இது பழுத்தால் நாசியில் பசி பாகித்துக் குழம்பிய மஞ்சள் நிறமான சளி விழும்.

13. வது. நாசிகா தீபிகை ரோகம்:

இது, நாசியை, அக்கினிச் சுவாலையில் பட்ட வஸ்துவைப் போலவும், ரத்தங் குழம்பியது போலவும் செய்யும். இதனால், அந்த இடம் சிவக்குதல். உள்ளிலும், வெளியிலும், தொடக் கூடாத வேதனை, மூச்சானது புகையைப் போல் வெப்பத்துடன் வருதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

7.- வது. அதி தும்மல் பீநச ரோகம்:

இது, தீக்ஷ்ண ஆக்கிராணம், சுவாசத்தை இழுத்தல், சூரியனை இமிட்டாது பார்க்குதல், வாத வஸ்துவைப் புசித்தல், ஆகிய இவைகளினாலும், நாசித் தண்டாகிய எலும்பில் கயிறு வைக்கோல் முதலியவைகளால் அடிபடுவதினாலும் வாயுவானது அதிகரித்து, நாசி, வாய், கண், செவி, ஆகிய இடத்து நரம்பின் துவாரங்களை அடைக்கிறங் காலத்தில் பிறந்து, எந்நேரமும் தும்மல் உண்டாக்கிடும். இதனைப் புரிசட்சவ பீநசம் எனக் கூறுவர்.

---

8. வது. நாசிகா சோஷ ரோகம்:

இது, வாயு அதிகரித்து நாசியில் சேருங் காலத்தில் பிறக்கும். இதனால், நாசித் துவாரங்கள் வறளல், அந்த துவாரங்களில் பக்கத்துத் தண்டுகளில் முள்ளால் குத்துவது போல் குத்தல், கபாதிக்கம், பிரயாசத்துடன் மேல் மூச்சு வருதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3-வது. நாசிகா நாக ரோகம்:

இது, சிலேஷ்மமானது அதிகரித்து வாயுவை விசை கொண்டெடுப்பி, நாசித்துவாரங்களை அடைப்பிக்கும் காலத்தில் பிறக்கும். அப்போது மூக்கடைப்பும், உச்வாச நிச்வாசத் தடங்கலும் உண்டாகும்.

4. வது. திரிதோஷ பீநச ரோகம்:

இது, முற்கூறிய வாத பீநச ரோகம் முதலிய மூன்று பீநச ரோக குணங்களையும், ஒரே காலத்தில் உண்டாக்கும். இக்குணங்கள் காரணம் இல்லாமலே அதிகரிப்பதும் குறைவதுமாக இருக்கும்.

5. வது. ரத்த பீநச ரோகம்:

இது, நாசிக்குள், நமைச்சலுடன் திமிர் நிறைந்த சளியும் ரத்தமும் ஒழுகுதல், கண்ணிலும் காதிலும் தினவு, சருமம் கண் முதலியவைகள் சிவக்குதல், உஷ்ணை தெரியாமை என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

6-வது. துஷ்ட பீநச ரோகம்:

இது, முற்கூறிய ஐவகைப் பீநசங்களையும் தகுந்த சிகிச்சைகளினால் நிவர்த்தி செய்யாது வளர்த்திய காலத்தில் பிறந்து, அவைகளுக் குள்ள வேதனைகளைப் பார்க்கிலும் அதிக வேதனைகளையும் இந்திரியங்களுக்கு எல்லாம் மிக அயர்ச்சியையு முண்டாக்கும்.

அப்போது, அக்னி மந்தம், அசம், இருமல், இரைப்பு, மார்பிலும் பக்கங்களிலும் நோவு, வாய்வறளலுடன் தூர்க்கந்தம், நாசியில் வியர்வை, அதன் உட்புறம் வறளல், வீக்கம், அம்மார்க்கத்தில் கின்றும் சிறைப்போல் வெளுத்தும், சிவந்தும், உருண்டை, உருண்டையாக சளி வீழ்தல், அவ்விடத்தில் வெளுத்தும், மினு மினுத்தும் நீண்டும் இரா நின்ற சிறு சிறு கிருமிகள் பிறக்குதல் என்றும் இக் குணங்கள் உண்டாகும். இது முதிர்ந்தால் தேக அருவகை இருத்தல், இருமல், ஆயாசம், சளி, மஞ்சள் நிறத்துடன் கட்டியாக விழுதல், நாவில் உருசையும் மூக்கில் மணமும் தெரிதல் ஆகிய இக் குணங்கள் உண்டாகும்.

தாரு ரோக பேதம்!

தாடைக்கு உட்புறத்தில் தாருபிடகம், தாருகள்அண்டி, தாருசம்ஹதி, தாரார்ப்புதம், தாருகச்சபம், தாருப்புடம், தாருபாகம், தாருசோஷம் என 8. வித ரோகம் பிறக்கும்.

தாரு என்பது தாடை.

1. வாத. தாரு பிடக ரோகம்!

இது, வாதாதிக்கத்தைக் கொண்டு, தாடைக்கு உட்புறமாமிசத்தில் அறஅறப்பான தடிப்பையும் வெளியில் கடினத்துவமான வீக்கத்தையும் உண்டாக்கும். இதனால் வாயில் சொர்ணச் சலம் வடிதலும் அவ்விடத்தில் கொப்புளம் எழும்புதலும், காதின் அடியில் [illegible] நோதலும் உண்டாயிருக்கும்.

2-வது. தாளுகா அண்டிகா ரோகம்:

இது, தாடையின் உட்புற மேலத்தில் உண்ணாக்கைப் போல் தடித்தல் உண்டாக்கி, புலால் வாசக் கொழைய விழப் பண்ணும். இதில், தாடை மீது மிது மிதுப்புடன் மிருதுவான வீக்கம் எழும்பித் தொய்குதல், புசித்த அன்ன பானதி நாசியில் விழுதல், கண்டத்தின் மார்க்கம் அடைபடல், தாகம், வாந்தி, இருமல் என்னும் இக் குணங்களுண்டாகும்;

3.வது தாளுசம் ஹதி ரோகம்:

இது, தாடையினது உட்புற நடுவில் நோவில்லாமல் துர்மாமிசம் வளரும்படிக்குச் செய்யும். இது தாடையின் உட்புறத்தையெல்லாம் துர்மாமிசத்தைக் கொண்டு நிறைப்பதால், தாளுசம் ஹதி ரோகம் எனப் பேர் பெற்றது.

சம்ஹதி என்பது சமூகம்.

4.வது. தாளாற்புத ரோகம்.

இது, தாடைக்கு உட்புறத்தில், விரிந்த தாமரைப் பூவைப் போல் வட்ட வடிவான இரத்த வீக்கத்தை உண்டாக்கும்.

5. வது. தாளுகச் சப ரோகம்:

இது, சிலேஷ்மத்தைக் கொண்டு, தாடையின் நடுவில் ஆமையினது உருவத்தைப் போல் தடிப்பை உண்டாக்கும். அது நாளுக்குகாள் கடத்திலே அதிகரிப்பதும் நோவுமாக இருக்கும்.

6-வது. நாவுப்புட ரோகம்!

இது, நாவையின் உட்புற நடுவில், சிலேத்துமத்திலும், மேதோ தாதுவிலும் இலந்தைப் பழம் பிரமாணரூபங்களாக கெட்டியாய் நோயின்மையான வீக்கத்தை உண்டாக்கி அதனை நிலைக்கப் பண்ணும்.

7-வது. நாவுபாக ரோகம்!

இது, பித்தத்தைக் கொண்டு, நாவையின் உட்புறத்தை விரணமாக்கி, அதில் நின்றும் நீரும், நோவும் உண்டாகும் படிக்குச் செய்யும்.

8 வது. நாவு சோஷ ரோகம்!

இது, வாதத்திலும் பித்தத்திலும் சுரத்திலும் தேகம் மிகவும் மெலிந்த காலத்தில் பிறந்து, ஒரு நாவையாவது இரண்டு நாவையுமாவது உலர்த்தி, ஒடுக்கி விருந்தது போல் செய்யும். இதற்குப் பாதரச மருந்து நன்மையைத் தரும்.

ஆக நாவை ரோகம் 8ம். முற்றியது.

கண்ட ரோக பேதம்!

கழுத்தில், கண்ட வாத ரோகணி ரோகம் ஆதியாக நாதக்கின ரோகம். ௫. ருக 18 வித ரோகம் பிறக்கும்.

1. வது. கண்டவாத ரோகணி

இது, கழுத்திற்கு உட்புறத்தில் தூர்மாமிச முளைகள் முளைப்பித்து அம்மார்க்கத்தை அடைத்து, நாவை ஆட வொட்டாமற் செய்யும். இதனால் நெஞ்சும் வாயும், உலரல், கண்டத்திலும், செவியிலும் நோவு என்றும் இக்குணங்கள் உண்டாகும்.

ரோகணி என்பது - முளைக்குதல்

2-வது கண்ட பித்த ரோகணி.

இது, கழுத்திற்கு உட்புறத்தில் முயிலில் போத்தைப் போல் தூர் மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனால், அந்த இடத்தில் அதிக நோவுடன் புகை கம்மியது போலிருத்தல், மேலில் தொடக் கூடாத உபத்திரவம், சுரம், கொய்தை, தாகம், சோருதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3-வது. கண்ட சிலேஷ்ம ரோகணி.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில் நிலைத்த தூர்மாமிசத்தைப் பிறப்பிக்கும். இதனால் ஆமணக்கின் நெய்யைப் போல் வாயில் மாறுதலும் வழுதலும் தேகம் வெளுப்பும் உண்டாகும்.

4. வது. கண்ட ரத்த ரோகணி.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில் தூர் மாமிசத்தைப் பிறப்பித்து அதில் கரி நெருப்பை ஒத்த கொப்பிளங்கள் நிறைப் பிக்கும். இதனால், காதுக்குள் நோவும் பித்த ரோகணி ரோக குணங்களும் உண்டாகும்.

5. வது. கண்ட திரி தோஷ ரோகணி.

இது, கண்டத்திற்கு உட்புறத்தில் கண்ட வாத ரோகணி, கண்ட பித்த ரோகணி, கண்ட சிலேஷ்ம ரோகணி என்னும் இவைகளுக்குள்ள குணங்களெல்லாம் உண்டாக்கும். இந்த ரோகம் கஷ்ட மென்று பகுத்துடையும்.

6-வது அதி தந்த ரோகம்:

இது, பல்லுகளுக்கெல்லாம் உபத்திரவத்தை உண்டாக்கி, அப்பல்லுகளின் சந்தில் ஒரு சிறிய பல்லை முளைப்பிக்கும். அது நன்றாக முளைத்து வெளியில் வந்தால், முன்பு இருக்கும் உபத்திரவம் நீங்குவதாயும், மற்றையப் பற்களுக்கெல்லாம் வன்மை வருவதாயும் இருக்கும்.

7-வது தந்த சர்க்கரா ரோகம்:

இது, தந்தங்களைத் துலக்கமுற விளக்காமையால், அச்சந்துக்களில் தீர்க்க காலத்தோடு சிலேத்ம மலத்தைச் சேர்ப்பிக்கும். அம்மலமானது, வாயுவால் உலரப்பட்டு, மணல் போல் உதிர்ந்து கொண்டே இருக்கும்.

8 வது தந்தக பாலிகா ரோகம்:

இது, பற்களின் முனைகளைத் தேயப்பண்ணுவதும் தவிர, அவைகள் வெடித்துப் பொடிப் பொடியாக உதிரும் படிக்கும் செய்யும். இது, பற்களின் சிரசைக் ~~[illegible]~~ கெடுப்பதால் தந்தக பாலிகா ரோகம் எனப் பேர் பெற்றது.

9-வது. தந்தசியாவ ரோகம்:

இது ரத்த பித்த ரோகத்தைக் கொண்டும், வாத தோஷத்தைக் கொண்டும், சிற்சில தந்தங்களை நீல நிறத்தைப் போலவும், கபில நிறத்தைப் போலவும் செய்விக்கும்.

சியாவம் என்பது — கருமை நிறமாம்.

10-வது தந்த பிரதூன ரோகம்:

இது, வாதாதிகள் அதிகரித்துத் தந்தங்களிலும் அவைகளின் வேருகளிலும் வியாபித்து, அங்குள்ள தசையைச் அடக்கித்து உலர்த்தும் போது பிறக்கும். அப்போது அச்சந்துக்களில் அன்னரசம் அடைந்து கெடுவதால், நீர்க் கந்தம் வீசுதல், சிறு சிறு கொப்புளங்கள் எழும்புதல், காரணம் இன்றி நோவு அதிகரித்துக் கிருமிகள் நெளிதல், அக் கிருமிகள் நெளியாத காலத்தில் நோவும், இனவும் மட்டில், ஈறு வீங்குதல், பல்லுகள் அசைதல், என்னும் இக் குணங்கள் உண்டாகும். பிரதூனம் என்பது இனை மிகவும் குறைதல். இது பற்களை விடாமல் ஜருக்கி உபத்திரவத்தையும் கிருமிகளையும் பிறப்பித்து ஈறுகளில் திரும் இரத்தமும் வடியும் பழுக்கச் செய்வதால், கிருமி தந்த ரோகம் எனவும் சொல்லப்படும். இவைகளை ஓமத்திரீர்: அர்கக்ஷீரநாளிகா சூரணம், கல்காரப் பஸ்பம், தனப்பொடி, செங்கல், உகேத்தமாவு, முதலிய சிகிச்சைகளைக் கொண்டு விலக்க வேண்டும்.

தந்தமூல ரோக பேதம்!

பல்லுகளின் வேரில் முற்கூறிய காரணங்களினால், திதாத ரோகம். ஆகியவை தந்தமூல ரோகம் ஏழுக 13 விதரோகம் பிறக்கும்.

1. வது சிதாத ரோகம்:

இது, சிலேஷ்மமும், ரத்தமும், பல்லின் வேரில் சேரும் போது பிறந்து அவ் வேர் வழியாகத் துர்க்கந்த ரத்தத்தை ஒழுகச் செய்யும். இதனால் அங்குள்ள மாமிசம் கரைவதன்றியும், அவ் வேர்கள் வெளுத்து வெளியில் பிரகாசமாகத் தெரியும்.

சிதம் என்பது வெண்மை.

அதம் என்பது — நாசம்.

2-வது உபகுச ரோகம்:

இது, ரத்த பித்தங்கள் பல்லின் வேரில் சேர்ந்து அங்குள்ள மாமிசத்தைச் அழுகையாக்கும் போது பிறக்கும். இதனால், அவ்விடத்தில் நமைச்சலுடன் ரத்தம், அந்த இரத்தம் வெளியிலில்லாமல் உள்ளிலடங்கி ஈறில் ஈறு வீங்குதல் உண்டாகும்.

குசம் என்பது — இளத்தல்.

3-வது தந்தபுப்புட ரோகம்:

இது, இரண்டு பல்லின் நடுவிலாவது மூன்று பல்லின் நடுவிலாவது இலந்தைக் கொட்டைப் பிரமாணமாக வளர்ந்து, அதை வெந்த மாமிசம் போற் செய்து நோவை உண்டாக்கும்.

புப்புடம் என்பது — வீக்கம்.

4-வது. தந்த வித்திரதி ரோகம்:

இது, இரத்தத்தினாலும் பித்தத்தினாலும் பிறந்து, தந்தங்களின் உட்புறச் சதையிலாவது

வெளிப்புறச் சதையிலாவது வீக்கமானது சட்டிகளைப் பிறப்பிக்கும். அப்போது அவைகள் கனாவதும் எரிவதும் பழுத்து உடைவதும் சீழ் ரத்தம் ஒழுகுவதுமாக இருக்கும்.

5-வது. தந்த அவிர ரோகம்:

இது, ரத்த பித்தத்தினால் பிறந்து, பற்களை வீங்கப் பண்ணி, அவைகளில் சிறு சிறு துவாரங்களை உண்டாக்கும். அப்போது அந்த இடத்தில் நின்றும் சொள்ளைச் சலம் போல் சலம் வடிதலும். அம் மாமிசத்தில் கெடுதியும் உண்டாகும்.

அவிரம் என்பது - துவாரம்.

6-வது. தந்த மகாஅவிர ரோகம்:

இது, முன்பு சொல்லிய குணங்களை உண்டாக்குவதுந்தவிர, உடம்பில், சுரம், பல்லின் மாமிசம் அவ்விடத்தில் நின்றும் சீழும், ரத்தமும் வடிதல், என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்:

―7.

7-வது. அதிமாமிச ரோகம்:

இது பல்லின் வேர்ச் சந்துக்களில், ஆணியை கட்டிகளைப் பிறப்பிக்கும். இதனால், காதிலும் தாடையிலும் நோவுண்டாகும். பின்பு சுரமும் பிறக்கும். அக் கட்டிகள் உடைந்தால் மரணமே.

―7.

8 - வது. தந்த விதர்ப்ப ரோகம் —

இது தந்தமூலச் சதையைக் கரையப் பண்ணும், இதனால், பற்கள் அசைவதும் நோவதுமாக இருக்கும்.

விதர்ப்பம் என்பது விக்கியாசம்.

9 - வது. வாத தந்தமூல ரோகம்.

இது பல்லின் வேர்களையும் அங்குள்ள ரத்தங்களையும் சுருக்கப் பண்ணும். இதனால் அந்த இடத்தில் காற்றுப் படல், ~~கூ~~ அவதாக இருக்கும்.

10. வது. பித்ததந்த மூல ரோகம்:

இது. பித்தமானது தந்தங்களில் வேரில் பிர வேசிக்கும் போதும் போது பிறந்து, அவ்வேர்களையும் அதில் உள்ள ரத்தத்தையும் மஞ்சள் நிறமாக்கி வதுர்ந்தவிர எரிச்சலையும் உண்டாக்கும்.

11. வது. சிலேஷ்மதந்த மூல ரோகம்:

இது. பல்லின் வேர்கள் வெளுப்பாக்கி அவ்விடத்தில் மாறுதல் சீழ் வரச் செய்யும். இதனால், கிலிகிலிப்பும் உபத்திரவமும் உண்டாக்கும்.

12. வது. திரிதோஷ தந்த மூல ரோகம்:

இது, வாத முதலிய மூன்று ரோகங்களுக்குள்ள குணங்களையும், அவைகளால் பிறக்கும், உபத்திரவங்களையும் உண்டாக்கும்.

—

13. வது. க்ஷத தந்த மூல ரோகம்:

இது பல்லுகளைப் பிடுங்குதல், (அல்லது) அவைகள் வேறு பிரகாரமாக அடியுண்டு முறியுதல் முதலியவற்றால், அவ்வேர்களது பட்டுக் காயம் உண்டாகும் போது பிறக்கும். அப்போது ஈறிலும் தாடையிலும், நோவுடன் வீக்கம் நரம்பின் வழிகளில் இசிவோடல் ஜுரம் முதலிய குணங்கள் உண்டாகும்.

அசாத்திய தந்த ரோக நிதானம்:

எவ்விததந்த ரோகத்திலாவது நீண்டிருக்கின்ற வேரின் நுனிகளில் விரணம் பிறந்தாலும், சீழ் வடிந்தாலும், சில ஒடிவும், சருமமும் மாமிசமும் அழுகி விழுந்தாலும், அசாத்தியமாம். இக் குணங்கள் இல்லாத ரோகம் சாத்தியமாம் இதனைத் தந்தரூப வைத்யர் சொல்வர்.

மேற் சொல்லிய தந்த ரோகங்களைக் கண்டாங்கத்திரி வித்துப் புகை, லவங்கப் பட்டைத் தைலம். மரக்கரை ஆதியான சப்ததிரவியக் குடிநீர் முதலிய சிகிச்சைகளினால் நிவர்த்தி செய்ய வேண்டும்.

—.

ஜிக்வா ரோக பேதம்:

நாவில், வாதஜிக்வா கண்டக ரோகம் ஆதியா உப ஜிக்வா ரோகம். ஈறாக 6 வித ரோகம் பிறக்கும். ஜிக்வா என்பது — நாக்கு

1. வது வாதஜிக்வா கண்டகரோகம்.

இது. நாக்கு முழுவதும் வெடித்தல், அவ்வெடிப்புகளில் முள்ளுகள் தைத்தது போல் அறுத்தல், மரத்தல், பழுத்த இலையைப் போலிருத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

2-வது. பித்த ஜிக்வா கண்டக ரோகம்:

இது, நாக்கு முற்றிலும் காங்கையைக் கொண்டு சிவப்பாக்கி, அதில் மாமிச நிறமான சிறு சிறு கொப்புளங்களை உண்டாக்கும். அப்போது நாவில் மருவிய முள்ளுகள் நிறைந்தது போலே இருக்கும். இதனை அகத்தியர் முதலிய பதினெட்டுச் சித்தர்கள் செய்த சாத்திரங்களில் கந்தகாரி ரோகமென்றும், இது மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம், நாக்கு ஆகிய இவ்வைந்து ஸ்தானங்களைப் பற்றிப் பிறக்கின்றதென்றும். அவ்வவ் விடங்களைப் பற்றி ஐந்து விதப் பெயர் பெறுமென்றும் சொல்லப்படுகின்றன. இது அட்சரம் என உலகத்தில் சாதாரணமாக வழங்கப்படுகின்றது. இந்த ரோகம் கந்தகாரி நெய்யினால் நிவர்த்தியாகும்.

3. வது. சிலேஷ்ம ஜிக்வா கண்டக ரோகம்:

இது, நாவெல்லாம் இலவ முள்ளுகளைப் போல் தடித்து வருத்தும் நெருங்கிய நோவைத் தருகின்றதான கொப்புளங்களை உண்டாக்கும்.

4. வது. ஜிக்வாலஸக ரோகம்:

இது சிலேஷ்ம பித்தங்களைக் கொண்டு நாவின் கீழ் வீக்கத்தை உண்டாக்கும். இதனால் நாவு மரத்துத் தடித்து உயருவது மன்றி, அவ் வீக்கம் பழுத்தால் புலால் நாற்றம் வீசுவதும் மாமிசங் கரைவதுமாக இருக்கும்.

5-வது. அதிஜிஹ்வா ரோகம்:

இது, அடிநாவின் கீழ், நுனிநாவைப் போல் தடித்த வீக்கத்தை உண்டாக்கும். இதனில், மரத்தல், வலித்தல், அந்த இடத்தில் சிறு சிறு முளைகளைப் போல் கொப்புளம் எழும்புதல் இவையும், நோவும் அதிகரித்தல், வாயில் காரிகையான சொல்லுச் சலம் வடிதல் புசிக்கக் கூடாமை என்னும் இக்குணங்கள் உண்டாகும். இந்த ரோகத்தினால் வார்த்தையும் கெடும்:

6-வது. உபஜிஹ்வா ரோகம்:

இது, உண்ணாக்கில் வீக்கத்தை உண்டாக்கும். அப்போது முன்பு சொல்லிய அதிஜிஹ்வா ரோக குணங்களும், இருமலும், அருசுதையும். உண்டாக்கும். இதனை உண்ணாக்கென்பர். ஆக ஜிஹ்வா ரோகம் முற்றியது. இது குணமாம். வெள்ளுள்ளித் தயிலம் முதலிய ஔஷதங்களால் தீரும்.

கர்ணரோக அசாத்தியா சாத்திய நிதானம்.

கர்ண ரோக 25ல். கர்ண பிப்பலி கர்ணபிதாரிகை கர்ண கூடிகை இம்மூன்றும் அசாத்தியம். கர்ண தந்திரி முதல் கர்ணவிகியம் வரையில் 6.ம். கஷ்டசாத்தியம் மற்ற 16. சாத்தியம். இவைகளை வெள்ளாரசம், தும்பைரசம், உள்ளிரசம், அபினி பெருங்காயபாவனைத் தீர்த்தம். அக்காடைப் பஞ்சு, நாகராதித் தயிலம், வாகுராதித்த தயிலம், மரிசித் தயிலம் முதலிய ஔஷதங்களினாலும் ஆயுத சிகிச்சைகளினாலும் வசப் படுத்த வேண்டும்.

நாசிகா ரோக பேதம்!

நாசிகளில் வாத பீநச ரோகம் ஆதியாக நாசிகாற்புத ரோகம் ஈ.றாக பதினெட்டு வித ரோகம் பிறக்கும்.

நாசிகா ரோக ஸலக்ஷணம்!

பனி, அப்பிபனிக்காற்று, எதிர் காற்று, நாசியில் தூசி அடைதல், உரத்த வார்த்தை, மிகு நித்திரை, நித்திரைப் பங்கம், தினமும் சீதளசலத்தில் மூழ்குதல், கண்ணீரை அடக்குதல், மேடுபள்ள ஸ்தானத்தில் படுக்குதல், அதச பேதசபானம், வெகுதாகபானம், அதிக ஸ்திரிசையோகம், வாந்தியை அடக்குதல் ஆகிய இச் செய்கைகளினால், வாத பித்த சிலேஷ்மங்கள் அதிகரித்து நாசியிற் சேர்ந்து பீநச ரோகத்தைப் பிறப்பிக்கும். இது விருத்தி அடைந்தால், நாசியானது அவ்சாத்தை அடையும். அன்றியும், சகல பீநச ரோகங்களில் நின்றும் பிரயாசத்தின் மேல் சுவாசம் வருதல் அதி தும்மல், நாசியில் பேசுவது போல் பேசுதல். மூக்கில் துர்க்கந்தம் வீசுதல், தலைவலி என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதனைச் சாதோஷம், சளி, நீரேற்றம், நீர்க்கோவை எனவுஞ் சொல்வார்கள் மேலும் இந்த உண்டாகின்ற கோழையானது உமிழும் படிக்கு வெளிப்படின், முன்னீர்க் கோவை என்றும், அதுவே உண்ணாக்கு வழியாக விழும்படிக்கு இருந்தால், பின்னீர்க் கோவை என்றும் சொல்லப்படும்.

———

1-வது. வாதபீநச ரோகம்:

இது, வாயுலரல், தும்மல், நாசி அடைப்புடன் அவ்விடத்திலும் பல்லிலும் காதிலும் சிரசிலும், நோவு, புருவங்களில் பூச்சி ஊருவது போல் இருத்தல், குரற்கம்மல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இக் குணங்கள் வெகு நாள் பொறுத்து முதிரும். அப்போது நாசித்துவாரத்தின் வழியாய்க் குளிர்ந்தும் கறுத்தும் சலம் ஒழுவதாக இருக்கும்.

2-வது. பித்த பீநச ரோகம்:

இது, தாகம், சுரம், பிரமை நாசியிற் கொப்புளம், அடைப்பு, அத்துவாரத்தில் நின்றும் சுடுகையுடன் மஞ்சள் நிறத்தையும், தாம்பர நிறத்தையும் பெற்றுச் சளி விழுதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

3-வது. சிலேஷ்ம பீநச ரோகம்:

இது, இருமல், அரோசகம், இரைப்பு, வாந்தி, தேககனதி, வாயினிப்பு, நமைச்சல், நாசி அடைப்புடன்; அத்துவார வழியாகத் தூய வெண்மையான சளி விழுதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.
பாத்திரத்திற்காக வாசீகரணம் பண்ணுவதுமாக இருந்து, சந்தான விருத்தி இல்லாமல் அற்ப ஆயுளுடையவர்களாவார்கள். ஒரு வேளை சந்தான விருத்தி இருந்தாலும் அதற்கு அற்ப பயனும் ரோக விருத்தியும் ஆயுள் குறைவும் உண்டாயிருக்கும். ஆகையால் பால் முதலிய மதுர வஸ்துக்களைக் கொண்டு சுக்கிலத்தையும் எண்ணெய் முதலிய பித்தவஸ்துக்களைக் கொண்டு

சோணிதத்தையும் போஷிக்க வேண்டும். இதற்கு நந்திசர், தன்வந்திரி பகவான், அகஸ்தியர், ஆத்திரேயர், காசிபர், பாரத்துவாசர், பாகடாசாரியர் முதலிய பெரியோர்கள் செய்த சிகிச்சாரம் என்னும் சாஸ்திரங்களில் அவுஷதங்கள் அநேகவிதங்களாக வகுத்திருக்கின்றன. அவற்றுள் அருக்கமுள்ள இரண்டு வகை அவுஷதமுறைகளை மாத்திரம் கை பாகத்துடன் இங்ஙனம் கூறப்படும். அவையாவன.

1. ஷ. கதலீ பல லேகியம்:

நன்றாக முதிர்ந்து பருத்த பழுத்த ரசதாளி வாழைப்பழரசம், படி-4. தேங்காய்ப் பால்படி-1. பசும்பால்படி-1 முருங்கைப் பூரசம்-படி-1. செவ்விளநீர் படி-1. இந்த 5-ம். ஒரு பாத்திரத்தில் விட்டு இதில் 50 பலம் சீனியைக் கொட்டிக் கரைத்து வடிகட்டிப் பாகு செய்து அந்தப் பாகில், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சிறு நாகப்பூ, அதிமதுரம் கர்க்கடக சிங்கி சீரகம், ஓமம், வாய்விடங்கம், திராட்சைப் பழம், கர்ச்சூரக்காய், கொத்துமல்லி, வெட்டிவேர் கோஷ்டம், தேற்றான் விதை- ஆவரை விதை பூனைக் காலி விதை சாதிக்காய் நெருஞ்சில் பழம் இருள் கிழங்கு அமுக்கிராங் கிழங்கு, சீந்தில், சருக்கரை, ஆலம் விழுதின் கொழுந்து சந்தனம் இந்த 29 சரக்குகளையும் சுத்தப் படுத்தி வெய்யிலிலுலர்த்தித் தனித் தனியே இடித்து வஸ்திர காயஞ் செய்து வகை 1க்கு பலம் 1. ஆக நிறுத்துப் பசும் பாலில் பிட்டவிட்டுச் சுத்தி செய்து அந்த கரம்

உலர்த்திய ஆரணை கற்கத்தில் பச்சைக்கற்பூரம்
குங்குமப்பூ இவ்விரண்டும். பொடி செய்து
வகை 1க்கு பலம் 1ம் காந்த பஸ்பம், வங்க
பஸ்மம், அப்ரகபஸ்பம், இம் மூன்றும்
வகைக்கு 1 பலம் சேர்த்துக் கலந்து வைத்துக்
கொண்டு (மேற்படி) பாகில் சிறுகச் சிறுகத்
தூவித்துழாவிக் கிளறிப் பாகும் ஆரணையும்
ஒன்றுபடுத்தி தேன் படி உ. விட்டு நன்குகத்
துழாவிய பின்பு பசுவின் நெய் படி உ விட்டு
கை ஓயாமல் கலக்கும்படி துழாவிக் கூடும்
பதத்தில் இறக்கி இளஞ் சூட்டுடன்
பீங்கான் சாடியில் வழித்து வைத்து
வாய்மூடி வஸ்திர பதஞ் செய்து விதிப்படி
அரை மண்டலம் தானியப் புடம் வைத்தெடுத்து
அவரவர்கள் வழிபடும் கடவுளையும் ஆயுர்
வேதத்திற்கு ஏற்புடையக் கடவுளை யர்ச்சித்து
இயன்ற மாத்திரம் அன்னதானம் முதலிய
தானங்கள் செய்து அப்பதினத்தில் அந்த
லேகியத்தில் வெருகடிப் பிரமாணம் எடுத்துக்
காலை மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டல
காலம் அமிர்தம் போல எண்ணிச் சாப்பிடவும்.
இதற்குத் துவரம் பருப்பு பச்சைப் பயறு
பசு நெய் பசும் பால் தேன் கற்கண்டு
சர்க்கரை, அவரைக்காய், முருங்கைக்காய்,
வாழையிளங்காய், பூ, முதலிய, இச்சாபத்தியம்.
இந்த அவுடதம் மாந்தாக்கினி பாண்டு, குன்மம்
இளைப்பு நோய், பிரமேகம் அதிசாரம், அதி
அஜீகம், அஸ்திசிராவம், குடல் விருத்தி.
உதிர ரோகம், ஆகியான ரோகங்களை நிவர்த்தி
செய்வதுந் தவிர, ஞாபகசக்தி அக்கிலபரிசுத்த

முதலிய அநேக குணங்களைத் தரும்.

௨-வது. கல்யாண கிருதம்.

அரசு, அத்தி, பதுமண்ணிப் பால், குளப்பால், புளிமாதுளை, ஆவாரை, திருகாஞ்சொறி, பெரும் வழுதுணம், திருகாரா, தொட்டாற்சுருங்கி, மஞ்சட்டி, ஆற்றுத் தும்மட்டி, வள்ளைக்கொடி, முசுமுசுக்கை, நாருத்தாளி, நன்னாரி, பெருநன்னாரி, தரா, பம்பந்தரா, வெள்ளைச் சாறட்டை, கற்றாழை இவ்வேர் வகைக்கு 1. தண்ணீர் விட்டான் கிழங்கு, தாமரைக் கிழங்கு, கருநெய்தல் கிழங்கு, கோரைக் கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், ஆலம் விழுதின் கொழுந்து, ஆவின் புல்லுரித்தழை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், திருநாகப்பூ, திருசண்பகப்பூ, இலுப்பைப்பூ, சடாமஞ்சில், வாய் விளங்கம், யானைத்திப்பிலி, திருகச் சோரம், கிராந்தி கரம், அதிவிடயம், ஓமம், சதகுப்பி, சரா தேவதாரம், புத்திரஜீவா விதை, வெள்ளிலோத்திரப்பிகள், திராக்ஷைப் பழம், இச்சரக்குகள் 30 ஆக 51 சரக்குகளையும் சுத்தப்படுத்தி வெவ்வேறாக வெயிலில் உலர்த்தி. ஒவ்வொரு சரக்கிலும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வகைக்கு பலம் அரிக்கால் ஆக நிறுத்து ஒன்றுபடக் கலந்து ¼ படி பாலில் விதிப்படி சுத்தி செய்து வைத்துக் கொண்டு மற்றைச் சரக்குகளை வகைக்கு பலம் 1 ஆக நிறுத்துச் சிதைக்கத் தக்கவைகளைப் பொடியாகத் தகர்த்து எல்லாம் ஒருமிக்க இடித்து ஒரு புதிய பாத்திரத்தில் கொட்டி ஆற்றுச் சலம் படி 8 விட்டு ஒன்றரை படியாகச் சுருக்கி கஷாயத்தை வடிகட்டிப் பழகிய பாத்திரத்தில் ஊற்றி, இதில் கல்யாணப் பூசணிக் காய், கிரனி கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு

கரும்பு, ரசதாளி, வாழைப்பழம், நெல்லிப் பழம், மூசுமுசுக்கை, பிரமி இலை, பொன்னாங்கண்ணி, கொத்தான் கொடி, இளநீர் தெளித்து இடித்துப் பச்சைப் பயறு. இப் பதினொரு வகை ரசமும், செவ்விளநீரும் வகை 1க்கு பலம் 1/4 பசும் பால் பலம் 3. பசு நெய் பலம் 2, இவைகளைச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சலபாகம் பாகுபண்ணும் தருவாயில், முன்பு சுத்தித்த கல்க ஆரணத்தைச் சிறுகச் சிறுகத் தூவி இடைவிடாமல் துழாவிக் காய்ச்சி, இளமெழுகுப் பதத்தில் நெய்யினை வடித்துச் சிறிய அருகையுடன் ஒரு பீங்கான் சாடியில் ஊற்றிச் சில்லிட்டு, வஸ்திர பந்தனம் செய்து, ஆறுநாள் தானியப் புடம் வைத்தெடுத்து, உதய காலத்தில் கால் பலம் அளவாக இரண்டு மண்டலம் (அல்லது) ஒரு மண்டலம் சாப்பிட வேண்டும்.

இந்தக் கிருதம், வாதபித்தாமயம், உன்மாதம், சித்தவிப் பிரமம், கிரிச்சரம், அஸ்மரி, மேகம், கிருமிரோகம், யோனிசூலை, மலட்டுரோகம், இவை முதலிய பிணிகளை நீக்குவதுந்தவிர, தேகத்தில் நல்ல அழகையும், பலத்தையும், சோணித பல சத்தியையும் தரும். ஆதலால் இவ் வண்ணம் சுக்கில சோணிதங்களைப் போஷித்துக் காலம் அறிந்து தேக போசனமும் புணர்ச்சியும் செய்து, ஆயுர்வேத விதிப்படி வருவாது நடப்பவர்கள் அசோகதிட காத்திரமும், பூரணாயுளும், சந்தான சௌபாக்கியமும், அறம், பொருள், இன்பம், வீடு, என்கிற 4ம் புருஷார்த்தங்களும் பெற்று மங்களகரமாக வாழ்வார்கள்.

4- வது திரிதோஷஜோன் மாத ரோகம்.

இது, வாதம், முதலிய மூன்று உன்மாத ரோகங்கள் காண்கின்ற குணங்கள் யாவையும் ஒரே காலத்தில் உண்டாக்கும்.

5- வது. வியாதிஜோன் மாத ரோகம்.

இது, மிகுந்த திரவியத்தை போக்கடித்த விசனத்தினாலும், மனைவியை, இழந்த துக்கத்தினாலும், இன்னும் பற்பல மகத் வியாதிகளினாலும், பிறந்து அதிசயம், அடிக்கடி வியாகுலப்படல், தேகம் வெளிறல், தெய்வமே, தெய்வமே எனப் பிரலாபித்தல், காரணம் இல்லாமலே கண்ணீர் விட்டு அழுதல், தானே ஆச்சரியப் படுதல், பெண் சாதியின் குணத்தை நினைத்து விசாரப் படுதல், மனது இருத்தல், ஒருவேளை யோனிகள் போலிருத்தல், நித்திரை பங்கம், புலால் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

6. வது விஷஜோன் மாத ரோகம்.

இது, இடு மருந்து முதலியவைகளால் உண்டாகி முகம் கறுத்தல், தேசசும் பலமும் பஞ்சேந்திரியங்களும் நசிக்குதல், திகைத்துத் திகைத்துத் திரிதல், முன்பு சாப்பிட்ட மருந்தின் விஷம் தேகத்தில் ஊறுவதாக கண்கள் சிவக்குதல் என்னு இக் குணங்களுண் டாக்கும். இது அசாத்தியமாம்.

மேற் சொல்லிய உன்மாதரோகங்களை, முலைப் பாலினாலும் செங்கரும்பு ரசத்தினாலும் முந்திரிப்பழம் கோரைக் கிழங்கு, அதிமதுரம், தண்ணீர் விட்டான் கிழங்கு, சந்தனம் இவைகளின் கஷாயத்தினாலும் கூஷ்மாண்ட ரசத்தினாலும், முசறு முட்டைப் பாலால் செய்கின்ற நசியம், முதலிய சிகிச்சைகளினாலும் பரிகரிக்க வேண்டும்.

அபஸ்மார ரோக பேதம்.

சிந்தித்தலினாலும், துக்கத்தினாலும், பயத்தினாலும், மனது மிகவும் பதைத்துத் தவிக்கும் காலத்தில், வாத பித்தங்கள், அதிகரித்து மனதிற்குத் தெளிவு வைத்திருக்கின்ற நரம்புகளை யுலர்த்தி, அம்மார்க்கங்களை மேகம் கம்மியிருப்பது போல் இருள் அடையச் செய்து புத்தியின் தெளிவைக் கெடுத்துச் சத்துவ குணத்தை கெடுத்துத் தகாத நடத்தையை நடத்தப்பித்து, உன்மாத ரோகத்தைப் போலவே இந்த அபஸ்மார ரோகத்தைப் பிறப்பிக்கும். இது, வாத அபஸ்மாரம், பித்த அபஸ்மாரம். சிலேஷ்ம அபஸ்மாரம், திரிதோஷ அபஸ்மாரம் என நான்கு விதப்படும். அபஸ்மாரம் என்பது புத்தித் தெளிவு கெடுகை.

6. வது. பூயசி ராவ ரோகம்

இது, திரிதோஷங்களானவை கண்களுக்கு ரத்தத்தைப் பாய்ச்சுகின்ற நரம்புகளில் வியாபித்துச் சந்திஸ்தானக் கருவிழியைத் பற்றும் போது பிறக்கும். இதனால், அவ்விழியின் சமீபத்திலிருக்கும் சருமம் மாமிசமும் நையப் படுவதுமன்றி ரத்தத்தோடு கூடின பீளையும் சாரும்.

7. வது. கிருமிக் கிரந்தி ரோகம்:

இது, சப்பத்தில் வெள்ளி விழிச் சந்தியில் தாமரைக் கொடியானது அழத் தண்டைப் போல் கட்டியை எழுப்பும். அது வெடித்து அடியில் கொட்டிப் படும்

7 - வது. கிருமிக் கிரந்தி ரோகம்.

இது, வெள்விழிச் சந்தியிலும் கருவிழிச் சந்தியிலும் கிருமி நெளிகின்ற விரணத்தைப் பிறப்பிக்கும். அதில் பீளையும் நோவும் உண்டாகும்.

8 - வது. உபநாக ரோகம்.

இது, சபத்தினால் வெள்ளிவிழிச் சந்தியில் தாமரைக் கொடியானது அழுத் தண்டைப் போல் கட்டியை எடுப்பும். அது வளர்ந்து அடியில் கெட்டிப்பட்டு முனையுயர்ந்து மிருதுவுடன் நோவில்லாமல் பருத்து நீர்க் குமிழியை ஒத்து உப்புக் கரிப்பதும் நமைச்சலோடு பிசுபிசுப்பைத் தருவதும், அசைவதுமாக இருக்கும். இதனால் வீக்கமும் வேதனையும் உண்டாகும். இது அசாத்தியமாம். உபநாகம் என்பது - தாமரை அழுந் தண்டு.

9 - வது அலஜி ரோகம்.

இது, கருவிழிக்குள் வீக்கத்தைப் பிறப்பிக்கும். இதனால் கண்களில் வீக்கம், நோவு குத்தல் எரிச்சல் என்னுமிக் குணங்களுண்டாகும். அன்றியும், கருவிழியிலாவது கடைவிழியிலாவது நமைச்சலும் இமைகளில் வெளுப்பும் பிறக்கும்.

அக்கில மண்டல ரோக பேதம்.

வெள்விழிகளில், பிரோத்பாதம், சிரா ஹர்ஷம், சிரா ஜாலம், சுக்கிகம், அக்கிலார்மம், பிஷ்டகம், சிராபிடகம், சோணிதார்மம். பிரஸ்தாரியார்மம், அதிமாமிசார்மம், பலாசிகிரதம், ஸ்நாயுவார்மம் அருச்சுனம் எனப் பதின்மூன்று விதரோகமும் பிறக்கும்

நாட்டு மர அட்டை.

இது, கடிக்கில், வியர்வை, நோவு, சரீரம் தடித்தல், வீக்கம், கருப்பாகத் தடிப் பூரிம் போல் பொருச் சிரங்குகள் எழும்புதல், பிரமை என்னுமிக் குணங்கள் உண்டாகும். இதற்குச் சதபதி என்றும் பெயர். இவ்விடம், திரிகடுகு, (அல்லது) காட்டு வாழைப் பஞ்சாங்கம் இவற்றுள் யாதேனும் ஒன்றை வெந்நீரிலரைத்துப் பிழிந்து வடிகட்டி, நசியமும் லேபனமும் செய்து உள்ளுக்குங் கொடுக்கில், முறியும், இது, மற்றை அட்டைகட்கும் உதவும். பஞ்சாங்கம். என்பது வேர். மேல்பட்டை, இலை, பூ, காய். ஆகிய ஐந்துமாம்.

ஏருக்கு. கோற்பத்தி.

சர்ப்பங்கள் செத்துமடிந்த இடத்திலும், சாணம் கோணிப்பட்டை முதலியவை மக்கின இடத்திலும், மயானத்தின் சாம்பலிலும் பிறக்கும். இதுகள் முறையே வெளுத்தும் கறுத்தும் சிவந்தும் இருக்கும். இவற்றின் விடம் ஏறில், நாவு தடித்தல், தேகம் மரத்தல், அதிக நோவு, நாசியால் ரத்தம் வடிதல், சர்வாங்கத்திலும் வியர்வை, மூர்ச்சை, வாயுவரல். என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

8-வது. இலங்கியின் ஸ்பரிசம்.

இது, தேகத்தில் பட்டாலும், இப்பரிசத்தைப் பெற்ற வஸ்திரம் பட்டாலும், முற்கூறிய குணங்களெல்லாம் விரைவில் உண்டாகும்.

மேற்கூறிய சகல இலங்கி விடங்களும், சங்கம் வேர்ப்பட்டை, மிளகு இவ்விரண்டையும் வகைக்கு பலம் 1/4, 1/4, விதமாக நிறுத்து, மைனம் போல் அரைத்துப் பசுவின் நெய்யில் குழைத்து

21. நாள் இரண்டு வேளையும். சாப்பிட்டு இச்சாப் பத்தியம் காக்கில் தீரும். (அல்லது) நரிப் பல்சித் தாமக்கில் அதில் கற்றாழை ரசத்தை விட்டு நன்கு அரைத்து கடி வாயிலும் தேக முற்றிலும், 21 நாள் மூன்று காலமும். லேபனம் பண்ணத் தீரும். (அல்லது) சவரியிருது சமூலமும் பலம்-1. ஆக நிறுத்து, அதில் நல்லசலம் 1/2 படி. விட்டு 1/4. ஆழாக்குக் கஷாயமாகக் காய்ச்சி, 7 நாள் இரண்டு வேளையும் சாப்பிடத் தீரும். இவ்வாறே மூன்று முறை கொடுக்க வேண்டும். (அல்லது) சிறு சின்னி இலை ரசம் 1/4 ஆழாக்கு அளவாக இரண்டு நேரமும், 7 நாள் 3-முறை சாப்பிட்டு உப்பில்லாப் பத்தியம் இருக்கவும் விலகும்.

மீன்விடம் வண்டு விடம்!

சில மீன் கடிக்கில், நோவும் எரிச்சலும் உண்டாகும் அன்றியும், மீன் வண்டு, அழல் வண்டு, பாசி வண்டு. எலி வண்டு முதலிய இவ்விடம் உள்ளவைகள் கடிக்கில், அவ்விடத்தில் வீக்கம் நமைச்சல், நோவு, ஜு. நுரைத்த பேதி, சரீரத்தில் தடிப்பு என்றும் இக் குணங்கள் உண்டாகும்.

1. வது. வாத நாடி விரணம்.

இது, ஆட்சு முகத்துடன் நிறைபேதமாகப் பரந்து அதிக நோவைத் தரும். இக் கட்டியானது பழுத்து உடைந்தால், அதில் நுரைத்த சலம் வருவதும் ராத்திரியில் கருஞ்சிவப்பு ரத்தம் ஒழுகுவதுமாக இருக்கும்.

2. வது. பித்த நாடி விரணம்!

இது, சுரம், தாகம், எரிச்சல், இவைகளை உண்டாக்கிக் கொண்டே பிறக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால், மஞ்சள் நிறத்துடன் அருகையுள்ள நீர்க்கசிவுச் சீழும் ரத்தமும் பகற்காலத்தில் ஒழுகு வதாயிருக்கும்!

3. வது. சிலேஷ்ம நாடி விரணம்:

இது, தடித்துக் கெட்டியாய்ப் பட்டு மிது மிதுப் புடன் பிறக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால், எந் நேரமுஞ் சீழ் வடிவதாயிருந்தாலும், ராத்திரி காலத்தில், மிதம் இல்லாமல் வடிதலும் அதிரணைச் சீழும் உண்டாக்கும்.

4. வது. திரிதோஷ நாடி விரணம்:

இது, வாத நாடி விரண முதலிய மூன்று நாடி விரணங்களுக்குள்ள குணங்களையெல்லாம். உண்டாக்கும். இது அசாத்திய மாம்:

—

5. – வது. அஸ்தி நாடி விரணம்:

இது, எலும்பின் மார்க்கத்தில் பிறந்து அந்த எலும்பின் நரம்புகளுக்கு உபத்திரவத்தைத் தருவதுமன்றி மிருதுவாயிருக்கும். இக்கட்டி பழுத்து உடைந்தால், இதில் நின்றும் நுரைத்துச் அருகையுடன் ரத்தமும், சீழும், வடியும், இதனால் மிகுந்த வேதனை உண்டாகும். இவ் விரணம் பிறந்த எலும்பை அறுத்து வாங்கிச் சிகிச்சை செய்யாவிடில் வசப்படாதென்றறிக. இதனைச் சல்லிய நாடி விரணம் என்பர்.

ஸுக்கிர விரண ரோக பேதம்.

ஸூக்கிர விரண ரோகமானது அஜகல்லிகா ரோகம். ஆதியாக கோடைரோகம் ஈறாக 36 விதப்படும். ஸுக்கிரம் என்பது அற்பம்.

1. வது. அஜகல்லிகா ரோகம்.

இது, சிலேஷ்மவாதங்களினால் பயிற்றைக் கயிற்றில் கோர்த்தது போல், நேராக மிறு, மிருப்புடன் நோவில்லாத கொப்புளங்கள் உண்டாகும். இந்த ரோகம் குழந்தைகளுக்கே முக்கியமாகக் காணும். இது ஆட்டினது கழுத்தில் தொங்கும். அதிர் போல் படருதால் அஜகல்லியா எனப் பெயர் பெற்றது.

அஜம் என்பது ஆடு.
கல்லிகா என்பது அதிர்.

2-வது. யவ பிரக்கியா ரோகம்:

இது, வாத சிலேஷ்மங்களினால் மாமிசத்தை ஒட்டி வரகுப் பிரமாணமாகக் கனத்த கொப்புளங்கள் உண்டாகும்.

3-வது. அலசி ரோகம்:

இது, வட்டவடிவாய்த் தடித்தும், உயர்ந்தும் இருக்கின்ற சிறு சிறு கட்டிகள் நெருக்கமாகப் பிடிக்கும். அக்கட்டிகளின் முனையானது உள்ள மூர்ந்த, நடுவில் பள்ளம் விழுந்து, அதில் கொஞ்சம் சீழ்வடிவதுமாய் இருக்கும்!

—।.

4-வது. கச்ச பிரோகம்:

இது, சிற்றுருவமுள்ள ஆமை முதுகைப் போல் மருக்களாக உப்புகின்ற இரந்திகள் 5-6. என்றும் கணக்கிடும் படிக்கு உண்டாக்கும்.

5-வது. பனசிகா ரோகம்!

இது, காதின் மேலாவது அக்காதின் முற்றிலுமாவது கெட்டிப் பட்டதாய் ஆம்பற் கிழங்குகளைப் போல் கட்டிகளைப் பிறப்பித்து அதிக வேதனையை உண்டாக்கும். இவ் விரணம் பலாக்காய் முள்ளுகளைப் போல் உருவத்தைப் பெற்றிருப்பதால், பனசிகா ரோகம் எனப் பேர் பெற்றது.

6.-வது பாஷாண கர்த்த பிரோகம்.

இது, கல்லுகளைப் போல் கெட்டியாய் நிலைபெற்று வீங்கி அற்ப நோவைத் தருகின்ற கட்டிகளை உண்டாக்கும். பாஷாணம் என்பது கல். கர்த்தபம் என்பது வெண்காக்கட்டான் காய்.

7-வது. முக தூஷிகா ரோகம்:

இது, வாலிபர் முகங்களில் வெங்காயம் போலும் இலவ முள்ளைப் போலும், மடி பருத்து நீர் உள்ள கொப்புளங்களை உண்டாக்கி உபத்திரவத்தைத் தரும். இதனை முகப்பரு என்பர். இது நக முதலியவைகளால் விருத்தி யடைந்தால் அபாயமாம். முகதூஷிகம் என்பது வெங்காயம்.

8. வது. பத்மகண்டக ரோகம்.

இது, சிலேஷ்ம வாதங்களினால் தாமரைக் கொடியினது முட்களைப் போல் நோவில்லாத வெளுத்த சொறிகளைத் தேக முற்றிலும் பிறப்பிக்கும்.

இதனைத் தவளைச் சொறி, பெருஞ் சொறி என்பர். இது பசலை வெங்காயக் கல்கள் இவையலால் போம்.

பதுமகண்டகம் என்பது
தாமரைமுள்.

9-வது. விஷர்தா ரோகம்.

இது, தேகத்திலாவது வாயிலாவது இரு சடலையை ஒத்த கொப்பளங்கள் உண்டாக்கும். இதனால் தாகமும் அழலும் நோவும் உண்டாகும்.

அசாத்திய கண்டமாலை ரோக நிதானம்:

எந்தக் கண்ட மாலைக் கட்டியாவது அருகின் வேரைப் போல் கிளைப்பதும், அடங்குவது மாயிருந்து இதனால், சுரம், இருமல், வாந்தி, ~~சோசம்~~ பீநசம், பக்கநோவு, தேக அட்சகம் என்னும் இக் குணங்கள் உண்டாகில், அசாத்திய- மாகவே முடியும். இக் குணங்கள் இல்லாவிடில் சாத்தியமாம்.

நாடி விரண பேதம்.

நரம்புகளில் பிறக்கின்ற கட்டியானது, பழுத்து உடைந்து விழுமத்தால், அந்த நரம்பைப் பற்றி மாமிசதாது அஸ்திதாது வரைக்கும் இலயோடும். எவ்வாறெனில், அது ஒரு நரம்பைப் பற்றினும் அதற்குச் சகல நரம்புகளும் சம்மந்தப் பட்டு வலைப் பின்னலைப் போல் இருப்பதால், சீழ் ஓடி நிற்கும். சீழ் கொள்ளுதற்கும் ஒரு வழியே அன்று பல வழியும் உண்டென்றறிக. ஆதலால் இதைச் சில்லோட வெட்டாமல் உபாயத்துடன் வசப் படுத்த வேண்டும். இதுவே நாடி விரணம் இது. வாதநாடி விரணம், பித்தநாடி விரணம் சிலேஷ்மநாடி விரணம். திரிதோஷநாடி விரணம் அஸ்திநாடி விரணம் என ஐந்து விதப்படும்.

நாடி என்பது — நரம்பு.

கண்ட மாலை ரோக பேதம்.

வாத பித்த சிலேஷ்மங்களானவை, மேதோ தாதுவை யநுசரிப்பதனாலும், மாமிசதாது விருத்தியினாலும் கழுத்தின் நரம்புகளிலும், கண்களிலும், அக்குள்களிலும், அரைகளிலும், தேக நிறத்தைப் பெற்றுக் கெட்டிப்பட்டு மிருதுவாகிறது நெல்லிக்காய் இலந்தைக்காய்ப் பிரமாணத்தை ஒத்துச் சிறிதும் பெரிதுமான கட்டிகளுண்டாகும். அவைகள் நாட்சென்று பழுத்து உடைந்து நடுவில் குழி விழுந்து பலபேதங்களாய் இருக்கும். இவற்றுள் சிலது அற்ப நோவுடன் உடைந்து சீழைச் சொரிவதும், சில நமைச்சலுடன் உஷ்ணத்தைக் கருவதும், சிலது கன்றுக் கொண்டயிருப்பதும். சிலது நெடுநாள் சென்றுங் கரையாது வருப்பதுமாக இருக்கும். இந்த ரோகம், கண்டத்தைச் சுற்றிலும் மாலையில் பிறப்பதால் கண்டமாலை எனப் பேர் பெற்றது. இது தொண்டைக் கழுட்டிகளில் கண்டால், அரையாப்புக் கட்டி என்பர். இவை கட்டுக லிங்க. பூரப்படாங்கு, வச்சிர பிசத் தயிலம் முதலிய ~~அ.~~ ஔஷதங்களும் விரணச் சிகிச்சைகளும் உதவும்.

சாமானிய சர்ப்ப விடக் குறி!

சர்ப்பக் ~~க~~ கடியுண்டவனுக்கு, மலமூத்திரம் தடுக்கல், மார்பில் கனத்தலுடன் குத்தல், ரோமச் சிலிர்ப்பு, வாந்தி, தாகம், நாசியால் பேசுதல், கைகளில் நோவு, கண் சிவத்தல் (அல்லது) கறுத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகிலும்; சந்திர சூரிய நக்ஷத்திராதி கிரகங்கள் கண்ணுக்குத் தோற்றவிட்டாலும், கண்ணாடி நெய் தயிலாதிகளில் முகம் தெரியாவிட்டாலும், அசாத்தியம். ஆனால், இப்போது சொல்லிய குறிகளெல்லாம் சகல சர்ப்ப விடத்திற்கும் பொதுவாயிருக்குமென்றறிக!

சர்ப்பங்களின் தந்து:

சர்ப்பங்கள் பிறந்த உ.வது மாதத்தில் தோல் உரிக்கும் போதும், 6-வது மாதத்தில் பல் விடம் குதிக்கும் போதும் அவைகளுக்கு ~~கு~~ என்றாகித் தந்து என்றறிக:

கடித்த சர்ப்பச் செய்கைக் குறி:

எந்த சர்ப்பமாவது, கடித்தவுடன், படத்தை விரித்து ஆடினாலும் தரையிற் புரண்டாலும், கடித்த இடத்தில் ஆடிப் பின்பு அசைவற்றுக் கிடந்தாலும், கடி உண்டவனுக்கு விடம் மீளாதென்றறிக.

சித்தர் மதாந்தரம்:

கருநாக விடம் அதுவே கெவுண சர்ப்பமாம்:

இது, அவுஷாதிகளால் இமைகளையும், இரண்டு காதுகளையும் பாதிரிய வாதத்தைப் போல் செவிடாக்கும். இந்த விடம் நிலப்பனைக் கிழங்கும், உப்பிலாங் கொடி வேரும் அரைத்து சிறு எலுமிச்சங்காய் பிரமாணம் முகூர்த்தத்திற்கு ஒரு தரமாக 8 தரம் அருந்தில் முறியும்.

சிறு நாகம்:

இது, கருப்பை அகலம் உள்ள படத்தையும், பருத்த எ.க்கை ஒத்த உடலையும் பெற்று, தாழை மலர்களின் வாசமாயிருக்கும். இவ் விஷத்திற்கு மகா விஷ சிகிச்சை வேண்டும். இதனை பூநாகம், புல் நாகம், என்பர். பூநாகம் என்பது தாழம்பூ நாகமாம்.

விரியன் பேதம்:

விரியன் என்பது, பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர்விரியன், பொறிவிரியன் புல்விரியன் என ஆறுவிதப்படும். இவைகள் பத்திரகாளியின் ஆடையில் இருந்து பிறந்த தாகச் சிலர் சொல்லுகிறார்கள்.

இது, மந்திரவலி, அவுஷதவலி, தெய்வலி இம் மூன்றும் ஒத்துக் கொள்ளில் இறங்கும். இருஷிகம் என்பது — தேள்.

சாதாரண தேளின் பேதம்.

தேளானது, உச்சிலிங்கத் தேள், வாதத் தேள், பித்தத் தேள், சிலேஷ்மத்தேள் என 4 விதப் படும். அன்றியும் நண்டுவாய்க்காலி என்று ஒன்றுண்டு.

1. உச்சிலிங்கத் தேள்.

இது, பகற்காலத்தில் கொட்டும். இவ் விடத்தினால், அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில் மிகுவேதனை ரோமச் சிலிர்ப்பு, அதிகசீதளம், என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மந்திரத்தால் வசப்படும்.

2-வது. வாதத் தேள்:

இது, மார்பு நோவு, மேல்அவாசம், எலும்பு நரம்பு, கீல் இவைகளில் நோவு, தேகங் கறுத்தல், நடுக்கல், புரளல் முதலிய குணங்கள் உண்டாக்கும்.

3. வது. பித்தத்தேள்

இது, அறிவு நீங்குதல், அநேகமான மேல்மூச்சு, வாயானது காரமாயிருக்குதல், முகத்தில் எண்ணெய் தடவினது போல் பளபளப்பு, மாமிசங் கரைதல்.

சோகை என்னும் இக் குணங்களை உண்டாக்கும். அன்றியும் அவ்விடத்தில் வியர்வை, சுவட்டையில் நெறிகட்டுதல், எரிச்சல், கடுத்தல், மறுநாள் வரைக்கும் நோதல் என்னும் இக் குணங்கள் உண்டென் பாருமோர்.

4-வது இலேஷ்மத் தேள்:

இது, வாந்தி, அரோசகம், மார்பு அதிரல், வாயில் சலம் வடிதல், பீநசம், சிரே முற்றிலும் வாதைக்கண்டை ஒத்த சீதளம், வாயினிப்பு என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இவ்விடங்கள் கோழி மலம் உலர்ந்ததை நெருப்பில் இட்டுக் கடிவாயில் புகை பிடிக்க இறங்கும். (அல்லது) கரு நாபியைத் தண்ணீரில் உரைத்துக் கொட்டிய வாயில் போடத் தீரும். (அல்லது) பூனைக்காலி சொறிச் சாறும், முருக்கிலைச் சாறும், முருங்கையிலைச் சாறும். கொட்டும் வாயில் வேது பிடிக்க இறங்கும் (அல்லது) வெண்குன்றி வேரை வெந்நீரில் அரைத்துப் பிழிந்து வடிகட்டிப் பஞ்சில் ஊட்டாக் கொண்டு இடது பக்கம் கொட்டினாலும், வலது மூக்கிலும், வலது பக்கம் கொட்டினால் இடது மூக்கிலும் நசியம் பண்ணத் தீரும்.

நண்டு வாய்க்காலி

இது கொட்டினால், வியர்வையும், நெறிகட்டுதலும், வீக்கமும், கடுப்பும், குடைச்சலும், எரிச்சலும் திமிரலும், வாயில் நுரையும் உண்டாகும். இந்த விடம் எட்டி வேர்ப்பட்டையை பெரும் நெல்லிக்காய் பிரமாணம் அரைத்து அரை ஆழாக்கு, வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுப்பித்து கொட்டின வாயால் சக்கிரிக்காயைச் அட்டுக் கட்டில் தீரும்.

மூஷிக ரோகம்.

மூஷிகம் என்பது 18 வகைப்படும். அவையாவன. ~~லா~~ லாலநம், சபளம், புண்டரம், ஹாரிதம், சிகிரம், அசிதம், கஷாயதந்தம், குஹகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், அவேதம், கபோதம், உந்துரு, பலிணி, நசாலம் என்பனவாம். மூஷிகம் என்பது எலி. அன்றியும் அசுந்திரி என்பது ஒன்றுண்டு. இதுவே மூக்கூறு.

1. வது. லாலந எலி.

மிகுந்த அலச்சல் உடையதாயிருக்கும், இது கடிக்கில், வாந்தி, மூர்ச்சை, வாய்நீர், ஊறல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

2. வது. சபள எலி.

பல நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் இரிகோட குணத்துடன் வாந்தி, ~~ஜ~~ மிகுந்த மூர்ச்சை அதிக தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

சபளம் என்பது - பல நிறம்.

3. வது. புண்டர எலி.

பேய்க் கரும்பின் நிறத்தையும் பெற்றிருக்கும் இது கடிக்கில் சரீரம் வெளிறவும் அக்கடிப்பு வர்ணமுள்ள விரணமும் உண்டாகும்.

4. வது. ஹாரித எலி.

மஞ்சள் நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் அக்கினி மந்தமும் கொட்டாவியும் மயிர்க் கூச்செறிதலும் உண்டாகும்

5-வது. கிருர எலி.

தேக முற்றிலும் முறைந்த ரோமங்களைப் பெற்றிருக்கும். இதுகடிக்கில் தல நோவு, வீக்கம், வாந்தி, பிரமை, தேகமுற்றிலும் மச்சம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

6. வது. அசித எலி.

உதட்டில் கறிய நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சரீரம் கறுத்தலும் மூர்ச்சையும் வாந்தியும் மார்பு நோவும் உண்டாகும்.

7. வது. கடாய தந்த எலி.

சிவந்த பற்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், சதா உறக்கமும். மார்பு வறளும் மலபந்தமும் உண்டாகும். இதைத் தாங்கெலி என்பர்.

8. வது. ~~கிருஷ்~~ ந
குநக எலி.

மரக்கால் போல் உடலைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், சிவந்த மச்சங்களுடன் நோவுண்டாகும்.

9வது. கோகில எலி.

குயில் போல் புள்ளிகளைப் பெற்றிருக்கும். இது கடிக்கில், கிரந்தியும், உக்கிரமான சுரமும் தாகமும் உண்டாகும்.

கோகிலம் என்பது — குயில்.

10. வது. கபில எலி.

கபில நிறம் உள்ளது. இது கடிக்கில், கண்டு கண்டாக எழும்பி விரணம் ஆகும். இதனால் சுரம், பிரமை, வாந்தி என்னும் குணங்கள் உண்டாகும்.

11. வது. கிருஷ்ண எலி.

கரிய நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் இளைப்போடும் ரத்த வாந்தியும் மழைக் காலத்தில் அதிக ரத்தம் விழுதலும் உண்டாகும்.

12. வது. முதல் 17-வது. வரையில் அருணாதி எலிகளுக்கு

அருணம், சபலம், அவேதம், கபோதம், உந்துரு, பலினி ஆக 6 வித எலிகளுடைய கடிக்கில், சிலேட் அதிகரித்துச் சந்தி பாதங்கள் அதிகரித்தலுடன் கழுத்து இடத்தில் ரத்தம் வடிதல், நெற்றிகள் எழும்புதல், காதின் கீழ் கட்டிகள் பிறக்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

18. வது. ரசால எலி.

நாமக் கரும்பு நிறமாயிருக்கும். இது கடிக்கில், நெஞ்சு மரத்தலும் சொல்லக் கூடாத வேதனையும் உண்டாகும். ரசாலம் என்பது நாமக் கரும்பு. சகல எலி விடங்களும், தேகத்தில் அடங்கியிருந்து மழை மேகம் எழும்புகிற காலத்தில் அதிகரிக்கும். பெருச்சாளிக்கும் இவ்விடம் உண்டு.

அ அந்தரி.

இது, கழுத்தில் சுரம், இரத்தமும் பேதியும் வாய் பேசக் கூடாமையும் உண்டாகும். இதற்கு கிலிங்குமரன் ஆகும்.

அகந்தரி என்பது, மூன்றாறு.

எலிச் சுக்கில விட நிதானம்.

எலிகள் புணருங்காலத்தில் அச்சுக்கிலம் யார் மீதாவது இருந்தால், அந்த இடத்தில், கிரந்தி, வீக்கம், மச்சங்கள், எழும்புதல், பிரமை, அரோசகம், குளிர்க் காய்ச்சல், கீல் நோவு, நடுக்கல், ரோமச் சிலிர்ப்பு, மூர்ச்சை, இசிவு மாதிக்கம், வாந்தி தாகம், முதலிய குணங்களுண்டாகும்.

அசாத்திய எலி விட லக்ஷணம்:

எந்த, எலியினாலாவது, மூர்ச்சை, தேக வீக்கம், மாறுருவம், வியர்வை, காது மந்தம், சுரம், தலை நோவு, வாய் நீர் ஊறல், ரத்த வாந்தி என்னும் இக்குணங்கள் உண்டானால் அசாத்தியமே.

மேற் கூறிய எலி விடங்களுக்குச் சிகிச்சை:

இருமல், இரைப்பு, சோகை, வாந்தி முதலிய தூர்க்குணங்களைப் பிறப்பிக்கின்ற எலி விடம், அழிஞ்சில் வேர்ப்பட்டையை புன்கைக் காய் விதம், வெந்நீரில் அரைத்து, 8 நாள் 2 வேளையுங் கொடுக்கில் தீரும். இரட்டை எலி, சுண்டெலி இவைகளின் விடம், இலந்தைக்காய் அளவு பனை வெல்லத்தில் 3 துளி எருக்கம் பால் விட்டு மத்தித்து 7 நாள் சாப்பிடத் தீரும்.

ஞாயிற்றில் ரத்தப் பாய்ச்சலையும் பல்லுகளில் குடைச்சலையும் குருகின்ற ஸலவிடம், அவரிவேரை நெல்லிக்காய் அளவு 1/2 ஆழாக்குப் பசும்பாலில் அரைத்துக் கரைத்து 8 நாள் உள்ளுக்குக் கொடுத்து அந்த இலையை அரைத்துக் கடி வாயில் துவாலையிடத் தீரும். இன்னும் நிலக் காக்கணம் வேரைச் சிறிய கொட்டைப் பாக்குப் பிரமாணமாக அரைத்துக் காலையில் மாத்திரம் 7 நாள் (அல்லது) 5 நாள் சாப்பிடத் தீரும். இவைகட்கு உப்பில்லாப் பத்தியமாம்.

பேய்நாய்:

இது கடித்தால் விரணம் பிறக்கும். இதனால் தாது நஷ்டம், வாய்நீர் ஊறல், கண் மயக்கம், சூது மந்தம், தேகசஅங்கிக்குதல், காள் பிடிப்பு, அவ்விரணத்தில் திரோபாரம், தூங்கும்போது இன்னும் கறுத்த ரத்தம் வடிதல், மார்பு நோவு, மூர்ச்சை சுரம், தேகம் மரத்தல், தாகம், யென்று மிக் குணங்கள் உண்டாகும்.

இதற்குக் கற்றாழை மடலும் லவணமும் சமமாக இடித்துக் கடிவாயில் 3 தினம் கட்டுவதுந்தவிர பேயத்திவேர், ஆலம்பட்டை, வேப்பில, 3 ம். வகை 1க்கு பலம் 10. ஆகக் கூட்டி இடித்து 1 படி கஞ்சியில் போட்டு கொதிப்பித்துக் குழம்பாய் இறக்கி ஏழுநாள் மேலில் பூசிவிட மருந்தால் விரேசனமும் செய்விக்கத் தீரும்.

—7.

சகல மிருக செந்துக்களின் விட நிதானம்:

குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி, ஓணாய், நரி, பூனை, மாயப்பூனை, குரங்கு, கீரி, முதலை முதலிய செந்துக்கள் கடிக்கில் அந்தக் கோரைத் தந்தங்களில் இருக்கின்ற விடத்தினால் நோவு, உருவபேதம், சோர்வு, நித்திரையில் வியர்வை ஒழுகுதல், சுரம், பிரமை, தாகம், வீக்கம், இரைந்தி, மூர்ச்சை, கடி வாயில் மச்சமும் அதன் மேல் கொப்புளமும், எலும்பில் புடையும் அனேக ரேகைகளும் பிறக்குதல் என்னுமிக் குணங்களுண்டாகும். இவைகட்கு உடனே ரசகந்தக பாஷாண வர்க்கம் சேர்ந்த விட மருந்துகளைக் கடிவாயில் வைத்துக் கட்டி, அந்த இடத்தில் ரோமங்கள் முளைக்க வொட்டாத விரணஞ்செய்வித்து அனேக கால தீர்த்தத்தில் ஆற்றி வந்த விரசுந்த அவுடதங்களை உள்ளுக்குங் கொடுப்பிக்கில் மேற்படி விடம் சாத்தியமாம். இவ்வாறு பெரிய சிகிச்சைகளைச் செய்வானேன் என்றால், அவ்விடங்கள் அற்பமேனும் தேகத்தில் தங்கி ஊறுமாயின் பின்பு சகல துர்க்குணங்களும் பிறக்கும். ஆதலால் செய்ய வேண்டும்.

இது தப்பிகாலாதீதச் சிகிச்சை செய்கில் விடமும் முதிர்ந்து அந்தந்த செந்துக்களின் நடை, குரல், பார்வை, சேஷ்டை, முதலிய குணங்களும் பிறக்கும் அப்போது அசாத்தியமாம்.

ஜங்கம விட நிதானம்:

சகல விடங்களுக்கும் சுரம், இருமல், இரைப்பு, வாந்தி, விக்கல், மூர்ச்சை, தாகம், சரீரத்தில் கனத்துவம், வயிறுப் பிசம், அடிவயிறும், தலையும் நோதல், வீக்கம், துர்க்கந்தத்தும் வடிகின்ற விரணம், வாதிதாபிக்கம் என்னும் 14 துர்க்குணங்கள் பிறக்கும். இதுவே விட உபத்திரவமாம். இக் குணங்கள் உண்டாவதற்கு முன்னமே தகுந்த சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம். நீடிக்கில் கஷ்ட சாத்தியமாம்:

தூஷி விட நிதானம்:

முற்கூறிய எவ்வகை விடமாவது காசனஷி ணகதியாலும் விடஹரமான சிகிச்சையால் அதனாலும், வெய்யில், காட்டுத்தீ, காற்று முதலிய வைகளினால் சோஷித்தாலும், சுபாவமாகவே கோஷித் தாலும், அவ்வுடற்குள் அமுக்கப்பட்டிருந்தாலும், அவ்விடங்களுக்குத் தூஷிவிடம் எனப் பெயர். இவைகள் அற்பமாயிருந்தாலும் மனிதர் தேகத்தில் பாய்ந்தவுடனே சிகிச்சை செய்ய வேண்டும். செய்யாவிடில் ஒருவருட பரியந்தம் உடம்பி னுள் அடங்கியிருந்து பின்பு கபத்தைப் பற்றி ஏறும். இதனால் பலஹீனமான மலம், வாயினில் ரத்தம் விழுதல், தாகம், அரோசகம், வாந்தி மூர்ச்சை, ஆத்தொனி சோருதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும். அதற்பின் அது ஆமாசய ஸ்தானத்தைப் பற்றி ஏறும்: இதனால், சிலேஷ்ம வாத ரோகங்கள் பிறக்கும்: அதற்பின் அது பக்குவாசய ஸ்தானத்தைப் பற்றிக் கலக்கும். அப்போது வாதரோக குணங்களெல்லாம்

பிறப்பதுமன்றித் தலைமயிர்கள் உதிரும். அதற்குப்பின் ஆசப்த தாதுக்களிலும் பற்றிப் பரவும் அப்போது அனந்த விகாரங்களுண்டாகும். ஆதலால் அற்ப விடத்திற்கும் மகாவிட சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

நாகு என்பது - அற்பமாம்.

சித்தர் மதாந்தரம்:

கரட்டு ஓணான், தேள், நண்டுவாய்க்காலி, பூரம், சிலந்தி, புலிமுகப் பூச்சி, செய்யான், பொறிவண்டு, இவைகள் விடியென் என்னும் பாம்பினை புதுகு வெருக்க, அதன் வழியாகப் பிறக்குமென்று சில மாதாந்தரம் கூறுகின்றது.

நீத மண்டலி

இது கடித்தால், உடல், இலிர்தலும் அரட்டலும், மிகுந்த வியர்வை, பெருக ஓடுதலும் உண்டாகும். இதற்கு இரச கந்தக மாத்திரை உண்டை ஆகும்.

இரத்த மண்டலி

இது, கடித்தால், மயிர்க்கால்கள் தோறும் ரத்தம் ஒழுகும். இதற்கு, யானைவணங்கி இலையை மாத்திரம் பெரிய எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து ஆடுபாக்கு நல்ல சுக்கில் கரைத்துக் கொடுக்கில் நலமாம்.

பூரம்:

இது, கடித்தால், அது ஊருவதுபோல் நினைவும் அவ்வுருவத்தைப் போல் தடிப்பு உண்டாகும். இது குப்பை மேனிச்சாற்றில் போம்.

அரு புள்ளி வண்டு.

இது, கழுத்தல், சர்வாங்கத்திலும் சில நாட் சென்ற பின்பு வட்டம் வட்டமான தழும்புகள் உண்டாகும்.

செவ்வட்டை.

இது, கழுத்தால், அவ்விடத்தில் சிவந்து தடித்து தடித்து மரத்திருக்கும்.

அரணை

இது, கழுத்தால், சரீர முழுவதும் நடுக்கல், வாயால் நுரை விடுதல், நாவு தடித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இதற்கு ஓணான் விடத்திற்குச் சொல்லிய சிகிச்சைகள் உதவும்.

நாரகிண்ணி

இது, கழுத்தால், வீக்கம், எரிப்பும் காட்டுண்ணிக்கு இக்குணத்துடன் கடுப்பும் உண்டாயிருக்கும். இதற்கும் குப்பைமேனி ரசம் ஆகும்.

எலி பேதம்!

கத்திரி மணியன், செம்முக்கன், வரளி, குறட்டை, கருங்காலன், கல்யன் விடவெலி, செற்றசிட்டி, செவ்வலி, வீங்கெலி, தூங்கெலி, உலப்பெலி, புடையெலி, இரைப்பெலி, செங்கண்ணன், புள்ளாக்காடன், குறுங்காலன், நச்செலி. ஆக 18 வகைப்படும்.

பெருவிரியன் விடம்:

இது, மயக்கம், தயக்கம், உறக்கவும், வெப்பம், என்றும் இவைகளை உண்டாக்கும். ஆனால் கடிவாயில் ரத்தமும் வீக்கமும் எரிச்சலும் பிறக்கும்.

இரத்த விரியன் விடம்:

இது, வயிற்றில் வியாபித்தால், அவ்வயிற்றில் வலியை உண்டாக்கி உண்டாக்கி. சொரூம், அப்போது கடித்த வாயில் உதிரமும் மேலில் தடிப்பும் பிறக்கும் இது தவிர மற்றைய நான்கு வித விரியன் விடத்தினால் கடிவாயில் மாமிச மிகுதியும், தடிப்பும், தேக எரிச்சலும் வலியும், சோர்வும், நித்திரை மயக்கமும் உண்டாகுமென்றறிக. இவைகளுக்கு மிக மகிழம் பருப்பு, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளிப்பால், வேப்பெண்ணெய் ஆப்பைப் பிண்ணாக்கு, ரசம், வெண்காரம், மரக் காரைப்பழம். பூவன் பழம் இப்பன்னிரண்டும், வகைக்கு வராகனிடை 1ம். வெற்றிலை 14.ம். ஒன்றாய்ப் போட்டரைத்துச் நிழலில் கடலிக் காய வைத்துக் கொண்டு, இருநீரில் கரைந்து நாசியிற் பிழிய சகல விரியன் விடங்களும் தீரும்.

வழலைச் சர்ப்ப விடம்!

இது, கடித்த இடத்தில் ரத்தமும் வாயில் அனற்றலுடன் உண்டாகும். இதற்குச் சிகிச்சை. ஏலம், மிளகு, சிவக்கண்டித்திவேர் இம்மூன்றுஞ் சமன் கூட்டிக் கற்பூரவள்ளிச் சாறு விட்டரைத்து உலர்த்திய மாத்திரையைத் தண்ணீரில் உரைத்துக் கடியுண்டவன் கலிக்கமிட விடந் தீரும்

கரு வழலைச் சர்ப்ப விடம்:

இது சரீரத்திற் காய்ச்சலோடு அதிக வியர்வையும், உள்ளங்கால், உள்ளங்கையில் சிவப்பும், கோழையால் மார்பில் அடைப்பும் பிறக்கும் படிக்குச் செய்யும். இதனால் அனந்த வேதனையும் உண்டாகும். இது நிலச்சோதியும், கடக ரோகணியும், கோழி முட்டை வெண் கருவும், சமமாகக் கூட்டி அரைத்துப் பசும்பாலிற் கலந்து உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

மூர்க்கன்:

இது, கழுத்தயிடத்திலும் முதுகிலும் வேதனை பிறப்பதுந் தவிர அவ்விடத்திலே வாயும் கழுத்தும் முறுக்கிக் கொள்ளுதல், குரல் நெரிதல், தேகம் பதறல், தலை அழலல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விடம் காழையைத் தெளித்து வள்ளி இலையை இடித்து அரைத்து ஆடூராக்குச் சாறு பிழிந்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் அத்துவால விடந்தீரும். இதற்குக் கொம்பேறி மூர்க்கன், சாரை மூர்க்கன், பனைஏறி எனப் பெயராம். இது தன்னால் கடியுண்டவன் சுடுகாட்டிலே தகிக்கப் படுகின்றனோ என்று உயர்ந்த மரக்கொம்பில் ஏறிப் பார்க்குமென்றும், அவ்வாறு தெரிந்தவர்கள் உடனே வைக்கோல் அமை முதலியவைகளை அச்சுடு காட்டிலிட்டுப் புகை கண்டு அவன் இறந்தானென்று இறங்கி விடுமென்றும், அதற்பின் சிகிச்சை செய்யில் விடந்தீருமென்றும் சொல்வது உலக வழக்கம்.

மயக்கச் சர்ப்பம்:

இது, கண்ணில் விடத்தையுடையது. இப்பார்வை சற்று நேரம் படினும் உடனே அவர்களுக்கு மயக்கமும் கண்களில் அயர்ச்சியுமுண்டாகும்.

முறுக்கச் சர்ப்பம்:

இது, சரீரமெல்லாம் திருகுக் கத்தியைப் போல் முறுக்கிக் கொள்ளுதலையும், மேற்றால் தெள்ளுவதுபோல் பதறலையும் உண்டாக்கும்.

சாரைப் பாம்பு:

இது, நீண்ட உடலையும் வேக நடையையும் பெற்று, மனிதரை வாலால் அடிப்பதும் அன்றி பாத முதல் மார்பு வரைக்கும் சுற்றி இடுப்பையும் நெருக்கும். இதில் வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, மஞ்சள் சாரை என நான்கு பேதம் உண்டு. அவைகளும் இவ்வாறே செய்யும். இவை இவைகளைப் பார்த்த எருமைமாடுகளுக்கு மாலைக்கண் உண்டாகும் என்பர்.

புடையன்:

இது, நீண்ட உருவத்தையும் அழுக்கு நிறத்தையும் பெற்று, வாலின் முனையால் குத்தித் தேகத்தில் புடைகளை விஸ்தாரம் உண்டாக்கும்.

மண்ணுளிப் பாம்பு:

இது, தம்பாக்கு, வெள்ளி, ரத்தம், ஆகிய இவைகளின் நிறத்தைப் பெற்று. நீண்ட பயற்றங்காய்ப் பிரமாணமுள்ளதாயிருக்கும். செவியில், நுனையில், அபாயமாம், இவ்விடத்தில், பருவகாலந்தோறும் சிறு சிறு தடிப்பும் நமைச்சலும் உண்டாகும். இதனைச் சிறு பாம்புக்கடி என்பர். இத் தடிப்பு, எண்ணெய், விட்டுக் கலந்த கூழை 7 நாட்கள் சாப்பிடத் தீரும்.

காலியாங் குட்டி.

இது, ஒரு சாண் இரண்டு சாண் நீளத்துடன் தேகம் நிறைந்திருக்கும். ஆனால் கடிக்க அறியாது. கடிக்கில் பெருஞ் சிகிச்சை வேண்டும்.

கண்குத்திப் பாம்பு இதுவே பச்சைப் பாம்பாம்:

இது பச்சை நிறத்துடன் நீண்ட உருவத்தைப் பெற்று விருக்ஷங்களில் வாசம் பண்ணுவதும், நெகிட்டவர் கண்களைக் குத்துவதுமாயிருக்கும்.

வெண்ணாந்தைப் பாம்பு:

இது, பருத்த தெக்கு, பனைமரம், தூண் முதலிய பிரமாணங்களையும் உடலெல்லாம் வருவருப்பாய் உள்ளதாயி வாலும், தலையும் ஒரே மொத்தமாய் மேனில் வெளுத்த வரிகளைப் பெற்று, கோழி, ஆடு, மாடு, முதலியவைகளை விழுங்குவதாயிருக்கும். சிலர் யானையை விழுங்குமென்றும் சொல்லுகிறார்கள். இது மலைப்பாம்பு தாசாரிப்பாம்பு எனச் சொல்லப்படும்

—

நாவெரட்டிக் காய்ச்சல், உள மாந்தை, அந்தர விட்சை, குடற்கலி, உழல், தகதாமை, இது முதலிய பிணிகள் மதாந்தரங்களில் சொல்லப்பட்டிருக்கினும், நூல்களிற் கிடைத்த மட்டில், உள மாந்தை, குடற்கலி, நாவெரட்டிக் காய்ச்சல், இவைகள் மாத்திரம் இதனடியிற் கூறுவாம்:

உள மாந்தை ரோக நிதானம்:

இளைப்பு ரோகத்தின் பிரிவாகிய இந்த ரோகம் பசியை அடக்குதல், பசி மந்தித்த பின்னர் புசித்தல், கண் விழிப்பு, பகல் நித்திரை, அதிமாமிச உணவு, அதிசை யோகம், அதிக கட்டம், இதுகளால் உளமாந்தம் ரோகமுண்டாகும்:

உள மாந்தை ரோக பேதம்:

இது, வாத உள மாந்தை, பித்த உள மாந்தை, சிலேஷ்ம உள மாந்தை, தொந்த உள மாந்தை என நான்கு விதப் படும்:

1. வது. வாத உள மாந்தை

இது, நெஞ்சு, பருவெலும்பு, பக்கம், இவைகள் நோகும்படி நின்று வலித்து, தொனியோடு இருமல், கை கால் கடுப்பு, சுரம், உள்ளில் சீதக் கட்டிக்கொண்டால் வாயால் சீதம் விடுதல், கை, கால் எரிவு, உணவு செரியாமல் வாந்தியாகுதல், சிலேஷ்மம் அதிகரித்தல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

—7.

2- வது. பித்த உளமாந்தை

இது, கீழ் வயிற்றினுள் பருத்த கட்டிகாணில் அவ்விடம் பச்சைப் புண்போல் நோதல், சர்வாங்கமும் உளைச்சல்சுரம், தலைவலி, இருமல், இரைப்பு, மிடறு விரணமாதல், மயக்கம், பிரட்டல், வாயால், நீர் விழுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

3. வது. சிலேஷ்ம உளமாந்தை

இது, தேகம், இளைத்துப் புண்போல் நோதல், சுரம், வெளுத்தல், வாயால், நீர் விழுதல், மனக்கலக்கம், வாந்தி, மயக்கம், சிலேஷ்மாதிக்கம், நடுக்கல், என்று மிக் குணங்கள் உண்டாகும்.

4. வது. தொந்த உளமாந்தை.

இது, சுரம் தலைவலி, இருமல், கோழை, அசதி, மிகு உறக்கம், துர்வாசனையுடன் வாயால் நீர் விழுதல், சர்வாங்கமும் இளைவு உளைவு இறங்காமை என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்.

உளமாந்தை ரோக சாத்தியா கஷ்டசாத்திய அசாத்தியம்.

பித்த உளமாந்தை, அசாத்தியம் வாத உளமாந்தையும் சிலேஷ்ம உளமாந்தையும் கஷ்டசாத்தியம், தொந்த உளமாந்தை அசாத்தியம். இவைகளுக்குச் சிகிச்சா சாரத்தில் கூறிய உருக்கு (அல்லது) இளைப்பு ரோக சிகிச்சைகள் நன்மையைத் தரும்.

குடற்கரி ரோகம்:

இது நோக்கில் வாய்வு அதிகரித்து ஆமாசயத்தைப் பற்றி மேலேறிக் குடலில் தங்கி அனலக்கினியைக் கெடுத்து, முதுகு, நெஞ்சு, விலா முதலான விடங்களிலேயடிப் புடைத்துத் திரண்டு வலித்தல். அப்போது மலங் கருகல், உடல் அயர்தல், சுரம், பக்க இசிவு, மயக்கம், புலம்பல், வாய் நீரூறல், உணவு செல்லாமை, தேகம் மெலிதல், வாயால் வெண்ணுரை வருதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும். இது கஷ்ட சாத்தியம்.

நாவெட்டுக் காய்ச்சல்:

இது, விரைவில் தாதுக்களின் எல்லை கடந்து, அஸ்தியைப் பற்றி அதிவேக சுரங்களால், உள்ஈரல் வெக்காடு, நாவிரணம், ஈரல் கரைதல், மயக்கம், சோர்வு, உணவு செல்லாமை, சரீரம் எரிதல், என்னும் இக்குணங்களை உண்டாக்கும். இது கஷ்டசாத்தியம். ஆயினும் இச்சாரத்தின்படிச் சிகிச்சை செய்யில் சாத்தியம் ஆவது உண்டு.

வாதம், பித்தம், சிலேஷ்மம், மலம், சலம், ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சைதாது, சுக்கில சோணித தாது என்கிற இந்த 12-ம். ~~சட~~ சாடராக்கினியின் கிரேயத்தால், உணவுகளில் நின்றும் பிரிகின்ற அன்னரசத்தால் போஷிக்கப் பட்டுப் பலத்தையும் காந்தியையும், நிரந்தரமாகக் கொடுத்துக் கொண்டு தேகத்திற்கு ஆதாரமாக இருக்கின்றன. ஆயினும் மேற் கூறிய சப்த தாதுக்களில் புருஷர்கட்கு சுக்கிலமென்றும், மாதர்கட்குச் சோணிதமென்றும் சொல்லப் படுகிற இவ்விரண்டு முறையே சிவமென்றும், சக்தியென்றும், பெயர் பெற்றுக் கருப்ப உற்பத்திக்கும் ஆயுள் விருத்திக்கும் முக்கியமாக இருக்கின்றன.

இது அகால போஜனம் உண்ண பார்த்த பக்ஷணம், பயம், துக்கம், வியாகுலம், சிந்தித்தல், மிகசந்தோஷம், அதிகோபம், மிரண ஷேமம், கரும லோபம், அதி தூல ரோகம், அதிசார ரோகம், க்ஷரைத்தாது விஷபேதங்களால் வருகின்ற பற்பல ரோகம். காலத்திலும், அகாலத்திலும், காமநூல் விதிப்படி அனேக பந்தங்களுடன் செய்கின்ற சையோகம் மர்மஸ்தானம் கெடுதி என்னுமிவைகளினிலும், விர்த்தாப்பியத்திலும் நஷ்டப்படும். இவ்விதம் நஷ்டமுற்ற சுக்கில சோணிதத்தை உடையவர்கள் பலவித அசாத்திய ரோகங்களை அநுபவிப்பதுமின்றி, தம்போதிகத்திற்கு இணைந்து ஊர்க்குருவியைப் போல் புணருவதும், வாயினில் பேசி இச்சைத் தீருவதும்.

மித்தை விட நிதானம்

எந்தச் சர்ப்பமாவது, ஒருவனை வாயால் கவ்விப் பிடித்த சமயம் பக்கத்தில் நின்ற ஒருவன் அது பாம்பல்ல, பாம்பல்ல என்று உறுதியாகச் சொல்லுவானாகில் விடம் ஏறுதென்றறிக:

மித்தை என்பது = பொய்.

மகா விட சர்ப்ப நிதானம்:

மயானம், சாவடி, பாழானயக்கியசாலை, பாழ் வீடு, கோயில், நாற்சந்தி கூடிய இடம், தண்ணீர் வரப்பு, பாழுந்தோட்டம், பாசி விருக்ஷம், வேப்பமரம், மரப் பொந்து, கான்யாறு, மலைக்குகை என்னும் இவ்விடங்களில் இருக்கும் சர்ப்பங்களும், படத்தில் குடை, சடை, திருசூலம், கும்பம், மச்ச ரேகை,

ஆகிய குறிகளையுடைய சர்ப்பங்களும், சிவந்த நேத்திரமும், சிவந்த முகமும், உள்ள சர்ப்பங்களும், மகா விட சர்ப்பங்களாம். இவைகள் கடிக்கில் விடம் ஏறுவதற்கு ஒரு கிரமும், அதைத் திருப்புவதற்கு ஒரு அவுஷதமும் அத்தகைய இறப்பதற்கு ஒரு கெடுவும் இல்லவே இல்லை. ஆயினும் நமஸ்காரம் பூசை செபம், சாந்தி, மந்திரம் அவுஷதம் ஆகிய இவைகள் ஒரே காலத்தில் நேரிட்டு விடாதிருந்தாலும், அவர்களுக்கு மாறுவமாவது அங்கத்தில் யாதேனும் ஒரு ஊனமாவது உண்டாகும். எளிதில் இறங்காமையால் மஹாவிடம் எனப் பெயராம்.

அற்ப விட சர்ப்ப நிதானம்:

பசி, தாகம், வியாதி, கிலி, அக்கினி, காற்று, தோலுரிதல், விடங் கக்குதல், ஆகிய இவைகளால் அடிபட்ட சர்ப்பங்களுக்கும், சலம் நிறைந்த தடாகம், தருப்பை உள்ள வனம், முள்ளுப் பாதை, மந்திர வாதிகள் இருக்கின்ற ஊர், பரதேசம் இவ்விடங்களிலுள்ள சர்ப்பங்களுக்கும்; வன்னை ரே.ன சர்ப்பங்களுக்கும் அற்ப விடமென்றறிக! இவ்விடம் எளிதில் நீங்கும்.

சர்ப்பங்கடிப் பதற்குக் காரணம்:

ஆகாரம், நிமித்தம், பயம், கோபம், வைராக்கியம், சாபம், ஏவல், ஜன்மப்பகை, தெய்வகதி, காலகதி, அபாவகுரூரம், கோரையில் விட மிகுதி, தன்னை மிதித்தல் ஆகிய இச் செய்கைகளினால் சர்ப்பங்கடிக்கும்.

விடக்கடி நிதானம்

கடிவாயைப் பற்றி விடம் ஏறினால், அவ்விடத்தில் நோவும், தினவும், வீக்கமும், எரிச்சலும் உண்டாகும். இக் குணங்களில் ஒன்றேனும் இல்லாதிருக்கில், விடம் ஏறவில்லை என்றே நிதானிக்கவும்.

விட பரிக்ஷை நிதானம்:

சர்ப்பம் கடித்தவுடன், கசப்பு வஸ்துக்களைத் தின்றால் அச்சுவை மாறுபடுதல், விரல்களில் நகங்களில் கிள்ளினாலும், தலைமயிரைப் பற்றி இழுத்தாலும் நோவு தெரியாமை, காதை மூடில், தொனி இல்லா இருத்தல், சோம சூரிய அக்கினியும் விளக்கும் நேத்திரத்திற்குத் தோற்றாமை என்னும் இக் குணங்களிருந்தால், விஷம் தலைக்கேறிற்றென்றே நிதானித்து உடனே சகல சிகிச்சைகளையும் நடத்த வேண்டும்:

பல்லின் விட நிதானம்:

விடப்பை படாமல் பல்லு மாத்திரம் தேகத்தில் படுமாகில், கொட்டுவாய் சலம் போல் வாயில் நின்றும் சலம் வடியும். விடமே ஏறினால், நொப்பும் நுரையும் விடும். இவ் விடமானது கொஞ்சம் வியாபித்தாலும், அது ரத்த நாடி முற்றிலும் விரைவில் பரவும். இதனால் ஞாபக மறதியும், இரைப்பும், சரீரத்தில் கருவளையல் ஒத்த நிறமும் உண்டாகும்:

—.

விடப் பல் அழுந்தும் நிதானம்.

சர்ப்பம் கடித்து ஒரு பல் அழுந்தினால், விடம் இல்லை, மற்ற மூன்று பற்களும் அழுந்தினால் விடம் உண்டு. அவற்றுள் இரண்டு

பல்லருந்தில், அவ் விடம் மந்திரத்தினால் சாத்தியமாம். நான்கு பல்லும் அழுந்தினால் அசாத்தியமாம். அன்றியும், ஒரு தந்தமாவது அழுந்தி, அவ்விடத்தில் திருகியது போல் சங்கராகாரமாகத் தோற்றப்பட்டு, அதில் நின்றும் ரத்தம் வடிந்தாலும், அந்த இடம் ஆமை ஓட்டைப் போல் தடித்து வீங்கினாலும், அசாத்தியமே;- ஆயினும் மணி மந்திர ஔஷத வலியும், தெய்வ வலியும், விதிவலியும், திடமாக இருக்கில், கஷ்டத்தின் மேல் சாத்தியமாம்.

இத்தர் மரதாந்தரம்

விஷப் பல்லின் லக்ஷணம்:

சர்ப்பங்களுக்கு, காளி, காளராத்திரி, எமன், எமதூதன் என நான்கு பல்லுகள் முளைத்திருக்கும். இவற்றுள் 1வது காளி என்னும் பற்பட்டால் அவ்விடத்தில் புள்ளடிப் போல் காய முண்டாகி, அதில் நின்றும் பனிநீர் போற் சலம் வடியும். அப்போது, விடமானது தோலைப் பற்றி ஏறும். இதனைக் காலகடி என்றறிந்து தியானத்தால் உபசரிக்க, விடந்திரும்பும். அதனுடன் 2-வது காளராத்திரி என்னும் பல்லும்பட்டால், அவ்விடத்தில் முக்கோணம் போல் காயம் உண்டாகி, அதில் நின்றும் மஞ்சள் நீர்மான சலம் வடியும். அப்போது விடமானது மாமிசத்தைப் பற்றி ஏறும். இதனை அரைக்கடி என்றறிந்து மணிமந்திரத்தாலும் சபிக்க விடந் திரும்பும். அவ்விரண்டுடன் 3-வது எமன் பல்லுப் பட்டால், அங்கு எதாரட்டி போல் காயம் உண்டாகி, அதில் நின்றும் செந்நீர் வடியும், அப்போது விடமானது எலும்பைப் பற்றி ஏறும். இதனை முக்கால் கடி என்றறிந்து, மூலிகை, கலிக்கம், நசியம் ஆக்கிராணம் முதலியவைகளால் உபசரிக்க விடந் திரும்பும்.

அம்மூன்றுடன் 4.வது எமதூதன் என்றும்
பல்லும் பட்டால், அவ்விடத்தில் வில்லைப் போலும்
பிறையைப் போலும் காயம் உண்டாகி அதில் நின்றும்
கருநீரை ரத்தசலம் வடியும். அப்போது விடமானது
மூளையைப் பற்றி ஏறும். இதனை முருக்கது என்றறிந்து
மணி மந்திர அவுஷதாதியாலும் தெய்வ வலியாலும்
உபசரிக்க, விடம் திரும்பும்.

தாடைப் பல்லின் லக்ஷணம்:

இவ் சர்ப்பங்களுக்குத் தாடைக்குள் முள்ளைப்
போல் ஒவ்வொரு ஜோரைப் பற்களிருக்கும் அது பட்டு
விடம் ஏறினால், உடனே அபாயமாம்.

கடிவிஷ நிதானம்:

சர்ப்பங் கடிபட்ட இடத்தில் கருப்பு நிறமாகவும்,
கனிந்த நாவல் பழநிறமாகவும் இருந்தால், அவ்விடம்
மிகவும் கொடிதென்றறிக.

திக்கர் மாத்ராந்தரம்:

கடி மண நிதானம்:

சர்ப்பங் கடித்துப் பல்லழுந்திய இடத்தில்
மோந்தால், தாழை மலர் மணம் வீசினால், நல்லபாம்பு,
பாதிரிப்பூ மணம் வீசினால், வழலைப் பாம்பு, புளியம்
பூமணம் வீசினால், விரியன் பாம்பு, மல்லிகைப்
பூமணம் வீசினால், மண்டலிப் பாம்பு, மாங்கு, அக்கு
இவைகளின் மணம் வீசினால், சிறிய பாம்பு, என நிதானிக்
கவும். இம்மணங்கள் ஒன்றும் வீசாமல் சர்ப்பத்திற்குப்
பகையான மணம் வீசினால், சர்ப்பக்கடி அல்லவென்றறிந்து
கீடவிட சிகிச்சைகள் உடனே சந்தேக மறச்
செய்ய வேண்டும்.

மாதாந்தரம் முற்றியது.

தேக கடி ஸ்தான நிதானம்:

எந்தச் சர்ப்பமானது, புருவமையம், பக்கேசர் சிரியம், தலை, நெற்றி, நெற்றி தாடை, உதடு, தாழ்வாய்க் கட்டை, நெஞ்சு, தோள், உள்ளங்கை, அக்குள், தனம், தனம், மார்பு, அடி மார்பு, தொப்புள் வயிறு, ஆண்குறி, குதம், உள்ளங்கால், கீல், என்னும் இவ்விடங்களில் கடிக்கில் மரணமே.

ஸ்தான விட சர்ப்ப நிதானம்:

பாழுங் கோயில், பாழும் வீடு, பாழூர், ஆலமரம், அரசமரம், புன்னை மரம், புளிய மரம், முருங்கை மரம், சந்தை கூடும் இடத்து மரம், மூங்கில் புதரு, நந்தவனம், நாணல் படுகை, பிரம்பம் புதை, மயானம், ஏரிக்கரை, நதிக்கரை, அணைக்கரை, நீரில்லாத தாமரைக்குளம், முகத்துவாரம், ஐயனார் கோயில், பிடாரியார் கோயில், துர்க்கை கோயில், யாகசாலை, தேரடி, புதுமனை, புற்று, ஆற்றின் திட்டு, நாற்சந்தி வீதி, முச்சந்தி கூடிய வீதி, என்னும் இடங்களில் இருக்கின்ற எந்தச் சாதி சர்ப்பமாவது அந்தி சந்தி வேளையில் கடிக்குமாயின் அவ்விடம் அசாத்தியமே.

ஸ்தான திதி கால தோட நிதானம்:

எந்தச் சர்ப்பமானது, அனந்தம் பேர் கூடுகின்ற பொது விருக்ஷம், மயானம் என்னும் இவ்விடங்களிலும் பருவம், அமாவாசை, பஞ்சமி, பிரதமை, அஷ்டமி, நவமி, ஆகிய இத் திதிகளிலும், சூரிய உதய காலம், மாலை மயங்கும் காலம், அயர்ந்து நித்திரை செய்கின்ற காலம், பாதிராத்திரி காலம், ஆகிய இக் காலங்களிலும் கடிக்கில் மரணமே.

நக்ஷத்திர தோஷ நிதானம்:

சர்ப்பமானது பரணி, கார்த்திகை, ஆயில்யம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதயம், ஆகிய இந் நட்சத்திரங்களோடுங் கூடிய பருவகாலத்திலும், ஸந்தி முடிவிலும், அசுர முகூர்த்தத்திலும் கடிக்கில், அசாத்தியமாம். அன்றியும் மகம், திருவோணம், மூலம், சித்திரை, சோதி ஆகிய நக்ஷத்திரங்களிலும், ஜன்மநாள், அனுஜன்மநாள், திரிஜன்மநாள் இவைகள் சேர்ந்த அவிட்ட நக்ஷத்திரத்திலும், நவமியிலும், வீட்டிறப்புறங்களில் இருந்தும் கடிக்கில் அசாத்தியம் எனச் சில நூலில் சொல்லப்படுகின்றது.

அசுர முகூர்த்தம் என்பது - சந்தியான காலமாம்.

அசாத்திய விடக் குறி நிதானம்:

ஏறின விடம் மந்திர ரியான அவுஷதங்களில் நகம், உதடு, உள்ளங்கை, திரும்பாதிருக்கையில், அசாத்திய கேம. கரியைப் போல், கறுக்குமாயின், அசாத்திய மேலும் அந்த சர்ப்ப விடத்தினலாவது, தலையில் இருக்கின்ற ரோமம் உதிரல், மூர்ச்சை, மேற் அவாசம், விக்கல், இருமல், வாந்தி, மார்புகனத்தல், நடுக்கல், விகாரவேதனை, முகசோருதல், கண் சிவக்குதல், தொண்டை அடைப்பு, நாவல் பழம் போல் பல் கறுத்தல், ஆமையோட்டைப் போல் முதுகு உயருதல், நகத்துவாரத்திலும் ரத்தம் ஒழுகுதல் என்னும் இக் குணங்கள் உண்டாயின், அசாத்தியமாம்.

அன்றியும் கடிபட்ட இடத்தில் வீக்கமுண்டாகி ரத்தங்கசிதல், நாசிமெலிந்து சிறுத்து அழுந்திச் சில்லிடுதல் முதுகும் ஆண்குறியும் கோணுதல், முகம் சில்லிட்டு கழுத்துக் கோணுதலுடன் ரோமமும் சில்லிடுதல், விக்கல் தூரல், காலும், கையும், கருக்குதல், வாயில் நுரை விழுதல், தேகம் நோவோடு நடுக்கித் துவைத்தது போலிருத்தல், மலம் கழிதல் என்னும் இக் குணங்கள் உண்டென் பாரு முளார்!

—.

யௌவன சர்ப்ப ஆண் விடம்:

இது, வலப்பாகத்தில் கடிக்கும். இவ் விடத்தால், அப் பக்கத்துக் கண் ரத்தம் போல் சிவக்கும். பெண் சர்ப்பம் இடப்பக்கத்தில் கடிக்கும். இவ் விடத்தில் தடிப்புத் தடிப்பாகச் சில ரோகங்கள் பிறக்கும்.

விருத்த சர்ப்ப விடம்:

இது, கடிவாயில் வீக்கம் அற்ப நோய் பிறத்தல் இவைகளைத் தரும்:

கருப்பச் சர்ப்ப விடம்:

இது, சிரசு உதடு வயிறு தொடை ஆகிய இடங்களில் நோதல், நாவுருக்கறுத்தல், உறக்கம் வருதல், என்னுமிக் குணங்கள் உண்டாகும்.

சூதிகாச் சர்ப்ப விடம்:

இது வயிறு உளைதல், வாயில் ரத்தம் கம்முதல், மார்பில் அடைப்பு கண்ணில் நோவுடன் சிவத்தல், சர்வாங்கமும் ஊசியால் குத்துவது போல்

மிகுந்த இருத்தல் என்னுமிக் குணங்கள் உண்டாக்கும். முட்டையிட்ட சர்ப்பத்திற்குச் சூதிகா சர்ப்பம் எனப் பெயராம்.

கோநச சர்ப்பம்:

இது, அதிக வெய்யிலினும் அலச்சலினும் அடிபட்ட பசுக்களின் நாசிக்குள் சனித்து, ஊர்த்துவ பார்வையுடன் அற்ப உருவமும் நீண்ட நாவும் சிரசினில் கத்துந் தொனியும் உடையதால் வெளிப் படுட்டுத் திரியும். பசுவின் நாசியால் பிறப்பதால், கோநச சர்ப்பமெனப் பேர் பெற்றது.

வழிச் சர்ப்ப விடம்:

இது, எப்போதும் கடிப்பதற்கே வழிகாட்டிக் கொண்டிருக்கும். இப்பாம்பு கடித்தால், மரணக் குறிகளெல்லாம் சீக்கிரத்தில் உண்டாகும். இந்த விடம் மணி மந்திர அவுஷதத்தினால் நீங்குமென்றறிக.

சங்கை விட லக்ஷணம்:

சர்ப்பத்தைச் சடுதியில் கண்டு, வாய் குழறி நடுங்கி மூர்ச்சித்து விழுந்தாலும் பழுதை எனக் கையால் தொட்டுப் பின்பு பாம்பு எனக் கண்டு திகில் அடைந்தாலும், தனக்குப் பக்கத்தில் சர்ப்பம் குதிக்கக் கண்டு பயந்து கோபமடைந்தாலும் மேலில் ஒருவன் கயிறு முதலியவைகளைப் பாம்பென்று போடப் பதறி வியர்த்து விழுந்தாலும், அவர்களுக்கு வாதம் அதிகரிக்கும். இதனால் பொறி கலங்கி நாவறளல், மூர்ச்சை, சரீரம் நசிக்கத் துவைத்தது போலிருத்தல், இளைப்பு, தாகம், சுரம், பேதி, வாந்தி சோருதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது திரச்சிகிச்சையால் தீரும்.

சர்ப்ப விட வேக பேதம்:

சகல சர்ப்ப விடத்திற்கும், வாயு வேகம், தேயு வேகம், வருண வேகம், என மூன்று வித வேகமும், இவற்றுள் உட்பிரிவும் உண்டு.

1. வது. வாயு விட வேக நிதானம்.

வாயுவைப் பற்றி விடம் ஏறும்போது எட்டு வித வேகம் உண்டாகும். அவையாவன:- 1. வது. மூர்ச்சையும் மிகுந்த வியர்வையும் உண்டாகுதல் 2. வது. கரிய சரீரம் வெளும்புதல் 3. வது. கண் சொருகுதல் 4. வது. செவியை அடைத்தல், 5. வது. நெஞ்சில் கபம் கட்டுதல் 6. வது. அறிவு மாறுதல் 7. வது மேல் மூச்சு வாங்குதல், 8. வது உயிர் நீங்குதல் என்பனவாம். ஆகுர் இவ்வேகம் பிறக்குமுன், விடமானது கடிவாயில் 50. மாத்திரை காலம் நின்று பின்பு தேகமெங்கும் வியாபித்துச் சிரசில் ஏறும்.

2. வது. தேயு விட வேக நிதானம்:

தேயு என்னும் பித்தத்தைப் பற்றி விடம் ஏறும்போது 10 வித வேகமுண்டாகும்.

அவையாவன:- 1. வது முகம் கறுத்துக் கண் சிவக்குதல், 2. வது. ரோமங்களின் முனை பொசிந்து சிறுநீர் கறுத்திறங்கி முகம் வெளுத்தல், 3. வது. வேதனையுடன் சரீரம் நின்று சிந்தை மயங்கி வாய் குளறுதல் 4. வது. சோபம் பிறந்து உடலில் எரிச்சல் கண்டு தேகச் சுகம் மாறி நாசியால் ஜலம் வடிதல், 5-வது. தேகமும் கண்ணும் விட விருத்தி ஆகுதல். 6-வது. அங்கம் பதைத்து இளைத்து நாசியால் ஜலம் பெருகி மொழி மாறிப் பல்லைக் கடித்தல். 7-வதும். 8வதும். கபங்கட்டி சுவாசம் எழும்பி ஊர்த்துவ சில்வியாகப் பார்க்குதல், 9-வது உயிர் அடங்கியிருக்குதல் 10. வது. உடல் விட்டு ஆவி நீங்குதல் என்பனவாம். இவ்வேகம் பிறக்கும் முன் விடமானது கடிவாயில் 150 மாத்திரை நின்று பின்பு ஏறும்.

3-வது. வருண விடவேக நிதானம்:

~~[struck out]~~ வருணன் என்னும் கிரோஷ்மத்தைப் பற்றி விடம் ஏறும்போது பத்து வித வேகம் உண்டாகும். அவையாவன!- 1.வது. தேகம் சிவந்து ரோமம் சிலிர்க்குதல், 2.வது. வாயுலர்ந்து தேகங்கறுத்து வெதும்புதல் 3.வது தேகத்திற்குட் புறத்தில் உளைக்குதல் 4.வது கபம். அதிகரித்து மனங்கலங்கி தத்தளிக்குதல், 5-வது குரல் நடுக்கலும் அதி வலிதலும் பிறக்குதல், 6-வது. கண்கள் மாற விழித்து மேல் நோக்குதல் 7-வது அவயவம் முறைக்குதல் 8.வது. சரீர வியாபாரம் அடங்குதல், 9.வது. சுக்கிலம் நசிக்குதல், 10-வது. உயிர் நீங்குதல் என்பவையாம். இவ்வேகம் பிடைப்பதற்கு முன் விடமானது கடிவாயில் 150 மாத்திரை நின்று பின்பு ஏறும்:

உயிர் நிலை விழிக்குறி!

விடத்தினால், உயிர் அடங்கிய காலத்தில் கண்கள் மேல் நோக்கி நிலைக் கண்பட்டிருக்கையில், உயிரானது. ஊர்த்து வகாயமான மேற் புறத்தில் அடங்கியிருக்கும். கீழ் நோக்கி யிருக்கையில் உயிர் கீழ் அடங்கியிருக்கும். விழித்தபடியே சம பார்வையாக இருக்கில் உடலை விட்டு உயிர் நீங்கியே இருக்குமென்றறிக!

உயிர்ப் பரிக்ஷை நிதானம்!

விடத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்புகொண்டு அடிக்கில் தடித்தலும் (அல்லது) வெதும்பலோடு சிவந்தாலும் சவத்தைக் குளத்தில் போடில் அழுத்திலும் அந்த சவத்தை மேலே சொரியில் குளிர் கண்டு ரோமஞ் சிலிர்த்தாலும், கைவிரல், கால்விரல்களில் நெட்டு டம்

முறிந்தாலும் நகமயிரைப் பற்றியிழுக்கில், சொற்பவலியுடன் அருகணிப்பு இருந்தாலும், நெட்டோரியிடில், அதன் வழியாகச் சிவந்த ரத்தம் கசிகினாலும், நாதுக்களில் ஒன்றுவது சொற்ப நடையாக நடந்தாலும் உயிர் அடங்கியிருக்கின்றதென நிதானித்துப் பாவித்த சிகிச்சைகளையும் விரைவில் செய்யில் அவன் பிழைப்பான். ஆதலால் விடத்தால் உயிர் அடங்கிய சவத்தை 70- நாழிகை வரைக்கும் தகனம் செய்யக் ~~கூடா~~ கூடாதென்பது நூல் வழக்காம்.

சர்ப்ப வருக்கச் சத்துருகை:

சர்ப்பங்களுக்கு, இருதல் மணியன், செந்நாய், மயில், கோழி, எருதின் குளம்பு, மின்னல் இடி, கீரி, கரடி, பன்றி, செம்போத்து, கருடன், முதலை, ஆந்தை, [illegible]கை, மான், புதுவெள்ளம், புகையேய அனல் முதலியவைகளும், மனிதரும் சத்துருக்களாம்.

விட விருத்தி லக்ஷணம்:

சர்ப்பக்கடியினால் அற்பவிடம் ஏறியிருந்தாலும் அழு, பசி, தாகம், துக்கம், பயம், கோபம் மிகுந்தகளைப்பு, அக்கினித் தொழில் இருக்குதல், அடுகையான நிலத்தில் படுக்குதல், கீழ் காற்றில் திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், சுரசட்டகம் பேதி, அசீரணம், தூர்ப்பலம், பித்த வாயுவு, முதலிய ரோகத்தினால் மெலிதல், யானை மேகம், எலி, மேளம், முதலிய தொனிகளையுற்றுக் கேட்குதல். என்னும் இவைகளினால் மகாவிடமாகும்

விடத்திற்கு ஆகும் பத்தியம்:

விடம் கடித்தவர்களுக்கு, பழகிய அரிசி, சாமை அரிசி, தினையரிசி, பயிறு, கருப்புப் பயிறு, துவரை, சிறுகீரை, மாலக்கீரை, இலந்தைக் கொழுந்து, புளியாரை, சிறுகத்திரிக்காய், மாதுளங்காய், நெல்லிக்காய், விளாம் பழம், நாவற்பழம், இந்துப்பு, முதலிய வஸ்துக்களும், காரம் இல்லாத அன்னபானதிகளும் ஆகுமென்றறிக.

விடத்திற்கு ஆகாப் பத்தியம்:

விடம் தீண்டப் பெற்றவர்கட்குப் பகல் நித்திரை, சையோகம், கோபம், அதிக நடை, தீக்ஷண வெயில், ஸ்நானம், முதலிய இச் செய்கைகளும், கள்ளு, எள்ளு, கொள்ளு சைத்திய பண்டம், காரமாகிய அன்ன பானதிகள் என்னும் இவ் வஸ்துக்களும் ஆகாதென்றறிக.

ஆரூட நிதானம்:

பாம்புக்கடி உண்டவன் வீட்டிலிருந்து வந்த தூதுவன் உதாரத்துவ முகத்தினனாயாவது அதோ முகத்தினனாயாவது பார்த்துக் கொண்டு, இன்னின விடந் தீண்டிற்றென்று சொல்லி அழைப்பானாகில் அவ்விடம் மீளாதென்று விடசிகிச்சகன் நிதானிக்க வேண்டும்.

இதுவுமது:

தூதுவன் சொன்ன சொல்லில் இருக்கில் அக்ஷரங்களை இரட்டித்து அத்தொகையை மூன்று பேருக்குக் கொடுக்கில், மிகுதியில்லாவிடில் அவ் விஷம் மீளாதென்றும் இரண்டு மிகுதியானால் மீளுமென்றும் அறிக.

இதுவு மது!

வைத்தியன் யாகஞ் செய்யுங்காலம், சித்திரை செய்யுங்காலம், எண்ணெய் இட்டுக் கொள்ளுங் காலம் பூனைகை முதலியவைகளைக் கத்தியால் நறுக்குகின்ற காலம். மனச் சஞ்சலமாக இருக்கும் காலம். ஆகிய இக் காலங்களில் தூதுவன் வந்து சொன்னால், அவ்விடம் மீளாதென்றறிக. இவ்விதமாகச் சொல்லுகின்ற தூதலக்ஷணம் விஸ்தாரம் உண்டு. அவைகளின் சாரம் என்னும் சாஸ்திரத்தில் 6-வது அத்தியாயத்தில் காண்க. இப்படலத்தில் ஆதியந்தமாகச் சொல்லிய சர்ப்பங்களையும், அவ்வவ்விட குணங்களையும் அறிந்து தெளிந்து, அவைகட்கு, மணி மந்திர ஔஷதாதிகளினாலும் தெய்வ வலியாலும், வைத்தியம் செய்கின்ற பண்டிதரைக் கண்டால் கருடனைக் கண்டது போல் சர்ப்பங்கள் பயப்படும் என்றறிக.

—.

4-வது. வைதேகிச் சிலந்தி விடம்!

இது பட்ட இடத்தில் நெருப்பினால் சுட்டது போல் இருக்கும். இதனால் அதிக வேதனையும். சுரமும் மோகமும் மார்பு நோவும் உண்டாகும்.

5-வது. ஜாலமாலினிச் சிலந்தி விடம்:

இது பட்ட இடத்தில் விரணம் பிறந்து அதன் மேல் மச்சமும், வீக்கமும் எரிம்பும், இதனால் மூத்திரக் நோவு, தாகம், பிரமை, இரைப்பு, தேகம் மரத்தல், மோகம், பேதி என்னும் இக் குணங்கள் உண்டாகும்!

6-வது. மாமா இணைச் சிலந்தி விடம்.

இது, தேக முழுவதும் மச்சங்களைப் போல் கறுத்த தடிப்புகளை எழும்பும். இதனால் உள்ளில் எரிச்சல், மேலில் குளிர்ச்சி, வயிறுப்பல், மூத்திரக் கிரிச்சரம், மூர்ச்சை, பேதி, சுரம், தலை நோவு, கண்ணோவு, இரைப்பு, தாகம், விக்கம், என்னும் இக் குணங்கள் உண்டாகும்:

7-வது. அவர்ச் சச்சிலந்தி:

இது வர்ணபேதமாயிருக்கும் இவ் விடத்தினால், பல நிறக் கொப்புளம் பிறக்கும்.

பிரத்தியேகச் சிலந்தி லக்ஷணம்.

இது, புணரும் காலத்தில், அச்சச்சிலந்தியின் எத்தனை தெறிக்கின்றதுகளோ அத்தனை கொப்புளங்கள் விரைவில் உண்டாகும்.

சங்கிராணைச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக் குணம்.

இவைகள் ஆசனத்தில் பலநிற நூலையும் நெருப்பாற் சுட்டதுபோல் எரிவையும் திரிதோட குணங்களையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விடங்கள் சாத்தியமும் கஷ்ட சாத்தியமும் அசாத்தியமும் ஆகும்.

1. வது. காகச் சிலந்தி விடம்:

இது, பட்ட இடத்தில், வெளுத்தும் சிவந்தும் பூனைப்புடுக்கன் காயினது விதைப் போல் கொப்புளம் எழும்பும். இதனால் அதிக வேதனை, விக்கல், இரைப்பு மிகுந்த தாகம், மூர்ச்சை நித்திரைப் பங்கம் சதா மார்பு நோவு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

—.

2-வது. அக்கினி பதச் சிலந்தி.

இது, கால்கள் சேரும் இடம் உள்ளது அக்கால்கள் தேகத்தில் படிய பட்ட இடமெல்லாம் கொப்புளங்கள் உண்டாகும்.

3. வது நாகவர்ணச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில் தாக்கத்த விரணம் பிறந்து, அதில் அப்பால் குத்துவதுபோல் இருக்கும் ரத்தமும் பெருகும். இதனால் சீதசுரம், தாகம், மூர்ச்சை, பேதி என்னும் குணங்கள் உண்டாகும்.

நாகம் என்பது — பொரி.

கடி கால நிதானம்.

சிலந்திப் பூச்சிகள் அநேக பல திசைகளில் சாயங்கால வேளையில் கடிக்கும். இவ் விடங்களினால், கடித்தாவியில், வெளுப்பு, கருப்பு, சிவப்பு, மஞ்சள், என்னும் நிறமாகவும் பலவித நிறமாகவும் இருப்பதன்றியும், அவ்விடத்தில் மிருதுவாக உயர்ந்து, தடித்து அத்தடிப்பைச் சுற்றிலும் சிறு சிறு கொப்புளம் உண்டாகும். அக் கொப்புளச் சலம் பட்ட இடமெல்லாம் கொப்பளிக்கும். இதனால், விசர்ப்ப ரோகத்தினால் சோபை ரோகத்திலும் உண்டாகின்ற வருத்தமும் சுரமும் வியர்வையும், உண்டாகும்.

சிலந்தியின் சப்த வேகவிட நிதானம்.

மேற்கூறிய விடமானது தேகத்தில் வியாபித்த 1 வது நாளில் அவ்விடத்தில் நிறம் தோற்றுமல் கொஞ்சம் தினவு உண்டாகும். 2-வது நாளில் இயற்கை வண்ணத்துடன் கடித்து தினவோடும் கூடிய சிறிய கட்டிகள் எழும்புதல் 3 வது நாளில் அகல் கவிழ்த்தது போல் தடித்துச் சிவந்து

அவ்விடத்தில் உள்ள ரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி, அந்த மயிர்க் கால்களில் ரத்தம் கசிமிச் அரமுண்டாகுதல், 4-வது நாளில் அங்கு வீக்கம், எரிச்சல், இரைப்பு, பிரமை, இவை உண்டாகுதல் 5 நாளில் உடதுர்க்குணங்களெல்லாம் அதிகரிக்குதல்.

பிரத்தியேகச் சிலந்தி லக்ஷணம்.

இது புணரும் காலத்தில், அச்சுக்கிலத் துளி எத்தனை தெறிக்கின்றதுளோ அத்தனை கொப்புளங்கள் விரைவில் உண்டாகும்.

சிலந்தி கழக்கும் ஸ்தான நிதானம்.

கபிலா சிலந்தி மூக்கில், அக்கினி முகச் சிலந்தி சந்திஸ்தான நரம்புகளில், பிதச் சிலந்தி தாடைகளில் பூது மலச் சிலந்தி இது கண்ணில், துர்க் கந்தச் சிலந்தி வலது கண்ணில், மூல விடச் சிலந்தி அவேதச் சிலந்தி முத்திரச் சிலந்தி கருப்புச் சிலந்தி ஆகிய நான்கும் வாது புறத்தில், பாண்டுச் சிலந்தி காதில், ரத்தப் பாண்டுச் சிலந்தி இடது விலாவில், வண்டுச் சிலந்தி வலது விலாவில் பிங்கச் சிலந்தி. வயிற்றில் திரிமண்டலச் சிலந்தி முதுகில் பித்தச் சிலந்தி கையில், குமுதச் சிலந்தி நாபியில், சித்திர மண்டலச் சிலந்தி இடது தோளில் சிரசில், ரத்தச் சிலந்தி, காதில் சித்திரச் சிலந்தி, நெற்றியில் சந்தானிகச் சிலந்தி உதட்டில் மேஜகச் சிலந்தி சிரசில் உள்ளங் கையில் அக்கினிப் புகச் சிலந்தி கண்டத்தில், காகச் சிலந்தி மார்பில் ராஜவர்ணச் சிலந்தி தனத்தில், வைதேகிச் சிலந்தி தோளில், காலமாலினிச் சிலந்தி கடைக் கண்ணில் ~~மால~~ மாலாகுணைச் சிலந்தி மார்பின் பள்ளத்தில் அவர்ச்சச் சிலந்தி காதுக்குப் பின் புறத்தில் கழக்கும்.

—।—

6வது நாளில் அவ்விடம் மர்மஸ்தானங்களில் வியாபிக்குதல் 7வது நாளில், உயிர்க்கு அபாயம் வருதல் என்றறிக: ஆதலால் அவ்விடங்களில் உத்தம மத்திம அதமா அதமங்களின் பலாபலங்களை அறிந்து தகுந்த படி மந்திர அவுடதாதிகளினால் சிகிச்சை செய்யில் 41 நாளில் குணம் உண்டாகும். ஒரு நாள் இரண்டு நாள் கடிவாயில் எரிவுண்டாகிப் பின்பு கொப்புளமும் எழும்பும் என்பர்.

சர்வ சிலந்திகளின் சாமானிய விட லக்ஷணம்.

சிலந்திப் பூச்சிகளின் விடம் ஏறினால், அவ்விடத்தில் எழும்புகின்ற விரணங்களில் சிலது கொப்புளங்களாயும், சிலது மண்டலாகாரமாயும், சிலது அக்னி நிறமாயும், சிலது சிவந்த நிறமாயும், சிலது ~~கடினமாயும்~~ மஞ்சள் நிறமாயும், சிலது நீல நிறமாயும், சிலது மிருதுவாயும். சிலது கடினமாயும், இருக்கும். எட்டுக்கால் பூச்சியும் இச் சிலந்திப் பூச்சிகளின் பேதமே ஆம்.

1. வது சிலந்தியின் சுவாசம்.

இது, சுரத்தையும் மிகுந்த தாகத்தையும் உண்டாக்கும்.

2. வது சிலந்தியின் பலி:

இது அருந்திய இடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும். இதனால் சரீரத்தில் வீக்கம். எரிச்சல், வேதனை உயிர்ப்பை, தாகம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

— 7.

3-வது. சிலந்தியின் மலம்.

இது, பட்ட இடத்தில் இருப்பைப் பழம் போல் வெளுத்த விரணம் பிறந்து, அதில் தாக்கத்தமும், எரியும் பசபச என்கிற தினவும் உண்டாகும்.

4. வது. சிலந்தியின் மூத்திரம்.

இது, பட்ட இடத்தில், நடுவில் கறுத்தும், உயர்ந்தும், அற்றியும் வாயையும் புட்பம் போல் மலர்ந்தும் இருக்கின்ற விரணம் பிறக்கும். அதில் தாக்கத்தமும் எரிச்சலும் மாறாது உண்டாகும்.

5-வது. சிலந்தியின் சுக்கிலம்.

இது. பட்ட இடத்தில் கருமையான கொப்புளமும், நோவும் உண்டாகும்.

6-வது. சிலந்தியின் வாய்.

இது பட்ட இடத்தில் முருக்கம் பூவைப்போல் நிறம் உள்ள விரணம் பிறந்து, அதில் குத்தலும் உளைதலும் உண்டாகும்.

7. வது. சிலந்தியின் வாய் நீர்.

இது பட்ட இடத்தில் புனுகின் பூனைப்போல் நிறம் உள்ள விரணம் பிறக்கும். அவ் விரணத்தின் பக்கங்களில் பூச்சி யூருவது போல் பரபரத்தலும் ஊசியால் குத்துவது போல் குத்தலும், எரிச்சலும் உண்டாகும்.

—

15-வது. கிடாரி பேதி படலம்.

கிடாரி பேதம்.

உலகத்தில், கிடம் என்பது, கால பேதங்களினாலும், தேச பேதங்களினாலும், உருவ பேதங்களினாலும், குண பேதங்களினாலும், அனந்தங் கோடி வகையாயிருந்தாலும், அவைகள், வாயு கிடம், அக்கினி கிடம், சோம கிடம், சந்நிரண கிடம் என 4. வகைக்குள் அடங்கி 67 விதப்படும். அவையாவன! வாயு கிடம் 18, அக்கினி கிடம் 24 சோமகிடம்! 13 சந்நிரண கிடம் 12. என்பனவாம்! இந்த 67 ம் சுத்த கிடங்களாம். தொந்த கிடங்களுக் களவில்லை. இவற்றுள் மகா விட கிடம் 4. வகைப்படும்.

1. வது. வாயு கிடம்!

இது 18. பேதப்படும் அவையாவன! குன்சகம், துண்டகேரம், இருங்கிசரம், குருந்தகம், உத்திலிங்கம், அபிலாபம், சுவேதகம், மயூரகம், அபிசாரு, உலூகம், விருத்தம், சாலிபம், வைதாளம், சாரலம், கூர்மம், பருவம், சித்திர சிகிவம், துவிராசிகம் என்பனவாம். இவைகள் வாதப்பிர கோபமாயிருக்கும். இவ் விடத்திலல் அவ்விடத்திலல் அதிக குளவும் சகிர முழுவதும் கிந்தப்பட்டது போல் வேதனையும் உண்டாகும்.

2-வது. அக்கினி கிடம்.

இது 24. பேதப்படும் அவையாவன. கொமுள்ளியம். கண்டபவம்லாதரி. பத்திர விருச்சிகம். கிநாதாகம். பிகம்ந மாணிகம். விடபப் பிரமணம், பாகியாகி பிச்சிலம், கும்பி, வர்ச்ச கிடம், அரும தேகம். குண்டுபம், பதும கிடம், மகரம், சதாபதி, பஞ்சாவம்.

பாந்த மச்சம், ஆஸ்ய மதுண்டம், அதிகாரத்தபி, கீடக்கிரமம், சராஷி, சித்பி, திலேஷ்மகம் என்பனவாம். இவைகள் பித்தப் பிரகோபமாயிருக்கும். இவ்விடத்திலே, கடிவாயில் ரத்தங் கம்மி, இலுப்பைப்பூ, பேரீச்சங்காய், இவைகளைப் போல் கொப்பிளம் எழும்புதல் எரிச்சலும், பேதியும் உண்டாகும்.

3. வது. சோமகீடம்.

இது. 13. பேதப்படும் அவையாவன. விஸ்வம்பரம், பஞ்சசுக்கிலம், பஞ்சமக்கிரோதம், சௌண்டிகம், சையகம், துலாகம், படம், கிரதை, சடி, ஆசிமுகம், கிருஷ்ண கோதம், அதப்பரம், காஷாயவாசி என்பனவாம். இவைகள் திலேஷ்மப் பிரகோபமாயிருக்கும். இவ்விடத்திலே கடிவாயில் அத்திப் பழம் போற் கொப்பிளமும், அதில் அற்ப நோவும் உண்டாகும்.

4. வது. சங்கீரணகீடம்.

இது 14. பேதப்படும். அவையாவன:- துங்கிநசம், தாலகஸ்தம், பகம், பாஹடகம், கோஷ்டாகி, கிருமிகரம், மண்டல புஷ்பகம், கானநாபம், சரஷபகம், மத்குலி, சம்பனி, அக்கினிகீடம் என்பனவாம். இவைகள் திரிதோஷ பிரகோபமாயிருப்பதாற் தவிரப் பிராண நாசத்தையும் செய்யும். இவ்விடத்திலே, வாதகீடம் ஆதியாகச் சோமகீடம் ஈறாகச் சொல்லிய மூன்றுவித கீடங்களுக்குள்ள விடகுணங்களும் கொப்பிளங்களும், வேதனைகளும், மிகசீக்கிரமமாக ஒரே காலத்தில் பிறந்து, அவ்விடத்தில் வீங்குவதும், நமைச்சலோடு தாக்ஷாரக்தம் ஒழுகுவதுமாயிருக்கும்.

அன்றியும், சிரசும் கண்களும் கனத்தல், மூர்ச்சை, பிரமை, இரைப்பு, இருமல், சுரம், அரோசகம், அதிக வேதனை, என்னும் இக்குணங்களும் உண்டாகும். இவைகளைச் சாமான்ய கீடவிட விடங்களென்றறிக!

மஹாவிட கீடோற் பத்தி:

சர்ப்பங்களின் மலமூத்திரத்திலும், சுக்கிலத்திலும், முட்டைகள் உடைந்து ஈன்ற இடத்திலும் அச்சர்ப்பங்கள் இறந்து அழிந்த உடலிலும் பிறக்கின்ற கீடம். 4. பேதமாம். இவைகள் வாதாதி மூன்று தோஷ குணங்களாகவும் திரிதோஷ குணங்களாகவும் இருக்கும்.

—

கீட தந்த லக்ஷணம்.

இரண்டு விடப் பற்கள் உள்ள கீடங்கள் கடிக்கில், கடிவாயில் மலைக் கோங்குப் பூப் போல் மஞ்சள் நிறமாகவும், மூன்று விடப் பற்கள் உள்ள கீடங்கள் கடிக்கில் நானாவித நிறங்களாகவும் தோற்றும்.

அஷ்ட கீட பேதம்:

ஓந்தி முதல் சிலந்தி வரைக்கும் எண்வகைக் கீடங்களாம். இவைகளின் பேதம் 67 விதப்படும். அவையாவன:- ஓணான்: 4. தவளை 8. அட்டை. 6. வீட்டுப் பல்லி 5. காட்டு மசகம் 4. மக்ஷிகா மசிப் பிபிலிகா 6, சிலந்தி 28. என்பனவாம். இவற்றுள் சிலந்திப் பூச்சிகள் ஒவ்வொன்றிற்கும் உருவமும் விடகுணமும் பேதிப்பதால் இவைகளைத் தனித்தனியே எடுத்துக் காட்டப்படும். மற்ற ஏழு வகைக் கீடங்களுக்குள்

ஒவ்வொரு வகைக்கும் உருவம் பலவாயிருந்தும் விட குணம் ஒன்றாயிருப்பதால், அவ் ஏழு வகைக் கீடங்களுக்கும் ஏழு வகை விட குணமே கூறப்படும். இவ் எண் வகைக் கீடங்களும் முற் கூறிய கீட வகை நான்கினுள் அடங்கும்.

1. வது. ஏ ணன்:

இது. கடிக்கில் அதிக சோம்பலான நித்திரையும் மூர்ச்சையும், கருத்துப் பரவுகின்ற சொறியுமுண்டாகும். இவ்விடம், கட்டறை, லவணம், உத்தாமணி வேர், இம்மூன்றையும் சமமாக நிறுத்துச் சிறுநீரால் அரைத்துக் குழம்பாக வைத்துக் கொண்டு, கடிவாயிலும் தேக முற்றிலும் 7. நாள் பூச்சம் பண்ணத் தீரும் லேபனம் என்பது பூசித் தேய்த்தல்.

3- வது. அட விஷ.

இது. கடிக்கில், அதிக நித்திரையும், மிக மூர்ச்சையும் உண்டாகும்.

4. வது. வீட்டுப் பல்லி.

இது. கடிக்கில், நோவு, வியர்வை, வீக்கம், எரிச்சல், மார்பு வேதனை, பொடிச் சிரங்கு அரும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விடம். குதிரைச் செவி மருந்தின் வேர், பெருங் காரந்தைவேர் இவ் விரண்டும் வகைக்குப் பலம் 1. ஆகச் சேர்த்து அதைப் பாகலிலைச் சாறும், பசும் பாலும் சமமாகக் கலந்துவிட்டு அரைத்து குழம்பாக வைத்துக் கொண்டு கடிவாயில் லேபனம் பண்ணி உடம்பெங்கும் தூவாசயிடத் தீரும். இவ்விடம் சொறி தென்றும்

அதிக விரைவில் மகா விடச் சிகிச்சைச் செய்ய வேண்டுமென்றும் இல்லாவிடில் ஒரு வருடத்திற்குள் மரணம் உண்டாகுமென்றும் சில மாதாந்தரம் சம்மதம்.

5-வது. காட்டு மசகம்.

இது, கடிக்கில் அவ்விடத்தில் நமைச்சலும், அற்ப வீக்கமும், வேதனையும், உண்டாகும். இது அசாத்தியம். அஃதன்றியும், பொதுவாய் இவைகளுக்கு சமத்தன், சட்டைப் பிடுங்கன், அறை தாண்டுவோன், வாயில் குறாம் கூடுவோன், புரை தாண்டுவோன், படையோட்டை என்றும் காரணப் பெயர்களும் இன்னும் அநேக பெயர்களும் கூறி இவைகளும் நோயுண்டாகுமெனவும் சித்தர் மாதாந்தரம் சொல்லும். ஆயினும் நீலி இலைக் கல்கத்தாலும் அவ்வேரின் கஷாயத்தாலும் போம்.

மசகம் என்பது — கொசு.

6-வது. மக்ஷிகா

இது கடித்தாலும், கொட்டினாலும், அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், எரிச்சல், முதலிய குணங்கள் உடனே உண்டாகி அடங்கி பின்பு தடித்து உபத்திரவம் உண்டாவதுந் தவிர. அத்தடிப்பில் மாறுது சிலத் தண்ணீரும் வடியும். மக்ஷிகா என்பது குளவி முதலிய வண்டுகளாம்.

7. வது. மஹப் பிபீலிகா.

இது, கடிக்கில், அவ்விடத்தில் நீர்த்துளியைப் போல் தடித்தல், அதிக நோவு, நெருப்பால் சுட்டது போல் எரிச்சல், நமைச்சல், தேகத்தில் அழல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

பபீலிகா என்பது எறும்பு

—

8-வது. சிலந்திப் பூச்சியின் பேதம்.

சிலந்திப் பூச்சி 28. பேதப்படும். அதன் விவரம்:- வாதத்தில்: 7. பித்தத்தில்: 7. சிலேஷ்மத்தில்: 7. சன்னிபா தத்தில்: 7. ஆக இருபத்தெட்டாம். அன்றியும் பிரத்தியேகச் சிலந்தி என்பது ஒன்றுண்டு.

வாதச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக் குணம்.

இவைகள் வெளுப்பு, சிவப்பு, கறுத்தலையும், ஆசனத்தில் சித்திரங்களான மெல்லிய நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ் விடங்களால் இருமல், முதலிய வாதரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

1. வது. பிதச் சிலந்தி விடம்:

இது. தலைநோவும், அரோசகமும், அரமும் உண் டாகும்:

2. வது. குமுதச் சிலந்தி விடம்:

இது. பட்ட இடத்தில் கொப்புளங்கள் எழும்பி, அதில் நின்றும், மாறாது சீழ் வடிவதும் எரிச்சல் பிறப்பதுமாக இருக்கும். இதனால் இரைப்பும், நெஞ்சடைப்பும் உண்டாகும்.

3. வது. மூல விடச் சிலந்தி

இது. அதிக கொப்பளங்களையும், அக்கினிக் குணத்தையும் உண்டாக்கும்.

4. வது. ரத்தச் சிலந்தி விடம்.

இது. பட்ட இடத்தில் சிவந்து படர்ந்து அதைச் சுற்றிலும் சிறிய கொப்பிளங்கள் எழும்பி, அதில் நின்றும், ஓயாது ரத்தமும், சீழும் வடிந்துக் கொண்டே இருக்கும். இதனால் இரைப்பும் பேதியும் உண்டாகும்.

5-வது. இரத்திரசச் சிலந்தி விடம்.

இது பட்ட இடத்தில், சிவந்த கொப்பிளங்கள் எழும்பி அவைகள் பழுத்து உடைந்த பின்பு அங்கு கருத்த விரணமாகி, அதில் நின்றும் நுரைபோல் சீழ் வடிவதாயிருக்கும். இதனால் தலையிலும், கீல்களிலும் நோவு, சுரம், இரைப்பு, வீக்கம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

6-வது. சந்தாணிகச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில் சகிக்கக் கூடாத குத்தலும் விரணமும் உண்டாகும்.

7-வது. மேஜகச் சிலந்தி.

இது நீலநிறம் உள்ளது இவ்விடத்தினால் அக் நிறமாகி கொப்பிளங்கள் எழும்பும்.

பித்தச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள், கருமை வெண்மை கலந்த நிறத்துடன், முகத்தில் அனலையும், ஆசனத்தில் தாமரை நூலைப்போல் நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விடங்களால் முக்கியமாகப் பித்த ரோக குணங்கள் உண்டாகும்.

1. வது. கபிலா சிலந்தி.

இது கண்டவிடத்தில் பார்க்கில், தேகமுற்றும் சிவந்த தடிப்பும் வாயில் நீர் ஊறலும் மயிர் கால்களில் எரிச்சலும், தலைப் பாரமும் உண்டாகும்.

2-வது. அக்கினி முகச் சிலந்தி.

இது, அதிக நோவையும் நெருப்பாற் சுட்ட கொப்பிளங்கள் போல் கொப்பிளங்களையும் பிறப்பிக்கும். இதனால், தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, ரத்தம் வழிதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. வது. பிருகச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில், கட்டை நெருப்பாற் சுட்டது போலிருத்தல், மூர்ச்சை, வாந்தி, சிரோ வேதனை, சுரம் அரோசகம், சூல், மலமும், மூத்திரமும் மஞ்சளித்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4. வது. பத்மச் சிலந்தியின் விடம்.

இது, பட்ட இடத்தில் தாமரைப் பூவைப் போல் வட்ட வடிவான கொப்பிளம் உண்டாவது, மறைவதும், பின்பு எழும்புவதும் அதில் மாறுத சலம் வடிவதும் நோதலுமாயிருக்கும்.

5-வது. மூத்திரச் சிலந்தி விடம்:

இது. பட்ட இடத்தில் கருப்பு சிவப்பு நிறமான கொப்பிளம் எழும்பித் தீர்க்கந்த விரணம் பிறக்கும். இதனால் இருமல் இரைப்பு, சுரம், வாந்தி, தாகம் மூர்ச்சை, என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

6-வது. சுவேதச் சிலந்தி விடம்.

இது பட்ட இடத்தில் விசர்ப்ப ரோகக் கொப்பிளம் போல் கொப்பிளம் எழும்புவதன்றியும் அதில் மாறுத சலம் வடிதல், தாகம், மூர்ச்சை சுரம், நோவு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

7-வது. கருப்புச் சிலந்தி விடம்.

இது பட்ட இடத்தில் கருத்த வீக்கம் உண்டாகி விரணம் பிறக்கும். அதில் துர்க் கந்தத்துடன் நிறபேதமான ரத்தமும் சீழும் மாறாது வடிந்து கொண்டே இருக்கும்.

திரி மண்டலச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில் கருத்த விரணம் உண்டாகி, அதில் சின்றும் ரத்தம் வடியும், இதனில் அரோசகம், கண் எரிச்சல், உடம்பிலும் முகத்திலும் மச்சங்கள் எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்;

தூர்க்கந்தச் சிலந்தி விடம்.

இது. பட்ட இடத்தில், தேப்பச்அரைப் பிஞ்சைப் போலிரால் கட்டி எழும்பி, அதைச் சுற்றிலும் நெருங்கிய சிறு சிறு கொப்புளம் எழும்பும். இதனில் விசர்ப்பிரணம் அயர்வையும் தூர்க்கந்தமும் எரிச்சலும் பிறக்கும்.

சித்திர மண்டலச் சிலந்தி விடம்.

இது. பட்ட இடத்தில் விசர்ப்பியைபோல் விரணம் உண்டாகி அதைச் சுற்றிக் கொப்புளங்கள் எழும்பும்!

—.

சிலேஷ்மச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக் குணம்.

இவைகள் வெண்மை நிறத்தையும், உடலில் நீல நிறத்தையும் ஆசனத்தில் சிவந்த தாலியும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விடங்களால் சிலேஷ்ம ரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

1. வது. பாண்டுச் சிலந்தி விடம்.

இது பட்ட இடத்தில் வீக்கத்துடன் கனத்த விரணம் பிறக்கும். இதனால் சுரம் ரோமச் சிலிர்ப்பும் சிரோபாரமும் உண்டாகும்.

2. வது. ரத்த பாண்டுச் சிலந்தி விடம்.

இது பட்ட இடத்தில், வெளுத்துத் தாந்து விரணமாகி ரத்தம் வடியும்,

3. வது வண்டுச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில் வண்டைப் போல் கறுத்த கொப்புளம் உண்டாகி, அதைச் சுற்றி எரிச்சலைத் தருகின்ற சிறு சிறு கொப்புளம் பிறக்கும். அன்றியும் தேகமெல்லாம் கறுத்த மச்சங்களும் எழும்பும்.

4. வது. பிங்கச் சிலந்தி விடம்.

இது, பட்ட இடத்தில், கொப்புளம் எழும்பி, அதில் என்றும் ரத்தம் ஒழுகும். இதனால் சுரம், நோவு, வீக்கம், அதிக எரிச்சல், தாகம், என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பிங்கம் என்பது மஞ்சள் நிறம்.

விஷ வியஞ்சன லக்ஷணம்.

விஷங் கலந்த அன்னத்தை உற்றுப் பார்க்கில் சோருதல், மூர்ச்சை, வாய் நீர் சுரக்குதல் முதலிய துர்க் குணம் உண்டாவதன்றியும் அந்த அன்னத்தின் வாசனையும் உருவமும் வேறு விகாரமாகிச் சுபாவ நிறம் நீங்கி, ஒவ்வொரு அன்னம் பிளப்பு சுருண்டதாகவும், சில அன்னம் ஒன்றோடொன்று சேர்ந்து உண்டை உண்டையாகவும் பார்வைக்கு நிலவைப் போல் தள தளப்பானதாகவும், புசித்தால் பழையதின் வாசனையைத் தருவதாகவும், வெகு நேரம் சென்று ஜீரணத்தை அடைவதாகவும் இருக்கும்:

விஷ வியஞ்சன லக்ஷணம்:

விஷங் கலந்த கறி பதார்த்தங்களை உற்றுப் பார்த்தால், உலர்ந்தது போலவும், கறுத்த கஷாய வன்னமாகவும், சுபாவருசி நீங்கி வேறு விகாரருசி உள்ளதாகவும் இருக்கும். அன்றியும் அக்கறிகளின் மீது, அற்ப நுரையும், நீலமந்த ரேகையும். நீர்க் குமிழிப் போல் சிறிய குமிழியும் எழும்பும்.

விஷம் வைப்பவனுக்கு உண்டாகின்ற லக்ஷணம்.

விஷம் வைக்கிற காதகனுக்கு, வாயுலரல், சுற்றும் முற்றும் பார்க்குதல், வியர்வையோடு நடுக்கல், தேக மரத்தல், பயம், நடக்கும் போது கால் தத்தளித்தல், கொட்டாவி என்னும் இக்குணங்கள் உண்டாயிருக்கும்:

—..

விஷான்ன பரிக்ஷை.

விஷங்கலந்த அன்னத்தை அக்கினியிலிட்டால், சுவாலை எரும்புதலுடன் மயில் கண்டத்தின் நிறத்தை ஒத்த புகையும், அதில் அசுத்தமான வாசனையும் உண்டாகும். அதை ஈ மொய்த்தால், இறக்கும். காகம் கிட்டினால் ஈனத்தொனியோடு கத்தும், கிளி, பூவை பார்த்தால் கூச்சலிடும்.

ஆசிய கதகரான்ன லக்ஷணம்.

விஷங்கலந்த அன்னத்தை வாயிற் போட்டு மெதுத்த வருக்கு, உடனே வாயிற் சொல்லுவ கதல் உதடுகளும் நாவிலும் திமிர் வருவிருப்பு, கத்தல்களில் சிறு சிலென்கிற ஒரு விதகோஷ, அறு சுவையும் ருசி மாறுதல், மூர்ச்சை, தாள் பிடிப்பு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

ஆமாசய கதகரான்ன லக்ஷணம்:

மேற்கூறிய அன்னத்தைப் புசித்து, அவ்விஷமானது ஆமாசயஸ்தானத்தில் உறைந்தால் தேகத்தில் புடைகள் எரும்புதல் வியர்வை, மூர்ச்சை, வயிறுப்பல், மதம், பிரமை, ரோமச்சிலிர்ப்பு, வாந்தி, தாகம், கண்ணெரிவு, மார்புநோவு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பக்குவாசயகதகரான்ன லக்ஷணம்:

விஷ அன்னம் வாதஸ்தானத்தில் உறைந்தால் பற்பல வாந்தி, அதிமூத்திரம், அதிசாரம், சோம்பல், சுரம், இளைத்தல், வயிறு வெளிறல், துர்ப்பலம் என்னுமிக் குணங்கள் உண்டாகும்.

கிருத்தி விடம் முற்றியது:

—.

அகிருத்திரம விடம் என்பது தாபர விடம், சங்கம விடம் என இரு வகைப்படும். இவற்றுள் தாபர விடத்தை முதலிற் கூறுவோம்:

தாபர விட பேதம்:

விருக்ஷம், பூண்டு, செடி, கொடி, புல், ஆகிய இவற்றின் கிழங்கு, வேர், பட்டை, பால், பிசின் இலை, புஷ்பம், காய், கனி முதலியவைகளிலும், பாடாணம் என்னும் தாதுக்களிலும் இருக்கின்ற விடம் தாபர விடமாம்.

விடக் கிழங்கின் பேதம்:

சங்கோசகம், கரவீரம், லாங்கலிகம், தைலகம், கர்க்கடகம், இசுபுஷ்பம், கேது புஸ்பம் ஹாமஹரிஹம் ஸ்திரியிக்கி முதலிய கிழங்குகளுக்குக் கந்த விடம் எனப் பேராம். இவைகளைத் தின்றால் உயிரானது நீங்கி விடும். (அல்லது) ஒரு வேளை மிஞ்சினால் தேகத்தில் சுரம், விக்கல், தாள் பிடிப்பு, பல் கூசுதல் இரைப்பு, இருமல், மூர்ச்சை, அரோசகம், தொண்டை அடைப்பு, என்னுமிக் குணங்களுண்டாகும். ஆனால் இக் கிழங்குகளின் சம்பந்தப்பட்ட புஷ்ப பலாதிகளுக்கு மவ் விடமுண்டாயிருந்தாலும், அவைகள் இக் கிழங்கு வேர்களைப் போல் சீக்கிரத்தில் கொல்லாமல் சிலநாள் கழித்துக் காலந் தரத்தில் வேர்களைப் போல் சீக்கிரத்தில் கொல்லாமல் சிலநாள் கழித்துக் காலந் தரத்தில் கொல்லுமென்றறிக.

விட வேரின் பேதம்:

சேவகம், சந்திரகம், இஞ்சனம், ஹரிகம், கோரண்டகம், கர்க்கரகம், அகந்திரம், முதலிய வேர்களுக்கு மூல விடம் எனப் பேராம். இவ் விடத்தினால், சோருதல், பிதற்றல், புரளல், பிரமை என்னுமிக் குணங்களுண்டாகும்.

கரவீரம் என்பது - அலரி
இலாங்கலிகம் என்பது — கலப்பைக் கிழங்கு.
தேனகம் என்பது - பராமரம்.
கோரண்டகம் என்பது — மருதோன்றி.
சுகந்திரம் என்பது — பெருங்காய மரமூலம்.

விடப் பாலின் பேதம்:

1. காலவம், 2. புஷ்கரகம், 3. ஹாலாஹலம், 4. கார்த்தமம், 5. காலகடம், சரஹப முதலிய பால்களுக்கு க்ஷீர விடமெனப் பெயராம். இவ் விடத்தினால், நுரைத்த வாந்தியும், நாவு தடித்துக் கனத்தலும், மலபந்தமும் உண்டாகும்.

விடப் பிசின் பேதம்:

6. கரஹாடகம், நாராசகம், 7. கர்கந்து, 8. கரஞ்சத்துவயம். முதலிய பிசின்களுக்கு, தொக்கார நியாச விடமெனப் பேராம். இவ் விடத்தினால் அரோசகம், கோழை, வாந்தி நாவு தடித்தல், வாயில் துர்க்கந்தம் வயிறுப் பருடன் வேதனை என்னும் இக் குணங்களுண்டாகும்.

விட இலையின் பேதம்:

பதரம், கரம்பம் 9 விட பத்திரம் 10 கரஞ்சம், முதலிய இலைகளுக்குப் பத்திர விடமெனப் பெயராம். இவ் விடத்தினால் கொட்டாவியும், புரளலும், பிரமையும் உண்டாகும்.

விட புஷ்பத்தின் பேதம்.

ம ஹாகரம்பகம் 11. கரஞ்சம், 12. இல்லசம், 13 ரேணுகம் முதலிய புஷ்பங்களுக்குப் புஷ்ப விடமெனப் பேராம். இவ் விடத்தினால், வயிற்றுப் பருமல், வாந்தி, சோருதல், மூர்ச்சை ~~என்னும்~~ என்னும் இக் குணங்கள் உண்டாகும்: —

1. காலவம் என்பது — வெள்ளெலொத்தி
2. புட்கரகம் என்பது — வெண் டாமரை
3. ஹாலாஹலம் என்பது — நாபி.
4. கார்த்தமம் என்பது — சேராங்கொட்டை.
5. காலகூடம் என்பது — எட்டி.
6. கரஹாடகம் என்பது — மருவு.
7. கற்கந்து என்பது — தொடலிப் பட்டை.
8. கரஞ் சதிதுவயம் என்பது — ஆயில் பட்டை பிசின்
9. விட பத்திரம் என்பது — எட்டிமயில்.
10. கரஞ்சம் என்பது — பெருமரம்
11. கரஞ்சம் என்பது — புங்கின் பூ.
12. கிலாசம் என்பது — தொட்டாற் சுருங்கி
13. ரேணுகம் என்பது — காட்டு மிளகு:

விடக் கனியின் பேதம்:

14. மூலகருஸ்தகம், 15. முஷ்கம், வைரடகம், சங்கபகம், 16. மார்க்கவிகம், ஹாலகம் 17. சத்து வாளஹகம் முதலிய விடக் கனிகளுக்குப் பாலவிடம் எனப் பேராம். இவ் விடத்தினால், அன்னத்தில் வேடமும், தாகமும் இரண்டு சிசங்களில் வீக்கமும் உண்டாகும்.

விடதாதுவின் பேதம்:

தேனாமம், பஸ்மம், கிலகம், ரத்தம் முதலிய தாதுகளுக்குத் தாதுவிடம் எனப் பேராம். இவ் விடத்தினால், இரண்டு கண்களின் உட்புறங்களில் அனல் வீசுதலும், மூர்ச்சையும் மார்பு நோவும் உண்டாகும்.

வாதகால விட நிதானம்:

முற் கூறிய கந்தமூலாதி விடங்கள் வாதகாலத்தில் இன்னில், அவர்களுக்கு மார்பு நோவு, நரம்பு விகுத்தல், எலும்புகளிலும், கீல்களிலும், நோவு, நடுக்கல், புரளல், தேகங்கறுக்குதல், ரோமச் சிலிர்ப்பு, வாயில் புளிப்பு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

—1.

20:வது. ஐப்புருத யோனி ரோகம்.

இது, அதிமோகங் கொண்டு நினைத்த பொழுதெல்லாம் பலவகைப் பந்தத்துடன் புருஷனைப் புணர்வதுமன்றி அப்புருஷனை இடைவிடாது தன் பார்வைக்குள் வைத்திருக்குங் காரணத்தால் பிறக்கும். இதனில் அல்குல், ஸ்தான முற்றுங் கலங்குவதும், அதில் மாருத மதசலம் வடிவதும் நாளுக்கு நாள் துர்ப்பலப்படுவதுமாக இருக்கும்:

21:- வது. சந்நிபாத யோனி ரோகம்:

இது, அல்குல் ஸ்தானத்திலும், கருப்பஸ்தானத்திலும், திரிதோஷத்தை அக்ஷரிக்கச் செய்து, அவ்விடங்களில் அனந்த ரோகங்களையும் மகா விரணங்களையும் பிறப்பிக்கும். இந்த ரோகத்தை அநுபவிக்கின்ற மாதர்கட்கு ரக்த ஸ்ராவம். மூலம் ரக்த குன்மம், அதிசூலம் என்னும் இந் நான்கு ரோகங்களும் ஒருமித்தாவது தனித்தாவது உண்டாகாதிருக்கில், அரோகதிட காத்திரமும், நல்ல கருப்பமும் உண்டாகும். ஆக யோனிரோகம் 21.ம். சம்பூரணம். மேற்கூறிய யோனி ரோகங்கட்கு அரக்குக் கஷாயம், பாவபஞ்சாங்குலத் தயிலம். நிரம்ப ஏரண்ட ஸ்நேகம் முதலிய அவுஷதங்களால் சாத்தியமாகும்:

14-வது. விஷாதி பேத படலம்:.

உபட பேதகம்!

உலகத்தில் விஷமானது, கிருத்திரம விஷம், அகிருத்திரம விஷம் என இருவகைப் படும். இவற்றுள் கிருத்திரம விஷத்தை முதலிற் கூறுவாம்

— .

கிருத்திரம விடம்:

நாபி, முதலிய விஷப் பூண்டுகளையாவது, பாம்பு முதலிய ஜெந்துக்களின் விஷங்களையாவது, மற்றொரு வஸ்துவிற் கலந்து கொடுக்கப் படுவது கிருத்திரம விடமாம். இதற்கு இடு மருந்தென்றும், கரமென்றும் பெயர்:

கரம் என்கிற இடு மருந்தின் வகை:

ஸ்திரிகளின் புருடர்களையும், புருடர்கள் ஸ்திரிகளையும் தொழிலாளிகள் தங்கள் யசமான்களையும் வசியப் படுத்தும் பொருட்டு அன்ன முதலிய உண்ணும் பண்டங்களிலாவது, நீர் முதலிய பானஞ்செய்யும் பொருள்களிலாவது, தாம் பூலாதிகளிலாவது சேர்த்துக் கொடுக்கப் படுகின்ற பற்பல ஜெந்துகளின் கபால பஸ்மம், அற்ப வீரிய விடம் மல மூத்திர அவுஷதம், பச்சிலை மூலி என்னும் இவைகளாம்:

21. வது. விரணப் பிரமேக ரோகம்:

இது, சர்வாங்கத்திலும் மிகுந்த நோவுடன் விரணம், ஆண் குறி கனத்தல், அதில் நின்றும் சீழும் ரத்தமும் அதிகரித்தல், அக்கனுவில் கறுகட்டி, நோதல், கடுத்தல், விறு விறுத்தல், சரீரம் வெதும்பல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்: இவைகள், விளைம் பிசின் சூரணம், பிரம தண்டு பால், வெண் குங்கிலிய நவநீதம் (மேற்படி) தைலம் மேகாந்தப் பெருந்தைலம், மேக நாதக் குளிகை; கருங்கச் செந்தூரம், வெள்ளி பஸ்பம் முதலிய அவுஷதங்களால் தீரும்

யோனி ரோக லக்ஷணம்:

சரீரத்திற்குப் பொருந்தாத வஸ்துக்களுடன் கலப்பான போஜனம் மேடு பள்ள ஸ்தானத்தில் படுக்குதல், வெகு புருஷ சஞ்சாரம், மாதாந்த ருது தோஷம், ஆண் இந்திரி தோஷம், அனலாதி வெப்பம், நகாத நடத்தை, தேவதா பிரயோகம் ஆகிய இச் செய்கைகளை உடைய ஸ்திரீகளுக்கு வாதயோனி ரோகம் முதல் சன்னிபாத யோனி ரோகம் ஈறாக 20. வித ரோகம் பிறக்கும்.

1.-வது வாத யோனி ரோகம்:

இது, வாயுவானது அங்குலில் நிறையுங்காலத்தில் பிறக்கும். இதனால் அவ்விடத்தில் கிருமி நெளிவது போல் இருத்தல், அச்சருமஞ் சொறசொறத்தல் அம்மார்க்கத்தில் குத்தலும், இழுத்தலும் நுரைத்தலும் அருணையுடன் கொஞ்சம் ரத்தம் வடிதல் இரண்டு கவட்டியிலும் நோதல் அடிவயிறு கனத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்!

2-வது. பித்தயோனி ரோகம்:

இது, பித்த தோஷமானது அங்குலில் பரவுங் காலத்தில் பிறக்கும். இதனால், அவ்வழியால் மஞ்சள் கருப்பு நிறத்துடன் அருணையாய்ப் பிண நாற்றமாய் கமழ்கின்ற உதிரம் வடிதல் தாகம், சுரம், சரீரத்தில் அக்கினிச் சுவாலை வீசுதல், துர்க்கந்தம் பிறக்குதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. வது. சிலேஷ்ம யோனி ரோகம்:

இது. சிலேஷ்மமானது அங்குலில் தங்குங் காலத்தில் பிறந்து, அவ்விடத்தில், சீதளம், தினவு, வேதனையின்றி வெளுத்த ரத்தம் ஒழுகுதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

4. வது. உதாவர்த்த யோனி ரோகம்:

இது. அல்குல் ஸ்தானத்தில் மிகுந்த உபத்திர வத்தையும், அம்மார்க்கத்தில் நுரைத்த ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்.

5. வது: உப்புலுத யோனி ரோகம்.

இது அல்குல், ஸ்தானத்தை வெண்மையாக்கி, அச்சருமத்தை நையப் பண்ணும், இதனால், அவ்விடம் அடித்துப் பஞ்சடித்த காம் போல் இறங்கிருக்கும். உப்புதலும் என்பது உபத்திரவத்தை உண்டாக்குதலாம்.

6. வது. ரத்த யோனி ரோகம்:

இது, கெர்ப்ப ஸ்தானத்தில் சகிக்கக் கூடாத உபத்திரவத்தையும், மிகுந்த, ரத்த ஒழுக்கையும் உண்டாக்கும்:

7. வது. சாதக்கினி யோனி ரோகம்:

இது. அல்குல் வாயில் வெடி வெடும்பி பீரங்கி வாயின் சுடுகையைப் போல் சுடுகையை உண்டாக்கி அதுமன்றி, அவ்விடத்து உதிரத்தையும் கொதிப்பிக்கும். இதனால் வயிற்றில் ஒரு மாதத்திற்கு உட்பட்ட சிசுவாயிருந்தாலும் அது மரித்து விழுந்து விடும். இதற்குத் தாமரைப்பூ ரசாயனமும், பூரணச் சந்திரோதய மாத்திரையும் நன்மையைச் செய்யும்

→

8-வது. அந்தர்முகி யோனி ரோகம்.

இது எந்த ஸ்திரீகளாவது, வயிறு நிரம்பப் புசித்து உடனே மேடு பள்ளஸ்தானத்தில் படுத்துக் கணவ சையோகத்திற்கு இடம் கொடுக்கும் காலத்தில், பிறக்கும். அதன் விவரம். அம் மாதருக்கு வாயுவு அதிகரித்து அந்தர் முகமாக எழும்பி யோனி ஸ்தானத்தில் உபத்திரவத்தையும் அதை விவரிக்கக் கூடாமையையும், பூ ஒதுங்குவதால், அங்குள்ள எலும்பு மாமிசாதிகளின் வேதனையையும், அடி வயிற்றில் ஆசையையும் உண்டாக்கும்.

9-வது. சுட்க யோனி ரோகம்!

இது, மாதாந்த ருது காலத்தில் புணர்ச்சியை விரும்பிய மாதர்கட்குப் பிறக்கும். அதன் விவரம்! சுபாவமாக விழுகின்ற ரத்தமானது சையோகத்தினால் உள்ளுக்குள்ளே மறிபட்டு, மலமுத்திரச் சிக்கல் நாள்தோறும் பிரபலித்துக் கொண்டே இருந்து அதற்பின் கருதடத்தில் ஆம்பலும் உபத்திரவமும் உண்டாகும்படிக்குச் செய்யும்.

---

10. வது. வாமினி யோனி ரோகம்.

இது வாயுவைக் கொண்டு பிரசவித்த ஆறு நாளிலாவது ஏழு நாளிலாவது, கருப்பாசயத்தில் இருக்கின்ற கோழைக் கபத்தை ஒழுகச் செய்யும்.

2-வது. பித்த பிரமேக ரோகம்:

இது, சரீரத்தில் மிகவும் வாட்டம், தயக்கம், சகல கீல்களிலும், கால்களிலும் நோவு, தேகத்தின் கருமை நிறம், எரிச்சல், குதத்திலும், குப்பயத்திலும் கடுப்பு மஞ்சள் நிறமான நீர்வருதல் அருசி, கை கால், ஓய்ச்சல், கோசத்தில் விம்மலோடு நோவு என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

3. வது. சிலேஷ்மப் பிரமேக ரோகம்:

இது, கோசத்தில், நோவுடன் கடுப்பு, அடிக்கடி வெண்மையாக நீரிறங்கல், தேகத்தில் பருத்த வண்ணம் உஷ்ணம், வாய் கண் நகம் இவைகளில் ரத்தம் இல்லாமை என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

4. வது வாத பித்தப் பிரமேக ரோகம்:

இது, சர்வாங்கத்திலும், நோவு, கோசத்தில் சலாகை சொருகினது போல் இருத்தல், அதில் நின்றும் மாவைக் கரைத்தது போல் அழுக்குடன் நீரிறங்கல், வயிற்றில், கட்டி எழும்புவது போல் இருத்தல், மலமிறுகல், என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

5-வது. பித்த சிலேஷ்மப் பிரமேக ரோகம்:

இது, வாய்க்கசத்தல், அடிவயிற்றில் பொருமலுடன் இசிவு, கோசம், அருங்குதல், மஞ்சளாயும் வெண்மையாயும் நீரிறங்கல், கீல் நோவு பகல் நித்திரை, பசியின்மை, சரீரம் ஊதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

—

6-வது. தொந்தப் பிரமேக ரோகம்:

இது, சரீரத்தில் எரிவு, புருவங்கள் உறருதல் இருத்தல், அடி வயிறு அரத்தல், கோசத்தில், கருமை நிறம், அடிக்கடி கடுத்து நீரிறங்கல், அதைப் பிடித்துப் பார்க்கில் அடியில் பல நிறமாகத் தோயிந் திருத்தல், கவிசி, நோய் காணல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்:

7-வது. கட்டிப் பிரமேக ரோகம்:

இது, சரீரமுழுவதும் சகிக்கக் கூடாத நோவுடன் கட்டிகள் எழும்புதல் கோசத்தில் சொறியுடன் எரிவு, பருக்கைப் போல் சீழ் வடித்தல். பீசத்தில் நீர்க் கசிதல், தேகவாட்டம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

8-வது. சலப் பிரமேக ரோகம்:

இது, சர்வாங்க வேதனை, வாய்க் கசத்தல், வாந்தி, மயக்கம், மூத்திரக் கசிவும், வெருத்த நீரிறங்குதல், அடி வயிற்றில் பிடுங்கல், மலத்தில் சீதம் விழுதல் அரையாப்புக் கட்டி என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

9-வது. தந்திப் பிரமேக ரோகம்:

இது, அடி வயிற்றில் புண் போறல் நோதல், விதை தண்டினது அடியில் விரு விருப்பு, விம்மல், நீர் இறங்கியவுடன் தந்தி போல் மேகம் தொங்குதல் வெள்ளை காணல், இதனால் அடிக்கடி சீல நனைதல், கை, கால், எரிவு, என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

10-வது. ரத்தப் பிரமேக ரோகம்:

இது, மயக்கம் தங்கிருப்பல், சரீரம் பஞ்சைப் போல் மெதுவுறல் முயல் ரத்தமென இவந்து சுருக்குடன் அடிக்கடி வேதனையைத் தருவதாய் நீர் இறங்கல், பேய்போல் அலைதல் என்னுமிக் குணங்களை உண்டாக்கும்.

11-வது. சீழ்ப் பிரமேக ரோகம்:

இது, கோசத்தினது நாளத்தில் கடுப்புடன் சீழைப் போல் வெள்ளை காணல், அரையாப்பு, பகந்தரம், நாபியில் விரணம், காலுக் காலில் குடைச்சல், அடிக்கடி நீரிறங்குதல், அதிக குளிரோடு சுரம், மயக்கம், வேதனை, சர்வாங்க நோவு, என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

—

12-வது. ருக்குப் பிரமேக ரோகம்:

இது, கோசத்தினது துவார வழியில் நின்றும் சீழ் ரத்தம் சலம் ஆகிய இவைகளைப்போல் மேகம் ஒழுகுதல், சரீர முழுவதும் கருமையுள்ள முளைக்கட்டிகள் எழும்பல், கனத்த விரணம், குடைச்சல், எரிச்சல் வெகு நோவோடு புரளல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

13-வது. அரித்திராப் பிரமேக ரோகம்.

இது, மஞ்சள் நிறமான வெள்ளை காணல், சூடாக நீரிறங்கல், அந்த இடத்தில் நெருப்பைக் கொளுத்தினது போல் எரிச்சலுடன் கூடிய கடுப்பு, உரு விருப்பு அதிக உஷ்ணம், முகத்தில் மஞ்சள் நிறம், நாவில் கசப்பு, மனது திக்கிடல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

→

14-வது. மூத்திரக் கிரிச்சரப் பிரமேக ரோகம்.

இது சிக்கலுடன் மஞ்சள் நிறமான நீர் இறங்கல், துர்ப்பலம், நீர்க்கட்டு, நித்திரைப் பங்கம் அன்னத்தி ~~[illegible]~~ வேஷம், மனச்சஞ்சலம், சர்வாங்கத்திலும் உளைச்சல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

—

15-வது. கரப்பான் பிரமேக ரோகம்.

இது. வயிற்றில் உளைச்சல், தேகம் விழல், நீரானது உஷ்ணமாகவும், கடுப்பாகவும் இறங்குதல், ஒருவேளை அந்த வாராத்தைப் புண்ணாக்கிச் சுண்ணாம்புக் கல்லைக் கரைத்த ஜலம் போல் இரத்தமுடன் இறங்கல், அழுகியாய் சாட்டத்துடன் கை, கால், ஓய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ் சொறி என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

16-வது. கல்லுப் பிரமேக ரோகம்.

இது, கோசத்தில் கல்லைப் போல் மேல் நீர் கசிதல், தேகத்தில் கற்றாழை ~~[illegible]~~ நாற்றம், ~~[illegible]~~ வீசல், வயிற்றில் கல்லைப் போல் மூத்திரம் இறுகிக் கொண்டு விம்மி விருப்புடன் நாபியைப் பற்றி உப்பிசமாகி உப்பிப் பசியை அடக்கிக் கனத்தல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்:

—

17- வது. நீர்துப் பிரமேக ரோகம்:

இது, கோசத்தின் நோவுடன் இலந்தி நூலைப் போல் மேகம் தொய்தல், வெளுத்த உதிரங் காணல் அக் கோசம் விம்மும் போது வலித்தல், மடிப்பில் கிருமி சேருதல், விலாவில் குத்தல், மூத்திரம் துளித்துளியாக வீழ்தல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

18. வது சீச்சுப் பிரமேக ரோகம்:

இது கள்ள நெத்த நீர் இறங்குதல், வெளுத்தநீர் வடிதல், கோசம் விம்மும் போது நோவு, குத்தல், விருவிருப்பு, நரம்பு சுருங்குதல், அடி வயிற்றில் ஆசி, குளிர் என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

---

19 -வது. மலினப் பிரமேக ரோகம்:

இது, குய்யஸ்தானம், குதஸ்தானம் ஆகிய இவ்விடத்து அடி நரம்புகளில் குத்தலுடன் அழக்கும் நோவு. காங்கீயினம், மயக்கம், நாவு கைத்தல், புறங்காலிற் றிமிர், வெள்ளை காணுதல், அவ் விணை தண்டின் முனையில் ஆர் மாமிசம் திரண்டிருத்தல், என்னும் இக் குணங்களை உண்டாக்கும்.

20. வது மதுப்பிரமேக ரோகம்:

இது, ஆண்குறியில் நோவுடன் தேன்போல் நீரிறங்குதல், அந்த நீரில் எறும்பு மொய்க்குதல், நாசத்திற்கின் விரணம், உடம்பில் ஒருவித நாற்றம். அருசி, நாக்கு வறளல், மயக்கம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

---

2. வது. பித்த உபதம்ச ரோகம்.

இது, முற்கூறிய உபதம்ச ரோக குணத்துடன் ஆண் குறியில் சிவந்த வீக்கத்தை உண்டாக்கும். இதனால், சுடும் பிறக்கும்.

3. வது. சிலேஷ்ம உபதம்ச ரோகம்.

இது, ஆண் குறியைத் தடித்துக் கனத்து மினு மினுத்து வீங்கச் செய்யும். இதனால், சீதளம் அவ் விடத்தில் தினவும் உண்டாகும்.

4. வது. திரிதோஷ உபதம்ச ரோகம்.

இது, ஆண் குறியில் வாத முதலிய மூன்று உபதம்ச ரோக குணங்களை உண்டாக்கும். இதனால் இரண்டு அண்டங்களும் வீங்கும்.

5. வது. ரத்த உபதம்ச ரோகம்.

இது, ஆண் குறியை கறுப்பாக்கி எந்நேரமும் சுரத்தை உண்டாக்கும்:

சாத்தியா சாத்திய உபதம்ச ரோக நிதானம்.

உபதம்சம்: 5.ல் வாத முதலிய மூன்று உபதம்ச ரோகமும் சாத்தியம். ரத்த உபதம்ச ரோகம் கஷ்ட சாத்தியம். திரிதோஷ உபதம்ச ரோகம். அசாத்தியம். ஆயினும் குபேராக்ஷி என்னையார் சாத்தியமானாலும் ஆகும்:

---

2. வது. அரிசோரோகம்:

இது, வாத பித்தகபங்கள் ரத்த மாமிசங்களை அநுசரிக்கும் போது பிறக்கும். அப்போது ஆண் குறியின் உள்ளிலாவது வெளியிலாவது நமைச்சல், அவ்விடங்களில் மூலரோக முளைகளைப் போலும் சிறு சிறு களான் முளைகளைப் போலும் மாமிசம் எழும்புதல் அவைகளில் மிகவும் வியர்வை கசிதல் ரத்தம் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும் இதற்கு உடனே வைத்தியஞ் செய்யாவிடில், இது, சுக்கிலத்தைக் கெடுக்கும். ஸ்திரிகளுக்கோ வென்றால் சோணிதத்தைக் கெடுக்கும்.

3. வது. சரஷபிகா ரோகம்:

இது, சிலேஷ்மரத்தினால் ஆண்குறியின் உள்ளிலாவது, வெளியிலாவது கடுகைப்போல் அநேக கொப்புளங்களை உண்டாக்கும்.

4. வது. அவமந்த ரோகம்:

இது. ஆண்குறியில் நீளவாகுவாய் அநேக கொப்புளங்களை உண்டாக்கும். அப்போது அவைகளின் நடுவில் விரல் உண்டாகிச் சீழ் ரத்தம் ஒழுகுவதும், அன்றி, வேதனையும், ரோமச் சிலிர்ப்பும் உண்டாக்கும். இது சகல உபத்திரவங்களுடன் கலந்து வெளிப்படுதல், அவமந்த ரோகம் எனப் பேர் பெற்றது!

அவமந்தம் என்பது :- கலத்தல்!

5. வது. கும்பிகா ரோகம்:

இது, பித்தத்தினாலாவது, ரத்தத்தினாலாவது, ஆண் குறியில் நாவற் கொட்டையைப் போல் மாமிசக் கட்டியை உண்டாக்கும்.

—

6. வது. அலசி ரோகம்:

இது, ஆண் குறியில் நின்றும் மேகத்தை விழச் செய்து, விரணத்தை உண்டாக்கும்.

அலசி என்பது — மேக விரணமாம்.

7. வது. உத்தப ரோகம்:

இது. ஆண் குறியில் ரத்த பித்தத்தினால் சிறிதும் பெரிதுமான விரணங்களை எரிச்சலுடன் பிறப்பிக்கும்.

உத்தபா என்பது - மிகுந்த எரிச்சல்.

8. வது. பிடக ரோகம்:

இது, ஆண் குறியில் உளுந்து பயிறு பிரமாணங்களான கொப்புளங்களைப் பிறப்பித்து அவைகளைச் சுற்றிலும் விஸ்தாரமாகச் சிறு சிறு கொப்புளங்கள் உண்டாகும் படிக்குச் செய்யும்.

9-வது. புஷ்கரிகா ரோகம்:

இது, ஆண் குறியில் தாமரைக் காயைப் போல் தடிப்பை எழுப்பி அதில் கொப்புளங்களை உண்டாக்கும்:

புஷ்கரிகா என்பது — தாமரைக்காய்

10. வது. சம்வியூட ரோகம்:

இது, ஆண் குறியின் மீது புள்ளாங் குழல் பிறக்கும்: விரல்களைப் போல் குறுக்காகத் தடித்த விரணத்தை உண்டாக்கும். இது, கைவிரலைப் போல் சேர்ந்திருக்கிறப் காரணத்தால், சம்யூவியூட ரோகம். எனப் பேர் பெற்றது.

சம்வியூடம் என்பது — சேர்ந்திருக்குதலாம்.

—.

11-வது. மிருதித வீரணம்:

இது. ஆண்குறியில், கையால் பிசைந்த வாழைப் பழத்தைப் போல் இழைந்த விரணத்தைப் பிறப் பிக்கும்.

மிருதிதம் என்பது — அழிதல்:

12-வது. அஷ்டீலிகா ரோகம்:

இது. ஆண் குறியில் விரணத்தைப் பிறப்பிக்கும். அது குழி விழுந்து கல்லைப் போல் கெட்டியாயிருக்கும்.

அஷ்டீலிகம் என்பது — கல்லு.

13-வது. அவிபாழத ரோகம்.

இது, வாத, பித்த சிலேஷ்மங்களினால் ஆண் குறியினது சருமத்தையெல்லாம் மிகவும் கடிக்கச் செய்து, அத் தழும்பைப் பிளம்பிக்கும்:

அவி என்பது அதிகம் பாழதம் என்பது — பிளத்தல்.

14-வது நிருத்த மணி ரோகம்:

இது, வாயுவினால் ஆண்குறியின் முன்சு சருமத்தை நையப் பண்ணி, அதை அம்மலரில் ஒட்டக் கொள்ளச் செய்யும். இதனால், அந்த வாரம் அடைபட்டாலும் வேதனை இல்லாமல் சன்னமாக மூத்திரம் இறங்கும். ஆனால் மலரை விட்டு அச்சருமத்தை மலர்த்தக் கூடாமையாயிருக்கும். இது அம்மலர் மேல் மூடிய சருமத்தை மலர்த்த ஒட்டாமல் தடுப்பதனால், நிருத்த மணி ரோகம் எனப் பேர் பெற்றது. நிருத்தம் என்பது தடுத்தல் மணி என்பது ஆண் குறியின் மலர். இது சஸ்த்திர சிகிச்சையினாலும் ரணத்தயிலம் முதலிய அவுஷதங்களினாலும் நிவர்த்தியாகும்: -

15. வது கிரதித ரோகம்:

இது, கூபத்தினில் கோசச் சுற்றில் முன்னே இறைத்தது போல் சிறு சிறு கொப்புளங்களை நெருங்க உண்டாகும்.

கிரதம் என்பது — நெருக்கம்.

16 - வது. பரிச ஆணி ரோகம்:

இது, ஆண் குறியின் மலரில் சிவந்த கிறத்தை உண்டாக்கி, தொடக் கூடாத உபத்திரவத்தைப் பிறப்பிக்கும். இதனால், சுக்கிலம் வெளிப்பட மாட்டாது.

பரிசம் என்பது — தீண்டல், ஆணி என்பது. காசம்.

—.

17 - வது. சத்ன போன ரோகம்:

இது, ஆண்குறி முழுதியும் சிறு சிறு துவாரங்களை உண்டாக்கும். இதனால் மூத்திரம் வரும் போதெல்லாம் எரிச்சல் அதிகரிக்கும்.

18. வது. தொக்குப் பாக ரோகம்:

இது. பித்த ரத்தத்தினால், ஆண் குறியின் சருமத்தைப் பழுத்து நையும் படிக்குச் செய்யும். இதனால், அரமும் வேதனையும் உண்டாகும்.

19. வது. மாம்ச பாக ரோகம்:

இது. ஆண் குறியின் முனை மலரை நையப் பண்ணி, பற்பல வேதனையை மேன் மேலும் பெருக உண்டாகும்.

—.

20. வது. ரக்தார்புத ரோகம்:

இது, ஆண் குறி முற்றிலும் ரத்தத்தினால் கருமை செம்மை நிறம் உள்ள கொப்புளங்களைப் பிறப்பிக்கும். இதனால் அனந்தம் வேதனை உண்டாக்கும்:

21. வது. மாம்சார்புத ரோகம்:

இது, ஆண் மலரில் மாம்ச நிறமுள்ள கட்டிகளை உண்டாக்கும்.

22. வது. வித்திரதி ரோகம்:

இது திரிதோஷத்தினால், ஆண் குறியின் நரம்புகளில் வீக்கத்தை எடுப்பும். அது கட்டியாகிய நாலு பக்கங்களிலும் பரவி, விரணமாகும். இதனால் சகிக்கக் கூடாத குத்தல் உண்டாகும்.

23. வது. திலகால ரோகம்.

இது, திரிதோஷத்தினால், ஆண்குறி முற்றிலும், எள்ளு அளவுப் பிரமாணங்களாய் கறுத்த நிறத்துடன் மாம்சத்தை மறுப் போலத் திரட்டித் தொங்கும் படிக்குச் செய்யும். இது உடைந்து விரணமாகும். இது ஆரம்பத்தில் எள்ளைப் போல் உண்டாகிப் பின்பு பழுத்து உடைவதால் திலகரோகம் எனப் பேர் பெற்றது.

சாத்தியா சாத்திய குய்ய ரோக நிதானம்.

குய்ய ரோகம் 23ல். உபதம்சம்-1 தவிர மற்றை 22ல் மாம்சார்புதம், மாம்ச பாகம், வித்திரதி, திலகாலகம். இந்நான்கும் அசாத்தியமாம், மேற் கூறிய குய்ய ரோகங்களை, அக்னி புஷ்டி ஔஷதங்களாலும் மேகாரி, எண்ணெய்களாலும், விரணச் சிகிச்சைகளாலும் வசப் படுத்த வேண்டும்.

பிரமேகோற் பத்தி வரணம்:

சித்தர்கள் இதனையே பிரமிய ரோகம் என்கறுவர்.

அகா ஸ்திரிபோகம், மோகத்துடன், பட்டினியாய் இருத்தல், தம்பனச்சூடு, காரம், உப்பு, துவர்ப்பு இவைகள் அதிகமாகப் புசித்தல், மனக்கிலேசம் என்னும் இச் செய்கைகளில் பிரமேகம் பிறந்து முதல் முதல் முதுகுத் தண்டெலும்புகள் வரிசையாகப் பற்றி, அதன் பின் நாபியைச் சுற்றிக் கொண்டு, குய்யஸ்தானமாகிய மூலாதாரத்தை மிகுந்த நோவோடு நரம்பையும் எலும்பையும் ஆழ்ந்து சோணிதத்தில் கலந்து, அடிவயிற்றில் இசிவை உண்டாக்கி வேதனையைக் கொடுக்கும்.

பிரமேக ரோக பேதம்.

பிரமேக ரோகமானது வாதப்பிரமேக ரோகம் ஆதியாக இரணைப் பிரமேக ரோகம் ௨௰௧ வகைப்படும்.

1. வது. வாதப் பிரமேக ரோகம்.

இது, கோமூத்திரம் போல் நீரிறங்கல், கோசத்தின் அடியில் வலித்தல், வெளுத்துக் கட்டியாகச் சிம்வடிதல். பீசத்தில் கனத்தலுடன் நோவு அடிவயிற்றின் பக்கத்தில் பரபரத்த வேதனை, களகளத்திப்பு, வயிற்றில் இசிவு சுர வாட்டம் என்னும் இக்குணங்கள் உண்டாக்கும்.

பாதபேத ரோகம்

இது வெகுதூர சஞ்சாரத்தினாலும் அதிக உஷ்ணத் தினாலும் பாதத்தில் இருக்கின்ற இலேஷ்மமானது நாசமடையும் போது பிறந்து வாத பித்தத்தை அதிகரிக்கச் செய்து, குதிக்கால், உள்ளங்கால், முதலிய இடங்களிலும், அவ்வோரங்களிலும், சிற்றுச் சிற்றுன வெடிப்புக்களைப் பிறப்பித்து அவ்வெடிப்பின் வழியால் ரத்தம் முதலியவைகளைக்

கசியப் பண்ணும், அப்போது நடந்தால் காலில் வருத்தம் உண்டாகும். பேதம் என்பது பிளக்குதல், இது, செந்தாமரைப் பூரசத்தையும் பசுவின் பாலையும் அரை அரைப்படி அளவாகச் சேர்த்துக் கொதிப்பித்து அந்த ஆவியைத் தினந்தோறும் நாற்பது நாள் வரைக்கும் பாதத்தில் பிடிக்கில் விலகும்.

இய்ய ரோக நிதானம்.

வாத பித்த சிலேஷ்ம தினங்களிலும், வெகு புருஷ சஞ்சாரத்திலும் இரைந்த மேகங்களிலும், கெடுதியை அடைந்து அடங்கிய அல்குல், வெகு புருஷ சையோக அல்குல், புருஷ விருப்பம் இல்லாத அல்குல், பிசவித்துப் புண்ணிருக்கின்ற அல்குல், மாதாந்த ரத்த அல்குல் ஆகிய இவ்வளவுக்கு உடைய ஸ்திரிகளையும், நீச ஸ்திரிகளையும், குதிரை முதலியவைகளையும், மிகுந்த அவாசம் எடும்பும்படிக்கு நித்தியம் சையோகஞ் செய்வதிலும். பின்பு அத்தி செய்யானையிலும் போகித்த பின்பும் உடனே போகிப்பதற்காக விந்தென்றல் தீவனலே பனம் பண்ணிக் கொள்ளல், அம்மாதரைக் கொண்டு ஆண்குறியைப் பிசைந்து நகங்களினால் கிள்ளவும் வாயினால் அமிழ்த்துப் பற்களால் மெதுவாகக் கடித்து நாவினால் நெருடவும் சொல்லல், மயிர்க்குச்சியில் அக்குள் பாய்ச்சச் செய்தல், முன்பு தான் அனுபோகித்த ஸ்திரி அகத்தை நினைத்துக் கொள்ளல், பருத்தைக் கிளியானது மூக்கினால் கொத்துவது போல் அல்குலில் ஆண்குறியால் குத்துதல் அவ்வேளையில் மூத்திரத்தை அடக்குதல் என்னும் செய்கைகளைக் கொண்டு வலுவந்தமாகச் செய்கின்ற புணர்ச்சியிலும் வாத பித்த சிலேஷ்மங்கள் அதிகரித்து, ஆண்குறியில் நின்று

அவ்விடத்தில் உபதம்ச ரோகம் ஆதியாக லிங்காக ரோகம் ஈறாக 23 ரோகங்களைப் பிறப்பிக்கும். இவற்றுள் உபதம்ச ரோகமானது வாதாதிகளினாலும் ரத்தாதியாலும் ஐந்து விதப்படும். இது அல்லிங்க மார்க்கமாக ஆண் குறியைக் கொண்டுவதால் குய்ய ரோகம் எனப் பேர் பெற்றது. குய்யம் என்பது அல்குல்.

—

1. வத. வாத உபதம்ச ரோகம்.

இது ஆண் குறியின் துவாரத்தை அடைத்து உலர்த்தல், அவ்விடத்தில் மரத்தல், பல விதநோவு சருமத்தின் மீது குருக்குருவாக எழும்புதல் என்னும் இக் குணங்களை உண்டாக்கும். இது விஷக்கடியால் உண்டாகின்ற தாக்குணங்களைப் போல் சகல தாக்குணங்களையும் உண்டாக்கலால் தம்சரோகம் எனப் பேர் பெற்றது.

சர்ப்ப சாதி பேதம்.

சர்ப்பம் என்பது திவ்விய சாதி சர்ப்பம், பௌமிசாதி சர்ப்பம் என இருவகைப் படும். இவற்றுள் திவ்விய சாதியை முதலிற் சொல்லுவோம்.

திவ்விய சர்ப்ப பேதம்.

அண்ட கோடிகளுக்குள் இருக்கின்ற சர்ப்பங்களில் தலைமையும், உத்தம சாதியும், கடவுட் பாம்புமாகிச் சிறப்புற்று அஷ்ட திக்குகளில் வாசஞ் செய்வதே திவ்ய சாதி சர்ப்பமாம். அது, வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன், என எண் வகைப் படும்

—

1. வது. வாசுகி.

இது, படத்திலும் முதுகிலும் கருங்குவளைப் பூவைப் போல் புள்ளிகளைத் தாங்கி வந்தவனுக்கு வசப்பட்டு, மணி மந்திர அவுஷதங்களைக் கடந்து, சின்னப் பார்வையாலுலகத்தையெல்லாம் நீறுக்கும் பராக்கிரமத்தைப் பெற்று; கிழக்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

2-வது அனந்தன்.

இது, படத்தில் வெண்டாமரைப் பூவைப் போல் புள்ளிகளைத் தாங்கி மூச்சினால் உலகைப் பஸ்மம் பண்ணுந் திறத்தைப் பெற்று தியானங்களுக்கு யோக்கியமானதாய் தென் கிழக்குத் திக்கில் வாசமாய் இருக்கும்.

3. வது. தக்கன்.

இது, படத்தில் துவசத்தின் வடிவான புள்ளிகளைத் தாங்கி. கோபம் வரில் திரிலோகத்தையும் எரிக்கின்ற வல்ல பலத்தைப் பெற்று கோத்திரத்திற்கு உட்பட்டு, தெற்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

4. வது. சங்கபாலன்.

இது, படத்தில் திரிசூலத்தைப் போலும் பிறையைப் போலும் புள்ளிகளைப் பெற்று, அவாசத்தைக் கொண்டு உலகத்தைத் தகிப்பதாய்த் தென்மேற்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

—

5. வது குளிகன்:

இது, படத்தில் சங்கத்தை ஒத்த புள்ளிகளைப் பெற்று, சிற்றம் வரிற் கடைக்கண் பார்வையால் பெரும் புவனங்களையெல்லாம் எரிப்பதாய் இதியான வர்தனைக்கு வசப்பட்டு, மேற்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

6. வது. பதுமன்:

இது, படத்திலும் முதுகிலும் பஞ்ச கோணப் புள்ளிகளைப் பெற்றுக் குரோதம் வரில் உலிவாச திகைவாசங்காரமிலொண்ட திசைகளைப் புகைப்பதாய், உபசாரத்திற்கு உட்பட்டு, வட மேற்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

7. வது. மகா பதுமன்.

இது படத்திலும் முதுகிலும் ராஜவர்த்தனைக் கல்ஸ் யொத்த புள்ளிகளைப் பெற்று கறுவத்தால் கண் சிவக்கில் அகில கோடிகளை அழிப்பதாயி நமஸ்காரத்திற் குட்பட்டு வடக்குத் திக்கில் வாசமாயிருக்கும்.

8 - வது. கார்க்கோடன்.

இது, படத்திலும் முதுகிலும் மூன்று கண்களைப் போல் புள்ளிகளைப் பெற்று வெறுக்கல் வரில் சர்வ சங்கார காலம் போல் எ. ரேகு லோகமும் நாசஞ் செய்வதால் வடகிழக்குத் திக்கில் வாசமாயிருக்கும். இக்கடவுட் பாம்பாகிய அஷ்டமா நாகங்களும், மேற்சொன்ன குறிகளுடன் அக்கினி உருவத்தை அடைந்து மரண பயங்களை நீக்கி, தாமே பிரகாசிப்பதுகளும் மற்றொன்றைப் பிரகாசிக்கச் செய்வதுகளுமாகி,

பூபாரத்தைத் தாங்கும் சக்தியைப் பெற்றிருக்கும். இவைகள் ஒருவேளை ஈ.ஸ்வரக் கிரியையால் யாரையாவது தீண்டில், அவ்விடத்திற்கு ஆயுர் வேதத்தில் எவ்வகையும் அவுடதம் இல்லை என்றறிக.

11-வது லோகித அட்சக யோனி ரோகம்:

இது, வாத பித்த கபங்களினால் யோனிக்குள் இருக்கும் உதிரமானது உலரப்படுங் காலத்தில் பிறக்கும். இதனால் அந்த இடத்தில் சிவந்த நிறமும் அட்சகமும் எரிச்சலும் உண்டாகும்.

லோகிதம் என்பது — சிவப்பு.

12-வது பரிப்புலுத யோனி ரோகம்.

இது, சையோக காலத்தில் தும்மலையும் ஏப்பத்தையும், அடக்குவதால் பிறக்கும். இதனால் யோனிஸ்தானம் உப்பல், அதைத் தொடக் கூடாத வேதனை, கறுப்பும் மஞ்சளுஞ் சேர்ந்த நிறமான ரத்தம் ஒழுகுதல், நோவோடு கனப்பு, ஒரு வேளை பேதி, அரோசகம், கவுட்டியிலும் பிட்டத்திலும் குத்தல், சுரம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

புலுதம் என்பது — வழிதல்.

13. வது மஹாயோனி ரோகம்

இது, வாயுவானது யோனிஸ்தானத்திலும் வயிற்றிலும் கருப்பஸ்தானத்திலும் சஞ்சரித்துப் பூரிக்கும்போது பிறக்கும். இதனால் அங்குலானது நாளுக்கு நாள் தூர்மாமிசத்தினால் மேன்மேலும்

ஊர்ந்து விசாலமாகப் பருப்பது மன்றி சிலவேளை மிகுந்த நோவையும் தரும்.

14. வது ஷண்ட யோனி ரோகம்.

இது கருப்பகாலப் புணர்ச்சியால் பிறக்கும். அதன் விவரம்: புருஷனுடைய விந்துவின் சுடுகையினால், அல்குல் ஸ்தானம் வெந்தமாமிசம் போலாகுவதுமன்றிச் சில நாட் சென்று இரண்டு ஸ்தானமும் கட்டி உலர்ந்து விடும். பின்பு இந்த ஸ்திரியானவள் புருஷனைச் சேர்ப்பதற்கிலும் விரும்பாள். இது, ஸ்திரி உருவத்தை மாற்றி நபும்ஸகத் தன்மையைத் தருதலால் ஷண்டயோனி ரோகம் எனப் பேர் பெற்றது.

ஷண்டம் என்பது — நபும்ஸகம்.

15 - வது. அதிசரண யோனி ரோகம்.

இது, பருத்த ஆண் குறியை யுடைய புருஷ சையோக மிகுதியினால் பிறக்கும். இதனால் அல்குலின் வீக்கமும். தின உபத்திரவமும் உண்டாகும். அதி என்பது அதிகம். சரணம் என்பது — சஞ்சரித்தல்.

16 - வது. சூசிமுக யோனி ரோகம்.

இது, வாதாதிக்க வஸ்துக்களை மிதமின்றி நித்தியமும் புசித்து உடனுடனே புணருவதால் வாயுவு கருப்பாசய ஸ்தானத்தில் நிலைக்கப்படும் காலத்தில் பிறக்கும். அதன் விவரம் அவ்வாயுவினால் மாமிசந்தாவித்து அல்குலின் துவாரத்தை ஊசி நுழைந்துவாரம் போலாக்கி, சையோகத்திற்கு

இடம் இல்லாமல் செய்து விடும். ஒருவேளை வழுவில் யத்தனித்தால், அதிக உபாதியும் ரத்தப் பிரவாகமும் உண்டாகும். சூசி — என்பது — ஊசி.

இதற்குத் தக்கைபமட்டுத் துவாரத்தைப் பருக்கப் பண்ணுவதும். வாதாரி கிருதங்களை உள்ளுக்குச் செலுத்துவதுந்தான் சிகிச்சை.

17. வது. பராக்சரண யோனி ரோகம்.

இது, ருதுவாகக் கன்னியர்கள் புருஷனைப் புணருவதால், கருப்பாசய ஸ்தானத்தில் சேருகின்ற இளம் உதிரமானது கெடுதியை யடையுங் காலத்தில் பிறக்கும். அப்போது அல்குல் ஸ்தானம் அவ்வுதிரத்தால் கலங்கி நிறமாறுவதுமன்றி, நடுமுதுகில் இத்தலும், கவுட்டி தொடை என்னும் இடங்களில் நோவும் உண்டாகும். இதனால், பல ரோக சம்பவம் நேரத்து வருந்தும்.

பாராக்கு என்பது — ருது காலத்திற்கு முன்பாம்.

18. வது. கண்டூல யோனி ரோகம்.

இது, மிகுந்த சையோகத்தினால் அல்குல் ஸ்தானத்தில் இருக்கின்ற உதிரம் கெடுதியை அடைந்து, அதில் கிருமிகள் சனிக்கும் போது பிறக்கும். இதனால் அங்கு அதிக நமைச்சலும், அந்த நமைச்சலினால் எப்போதும் சையோகத்தில் மிகுந்த விருப்பம் இதமும் உண்டாகும். இது வெள்ளைப் பூண்டு ஓட்டனை, துமட்டிக்காய், வாய்விடங்கம், கண்டங் கத்திரிப் பழம் என்னும் ஐந்து சரக்கையும் சமமாக மெழுகுபத அரைத்து ஏழுநாள் லேபனம் பண்ணிக் குளிக்க சந்தேகமற விலகும்.

—

19-வது. கர்ணிகா யோனி ரோகம்.

இது, அகால சையோகத்தால் வாயுவு அதிகரித்து ரத்தத்தைக் கெடுக்கும் போது பிறக்கும். இதனால் அல்குலின் துவாரத்தின் வாயுவினை திரண்டு உதிரமானது தூர்மாமிசத் தேகத்தை பொறுத்துத் தாமரைக் காயைப் போலும் ஒடிந்து விட்டது போலும் தொங்கும். இதனைச் சிலர் தசை அண்டம் என்பர்.

கர்ணிகா என்பது — தாமரைக்காய்.

—.

சித்தர் மதாந்தர தாவர விடபேதம்.

பலாபம், வத்சநாபம், முஸ்தகம், புட்கரம், இரவுக்சம். சடம், மற்கடம், ஆரிக்கிரம், காலகூடம், இந்திரவச்சிரம், ஏகவீரம், ஹாரிகம், காலபம், ஸ்ரிங்கி கற்கடக ஸ்ரிங்கி, மேஷஸ்ரிங்கி, ஆலாஹலம் வியக்சனம், புண்டரீகம், அங்கோசம், மதுபாகம், ரோகிணம், அரணம் என்னும் இப்பெயர்களை உடைய தாவர விடங்கள் மனிதர் மீது படுமாயின் மரணத்தைக் கொடுக்கும். ஒரு வேளை தெய்வ முயற்சியினாலும் மணிமந்திர அவுஷதி காதிகளிலும் தப்பிப் பிழைத்தவர்கட்கு, இருமல், இரைப்பு, ஆஸ், நடுக்கல் வாந்தி, தாகம் மூர்ச்சை என்னுமிக் குணங்களுண்டாகும். இது சுவாசம், ஸ்பரிசம், வாய், நா, பல், எலும்பு, நரம்பு, நகம், மலம் மூத்திரம், அக்கிலம், ரத்தம், ரசம், மாமிசம், மேதை, மச்சை ஆகிய 16. ஸ்தானங்களைப் பற்றி வியாபிக்கும்.

—.

சங்கம விட பேதம்.

சர்ப்பசாதிவிடங்களுக்கும், கீடம், தேள், சிலந்தி, நாய், நரி, முதலிய வற்றால் வருகின்ற விடங்களுக்கும் சங்கம விடங்களெனப் பெயராம். இவற்றுள் சர்ப்ப சாதி விடங்களை மாத்திரம் இப் படலத்தில் கூறப்படும்.

தாவர விட அசாத்திய நிதானம்.

தாவர விடங்களைத் தின்றவர்க்காவது, சர்ப்பக்கடி உண்டவர்க்காவது, விடத்தில் தோய்ந்திருக்கின்ற அம்பு முதலிய ஆயுதங்களின் காயம் பெற்றவர்க்காவது, சகல சிகிச்சைகள் செய்தும் அவ்விடம் இறங்காதிருக்கையில் உதடு கறுத்தல், பற்களசைதல், முகம் சோருதல், கண் சிவக்குதல், உடம்பும் நாசியும் இல்லிடல், உச்சுவாச நிசுவாசம், குளிர்ந்து வருதல், கெல்கள் நாரல், தலை மயிரின் முனை பிளக்குதல், ரோமஞ் சிலிர்த்தல், நாவு மரத்தல், பேதி காணுதல், நவத்துவாரங்களிலும் ரத்தங்கக்குதல், அறிவு நீங்குதல், என்னும் இக் குணங்கள் மேலிட்டால் அசாத்தியம். ஆயினும் முற்கூறிய கருத்திரம் விடயங்களை, நச்சறுத்தான் பூண்டுச் சாரமும், அத்தயிலமும் மாட்டுப் பூசனிப்பழமும் முறிக்கும். அன்றியும் நாபியைத் தின்றவர்க்கு வெண்காரம் பன்றிவிட்டை புத்திர ஜீவி விதை, சிறுகீரை வேர், இவைகளை நெய்யிலரைத்துக் கொடுக்கில், விடம் முறியும். ஊமத்தங் காயைத் தின்றவர்க்கு, வாந்திக் கொடுத்துப் பின்பு அதிக்கில் வெள்ளைப் பட்டையை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் கொடுக்கவும். இவ்வண்ணமாகவே சிகிச்சாதீபிகை என்னும் சாஸ்திரம் கூறிய சிகிச்சைகளை வழுவாமல் செய்யில் சகல தாவரத் விடங்களும் முறியும்.

தாவர விடத்தின் சப்தவேக குணம்.

இந்தத் தாவர விடத்திற்கு ஏழுவேகம் உண்டு. அவையாவன. 1. வது. நாவில் கறுப்புடன் மரத்தலும் வாந்தியும், பிரமையும், ஆயாசமும், பிறக்குதல், 2. வது நடுக்கலும் வியர்வையும், தாகமும் தொண்டைக்குள் வேதனையும், மார்பு நோவும், நாடை உறலும் உண்டாகுதல், இக் குணங்கள் ஆமஸ்தானத்தில் விடம் வியாபிக்கில் பிறக்கும். 3. வது கண்களில் கருமை நிறம். மஞ்சள் நிறம் தோற்றி வயிற்றில் குத்தலும் நோவும். இரைச்சலும் பொருமலும் அதிகரித்து விக்கல் காணுதல் 4. வது தலை நோவும் நீர் நுரைத்த மலமும், மாறுமுகமும் தோற்றுதல் 5. வது. கிரிதோடம் அதிகரித்து வாதஸ்தானத்தில் வேதனையைப் பிறப்பிப்பதால் சகல கீல்களிலும் உபத்திரவம் பெருகுதல். 6. வது தோள் இடுப்பு, முதுகு ஆகிய இடங்களில் நோவுண்டாகி ஞாபகம் நீங்குதல், 7. வது. அவ்விடம் சுக்கில தாதுவைப்பற்றி ஏறுதல் என்பனவாம். இந்த ஏழில், ஐந்து வேகம் வரைக்கும் சாத்தியம் மற்ற 2. ம். அசாத்தியம்.

பித்த கால விட குணம்.

மேற்கூறிய விட வஸ்துக்களைப் பித்த காலத்தில் தின்றவருக்கு சரீர வீக்கம், மாமிசம் வறளல், மார்பு எரிதல், வாயில் காரம், அக்கினிபோல் அவாசம் வருதல், அறிவு நீங்குதல். என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

சிலேஷ்மகால விட நிதானம்.

அவ்விடங்களைச் சிலேஷ்ம காலத்தில் தின்றால், அவர்களுக்குச் சரீரம் பாரித்துச் சில்லிடல் மார்பு அதிரல் வாயில் இனிப்புடன் நொப்பும் நுரையும் வீழல் அரோசகம், வாந்தி என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

14. மூலக புஸ்தகம் என்பது — கோரை,
15. மூலகம் என்பது — கருப்பூர வதலைப் பழம்.
16. முஷிகம் என்பது — விட செருந்தி
மார்க்கவிகம் என்பது — கயுருவி
17. சந்துவலாவகம் என்பது — மலை வன்னி மரம்.

ஸ்தான பேத விட நிதானம்.

முற்கூறிய விடங்கள் தேகத்தில் சிலேஷ்மஸ்தானத்தைப் பற்றின், யாதொரு பிரயத்தனங்களும் இல்லாமலே உபாயச் சிகிச்சையால் சாத்தியமாம். அவை பித்தஸ்தானத்தைப் பற்றில் உண்ணாக் கரு பிச்சாதன முதலிய சகல பிரயத்தனத்தைக் கொண்டும், சாத்தியமாம். வாதஸ்தானத்தைப் பற்றில் எவ்வளவு பிரயத்தனஞ் செய்யினும் கஷ்டத்திலும் கஷ்டசாத்தியமாகவே முடியும் (அல்லது) அசாத்தியமேம்:

சர்ப்ப ஆதி கால லக்ஷணம்:

முற்கூறிய சர்ப்பங்கள், சித்திரை மாதம் புணர்ச்சியில் இச்சை உண்டாகி, ஆனி மாதத்தில் ஆணும் பெண்ணும் இடைவிடாது திரிந்து, ஆடி மாதத்தில் நிறைந்து சூலுண்டாகி, கார்த்திகை மாதத்தில் 100, 200, 400, முட்டைகளிடும். இவற்றுள், சிற்சில முட்டைகள் பெருங் காற்றினாலும் நாயும், அதிக வெப்பத்தினாலும், கெடுதியை அடையும். மற்ற முட்டைகள் தனக்குத்தானே விரிந்துடைய,

அவைகளின் மீன்றும் சிறு சிறு கட்டிகள் வெளிப் பட்டுளவும். இக் கட்டிகளுக்குக் கீழ்வாய் வரிசையில் காட்டு வாழைப்பூ கேசரப் பிரமாணங்களை யொத்து மஞ்சள் நிறமான ஏழு கோரைப் பல்லும், மேல் வாய் வரிசையில் ரக்த நிறம் கரிநிறமான ஏழு கோரைப் பல்லும் முளைக்கும். இவற்றுள் பகலில் விடம் இருப்பது. இரவில் விடம் இருப்பது. இவ்விடம் 4. 3. என்னும் அளிக் கணிக்ககைகளும். இக் கோரைப் பல்லுகள் வருடத்துக் கொருதரம் விழுந்து முளைக்கும். இவ்விதம் விட சர்ப்பசாதி 40 விதமும், விடம் இல்லாத சர்ப்ப சாதி 44 விதமுமாம். இவற்றுள் பிரம, க்ஷத்திரிய வைசிய, சூத்திர என்னும் 4 சாதி சர்பங்களும், ஆண் பெண், அலி என்னும் 3 இலிங்கமுள்ள சர்ப்பங்களும் மலடு என்னும் நோய் இதி பெற்ற சர்ப்பமும், பாலிய யௌவன விருத்தாப் பியம் என்னும் மூப் பருவங்களை உடைய சர்ப்பங்களும் உண்டு. இவை களுக்கு ஆயுள் 1800, 500, 300, 200, 100, 25 என்னும் வருடங்களாம்.

கௌதேர சர்ப்ப பேதம்.

கௌதேர சர்ப்பமானது. 64. விதப்படும். இவைகளின் விடங்கள் திருவிகர சர்ப்ப விடங்களைப் போலவே இருக்கும். ஆனால், இவைகளில் மின்றும் பிறக்கின்ற சங்கர சாதிகள் அனந்த மென்றறிக. கௌதேரம் என்பது உடும்பின் நிறமான சர்ப்பங்களாம். இதனைச் சாரைப் பாம்பு என்பர்.

நிர் விட சர்ப்ப பேதம்.

நிர் விட சர்ப்பமானது, திவ்யகம், சாலகம், பாதகம், விருக்ஷசாயி, கலசி, புட்கரம், க்ஷீரி வாகினி, சாரவாகி, வருடாப்புகைம், சோதிரகம்,

அட்கம், கோத்திரம், ~~பகை~~ பலாசகம், சுசபக்ஷம்

பில வேற்பேதம் என 16 விதப் படும்.

நிர் விடம் என்பது — விடம் இல்லாத சர்ப்பமாம்.

நிர் விட சர்ப்ப பேதம்.

நிர் விட சர்ப்பமானது, திவ்யகம், சாலகம், பாதகந்

விருகேசாபி, காலி, புட்கரம், க்ஷிரி, வாகினி, சாரவாகி

வருடாப்புகைம், ~~ஆ~~ கோகிரதம், அட்கம், கோத்திரம்.

பலாசகம், சுசபக்ஷம் பில வேற்பேதம் என 16.

விதப் படும்.

நிர் விடம் என்பது — விடம் இல்லாத சர்ப்பமாம்.

நிர் விட லக்ஷணம்.

விடம் இல்லாச் சர்ப்பங்கள் கடித்தல், அடிக்கடி வாயில் ஆணை முதுகைப் போல் தடித்து அச் சுமாய் கருத்து அற்ப சோம்பலுண்டாகும்.

வைகராக்ஷ சர்ப்பம்.

இது, மூவிதப் பேதங்களை உடையதாயிருந்தாலும், இவற்றின் விடம் அதிக வேகத்தைப் பெற்றிருக்கும். இதற்கும் தருவிகாரச் சிகிச்சை உதவும்.

—

அவையாவன: 1. வது ரத்தமானது, வெண்மையாய் முகிழ்ந்து தேகமும் கண்ணும் வெளுத்தல், 2. வது. சர்வாங்கமும் வீங்குதல், 3. வது. கண்ணிலும், மூக்கிலும் வாயிலும் அலம் வடிதல், 4 வது. சிரோபாரமும் காரி பிடிப்பும் உண்டாகுதல். 5. வது. பேசக் கூடாத வருத்தமும் இளிர் அரமும் காணுதல், 6. வது. தேகங் காந்துச் சில்லிடுதல். 7. வது. அவயங்களெல்லாங் கொதித்து மூர்ச்சை உண்டாகித் தன்னை மறித்தல் என்பனவாம். மலிப்பாம்பு, நாகரிப் பாம்பு, கட்டுவிரியன் முதலிய வைகளுக்கு ராக்ஷமந்தம் எனப் பெயராம்.

இவைகட்கு காட்டுக் கருனை, பருபரகல சிங்கில்
கோவை என்னும் கிழங்கு வகை 4, அண்டை,
கிளிமூக்கு, வெட்டிவேர், செங்கொட்டை, நிலி,
மரக்கரை, வெற்றில, பேய்ப்பீர்க்கு, பால,
உமைமர்றை, தெருப்பு நெருங்கில், வெண்சாரனை
என்னும் வேர் வகை 12. ம். ஆகிய இப்பதினாறு
வகையையும் தனித்தனியே வஸ்திர காயப் பொடி
செய்து சமமாக நிறுத்துக் கலந்து வைத்துக் கொண்டு,
இதில். அரைப்படியும் அரிசி அரைப்படியும்
சேர்த்துப் பொங்கி உண்ணக் கொடுக்கில் விடம்
ஏறுது. ஏறிய விடமும் இறங்கும்

இவ்விடங்கள் எல்லாம் புங்கம் வேர்,
விளாம் வேர் கிருஷ்ண சூரிகை வேர். இம்மூன்றையும்
சமமாக நிறுத்து, முருங்கைப்பட்டை ரசத்தில் அரைத்தும்
கடிவாயில் நன்றாய் லேபனம் பண்ணி, உள்ளுக்குப்
பாகலிலை ரசம் கொடுக்க. இறங்கும். பாளைப்பண்ணி.
உள்ளுக்கு பாகலிலைரசம் கொடுக்க இறங்கும்.
ஆனைப் பூனைப் பாலில் பிசைந்து வடகட்டிக் கடிக்கில்
கிரண மண்டலி விடம் தீரும்.
கிரண மண்டலி என்பது — புல்விரியன்.

ராஜ மந்த சர்ப்பம்:

இது, அதிக மந்த நடையையுடைத்தாய்ச் சிறிதும்
உடலின் மேலும் கீழும் பக்கங்களிலும்
மிது மிருந்துத் இந்திர வண்ணங்கள் ஒத்தப்
புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விடமானது
குளிர்ச்சியுள் இருக்கும். இது தங்கி கேதில்
கடிவாயில் குளிர்ச்சியோடு வீங்குதல், சோம்பல்,
முகமும், நகமும் வெளுக்குதல், அதிர நமைச்சல்
பாரிப்பு, மரத்தல் கேசாதி பாதம், [illegible]

உறைக்கும் படி மிகுந்துச் சில்லிடுதல், சிரசும், கண்ணும்
நாசிமுனையும் குளிர்ச்சியாகுதல் சிரோபாரம், சுரம்,
வாய் இனிப்பு, அரோசகம், வாந்தி, இருமல் மேற்சுவாசம்,
தாகம், பொறுத்துப் பொறுத்துப் பெருமூச்சு வருதல்,
நெஞ்சில் கள கள வென்னும் ஒரு சத்தத்துடன் கோழை
அடைக்கை அலறல், ரோமச் சிலிர்ப்பு, வாயில் நொப்பும்
நுரையும் தள்ளுதல், மார்பு அடைத்தல், மனச் சங்கடம்,
மயங்கிய நித்திரை என்னும் இக் குணங்களுடன்.
சிலேஷ்ம அபாயக் குறி எல்லாம் உண்டாகும்.
இதற்கு ஏழு வேகம் உண்டு.

மண்டலி சர்ப்பம்.

இது, மந்த நடையை உடையதாய் சிரசில்
அநேக பேதவன்மையாய், மண்டலாகார உருவங்களை
யொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விடமானது
மஞ்சள் நிறத்துடன் காரமாக உறைக்கும். இது
தஷிக்கு ஒழினில், கடி வாயில் அருணையாயிருத்தலோடு
வீங்குதல் கண்களில் மஞ்சள் நிறம் (அல்லது) சிவந்த
நிறந் தோற்றல், சரீர மெங்கும் வேதனையுடன் கொத்துதல்,
எரிதல், நோதல், முகம் மிகு மிகுந்து மஞ்சளைப் போ
லிருத்தல், அவ்வாறே சகல வஸ்துக்களும் காணப்படுதல்.
தலை நோதல், வயிறு கறுத்தல், வாயுலரல், சுரம், தாகம்
நரம்பு கருப்புதல், நாசியிலும் வாயிலும் அக்கினிச்
சுவாலைப் போல் சுவாசம் வருதல், பாதாதி கேசம்.
உறைக்கும் 4 கை ஆழ்ந்தது போல் இருத்தல்,
மூர்ச்சை, தேகத்தில் வெருப்பம் என்னும் இக் குணங்களுடன்
பித்த அபாயக் குறியெல்லாம், ~~[illegible]~~
~~[illegible]~~ உண்டாகும். இதற்கு ஏழு
வேகம் உண்டு. அவையாவன: 1. வது குளிர்ச்சியான
ரக்தம் வடிந்து வாயும் கண்ணும் கறுத்து தேகத்தில்

பூச்சி யூருதல் போல் இருக்குதல் 2. வது தாகமும்
விக்கலும் காணுதல், 3. பல்லுகள் கறுக்குதல்,
4. வது. சர்வாங்கத்திலும் எரிச்சல் எழும்புதல்
5. வது. சப்த தாதுக்களுக்கும் துர்மலம் உண்டாகுதல்,
6. வது. வாழைத் தண்டைப் போல் தேகம் இல்லிடல்,
7. வது. தன்னை மறக்குதல் என்பனவாம். அருட்டை,
பனையன், விரியன் முதலிய பாம்புகளுக்கும்
மண்டலி சர்ப்பம் எனப் பெயராம்.

1. வது. சர்வாங்கமும் வீங்குதல், 2. வது இரசகணத்துக்
கண் சிவந்து பல்லுகளில் நோவுண்டாகுதல் 4. வது
நுரை நுரையான வாந்தியும் எலும்பின் சந்திகளில்
நோவும் பிறக்குதல், 5. வது. சகல கீல்களிலும்
உபத்திரவம் உண்டாகி விக்கலும் தாகமும்,
அதிகரிக்குதல். 6 வது. மார்பு அடைப்புடன் தேகம்
பாரித்து, மூர்ச்சை கண்டு பேசியாகுதல் 7. வது முதுகு
தோள் இடுப்பு ஆகிய இடங்களில் வேதனை உண்டாகி
அவயவங்களிலும் கொதிப்பேறி சீக்கிரம் ~~[illegible]~~
~~[illegible]~~ நாசம் அடைதல். என்பனவாம்.
இந்த ஏழு வேகத்துள் ஐந்து வரைக்கும்
சிகிச்சை செய்யலாம். அதற்கு மேல், அவஷதம்
நாசமாம். இது கரண்டியைப் போல் படமுள்ள
ஆகையால் தருவிகர சர்ப்பம் எனப் பேர் பெற்றது.
இது நொச்சில், கருந்துளசி, தும்பை, கச்சாங்கோரை,
பருத்தி இலை தேக்கு, கொட்டாங்கரந்தை என்னும்
ஏழு சரக்கையும் இளநீரில் ஊற வைத்து நசி
யம் ~~[illegible]~~ இட்டத் தீரும். (அல்லது) குப்பை மேனி
சுக்கு, மிளகு, வேலி, வெள்ளருகி என்னும்
ஐந்து சரக்கையும் இளநீர் விட்டு நசுக்கிச் பிழிந்து
நசியம் செய்ய, விடம் இறங்கும். ~~தீர்த்தி கிழங்கை~~
~~[illegible]~~
~~[illegible]~~ உண்ணின் தீரும்.
~~[illegible]~~

நீங்கில் கிழங்கையாவது, கோவைக் கிழங்கையாவது நீலி நீசலில் ஒரு ஆமாக்கிரசம் உள்ளில் தங்கும் பழக்கத் தின்னச் சொல்ல விடம் தீரும். பேதங்களுக்குக் கணக்கில்லை என்றறிக! இங்ஙனம் கூறிய ஐவகை சர்ப்பசாதிகளுக்கும். பௌம சர்ப்பங்களெனப் பெயராம்.

பூமிசம்பந்தம் — பௌமம்.

கருவிகர சர்ப்பம்.

இது மிகுந்த வேக நடையைப் பொருந்தி, படத்திலும் சர்வாங்கத்திலும் வண்டிக் கண், காப்பை, குடை, துவசம், அங்குசம் என்னும் உருங்கள ஒத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விடமானது கொஞ்சம் உஷ்ணத்துடன் புளிக்கும். இது தலைக்கேறில், முகம், கண், நகம், சருமம், மூத்திரம் ஆகிய இவைகள் கறுத்தல், இரத்தப் பாரிப்புடன் நோவு தலை சுழலல் தேககனதி, வயிற்றிற் சூலை, எரிச்சல், பொருமல், முதுகல் இக்கல், எலும்பு, நரம்பு, இடுப்பு, இவ்விடங்களில் வேதனை தாளிருகல், இருமல், இரைப்பு கொட்டாவி, நித்திரைப் பங்கம், அரோசகம், மல மூத்திரக் கட்டு, நெஞ்சிற் களகள வென்னும் ஒரு சத்தம். விக்கல், பேசக் கூடாமையான சி. ளக்கொண்டி ஏப்பம், வாயில் நொப்பும் நுரையும் விழுதல் அறிவு கெடுதல் என்னும் இக் குணங்களுடன் பாத அபாயக் குறியெல்லாம் உண்டாகும். இதற்கு ஏழு வேகம் உண்டு. அவையாவன:-

1. வது வாயில் ரத்தங் கம்பி முகமும் நேத்திராதி இந்திரியங்களுங் கறுத்து, சரீரத்தில் பூச்சியூருதல் போல் இருக்குதல் —ா.

பௌம சர்ப்ப சாதி பேதம்.

பௌம சர்ப்பம் என்பது கருவிசரம் மண்டலி, ராஜமந்தம், நிர்விடம், வைகரந்தம் என ஐவகை சாதியை உடையதாய் முறையே, 26, 36, 13, 4, 3. என்னும் ௮௨. பேதங்களைப் பெற்றிருக்கின்றது. ஆயினும், கருவிசரம், மண்டலி ராஜமந்தம் எனக் கூறி மூவகைச் சர்பங்களுக்குள் பிறக்கின்ற சங்கர சர்ப்பசாதியாகும்.

அலிச் சர்ப்பம்.

இது, மிருதுவுடன் நீண்ட உருவத்தையும், வெளுத்த படத்தையும், மந்த நடையையும், குறைந்த தொனியையும், அற்ப கோபத்தையும் உடையதாய் இருக்கும். இவ் விடத்தில், ஈனத்தொனி பேதி, நடுக்கல், பயம், அரம், புணர்ச்சியில் இச்சை, சரீரம் காற்றில் பறப்பது போல் இருத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.
இச் சர்ப்பம் பிறந்த தினத்தில் விருத்தி அடைவதும் திவ்விய சர்ப்பத்தால் அடிபடுவதுமாயிருக்கும்.

மலட்டுச் சர்ப்ப விடம்.

இது, சீக்கிரத்தில் அனந்தம் வேதனையைப் பிறப்பித்தாலும், முக்கியமாக வியர்வையை விஸ்தாரம் ஒழுகச் செய்யும்.

பால்ய சர்ப்ப ஆண் விடம்.

இது இடதுக் கண்ணைக் கோவைப் பழம் போல் சிவக்கச் செய்யும். பெண் சர்பக் குட்டி விடத்திற்கு இக் குணம் கொஞ்சம் பேதிருக்கும்.

— ௭.

இது படம் விரித்து ஆடும்போது பூமியைப் பார்த்துக் கவிழ்ந்து நின்று ஆடும். தவளை மீன் இவைகளை உணவாகக் கொள்ளும் இதற்கு, வயது 200 என்றறிக. அன்றியும். இது மந்த வாரத்திலும் குரு வாரத்திலும் எலி முதலிய சகலத்தையும் இரையாகக் கொள்ளுமென்றும், வைசிய சர்ப்பத்தைப் போலவே கடிக்கு மென்றும், அந்த கடியினால் தொந்தரவும் அதிகரிக்கு மென்றும் சில நூலில் சொல்லப்படுகின்றன. இந் நான்கு ஜாதி சர்ப்பங்கள் தவிர மற்றைச் சங்கரசாதி சர்ப்பங்கள் கடிப்பதற்குப் பக்ஷ பேதமும் ஸ்தான பேதமும் இல்லையென்றறிக.

ஆண் சர்ப்பம்.

இது, அகலமுள்ள படத்தையும், அதிக இடத்தையும் மிகுந்த நீறையும் பெற்றிருக்கும். இவ்விடம் தலைக் கேறினல், மேல் நோக்கிய பார்வை, வலது கால் பூமியில் பாவாதிருக்கிதல், உலர்ந்த வ.காயத்தில் மிகுந்த ரணம் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

பெண் சர்ப்பம்.

இது, இறுகிய படத்தையும் அற்பத் நீறையும் பெற்றிருக்கும். இவ் விடத்தினால், கீழ்ப் பார்வையும், இடது கால் பூமியிற் பாவாதிருத்தலும், அதே காயத்தில் பல ரணமும் உண்டாகும்.

3-வது. வைசிய சர்ப்பம்.

இது, மேற்புறத்தில் வச்சிரம் கோமேதகம் புரு இவைகளின் சாயலையும் உடல் முழுதிலும் சிவப்பு, வெளுப்பு, மஞ்சள், புகை இவைகளின் நிறஞ் சேர்ந்த விசித்ராகாரமும் விஷ்ணுவடிவம் ஒத்த புள்ளிகளையும், பாதிரிப்பூ, பால், நெய், வெள்ளாடு

செம்மறியாடு இவைகளின் மணத்தையும் பெற்று மனைகளில் வாசஞ் செய்யும். இது, படம் விரித்து ஆடும் போது, 4. திசையையும் பார்த்து நின்றிடும். ஏர்த்தியையும் எலியையும் உணவாகக் கொள்ளும், இதற்கு வயது 500 - என்றறிக: அன்றியும் இது அக்கிர வாரத்திலும் மங்கள வாரத்திலும் தவளையை இரையாகக் கொள்ளுமென்றும், உதயாதி இருபது நாழிகை முதல் 30 நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும், இடப்புறத்திலும் பின்புறத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் கபமே அதிகரிக்கும் என்றும், விடநூல் சொல்லுகின்றது.

4.வது. ஆத்திர சர்ப்பம்.

இது, கரி, கோதுமை நிறங்களையும் உடம்பெல்லாம் புகை போன்று இருந்து நீண்ட புள்ளிகளையும், யானை, காட்டெருமை அருகிய சேறு ரத்தம் இலுப்பைப்பூ இவைகளின் மணத்தையும் பெற்றுப் புற்றுக்களில் வாசஞ் செய்யும். கடிக்கும் போது முன்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும், அக்கடியினால் வாதமே அதிகரிக்குமென்றும் இதற்கு ஆடும் என்றும் சாஸ்திரம் சொல்லுகின்றது.

௫.வது. ஜாத்திரிய சர்ப்பம்.

இது, மேற்புறத்தில், பொன், பேரிச்சம் பழம், இராஞ்சிப் பழம், நாவல்பழம், என்னும் நிறங்களையும், படத்தில், சந்திரன், சங்கு, சக்கரம், கறிவப்பிலை, ஆகிய இவைகளை யொத்த புள்ளிகளையும், மிகுந்த பணையுடன் கோபத்தையும் சிவந்த நேத்திரத்தையும் அக்கருக்கட்டை — சாதிப்பூ, தாழம்பூ, புன்னைப்பூ, என்னும் இவைகளின் மணத்தையும் பெற்று ஊருசனைப் பொந்துக்களில் வாசஞ் செய்யும். இது படம் விரித்து ஆடும் போது, சம பார்வையுடன் ஆடும்.

அறுகின் கிழங்கையும், வண்டையும், உணவாகக் கொள்ளும். இதற்கு வயசு 800 என்றறிக: அன்றியும் இது சனி வாரப் பகலிலும் சோமவாரத்திலும் எலியை இரையாகக் கொள்ளுமென்றும், பகல் உதயம் பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும் இடப் பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் பித்தமே அதிகரிக்கும் என்றும் சில நூல் கூறுகின்றன.

இதுகள் ஒரு வேளைக் கடிக்கும்போது கடியுண்டவருக்கு இறப்பு உண்டோ இல்லையோவென்று சந்தேகிக்குமென்றும், இவைகளுக்கு கண்களே காதாக இருக்குமென்றும், இதுகள் ஒருவேளைக் கடிக்கும் போது கடியுண்டவருக்கு இறப்பு உண்டோ இல்லையோவென்று வாய்க் கீழ் வரிசையில், காளி காளராத்திரி என இரண்டு பல்லும் மேல் வரிசையில் எமன் எமதூதன் என இரண்டு பல்லும், உண்டென்றும், இவ்விடங்கள் மணிமந்திர அவுஷதாதிகளுக்கு அடங்கும் என்றும் சித்தர் ஆருட விருத்தப்பா என்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

1. வது. பிரம்ம சர்ப்பம்.

இது, மேற்புறத்தில் வெளுப்பு கறுப்பு சிவப்பு கம்பளம் என்னும் நிறங்களையும், படத்தில் சங்கத்தின் வடிவான புள்ளிகளையும் அதிகச் சீறுடன் கோபத்தையும், தாமரைப்பூ, இருவேர், வெட்டிவேர் காட்டு வாகைப்பூ குங்கிலியம் நாபி ஆகிய இவைகளின் மணங்களின் பெற்று ஆரண்யங்களில் சஞ்சரிக்கும். இது படம் விரித்து ஆடும்போது ஆகாயத்தைப் பார்த்து நின்றிடும்.

காற்றையும் பூ மணத்தையும் புசிப்பாகக் கொள்ளும் இதன் வயது 1008 என்றறிக. அன்றியும். இது ரத்த நிறத்தைப் பெற்று சனிவார வாரத்தினிரவிலும் ஆதிவாரத்திலும் இரை எடுக்குமென்றும், உதயமுதல் பத்து நாழிகை வரைக்கும் வெயிலில் திரியுமென்றும், இச் சாதிகளுக்கு ஆயுசு 50, 20, 50, 55 என்னும் வருடங்களாம். இச் சர்ப்ப சாதிக்குள் பிறக்காமல் பசுவின் நாசியில் ஜனித்து வருகின்ற சர்ப்பம் ஒருவிதம் உண்டென்றறிக. இச் சாதிகளுக்கு ஆயுசு ~~50~~ 5, 20, 50, 55 என்னும் வருடங்களாம். இச்சர்ப்பசாதிக்குள் பிறக்காமல் பசுவின் நாசியில் ஜனித்து வருகின்ற சர்ப்பம் ஒருவிதம் உண்டென்றறிக. ஆனால் ஆரிய வெப்பம் மிகுந்த தேசத்திலிருக்கின்ற சர்ப்பங்களுக்கெல்லாம் விடம் அதிகமாம்.

<u>சர்ப்ப ஆதிகாலக்ஷணம்.</u>

முற்கூறிய சர்ப்பங்கள் ஆனி மாதத்தில் புணர்ந்து, ஆடி, ஆவணி மாதங்களில் வயிறு வளர்ந்து, கார்த்திகை மாதத்தில், பூ, பொன் எருக்கம்பூ வெண்மை ஆகிய நிறங்களாக 248 முட்டையிட்டு ஏழுநாள் அவயங்காக்குமென்றும். அம் முட்டைகளில் ஆண் முட்டைகள் முகிழ் விரியாத எருக்கம்பூ மொக்கைப் போலும் பெண் முட்டைகள், வாகைப்பூ அரும்பைப் போலும் இரண்டு பேதமாயிருக்குமென்றும், அதையீன்ற தாயானது ஏழு நாட்குள் 228 முட்டைகளைப் புசிக்குமென்றும், 4 முட்டைகள் அழியுமென்றும், மற்ற 16 முட்டைகள் பொரிந்து குட்டிகளாகத் திரியுமென்றும் அக் குட்டிகளுக்கு மயிர்போல் உடல்களிருக்குமென்றும், இவைகள் பிறந்த 28வது நாளில் சூரியனை

நோக்கிப் படம் விரித்து ஆடி விடம் பெற்றுக் கொண்டு தனித்தனியே பிரியுமென்றும், 60. வது. நாளில் தோலுரிக்குமென்றும், 6-வது மாதத்தில் பல்லும், நகமும், வாலும், பிரகாச மாய்த் தோன்றுமென்றும் கூறுவர்.

அற்புத கிரந்தி பேதம்.

அற்புத கிரந்தி என்பது, ~~முன்சொல்லிய வாத கிரந்தி~~ முதற் கூறிய வாத கிரந்தி முதல் மேதோ கிரந்தி ஈ.றாக ஆறு விதக் கிரந்திகளின் குணங்களைப் பெற்றிருக்கும். ஆகில் கனத்தலும் பருத்தலும் உயர்தலும் விசேஷமாக உண்டு. வாதாற்புத கிரந்தி, பித்தாற்புத கிரந்தி, சிலேஷ்மாற்புத கிரந்தி, மாமிசாற்புத கிரந்தி, மேதோற்புத கிரந்தி, ரத்தாற்புத கிரந்தி என ஆறு விதப் பேர் பெற்றிருக்கு மென்றறிக: இவைகளும் முற்சிகிச்சையால் போம்.

சோணிதாற்புத கிரந்தி.

இது, வாயுவானது, நரம்புகளில் ஓடுகின்ற ரத்தத்தை ஓடவொட்டாமல் மறித்து, அந்நரம்புகளில் இத் அந்தரத்தை மாமிசமெத்தையைப் போல் கெட்டியாய் கசிய வொட்டாமல் இரட்டித் தடிக்கப் பண்ணுவதால் பிறக்கும். அப்போது அந்தத் தடிப்பின் மீது பல்லி முட்டைகளைப் போல் சிறு சிறு மாமிசக் கொப்பிளங்கள் உண்டாகி விருத்தி அடையும். அவைகள் பழுத்து உடைந்தால் அங்கு கெடுதியை அடைந்த ரத்தமே ஒழுகும். என்றறிக. இவைகளுக்கும் முற்கூறிய சிகிச்சைகள் உதவும்.

சாத்தியா சாத்திய அற்புத கிரந்தி நிதானம்.

அற்பு கிரந்தி ஆறுக்குள், மாமிச அற்புதமும், ரத்த அற்புதமும் அசாத்தியமாம். மற்றை 4 ம். சாத்தியமாம். ஒரு வேளை, மேதையிலும் கபத்திலும் உண்டாகிப் பருக்கின்ற அற்புத கிரந்திகளும் அசாத்தியம்.

பாதவன் மீக ரோக பேதம்.

நெய்தல் லவாசம், மாசலம். ஊறிய பதார்த்தகம், சிலேஷ்ம பிரதான வஸ்து இவைகளைப் புசித்தலினாலும் அதிக மை யோகத்தினாலும், அதோ காயமான இரண்டு தொடைகளிலிருக்கின்ற நரம்புகளில் சிலேஷ்ம ரோகமானது நிறையப்படும். அக் காலத்தில் வாதமும் பித்தமும் பாதங்களில் வியாபித்து. அவ் விடத்தில் கொஞ்சங் கொஞ்சமாகத் தூர்மாமிசத்தைச் சேர்பித்து அதைப் புற்றுப் போல் பருக்கப் பண்ணும். அம்மாமிசம் அதிகரிக்க, அதிகரிக்க அரோசக முதலிய தூர்குணங்கள் அதிகமாய் பிறக்கும். இதுவே பாதவன் மீகமாம். இது வாதவன் மீகம், பித்த பாதவன் மீகம், சிலேஷ்ம பாதவன் மீகம், என மூன்று விதப்படும். வன் மீகம் என்பது புற்று. இதனைச் இலிபத ரோகம் என அசுவனியம் என்னும் சாஸ்திரம் கூறுகின்றது. உலகத்தார் யானைக்கால் எனச் சாதாரணமாகச் சொல்லுகிறார்கள்.

1. வது. வாத பாதவன் மீக ரோகம்.

இது, ஒரு பாதத்திலாவது இரண்டிலுமாவது நாளுக்கு நாள் விருத்தியடைகின்ற வீக்கத்தை உண்டாக்கும். அப்பொழுது அதில் உள்ள தூர்மாமிசமானது கறுத்து உருண்டையும் உருளையுமாய்க் கருணைக் கிழங்கு முளைகளைப் போல் எழும்பி, கெட்டிப் பட்டுச் சொற சொறத்து, மிருதுப்பில்லாமல் சில வேளை ஜுரத்தைத் தருவதாயிருக்கும்.

௨-வது. பித்த பாதவன் மீக ரோகம்.

இது, கொடை நரம்புகளில் பித்த நீரும் கலந்து இறங்குவதால் உண்டாகும். அப்பொழுது அறையில் நெருக்கட்டுதல், பாதத்தில் மஞ்சள் நிறமான வீக்கம், மேலில் எரிச்சல், சுரம், பிதற்றல், கண்ணில் பீதவண்ணம், வாந்தி, சில வேளை பேதி, (அல்லது) மலக்கட்டு என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

3. வது. சிலேஷ்ம பாதவன் மீக ரோகம்.

இது, பாதத்தில் மிருது மிருப்புடன் குளிர்ச்சியும் வெளுப்பும் உள்ள வீக்கத்தை உண்டாக்கும். ஆனை வீக்கத்தின் மீது புற்றெழும்புவது போல் இதுவும் பெரிதுமாகத் துர்மாமிசம் வளர்ந்து முழங் காலுக்கு மேலும் உயர்ந்து நோவில்லாமல் கனகனப்பாக இருக்கும்.

சாத்தியா சாத்திய பாதவன் மீக ரோக லக்ஷணம்.

எந்த வன் மீகமாவது, நூதனமாகப் பிறந்து ஒரு வருஷத்திற்கு மேற்பட்டு முதிராமல் அற்பமாயிருக்கும். இதற் தயிலம் முதலிய சிகிச்சைகளினால் சாத்தியமாம். பாதப் பிரமாணத்திற்கு மீறி இரண்டு பக்கங்களுக்கும் அதிகமாகப் பிதுங்கி, ஆள் வள்ளிக் கிழங்கு, புற்று, தூண், யானைக்கால் முதலிய பிரமாணங்களைப் பெற்று விருத்தி அடைந்த வீக்கம் அசாத்தியமாம்.

சித்தர் மதாந்தரம்.

தேச பேதங்களினால், கை, உதடு, செவி, மூக்கு, முதலிய அவயங்களில் பாதவன் மீகம் போல் வீங்கு மென்றும், அவைகளும் பாதவன் மீகந்தான் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். திருமேலந் தருமசவுமியர் முதலிய பெரியோர்கள் செய்த சாஸ்திரம் அவைகளை அவ்வவ் விடப்பெயர் பெற்ற புற்றுகளெனக் கூறுகின்றது. இதற்கு ஷஸ்திர க்ஷாரக் கினிச் சிகிச்சையும் அவுஷதங்களும் பயன் படும்.

1. வது ஆசன பவுத்திர ரோகம்.

இது, சுரம், சரீர மெலிவு, சர்வாங்கத்தினவு, நோவு, ஆசனங் குத்துதல் கடுக்குதல் கட்டி காணல் மயக்கம் நீடும் ரத்தமும் ஒழுகுதல் மலத்தில் ரத்தங் கலந்திருத்தல் என்னுமிக் குணங்கள் உண்டாக்கும்.

2. வது. கொடி பவுத்திர ரோகம்.

இது. ஆசன நரம்புகள் புடைத்து, அடிகனைத்து நெட்டியைப் போல் கட்டி காணல், பருத்திக் கொட்டையைப் போல் பல துவாரமுண்டாதல், துர்க்கந்தநீர் வடிதல், நரம்புகள் அறுகுதல், அதன் வழியில் மலஜலம் நழுவுதல், தேகம் வெளுத்தல், என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

3. வது. பக்க பவுத்திர ரோகம்.

இது, பிருஷ்டங்களின் நடு நரம்பின் கீழ் நரம்பைப் பற்றி, ஆசனத் தருகில் ஒரு பக்கத்திலேனும் இரண்டு பக்கங்களிலேனும் கட்டி எழும்புதல், ரத்தம் விழுதல், நீர் அருங்குதல் நீர் கசிதல், என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

4. வது. மூல பவுத்திர ரோகம்.

இது, ஆசனங் கடுத்தல், குத்தல், நோவு, எரிந்து போவது போலிருத்தல், கீழ் ஸ்தான நரம்புகளில் வீக்கம், அடிகனைத்து, அகன்று முளை இறுத்து, கருணை முளை போல் கட்டி எழும்புதல், ரத்தம் ஒழுகுதல், சலம் வடிதல். ஆசனம் வெளிப்பட்டு முளை தோன்றுதல் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

-.

5-வது. கிரந்தி பவுத்திர ரோகம்.

இது, ஆசனத்தின் மிக்க உபத்திரவத்துடன் கட்டி எழும்புதல், ஆசன நரம்புகளில் நீர் சுரத்தல், கோசத்தின் கீழ்ப் பக்கம் வீங்குதல், அவ்விரண்டு ஸ்தானங்களில் விரண முண்டாகுதல் நீர்க்கசிவு, என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

6. வது. மேக பவுத்திர ரோகம்.

இது, அதி நீரிறங்குதல், விதையின் கீழ்க் கட்டியுண்டாகுதல், சீழும் பனிச்சலமும் போல் ஒழுகுதல், சரீர கனதி, நோவு, குளிர், சுரம், மயக்கம், உணவு கொள்ளாமை, கை, கால், கண், எரிவு, நாளுக்கு நாள் தேகம் மெலிவு என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

7. வது. ஆசனக் கண்ட மாலை ரோகம்.

இது, ஆசன வளையத்தைச் சுற்றிலும் மிகுந்த குத்தலையும், பொறுக்க முடியாத நோவையுங் கொண்டு வரிசையாகப் பல கட்டிகள் தடித்து எழும்புதல் அக்கட்டிகளில் பெரிதும், சிறிதுமாக அனேக துவாரங்கள் இருந்து மலம் சலம் கசிதல், நமைச்சல், எரிவு, ரத்தம் வடிதல், சுரம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

8. வது. சரக்கண்ட மாலை ரோகம்.

இது, ஆசனம் வீங்குதல், துவாரம், நெருங்குதல், கருவேல முள் போன்ற கட்டியுண்டாகுதல், ரத்தமும் சீழும் பொசிதல், அத்துடன் பட்ட இடங்களில் ரணம், புற்றின் துவாரம், இவைகளைப் போல், வரிசை வரிசையாய்க் கட்டிகள் காணுதல் அதிக நாற்றம் என்னும் இக் குணங்கள் உண்டாக்கும்.

அசாத்தியா சாத்திய லக்ஷணம்.

கொடி பவுத்திரம், ஆசனக் கண்டமாலை, சரக் கண்டமாலை, ஆக 3 பவுத்திர ரோகங்களும் அசாத்தியமாம். மற்ற 5-ம் சாத்தியமாம். சிகிச்சா சாஸ்திரத்திற் கூறிய முறைப் படிச் சிகிச்சை செய்யில் அசாத்திய ரோகங்களும் சாத்தியம் ஆவதுண்டு.

கிரந்தி பேதம்.

சிலேஷ்ம பிரதானங்களால் முற்கூறிய விரணஸ்தானங்களிலாவது, மற்றைய ஸ்தானங்களிலாவது வாதகிரந்தி ஆதியாக ரணக்கிரந்தி ஈ.றாக 9. விதக் கிரந்தி பிறக்கும். கிரந்தி என்பது நரம்புகளின் முடிச்சு.

1.-வது. வாதகிரந்தி.

இது, கறுத்தும், காரணமில்லாமலே பெருத்தி யடைந்தும், அப்படியே குறைந்தும், குத்தலையும் அதிரலையும் உடையதாகப் பிறக்கும். இது பழுத்து உடைந்தால், மிகு சிவப்புள்ள அச்சரத்தம் ஒழுகுவதும், அவ் விரணம் மிருதுவை அடைவதுமாக இருக்கும்.

—.

2. வது. பித்த கிரந்தி.

இது, மஞ்சள் நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் பெற்றுச் சதா எரிச்சலுடன் பிறக்கும். பழுத்து உடைந்தால் அதிகமான ரத்தமும் சீழும் ஒழுகும்.

3 வது. சிலேஷ்ம கிரந்தி.

இது, வெளுத்தும் கனத்தும் நமைச்சலுடன் அதிக நோவில்லாமல் சிக்கத்தைத் தருவதாய்ப் பிறக்கும். பழுத்து உடைந்தால் இதில் நின்றும் குழம்பான சீழ் ஒழுகிக் கொண்டே இருக்கும்.

4. வது. ரத்த கிரந்தி.

இது சில ரோகங்களில் ரத்த தாதுவானது கெடுதியை அடைந்து மிகவும் பொங்கிக் கொதிக்கும் போது, அதில் உண்டாகின்ற நுரைகளினால் ஜனித்த ~~கிருமி~~. கிருமிகள் தமது மூக்கினால் தின்றும் காயத்தில் பிறக்கும். இக் கிரந்தி மாமிசத்தையும் நரம்பையும் அநுசரித்துப் பித்த கிரந்திக் குள்ள குறிகளுடன் உதிரத்தை வடியப் பண்ணும்.

5 - வது. மாமிச கிரந்தி.

இது, மாமிசத்தை விருத்தி பண்ணு கின்ற இறைச்சி முதலிய தின்பதுகளால் பிறந்து. மிக மிருதுவும் பருத்தும் கெட்டியாய் நரம்புகளால் சுற்றப்பட்டும் இருக்கும். இது பழுத்துடைந்தால் கபக்கிரந்திக் குணங்களைத் தரும்,

பகந்தர விரண வகைகளும்.

யானை யேற்றம், குதிரை யேற்றம், எந் நேரமும் உட்கார்ந்திருத்தல், அதாகத ஆசனத் திலுட்காரல், மல வியாதிக்குக் காரணமான வஸ்துவையும், இந்த வியாதி பிறப்பதற் கேதுவான வஸ்துவையும், பக்தி இல்லாத வஸ்துவையும், புசித்தல் அநுகூல வஸ்துவை நீக்குதல் ஆகிய இச் செய்கை களினால் வாதாதிகள் அதிகரித்து, அபவயிற்றுக்கும் மூத்திரப் பைக்கும் ~~அ~~. சமீபத்தில் இருக்கின்ற கெட்ட உதிர மாமிசங்களை ஒட்டி, உள்ளிலாவது வெளியிலாவது ஒரு அங்குலம் இரண்டு அங்குலம் அளவையுள்ள கட்டிகளைச் சேரச் சேர உண்டாக்கும். அப் போதவ் விடத்தில் வியர்வையும் விரணமும் பிறக்கும்.

இந்த தோஷத்தை அறிந்து உடனேயே வைத்தியம் பண்ணவிடில், இது அல்குல் கீழ் வயிறு குதம் ஆகிய இடங்களில் விரைவில் துவாரங்களை உண்டாக்கி, அத் துவாரங்களின் வழியால், காற்றும், மலமும், மூத்திரமும் சுக்கிலமும் வெளிப்படும். பழுக்கச் செய்யும். பகந்தரம் என்பது பிளத்தல். இதைப் பவுத்திர ரோகம் என வழங்குகின்றனர்.

பகந்தர விரண பேதம்.

பகந்தர விரணமானது, வாதபகந்தரம், ஆதியாக ஆகந்து பகந்தரம் ஈறாக 8 விதப்படும். அவற்றுள் ஆகந்து பகந்தரத்தில் 6 பிரிவுண்டு. மேலும் இப் பகந்தரங்களில் உண்டாகின்ற கட்டியானது உடையாமல் சொஸ்தமானால், கட்டி என்று பெயர் பெறும். கட்டி உடைந்து வேரானது தூரத்தில் ஓடி உட்புறத்திலேயே விஸ்தரித்து வெளிப்புறத்திலும் தோன்றி நோவும் அதிகரிக்குமாகில் பகந்தர விரணம் எனப் பெயர் பெறும்.

1. வது. வாதபகந்தர விரணம்.

இது, முற் கூறிய தோஷகாரணங்களில் விளைந்தும் பிறக்கும். இதனில் அந்த இடத்தில் வலிந்து போவது போல் இடித்தல், குத்தல், அதிர்தல், நோதல் என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

2. வது. பித்த பகந்தர விரணம்.

இது, புகை நிறத்துடன் சிவந்தும். நீண்ட உருவத்தில் மெலிந்தும் ஒட்டைக் கழுத்தைப் போல் உயர்ந்தும். தொட்டால் அழுகையாயும் பிறக்கும். இதனில் தாபச் சுரமும் உண்டாகும்.

3-வது. சிலேஷ்ம பகந்தர விரணம்.

இது, கீல்ப் பெற்ற வேடுடன் வெளுத்தும் கனத்தும் வடு வருத்தும் பிறக்கும். இதனால், அதிக நமைச்சல் உண்டாகும்.

4.வது. வாத பித்த பகந்தர விரணம்.

இது. கருமை, செம்மை கலந்த முகத்துடன் பிறக்கும். இதனால், அந்த இடத்தில் சீழ் வடியும் போது ஒரு சத்தம் உண்டாகும்.

சத்தியோ விரண பேதம்.

கல்லு, தடி, முதலியவைகளினால் அடிபடுதல், வெட்டுதல் என்னும் இவைகளினால் சத்தியோ விரணம் பிறக்கும். அது கிருஷ்ட விரணம் ஆதியாக விதளிதவிரணம் ஈறாக 8 விதப்படும். சத்யோ என்பது பொருள் உடனே என்பதாம்.

1. வது. கிருஷ்ட விரணம்.

இது, முள்ளு, கட்டைக்குச்சி, கொம்பு, தடி முதலியவைகளினால் காயம் படவேனும் உராயப் படவேனும், உண்டாகி கொஞ்ச ரத்தக் கசிவுடன் வடுவாய் இருக்கும்.

கிருஷ்டம் என்பது உராய்தல்.

௨. வது. அவகர்த்த விரணம்.

இது, கிருஷ்ட விரண விருத்தியினால் பிறக்கும். இதனால், விரணத்தில் குழி விழும் அவகர்த்தம் என்பது குழி. இதுவே குழிப் புண்ணாகும்.

3-வது விச்சின்ன விரணம்:

இது. அவகாசித்த விரண விளிவில் பிறக்கும். அவ்விரணம், துண்டு துண்டாய் அறுப்பட்டது போல் இருக்கும்.

4-வது. பிரவிளம்பி விரணம்.

இது, விச்சின்ன விரண அதிகரிப்பில் மின்று பிறக்கும். இதனில் எலும்புகள் வெளியில் தோன்றப்படும். இது எலும்பை நன்கைத் தெரியப் படுத்தலால் பிரவிளம்பி விரணம் எனப் பேர் பெற்றது.

5-வது. விபாதித விரணம்:

இது, பிரவிளம்பி, விரண விபரீதத்தால் பிறக்கும். அப்போது நடுவில் கொஞ்சம் எலும்பைத் தெரியும்படிக்கு வைத்து மற்றைய இடத்தை எல்லாம் தூர் மாமிசம் விருந்து மறைக்கும்.

விபாதிகம் என்பது விடுதல்.

6-வது. வித்த விரணம்:

இது, முற் கூறிய முள் முதலியனவைகள் தவிர, கல் முதலியவைகளால் அடியுண்டகாலத்தில் பிறந்து விஷமிக்கும்.

வித்தம் என்பது அடியுண்டல்.

7-வது. பின்ன விரணம்:

இது, யுத்தக் காலத்தில் (அல்லது) அபாய காலத்தில் ஆயுதங்களினால் பிறந்து உபத்திரவத்தை உண்டாக்கும்.

பின்னம் என்பது துண்டித்தல்.

8. வது. விதனித விரணம்:

இது இரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கின்ற விரணத்தைப் பிடித்து அழுத்தப் படுதலினாலும், கல்லு முதலியவைகளால் அடிபடுதலினாலும் பிறந்து உபத்திரவத்தைச் செய்யும். இதனில் எலும்புகள் நோதலும், விரணம் பருத்தலுமாக இருக்கும். விதனிதம் என்பது பிளக்கப்பட்டதாம். இவைகளுக்கும், முற்கூறிய அசிர்வித விரணச் சிகிச்சைகளையும், ஆயுதச் சிகிச்சைகளையும் செய்ய வேண்டும்.

1-வது. உபசீர்ஷ ரோகம்.

இது, கபால வாயுவைக் கொண்டு, கருப்ப ஸ்திரிகளின் சிரசில் வீக்கத்தை உண்டாக்கும். அவ்வாறே வயிற்றிலிருக்கும் சிசுவுக்கும் உண்டாகும். அப்போது சீதோஷ்ண சிகிச்சையால் தாய்க்கு உபசரிக்கில், சிசுவுக்கும் சௌக்கியமாகும்.

உபம் என்பது — இரண்டு:

சிரஷம் என்பது - தலை:

உ-வது. மூர்த்த பிடக ரோகம்.

இது, வாதத்தில் உச்சந்தலையில் கட்டி போல் வீக்கத்தை உண்டாக்கும்.

—

3 வது. சிரோற் புத ரோகம்.

இது பித்தத்தால் கபாலத்தில் ஆச்சரியமான விக்கத்தை உண்டாக்கும்.

4. வது. சிரோ வித்திரதி ரோகம்.

இது கபத்தால் கபாலத்தில் வித்ரதியைப் போல் வீக்கத்தை உண்டாக்கும்.

5. வது. அருமூ ஷிகை ரோகம்.

இது, பித்தத்தினால் கபாலமுள்ள கரையும்போது பிறக்கும். இதனால் கபாலத்தின் மீது ரத்தத்தினாலாவது, கபத்தினாலாவது, கிருமிகளினால் ஆவது தினையைப் போலும் கடுகைப் போலும் அநேக கொப்புளங்கள் உண்டாகும்.

அருமூ ஷிகை என்பது பரவுதல் உடைய விரணம்.

6-வது. தாருண ரோகம்.

இது, சிலேஷ்ம வாதங்களினால் பிறந்து, கபாலத்தில் தினவு மயிர் உதிரல், சொற சொறத்தல், கருமைப் பொட்டுக்கள் உதிரல் மிகு நித்திரை முதலிய குணங்களை உண்டாகும்.

தாருணம் என்பது பயத்தைத் தருதல்.

7. வது இந்திர லுத்த ரோகம்.

இது, பித்தமானது ரோமத்துவாரங்களில் வியாபித்து வாதத்துடன் கூடுங்காலத்தில் பிறக்கும். இதனால் கபாலத்திலிருக்கும் ரோமமெல்லாம் உதிரும். அத் தருணத்தில் சிலேஷ்மமானது, ரத்தத்துடன் கூடும். இவ்வண்ணமாகப் பித்தம் முதலியவைகள் ரோமத்துவாரங்களை அடைவதால்,

உதிர்ந்த ரோமம் முளைக்கமாட்டாதென்றறிக.

இந்திரலுப்தம் என்னும் ஒரு எரிப்பூச்சியானது பயிர் முதலிய பச்சிலைகளை எப்படி எரித்து ஒன்றுமில்லாமல் செய்து விடுமோ. அவ்வண்ணமே இது ரோமக் கால்களைக் கெடுப்பதால், இந்திர லுப்த ரோகம் எனப் பேர் பெற்றது.

8-வது. கலதி ரோகம்.

இது. முற்கூறிய இந்திரலுப்த ரோக குணத்துடன் ரோமங்களை உதிரப் பண்ணுவதும் அன்றி, கபாலத்தை மூடிய சருமத்தின் மேல் வடு வடுப்பான ஒரு மருங்கல உண்டாக்கும். இது, வாதத்தால் பிறந்தால் அச்சருமம் அக்கினியால் சுட்டாறிய வடுப்போல் மச்சத்தைப் பெற்றிருக்கும். பித்தத்தால் பிறந்தால், முற்கூறிய குணங்களுடன் அவ்விடத்து நரம்புகளில் தோன்றும்!

கபால ரோக பேதம்.

கபாலத்தில், உபசீர்ஷம். மூர்த்த பிடகம் சிரோற்புதம், சிரோ வித்திரதி. அருமிஷிகை. தாருணம், இந்திரலுப்தம், கலதி, பலிதம் என 9 வித ரோகம் பிறக்கும். இவற்றுள், கலதி ரோகத்தில் வாத பித்த கப திரிதோஷங்களால் ~~க~~ 4 பிரிவும். பலித ரோ ரோகத்தில், இவ்விதம் 4 பிரிவும் உண்டு.

8-வது. சிரக்கம்ப ரோகம்.

இது, புசிக்கின்ற ரசாதி வஸ்துக்களால், திரிதோஷங்களானவை சிரசிலிருக்கும் நரம்பு முதலியவைகளை அநுசரிக்கும் போது பிறக்கும். இதனால், தலை நடுக்கம் உண்டாகும்.

கம்பம் என்பது நடுக்கல்!

இதனை மாஷமாகிய உளுந்துத் தயிலத்தினாலும் ஔஷதித்தீ சிகிச்சையும் விலக்கலாம்

9- வது. சங்க ரோகம்.

இது, பித்தத்தில் கூடிய வாத சிலேஷ்மங்களினால், இரண்டு நெற்றிகளிலும் சிவந்த வீக்கத்தைப் பிறப்பிக்கும். அப்போது அதில் எரிச்சல், நோவு, சுரம், தாகம், சோருதல், பிரமை, பிரலாபம், முகத்தில் மஞ்சள் நிறம், வாய் கசத்தல் என்னும் இக் குணங்கள் உண்டாகும். இது பகுத்து உடைந்தால் மூன்று தினத்துக்குள் மரணத்தைக் கொடுக்கும். ஆனால் தீவிரச் சிகிச்சையால் சாத்தியப் படடாலும் படும்.

சங்கம் என்பது நெற்றி.

10-வது. சூரியா வர்த்த ரோகம்.

இது, வாயுவானது பித்தத்தில் கூடிய இரண்டு நெற்றி, கண், புருவம், நெற்றி, ஆகிய இடங்களில் வியாபிக்கும். போது பிறக்கும். இதனால் சூரிய உதய காலத்தில் சிரசில் மிகுந்த உபத்திரவம் உண்டாகும். வெய்யிலேற ஏறப் பிரபலப் படுவதால் சூரியன் சாய்ந்தால் சாந்தம் அடைவதுமாக இருக்கும். இவ்வாறே தினந்தினமும் போராடும். இவ்வண்ணம் உண்டாவது ஒரு காயிறு என்றும், இதில் சஞ்சரிக்கின்ற வாயுவு கபத்துடன் சேர்ந்தால் மாலைக் காலத்தில் உபத்திரவமுண்டாகி விடும்.

வாத சிலேஷ்ம பகந்தர விரணம்.

இது, வெளுத்த நிறமும் கொஞ்சம் கறுத்த நிறமும் உடையதாகப் பிறந்து, கஷ்டத்தின் மேல் பகுத்து உடைவதாயிருக்கும்.

6. வது. சிலேஷ்ம பித்த பகந்தர விரணம்.

இது, சிலேஷ்ம பித்த பகந்தரக்கு நிகளை உடையதாயிருக்கும்.

7-வது. திரிதோஷ பகந்தரத்தின் விரணம்.

இது, காலின் பெருவிரற் பிரமாணத்தையும் பற்பல நிறத்தையும் உடையதாகப் பிறந்து, அவ் விரணத்தில் எரிச்சலுடன் குத்தலையும் உண்டாக்கும். அப்போது அரமும், அரோசகமும், தாகமும், வாந்தியும் காணும், இனி எண் வகை ஆகந்துக பகந்தர விரணங்களைச் சொல்லுவாம்.

1. வது. சதபோனக பகந்தர விரணம்.

இது முன்பு சொன்ன பகந்தரக் கட்டிகள் பழுத்து உடைந்து ஒன்றொடொன்றுடன் கலங்குங் காலத்தில் பிறக்கும். இதனில் புற்றைப் போல் சிறு துவாரங்களை உள்ள விரணங்கள் விருத்தியாகும். இதில் என்றும் துர்க்கந்தச் சிவ ரத்தம் வடிவதுமன்றி, சிலவேளை நுரையுடன் சுக்கிலம் வடிவதாயிருக்கும்.

சதம் என்பது = நூறு போனகம் என்று புற்று.

உஷ்ட ரகிரீவ பகந்தர விரணம்.

இது, பித்தத்தால் பிறந்து, மிகு கண்களுடன் ஒட்டைக் கழுத்தைப் போல் நீண்டிருக்கும்.

உஷ்டரம் என்பது ஒட்டை,
கிரீவம் என்பது கழுத்து.

3-வது. பரிஸிராவிப கந்தர விரணம்.

இது, சிலேஷ்மாதிக்கத்தால் பிறந்து அத்துவாரங்களில் நின்றும் வெந்து ணாந்து கரைந்த நெய்ய வஸ்துக்களைப் போல் சீழை ஒழுகச் செய்யும்.

4. வது. பரிக்ஷேபிப கந்தர விரணம்.

இது, வாத பித்தத்தினால் பிறந்து அகழி போல் ஆசனத்தைச் சுற்றிலும் துவாரங்களை உண்டாக்கி ரத்த முதலியவைகளை ஒழுகச் செய்யும்.
பரிக்ஷேபி என்பது நாலு புறத்திலும் துவாரங்களை உண்டாக்குவதாம்.

5-வது ருசு பகந்தர விரணம்.

இது, வாத பித்தத்தினால் பிறந்து இதவளை யங்களை ஒட்டி ஒடுங்கான துவாரங்களை உண்டாக்கி சீழை ஒழுகுவிக்கும்.

ருசு என்பது — ஒடுங்கு.

6-வது மெதோ கிரந்தி.

இது, மேதோ தாதுவை வர்த்திக்கச் செய்கின்ற ரசாதி வஸ்துக்களை விசேஷம் புசித்தலால் அது விருத்தியடையும் போது வாயுவின் கோபத்தினால் மாமிசத்திலாவது (சருமத்திலாவது பிறந்து. வெளுப் பதும். வழுவழுப்பதும் மினு மினுப்பதும் இளங்கு அதுமாயிருக்கும். இது பருத்து உடைந்தால், சீழானது பிசினிப் போல் குழம்பாகக் கறுத்தும் சிவந்தும் வெளுத்தும் ஒழுகும். இக் கிரந்தி விருத்தி க்ஷீணமாயிருப்பதால் தேகம் இளைக்கும்.

7. வது: அஸ்தி கிரந்தி:

இது, எலும்புகள் நொறுங்கலாலும், அபிகா தத்தினாலும் உண்டாகிப் பருத்து உயருவதும், கொஞ்சம் அசங்குவதுமாக இருக்கும்.

8. வது. நரம்புக் கிரந்தி.

இது, வெகு தூரமுள்ள வழியை ஒரே நடையாக நடந்து வந்து, அந்த வேகம், தணி வதற்குமுன் மிகு சீதள ஜலத்தில் ஸ்நானம் செய்தலாலும், வெகு சஞ்சாரத்தினாலும், வெறுயப் பிற் றனித்த அடுப்பிற் சேர்ந்த உணவுகளினாலும் நரம்புகள் உப்பி உட்புறத்தில் தடிக்க இதனில் ரத்த தாதுவானது ஓட்டம் இல்லாமல் தேங்கும்போது பிறக்கும். அதன் விவரம் அப்படிக்குத் தேங்கிய ரத்தத்தோடு கூடிய நரம்புகளை வாயு அடக்கப் பண்ணி

உலர்த்தி வக்கிரமாக முடங்கச் செய்து, அம் முடக்குகளில் கெட்டிப் பட்டதுகளால் நோவில்லாத நரம்புகளை வெளியில் வரப் பண்ணும். இதனை நரம்புச் சிலந்தி எனவும் வழங்குவர்:

9-வது விரண கிரந்தி:

இது, ஆறு ரசவருக்கங்களையும் மட்டுமிதம் இன்றி நித்தியமும் புசித்தலினால் பிறக்கும். அதன் விவரம்:- அந்த ரசமானது தேகத்தில் அற்ப விரணம் உண்டாயிருந்தாலும், அதைப் பிரபலப் படுத்தும், (அல்லது) இல்லாதிருந்தாலும் அதைப் பிரபலப் படுத்தும் (அல்லது) இல்லாதிருந்தாலும் சிராநாளங்கள் மாமிசஸ்தானங்களில் அம்மாமிசத்தைக் கண்டு கண்டாக எழுப்பும்; அப்போது வாயுவானது தெரதுவாகக் கறுத்தரத்தை வெளிப் படுத்தாமல் அவ்விடத்திற் சேர்ந்து உலர்த்துதலால் விரணங்கள் உண்டாகும். இதனால் எரிச்சலும் தினவும் அதிகரிக்கும். இது மிகவும், பருத்து உயர்ந்தால், அற்புத கிரந்தி எனச் சொல்லப் படும். இவைகளை மேகாந்தத் தயிலம் முதலிய அவுஷதங்களினாலும் விரணச் சிகிச்சைகளினாலும் வசப்படுத்த வேண்டும்

சாத்தியா சாத்திய கிரந்தி நிதானம்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், ரத்தம் மேதோதாது ஆகிய இந்த ஐந்தினால் உண்டாகின்ற கிரந்திகள் சாத்தியமாம். பருத்துக் கெட்டிப்பட்டு அசைந்து இலுங்குகின்ற கிரந்திகளும், மர்மஸ்தானம், கண்டம் வயிறு இவ்விடங்களில் பிறக்கின்ற கிரந்திகளும் அசாத்தியமாம்.

6-வது அலிசோபகந்தர விரணம்.

இது, முற்கூறிய ருசுபகந்தரத்தில் வியாபித்த வாத பித்தங்கள் மிகவும் அதிகரிக்கும் காலத்தில் பிறக்கும். இதனில், ஆசன வளையத்தினது அடியில் வீக்கமும் நமைச்சலும் எரிச்சலும் உண்டாகும். அவ் வீக்கம் பழுத்து உடைந்தால் அதில் நின்று வருகின்ற புளித்த சலமானது நடக்கும் போது இருக்கும் போதும் ஒழுகிக் கொண்டேயிருக்கும்.
அலிசோ என்பது மூலம். இதனை மூலபகந்தரம் எனவும் சொல்வர்.

7-வது. சம்புகா வர்த்த பகந்தர விரணம்.

இது, கிலேதாவத்தால் பிறந்து, ஆசனஸ்தானத்தில் நத்தை போட்டுச் சுழியைபோல் துவாரங்களை உண்டாக்கும். அப்போது நடந்தால் அந்த விரணமானது துவாரங்களை உண்டாக்கும். அப்போது நடந்தால் அந்த விரணமானது அறுபவேது போல் இருக்கும்.

சம்புகா என்பது நத்தையோடு.
ஆவர்த்தம் என்பது சுழல்.

8-வது க்ஷதச பகந்தர விரணம்.

இது, மேற்கூறிய பகந்தர விரணங்களை ஆயுதத்தாலாவது கயிற்றினாலாவது அறுக்கையில் சின்ன நரம்புகள் அறுபட்டு வெளிப்படும் போது துர்மாமிசம் வளர்ந்து முன்பு இருந்த ஸ்தானம் போலவே விருத்தியாகும் காலத்தில் பிறக்கும்.
அதன் விவரம்:- முன்பு அறுபட்டுக் காயமான மார்க்கத்தில் துர்மாமிசம் இறுக்காக வளர்ந்து வெளிப்பட்டு கீழிலே மிகவும் கொடுத்துக் குத்தப்படும். அப்படி வளர்ந்த மாமிசத்தில் நின்றும் கிருமிகள் உண்டாகிக் கத்தியினால் கொய்தது போலவே ஆசனமெங்கும் பற்றியும் தின்று விடும்.

இதனை இளவும் எரிச்சலும் நோவுமுண்டாகும். இச்சினங்கள் சகல பகந்தர ரோகங்களுக்கும். பொதுவாக இருக்கும். ஆதலால் இவ் விரணங்களை சத்திரம் செய்யும் போது உபாயத்துடன் செய்து சவுக்கியம் பண்ணவேண்டும்.

<u>சாத்தியா சாத்திய பகந்தர விரணம்.</u>

ஒவ்வொரு தோஷத்தால் பிறந்த பகந்தர விரணம் 3.ம். இரண்டு இரண்டு தோஷத்தால் பிறந்த பகந்தர விரணம் 3.ம். காமதத்தின் மேல் சாத்தியமாம். திரிதோஷ பகந்தர விரணமும், க்ஷதச பகந்தர விரணமும் அசாத்தியமாம். ஆகந்துக பகந்தரங்களுக்குள். எந்நேரமும், சீழ், ரத்தத்தை வடிப்பதும் குதவளையங்களில் முளைப்பதும் நரம்பைப் பற்றி யிருப்பதுமாகிய பகந்தர விரணங்கள் அசாத்தியமாம். இவைகளுக்குச் சப்தாசன ரசப்படங்கு முதலிய மருந்து ஆயுதச் சிகிச்சையும் நலச் செய்யும்.

<u>பகந்தர ரோக பேதம்.</u>

சித்தர்கள், இதனைப் பவுத்திர ரோகம் எனக் கூறுவர். இது. ஆசன பவுத்திரம், கொடிய பவுத்திரம் பக்க பவுத்திரம், மூல பவுத்திரம், இரத்தி பவுத்திரம் மேக பவுத்திரம் ஆசனக் கண்டமால சரக்கண்டமால, என எண்வகைப்படும்.

—

<u>அதுஷ்ட விரண பேதம்.</u>

அதுஷ்ட விரணமானது, ரசதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கில தாதென்னும் சப்த தாதுக்களையும் பற்றி ஒவ்வொரு தாதுவுக்கு எவ்வேழு விதமாகப் பிறந்து 49 விதப்படும்.

அவையாவன:- ரசவாததுஷ்ட விரணம், ரசபித்தாதுஷ்ட விரணம். ரசசிலேஷ்மாதுஷ்ட விரணம். ரசவாத

பித்தாதுஷ்ட விரணம். ரசகிரி தோஷா துஷ்ட விரணம் என்பனவாம். இவ்வண்ணமாகவே வாதாதி தோஷங்களில் மற்றைய ஆறு தாதுக்களினின்றும் பிறக்கின்ற 42. விதமான அதுஷ்ட விரணங்களையும் பண்டிதர்கள் கூர்ந்தறிய வேண்டும். இவ்வகை விரணங்களெல்லாம், பதவாடைக்கட், அரசம் பட்டை முதலிய துவர்ப் பட்டைக் கஷாய நீர் நாசம், வங்கம், மருதாரசிங்கு, இவைகளின் பஸ் மோதகம், துத்தியில் வெங்கீர் ஓத்திடம், கடுகு பெருங்காயம் முதலிய பூச்சு, விரண நாசப் பகை களிம்சாரத்திரில், பாதரக் களிம்பு, தேவதாபக் களிம்பு, பூரம், படிங்கு, சாதிலிங்கக் குழம்பு, சுவரி மெழுகு, சிலத் தயிலம், விரண சஞ்சீவித் தயிலம், உளுவாற்றி எண்ணெய் முதலிய அவுஷதங் களிலும் சஸ்திர க்ஷாரதாக்கினிச் சிகிச்சை களிலும் நிச்சயமாக நிவர்த்தியாகும்.

சுத்தரக்த விரணம்.

இது கொப்பிளாகாரமாய் நடுவில் உயர்ந்தும், உபத்திரவம் இல்லாமல் மிருதுவுடன் வகுவகுத்து தொட்டால் அடுகை உள்ளதாயி, நாவினது நிறத்தையும் பெற்றிருக்கும். இதற்கு ஆயுதச் சகித்தைையும் பெற்றிருக்கும். ஆக 65 சிகிச்சை சாத்தியாச் சாத்தியத்தை தரும். ஆக 65 விரணங்களும் முற்றியது.

விரண ஸ்தான பேதம்.

சருமம், மாமிசம், பெருநரம்பு, சிறுநரம்பு, எலும்பு, வயிறு, மர்மஸ்தானும், என்னும் இவ் வெட்டும். விரணஸ்தானங்களாம். இந்தஸ்தானங்களைப் பற்றி விரணம் பிறக்கில், முறையே ஒன்றுக் கொன்று கஷ்ட சாத்தியங்களாக முடியும். இவை நிற்க. வாதம், பித்தம், சிலேஷ்மம், ரத்தம் ஒன்றும் இவைகளால் பிறக்கின்ற விரணங்களுக்கு முறையே

இத்தலும், எரிச்சலும், வீக்கமும், வாந்தியும், தொந்த
-தில தோஷங்களுக்கு முற் கூறிய நான்கு தோஷ
குணங்களின் மிகுரமும் உண்டாகும்.

சாத்திய விரண நிதானம்.

அரே பலமும், மாமிச புஷ்டியும், ரத்த புஷ்டியும்
அக்கினி புஷ்டியும், வாலிபமும் உள்ளவர் கட்கு
விரணம் பிறந்தால் அக சாத்தியம்.

கஷ்ட சாத்திய விரண நிதானம்.

தொடை, யோனி, குதம், ஆண்குறி, உதடு,
முதுகு, உள்வாய் தாடை, கண், கடைக்கண், பல்லு, நாசி,
பெருநரம்பு, சிறுநரம்பு, வயிறு, காது, விலா, அக்குள்,
தனம் என்னுமிந்த இடங்களில் வட்டமாக உயர்ந்து
மூன்று மூலை, நான்கு மூலை, உள்ளதுகளும். நுரையுடன்
கலங்கினதுகளும், கொடுப்பும் எலும்பும், தெரிவதுகளும்,
பகந்தர விரணத்தைப் போல் உள் முகத்தை
உடையதுகளுமாகப் பிறந்த விரணங்களும், துஷ்ட
விரணங்களும், மது மேக விரணங்களும், பிரயாசத்
-தின் மேல் கஷ்ட சாத்தியமாம்.

அசாத்திய விரண நிதானம்.

விசர்பி, சுரம், அதிசாரம், காசம், சுவாசம், க்ஷீண
மது மேகம், அஸ்தி சிராவரோகம், என்னும் ரோகங்கள்
கண்டு, அவைகளால் உதவங்களால், சாத்தியமாகமல்
நிறைந்து சரீரத்தை மிகவும் கிரிசிக்கச் செய்திருக்கையில்
விரணம் பிறந்தாலும், விரணத்தின் மேல் விரணம்
பிறந்தாலும், விரணத்தின் மேல் கனமாக அமட்டு
மேற்றோல் உரிந்தாலும், தயிர்த் தண்ணீர் போல்
சலம் வடிந்து சிறு நரம்புகள் அதைப் பெருநரம்புகளில்
சில யோடினும், விரணத்தில் குழிகள் விழுந்து
அவைகளில் கிருமிகள் சனித்துக் கொண்டே
இருந்தாலும், எலும்புகள் நொறுங்கி அவைகள்
கண்ணுக்குத் தோற்றித் தூர்கந்தம் பிறந்து இன்னவித

விரணமென அறியக் கூடாமையாய் இருந்தாலும் கட்டுக் கட்டக் கூடாமலும் இலையெண்ணெயிக்கு விருத்தியடைதலும் சொறசொறத்தலும் அதில் ரோமங்கள் முளைத்தலும் வீக்கம் அதிகரித்தலும் உள்ளதாயிருந்தாலும், முன்னைப் போல் தினம் தினமாக வெடித்துப் புருஷத்தையும் கடினத்தையும் சலவாளையும் பெற்றிருந்தாலும் கொஞ்சம் பக்கலில் மிகுந்த வேதனை, வெகு ஆயாசம், அந்த விரணத்தின் மேல் சிறு சிறு முட்டைகள் போல் துர்மாம்சம் எழும்புதல், நடுவில் நமைச்சல், சதா சீழ்வடிதல் என்னும் இக்குணங்கள் இருந்தாலும் அவ்விரணங்கள் அசாத்தியமே.

<u>விரண பக்குவ நிதானம்.</u>

வாதம், பித்தம், சிலேஷ்மம், தாந்தம், திரிதோஷம் என்னும் இவைகள் ரத்தத் தோடு கூடிய காலத்தில் பிறந்த விரணங்கள் ஆனவை, ஷஸ்திர க்ஷாராக்கினி யாதி அவுஷதங்களால் சாத்திய முகம் ஆகும்.

குணத்தில் இருக்கும் குறிகளாவன!- விரணங்கள் சிவத்தல், அவ்விடத்து ரோமம் வேர் நைதல், ஓரத்தில் வரம்பு கட்டி அப்பக் குழி போல் தோற்றல், பின்பு கறுத்த நிறம் வருதல், நல்ல ரத்தம் வடிதல், வீக்கமும், நோவும், மட்டிடல், சருமத்தின் மீது முன்பு உள்ள அபாவ நிறம் பிறக்குதல், விரணத்தைக் கையால் பிடித்துப் பார்த்தால் கெட்டியாகத் தோற்றல் என்னும் இவைகளாம். இக்குணங்கள் உண்டாகில் சீக்கிரத்தில் ஆறும் என்றறிக!

முற்றிற்று.